DIGITISED

சங்க இலக்கிய உத்திகள்

(பாட்டும் தொகையும்)

பிஎச். டி. பட்டத்திற்காகச்
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பட்ட ஆய்வேடு

இரா. தமிழரசி, எம்.ஏ., எம்.பில்.,
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 020

CANNOT BE DIGITIZED

பிப்ரவரி 1982

MUL
PhD1928

டாக்டர் அன்னி மிருதுல குமாரி தாமசு
முதுநிலை ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 020

மேற்பார்வையாளர் சான்றிதழ்

'சங்க இலக்கிய உத்திகள்' (பாட்டும் தொகையும்) என்னும் பொருளில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவி செல்வி இரா. தமிழரசி, எம். ஏ., எம். பில்., என் மேற்பார்வையில் பிஎச். டி. பட்டத்திற்காக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1979 டிசம்பர் முதல் 1982 பிப்ரவரி வரை ஆய்வு நிகழ்த்தி இவ்வாய்வேட்டினை உருவாக்கியுள்ளார். இதற்கு முன் இவ்வாய்வேடு, வேறு ஆராய்ச்சிப் பட்டத்திற்கோ, ஆய்வரங்கிற்கோ அனுப்பப் பெறவில்லை என்பதற்கும், இது இவருடைய உழைப்பின் விளைவு என்பதற்கும் நான் சான்றிதழ் வழங்குகிறேன்.

அன்னி மிருதுலகுமாரி தாமசு.
(அன்னி மிருதுல குமாரி தாமசு)
மேற்பார்வையாளர்

சென்னை 600 020
27 - 2 - 1982

இரா. தமிழரசி

ஆய்வாளர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை 600 020

ஆய்வாளர் உறுதிமொழி

'சங்க இலக்கிய உத்திகள்' (பாட்டும் தொகையும்) என்னும் தலைப்பில் பிஎச்.டி. பட்டத்திற்குச் செய்யப்பட்ட இவ்வாய்வு, என் முயற்சியில் உருவானதேயாம். இதற்கு முன் எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்வாய்வேட்டினை அளிக்கவில்லை என உறுதி அளிக்கின்றேன்.

இரா. தமிழரசி.

(இரா. தமிழரசி)

ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்

அன்னி மிருதுளகுமாரி தாமசு

(அன்னி மிருதுல குமாரி தாமசு)

முதுநிலை ஆய்வாளர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை 600 020

நன்றியுரை

'சங்க இலக்கிய உத்திகள்' (பாட்டும் தொகையும்) எனும் பொருள் பற்றி ஆய்வு செய்ய வாய்ப்பளித்த நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கும், இவ்ஆய்வேட்டிற்கு வழிகாட்டி உதவிய டாக்டர் அன்னி மிருதுல குமாரி தாமசு அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மற்றும் இவ்ஆய்வுப் பொருளுக்கு உதவிய பேராசிரியப் பெருமக்களுக்கும், பிறருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

****
* உள்ளுறை *
****

இயல்		பக்கம்
	முகவுரை	VIII
1.	தமிழில் உத்தி - ஒரு பொதுநோக்கு	1 - 28
1.1.	உத்தி - பெயராக்கம்	1
1.2.	இலக்கண நூல்கள் காட்டும் இலக்கிய உத்திகள்	5
1.2.1.	தொல்காப்பியம்	5
1.2.2.	அனி இலக்கண நூல்கள்	12
1.3.	உத்திகளின் நோக்கம்	14
1.4.	உத்தியும் இலக்கியப் படைப்பும்	14
1.5.	உத்தி வகைகள்	17
1.5.1.	புற அமைப்பு உத்திகள்	18
1.5.2.	அக அமைப்பு உத்திகள்	26
2.	சங்க இலக்கியச் சொல்லுத்திகள்	29 - 67
2.1.	குறிப்புப் பொருளையும், உளர்வு நிலையையும் விளக்கும் சொற்கள்	29
2.1.1.	ஒலிக்குறிப்புச் சொற்கள்	29
2.1.2.	ஒலி வேறுபாடு	37
2.1.3.	விளிச் சொற்கள்	47
2.1.4.	அடைச்சொற்கள்	48
2.1.5.	சொல்லாட்சிகள்	49
2.1.6.	எதிர்மறைச் சொல்லுணர்வு	52
2.1.7.	சொற்பொருளுணர்வு மாற்றம்	53
2.1.8.	புதிர்ச் சொற்கள்	54

2.1.9. குறியீட்டுச் சொற்கள் 55

2.1.10. இரட்டுற மொழிதல் 59

2.2. காட்சித்திறனும் உணர்வுநிலையும் கொண்ட சொற்கள் 59

2.2.1. வினைமுற்றுச் சொற்கள் 59

2.2.2. வினைத்தொகைச் சொற்கள் 60

2.2.3. ஒருபொருட்பலசொல் 61

2.2.4. சொல்மடக்கு 61

2.2.5. தனிச்சுட்டுச்சொல் 65

2.2.6. எண்ணுப் பெயர்கள் 66

2.2.7. சொல்லெச்சம் 66

3. சங்க இலக்கியத் தொடர் உத்திகள் 68– 85

3.1. வினைமுற்றுத் தொடர்கள் 68

3.2. வினையெச்சத் தொடர்கள் 73

3.3. உம்மைத் தொடர்கள் 74

3.4. தொடரமைப்பு உத்தி 74

3.5. அடைத்தொடர்கள் 75

3.6. சிறப்புத் தொடர் 76

3.7. தொடர்மடக்கு .80

3.8. பொருள் மயக்கத் தொடர் 81

3.9. மரபுத்தொடர் 82

3.10. அந்தாதித் தொடரமைப்பு 83

4. வண்ணஉள உத்திகள் 86– 192

4.1. பொதுவகையில் கையாளப்படுவன 86

4.1.1. வெளிப்படையாகப் பொருஉள உணர்த்துவன 86

4.1.1.1.	உவமை	86
4.1.1.2.	உருவகம்	97
4.1.1.2.1.	தெளிவு உருவகங்கள்	100
4.1.1.2.2.	மூட்ப உருவகம்	106
4.1.1.3.	மிகை வருணனையும் மிகைக் கற்பனையும்	109
4.1.1.4.	பின்புல வருணனை	111
4.1.1.5.	உருக்காட்சி வருணனை	116
4.1.1.6.	பொருள் மடக்கு	118
4.1.2.	குறிப்பாகப் பொருளையுணர்த்துவன	120
4.1.2.1.	அகப்பொருளுக்குரியன	120
4.1.2.1.1.	இறைச்சியும் உள்ளுறையும்	122
4.1.2.1.2.	படிமக்காட்சி	148
4.1.2.1.2.1.	இயற்கைப் படிமக் காட்சிகள்	149
4.1.2.1.2.2.	தனிப்படிமக் காட்சிகள்	152
4.1.2.1.2.3.	மரபுப்படிமக் காட்சிகள்	156
4.1.2.1.3.	தொகுநிலைக் களவி	158
4.1.2.2.	புறப்பொருளுக்குரியன	163
4.1.2.2.1.	இனமொழி	163
4.1.2.2.2.	குறிப்பெச்சம்	165
4.1.2.3.	அகத்திற்கும் புறத்திற்கும் உரியன	170
4.1.2.3.1.	இகழ்ச்சிக் குறிப்பு	170
4.1.2.3.2.	குறிப்பு முரண்	171
4.1.2.3.3.	வருணனைக் குறிப்பு	173
4.2.	பாடலமைப்பில் கையாளப்படுவன	177
4.2.1.	தொடக்க, முடிவில் அமைவன	178
4.2.1.1.	எட்டுத்தொகைப் பாடல்கள்	178

4.2.1.1.1.	பத்துப்பாட்டு நூல்களின் அமைப்பு	180
4.2.1.2.	உரையாடல் அமைப்பு	187
4.2.1.3.	வாய்மொழிக் கருகோளைக் கருவியாக்கல்	189
4.2.1.4.	எளிமைப் பாடல்கள்	190
4.2.2.	யாப்பமைப்பில் அமைவன	191
5.	பொருளமைப்பு உத்திகள்	193 - 208
5.1.	ஆற்றுப்படுத்தும் முறை	193
5.2.	முன்னிலைப்படுத்தும் முறை	196
5.3.	நிகழ்ந்தது நினைத்தல்	200
5.4.	நிகழ்வது நினைத்தல்	202
5.5.	நிகழ இருப்பது நினைத்தல்	202
5.6.	நிகழ்ந்தது கறல்	203
5.7.	சார்த்திக் கறும் முறை	205
5.8.	கனவு	206
5.9.	பிறவகைப் பொருளமைப்பு	207
6.	உத்திகள் உணர்த்துவன	209 - 212
	தொகுப்புரை	213 - 217
	பின்னிணைப்புகள்	1 - 81
	1. கலைச்சொற்கள்	1 - 4
	2. இலக்கிய ஆட்சி	5 - 81
	உசாத்துணைப் பட்டியல்	82 - 92

* * *



முகவுரை

தமிழில் உத்திகள் பற்றி ஆய்ந்தனவாக, 'சங்க இலக்கிய உவமைகள்', 'தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள்' என்ற இரு ஆய்வு நூல்கள் அமைந்துள்ளன.

இவ்வாய்வேட்டில், சங்க இலக்கிய உத்திகள் அனைத்தையும் கண்டறிவது நோக்கமாகும். ஒப்பீட்டாய்வு இதில் மேற்கொள்ளப்படவில்லை.

பொருளமைப்பில் கையாளப்படும் உத்திகள் அக அமைப்பு உத்திகள் எனவும், சொல்நிலையிலும், தொடர்நிலையிலும், பொருளை விளக்கிச் செல்லும் முறையிலும், பாடலமைப்பிலும், யாப்பமைப்பிலும் அமையும் உத்திகள் புற அமைப்பு உத்திகள் எனவும் அடிப்படையில் இரு கூறுகளாகப் பகுக்கப்படுகின்றன.

முதல் இயல் தமிழில் உத்திகளைப் பற்றிய பொதுவான கண்ணோட்டத்தை விளக்குகிறது. இரண்டாம் இயலில் சொல்நிலையில் அமையும் உத்திகளைப் பற்றிக் காணப்படுகின்றது. மூன்றும் இயல் தொடர்நிலையில் அமையும் உத்திகளை விளக்குகிறது. பொருளை விளக்கிச் செல்லும் முறையிலும், பாடலின் தொடக்கம், முடிவு, நிகழ்ச்சிப் பின்னல் ஆகியவற்றிலும், யாப்பு அமைப்பிலும் கையாளப்படும் உத்திகள் நான்காம் இயலில் விளக்கப்படுகின்றன. ஐந்தாம் இயல் பொருளமைப்பில் கையாளப்பட்ட உத்திகளைக் காட்டுகிறது. இறுதியாக உத்திகளைக் கண்டறிந்த வழி உணர்ந்த செய்திகள் ஆறும் இயலில் சுட்டப்படுகிறது. சங்க இலக்கியங்களில் அழகு நிலைக்கெனக் கையாளப்படும் உத்திகளில் கவனம் செலுத்தப்படவில்லை. பொருளை விளக்குதற்கென உத்திகளைக் கையாள்வதையே தலையாய நோக்காகக் கொண்டுள்ளமையால் அவ்வுத்திகளுக்கு முதலிடம் அளித்து இவ்வாய்வேடு அமைக்கப்பட்டுள்ளது.

ஒலிக்குறிப்புச் சொற்கள், அசைச்சொற்கள் என்பன தனிச்சொல் நிலையில் அமைந்துள்ளமையால் அவற்றின் ஆட்சி பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. 'சங்க இலக்கிய உவமைகள்' என்ற நூலில் உத்திகள் தொகுக்கப்பட்டுள்ளமையால், வினைசார் உத்திகளில் 'இறைச்சி', 'உள்ளுறை' என்பன மட்டும் பின்னிணைப்பாக அளிக்கப்பட்டுள்ளது. பிற உத்திகளின் முழுமையான ஆட்சி அடிக்குறிப்புகளிலேயே சுட்டப்பட்டுள்ளது. இவ்வாய்வேட்டில் இடம் பெற்றுள்ள உத்தி பற்றிய கலைச் சொற்களும் அவற்றுக்கு இணையாக இலக்கண நூல்கள் கையாண்டுள்ள சொற்களும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

* * *

இயல் - 1

தமிழில் உத்தி - ஒரு பொதுநோக்கு

1. தமிழில் உத்தி - ஒரு பொதுநோக்கு

'உத்தி' என்பது ஒவ்வொரு தொழில் துறையோடும், கலைத் துறையோடும் தொடர்புபட்ட ஒரு சொல்லாக விளங்குகிறது. அவ்வத்துறைகளில் ஏதேனும் நோக்கம் கருதிக் கையாளப்படும் சில நுட்ப முறைகள் உத்தி எனப்-படுகிறது. இலக்கியத் துறையில் உத்தி என்பது, ஒரு படைப்பாளன் தனது படைப்பில் கையாளும் சில வெளிப்பாட்டு நுணுக்கங்களைக் குறிக்கின்றது.

செய்தியைச் சுருக்கமாகவும், செறிவாகவும் கூறுதற்கும், சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்தற்கும், வெளிப்பட விரிவாகக் கூற இயலாத அல்லது கூற விரும்பாத செய்திகளை மறைமுகமாக விளக்குதற்கும், தான் உணர்ந்த செய்தியை உணர்ந்தவாறே கற்போரையும் உணரச் செய்தற்கும், தமது படைப்பை அனைவரும் கற்குமாறு தூண்டுதற்கும், எளிதில் மனங்கொள்ளச் செய்தற்கும் இலக்கியத்தில் உத்திகள் கையாளப்படுகின்றன.

1.1. உத்தி - பெயராக்கம்

'உத்தி' என்ற சொல் வடமொழிக்குரியதோ தமிழ் மொழிக்-குரியதா என்பது தனி ஆய்விற்குரியது. எவ்வாறாயினும் தமிழைப் பொறுத்த வரையில் இச்சொல் ஒரு காரணப் பெயராக உள்ளது.

உய்த்துணரப்படுவதாலும் உற்றுக் கண்டறியப்படுவதாலும் 'உத்தி' எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.[1] தமது எண்ண வெளிப்பாட்டிற்கெனப் பலவாறு உய்த்துணர்ந்து கண்ட வழிகள் உத்தி எனப்பட்டது எனவும் கருதலாம்.

---

1. புலவர் அ. சிவலிங்கனார் அவர்களிடம் கேட்டறிந்த கருத்து.

'உ' என்பது இச்சொல்லின் வேர்ச்சொல்லாகவும், 'பொருந்து' என்னும் வினை இவ்வேர்ச்சொல்லின் பொருளாகவும் கறப்படுகிறது.[2] குறிப்பாக உணர்த்தல், சுருங்கக் கறி விளங்க வைத்தல், உணர்ச்சி பெருகக் கறுதல் என்பனவற்றை இலக்கியப் படைப்பாளன் இன்றியமையாது மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்விடங்களில் கற விரும்பும் கருத்துக்கு இனையாக வேறு பொருள்களையோ, சொற்களையோ, தொடர்களையோ பொருத்திக் கண்டு பல வழிமுறைகளைக் கையாள்கிறான். இவ்வகையில் 'உத்தி' என்பதற்குப் 'பொருந்தும் முறை', 'இனை' எனப் பொருள் கறப்படுவது பொறும் பொருந்துவதாயுள்ளது. இங்கு 'உத்தி' என்னும் சொல் 'இனை' அதற்குப் பொருத்தமான மற்றென்று என்ற பொதுப்பொருளில் வழங்கிப் பின்னர் பொருள்களை இனைப்படுத்தற்குரிய நுட்பத் திறத்தைக் குறிக்க வழங்கியது எனக் கருத இடமுண்டு. நுட்பத் திறத்தைக் குறிக்க வந்த 'உத்தி' எனும் பெயர் அத்திறத்தால் அமைக்கப்பட்ட வழிமுறைகளைக் குறிக்கும் பெயராக ஆகி வந்தது. 'செம்மை' எனும் சொல் நிறத்தையும் வடிவத்தையும் உணர்த்தி நடுவுநிலைமை எனும் மனப்பண்பையும் உணர்த்துவது போன்று 'உத்தி' எனும் சொல் 'இனை' என்ற பொதுப்பொருளில் வழங்கி நுட்பம் என்ற சிறப்புப் பொருளையும் உணர்த்தி நின்றது எனலாம்.

அகராதிகளுள் பல 'உத்தி' என்பதன் சொன்மையை விளக்காது தொல்காப்பியர் கறும் உத்திவகையை அடியொற்றி முப்பத்திரண்டு உத்திகள் என்று மட்டும் பொருள் கறுகின்றன. மாறாகச் சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளை[3] 'உத்தி' என்னும் சொல்லுக்குப் 'புனர்ப்பு' என்னும் பொருளைக் கறுகிறார். கறும் கருத்துக்கு ஒப்பான பன்புடைப் பொருளைப் புனர்த்துக் கறுதல் என்ற முறையில் இது பொருந்துவதாகும்.

---

2. ஞா. தேவநேயப் பாவாணர், முதல் தாய்மொழி (அ) தமிழாக்க விளக்கம், (கழக வெளியீடு, சென்னை, 1953), பக். 181.

3. சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளை (தொகுப்பாசிரியர்), இலக்கியச் சொல்லகராதி, (சென்னை, ஆனந்த ஹை ஐப்பசி மீ), பக். 33.

தொல்காப்பியம் 'உத்தி' என்பதற்குரிய வரையறையைத் தனியே காட்டவில்லை. ஆயின் முப்பத்திருவகை உத்திகளை விளக்குகிறது.[4] இவைகளைக் காணும்பொழுது 'வெளியீட்டு முறை' என்பது உத்தியின் பொருண்மையாக உய்த்துணரப்படுகின்றது. ஆயின் சங்க இலக்கியம் முதல் அனைத்து இலக்கியங்களிலும் பாம்பின் படப்பொறி, தலையணி என்ற பொருள்களைக் குறிப்பதற்காக இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீதிநெறி விளக்கம் 'ஐந் திரிபின் றளந்துத் தியில் தெளிந்து'[5] எனக் 'கருத்து' எனும் பொருளில் 'உத்தி' என்ற சொல்லைக் கையாண்டுள்ளது.

'நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி அறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி'[6]

என்ற நன்னூல் நூற்பாவில் 'பொருந்தும் முறை' (தகும் வகை) என்பது 'உத்தி' எனும் சொல்லுக்குரிய விளக்கமாகும். ஆறுமுக நாவலரும் இங்கு, உத்தியென்பதற்குப் 'பொருந்துமாறு' என்று விளக்கம் தருகிறார்.

குவலயானந்தம், சந்திராலோகம் எனும் இரண்டு நூற்களும் 'யுத்தி அணி' என்ற ஒன்றினைக் குறிப்பிட்டுள்ளன.[7] தன் உள்ளத்துக் கொண்ட செய்தியைப்

---

4. இளம்பூரனார் (உரையாசிரியர்), தொல்காப்பியம், பொருளதிகாரம், (கழக வெளியீடு, சென்னை, 1961 மறுபதிப்பு), நூற்பா. 656.

5. திரு திருப்பர சுவாமிகள், நீதிநெறி விளக்கம், (கழக வெளியீடு, சென்னை, 1970), பா. 102.

6. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), நன்னூல் (பாயிரவியல்), இருபத்தாறும் பதிப்பு, (இடம் இல்லை, 1971), நூற்பா 15.

7. ச. வே. சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்), குவலயானந்தம் 1, 2 சந்திரா-லோகம், (தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979), குவலா. நூ. 148; சந்திரா. நூ. 115.

பிறர் அறியாமல் செய்வதற்குத் தன் செயலில் ஒரு மாற்றம் செய்து பிறரை வஞ்சிப்பது யுத்தி அணியாம் என்பது இந்நூல்கள் அவ்வணிக்குக் கறும் விளக்கமாகும். இப்பொருள் நாம் கருதும் இலக்கிய உத்தியிலிருந்து பொதும் முரண்பட்டதாய் இருப்பினும் 'நுட்பம்', 'சூழ்ச்சி' என்பது அடிப்படைப் பொருண்மையாய் இருப்பது கருதத்தக்கது.

தொல்காப்பியம் 'ஒத்தகாட்சி உத்திவகை'[8] என்றும், மாறனலங்காரம், 'உள்ளுறுத்தமைத்த உத்திவகை'[9] என்றும் அடைமொழி புணர்த்துக் கறுகின்றன. இதில் 'ஒத்த காட்சி உத்தி வகை' என்பதற்கு உரையாசிரியர்கள் பலவகையாகப் பொருள் கறியிருப்பினும், 'கறவிரும்பும் பொருளை அதற்கு ஒப்புமையான மற்றொரு பொருள் வழியாகவும், உட்பொருளாகவும் உணர்த்துவது உத்தி' எனும் விளக்கத்தை அளிப்பனவாக உள்ளன இத்தொடர்கள்.

தமிழ்ப் பேரகராதி 'உத்தி' எனும் சொல்லுக்குரியதாகச் செல்வம், சொல், திருவுறுப்பு, தூக்கங்கள், பாம்பின் படப்பொறி, தேமல், பொருந்துதல், இசைவு, தந்திரம் என்ற பொருள்களைக் கறுகிறது. இவற்றுள், பொருந்துதல், இசைவு, தந்திரம் என்பன நாம் கருதும் உத்தி என்பதற்குப் பொருத்தமாகக் கொள்ளத்தக்கன. அகராதியில் கறப்பட்டுள்ள பொருள்களையே நிகண்டுகளும் கொண்டுள்ளன. பொதிகை நிகண்டு ஒன்றே 'ஊகம்', 'நுண்மை' என்ற பொருள்களைக் குறிப்பிடுகிறது.[10] 'உபாயம்' என்னும் சொல்லும் 'உத்தி' என்ற பொருளைக் குறிப்பதை நாமதீப நிகண்டு உணர்த்துகிறது.[11] 'நுட்பமாகவும்,

---

8. இளம்பூரணர், தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா. 656.

9. நாராயண ஐயங்கார் (பதிப்பாசிரியர்), மாறனலங்காரம், (மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு, 1915), நூற்பா. 25.

10. வையாபுரிப்பிள்ளை (பதிப்பாசிரியர்), பொதிகை நிகண்டு, (சென்னை, 1934) நூற்பா 413, 377

11. வையாபுரிப்பிள்ளை (பதிப்பாசிரியர்), நாமதீப நிகண்டு, (சென்னை, 1930) நூற்பா 606.

ஆகத்தாலும் உய்த்துரைக்கப்படுவதாக அமைவது உத்தி' என்பது இங்குப் பொருந்தி வருவதாய் உள்ளது. உரையாசிரியர்களுள் சேனாவரையர் மட்டும் 'உத்தி' என்னும் சொல்லுக்கு நிகராகப் 'புனர்ப்பு' என்னும் சொல்லைக் கையாளுகிறார்.[12] நுட்பமாய்ப் பொருளைப் புனர்ப்பது உத்தி என்பது இங்கு நன்கு தெளிவுபடுகிறது.

'உத்தி' என்னும் சொல்லுக்கு நிகராகத் 'திறன்' என்ற சொல்லும் வழங்கப்படுகிறது.[13] 'திறன்' என்பது படைப்பாளன் கையாளும் உத்திகளோடு அவனது பல்துறை அறிவு, பொருளை விரிக்கும் திறன் என்பன போன்ற பல தன்மைகளையும் உள்ளடக்கியதாகும். எனவே 'திறன்' என்னும் சொல்லை உத்தி உள்பட வேறுபல திறன்களையும் குறிக்கும் பொதுப்பெயராகக் கொள்ளலாம்.

1.2. இலக்கண நூல்கள் காட்டும் இலக்கிய உத்திகள்

மொழிக்கு இலக்கணம் கறவந்த இலக்கண நூலார் மொழியின் படைப்பாகிய இலக்கியத்தின் வெளிப்பாட்டு முறையிலும் கருத்தைச் செலுத்தியுள்ளனர்.

1.2.1. தொல்காப்பியம்

தொல்காப்பியர் கறும் முப்பத்திருவகை உத்திகள் உரையெழுதுவோரும், இலக்கண நூலைச் செய்வோரும் கொள்ளத்தக்கன. இவர் நேரடியாக இலக்கிய உத்திகளைச் சுட்டிச் செல்லாவிடினும் அதனைக் கருத்தில் கொண்டபடி நூற்பாக்களை அமைத்திருக்கக் காணலாம்.

அகத்திணையியலில் ஒவ்வொரு திணைக்கும் நிலம், பொழுது என வரையறுத்துக் கறியிருப்பது அகத்திணைப் பாடல்களில் அவ்வவ்வொழுக்கத்தைக் குறிப்பதற்குரிய குறியீடுகளாய்ப் பயன்படுத்தற்கு எனலாம்.

---

12. சேனாவரையர் (உரையாசிரியர்), தொல்காப்பியம் சொல்லதிகாரம், (கழக வெளியீடு, சென்னை, 1970 மறுபதிப்பு), பக். 13.

13. சி. பாலசுப்பிரமணியன், 'குமரகுருபரர்', தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-2, (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977),

தலைவன், தலைவி ஆகியோருக்குக் கற்று நிகழும் இடங்கள் என வரையறுத்துக் கூறியிருப்பது செய்தியை வெவ்வேறு முறையில் வெளிப்படுத்தும் உத்திகளாக அமையத்தக்கன.[14] முதலில் இவை உத்தியாகப் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் வழிவழியாகப் பின்பற்றப்படும்பொழுது இலக்கிய மரபாயிற்று.

நேரடிக் கற்குக அமைக்காது நடந்த நிகழ்ச்சியை மீண்டும் நினைத்துப் பார்ப்பது போன்று அமைப்பது ஒரு முறை. இதனையே தொல்காப்பியரும்,

'நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்'[15]

'நிகழ்ந்தது கறி நிலையலுந் தினையே'[16]

எனக் கூறுகிறார். இடைச்சுரத்துத் தலைவன் தலைவியை நினைந்து கொள்ளுதலும், பொருள்வயிற் செல்லுதற்கு முன் அவளைப் பற்றி நினைந்து செலவழுங்குதலும் இதனுள் அடங்கும்.

இயங்க இயலாத நெஞ்சை இயங்குவது போலவும், உறுப்புகள் இல்லாத நெஞ்சிற்கு உறுப்புடையது போலவும் கூறுவது துன்ப உணர்வு மிகுதியின் வெளிப்பாடாகும். இத்தன்மை 'உணர்வு வழுவமைதி' எனப்படும். இதனை,

'நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்'[17]

---

14. இளம்பூரனர், தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா. 42, 43, 44, 45

15. மேற்கண்டபடி, நூற்பா. 46.

16. மேற்கண்டபடி, நூற்பா 47.

17. இளம்பூரனர், தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 194.

எனத் தொல்காப்பியர் சுட்டுகிறார். இவ்வாறே நெஞ்சைப் போன்று, என்னும் தன்மையற்ற கை, நெற்றி என்ற உறுப்புகளை அத்தன்மையுடையனபோலக் கறச் செய்தலும் தலைவியின் மெலிவை உணர்த்தும் உத்தியாக உள்ளது. தலைவனது பிரிவைத் தான் உணர்தற்கு முன்பே தன் 'கை' உணர்ந்தது எனக் கூறும் தன்மைத்து இது.

'வண்ணந் திரிந்து புலம்புங் காலை
உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே' [18]

என்ற நூற்பா இதனை உணர்த்தும். இவ்வாறு கூறுதல் இலக்கிய மரபாக உள்ளதெனினும் உத்தியாகப் பயன்படுத்தப்பட்ட தன்மையே பின்னர் மரபாகக் கொள்ளப்பட்ட நிலையை அடைந்துள்ளது.

தலைவன் தலைவியைப் பார்த்து மகளோ, தெய்வமகளோ, மூகமோ, நிலவோ என ஐயுறுவதாகக் கற்றுகள் அமைகின்றன. தலைவியின் அழகு மிகுதியையும், அதில் தலைவனது ஈடுபாட்டு மிகுதியையும் உணர்த்த இத்தகு கற்று அமைக்கப்படுகிறது. இதுவே தடுமாறுவமம், ஐயுவமம் என உவமை வகைகளாக வளர்ச்சி பெற்றன. இதற்கு,

'உயர்மொழிக் கிளவி உறழும் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே' [19]

என்ற தொல்காப்பிய நூற்பா அடிப்படையாக உள்ளது.

உவமையின் தோற்றம், அவை தோன்றும் நிலைக்களன்கள், உவமப் பொருள்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பன உவமவியலில் விளக்கப்படுகின்றன. உத்திகளில் உவமை அடிப்படையாய் அமைதலால் போலும் தொல்காப்பியர்

---

18. இளம்பூரனர், தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா. 199.

19. மேற்கண்டபடி, நூற்பா 234.

உவமைக்கெனத் தனி இயலைப் பகுத்துள்ளார். அனி இலக்கண நூல்களுள் கூறப்படும் ஒருபொருள் உவமை, பலபொருள் உவமை என்ற பல உவமை வகைகளுக்கும் இவ்வுவமவியல் கருத்துகள் அடிப்படையாய் உள்ளன.[20]

தலைமகள் கூற்றில் அமையும் உவமைகள் அவள் அறிந்த பொருளின் கண்ணதாக அமைய வேண்டும்;[21] தோழி கூற்றில் அந்நிலத்திலுள்ளனவன்றிப் பிற உவமப் பொருள்களாக அமையாது;[22] தலைவன் கூற்றில் அமைவன அறிவோடு கிளக்கப்படும்[23] எனக் கூறியுள்ளவைகளைக் காணும்பொழுது பாத்திரப் படைப்புகளுக்கேற்ப உவமைகளைப் பயன்படுத்த வேண்டும் எனும் கருத்து வெளிப்படக் காணலாம். பாத்திரப் படைப்பிலும் அதன் பேச்சிலும் அமைய வேண்டிய ஒருமைப்-பாட்டின் இன்றியமையாமையும் இங்கு உணர்த்தப்படுகிறது.

விரனப்பாலுவமம், பயனிலையுவமம், மெய்ப்பாலுவமம், உருவினுவமம்[24] என ஒவ்வொரு பொருண்மைக்கும் என்னென்ன உருபுகள் என்பன தனித்தனியே சுட்டப் பட்டுள்ளன. பொருளைப் புரிந்து கொள்வதில் சிக்கலேதும் இன்றி, தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்பது கருதி உவமையில் கையாண்ட நுட்பமாக இதனைக் கருதலாம்.

இவ்வியலில் கூறப்படும் உள்ளுறை, இறைச்சி என்பன சங்க இலக்கியத்தின் தலையாய உத்திகளாக அமைந்திருப்பது கருதற்குரியது. குறிப்பிட்ட நிலத்திற்குக் குறிப்பிட்ட கருப்பொருள்கள் என வரையறுக்கப்பட்டு தெய்வம் ஒழிந்த மற்ற கருப்

---

20. இளம்பூரனர், தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பாக்கள் 280, 28

291, 295, 306, 307, 305, 308, 309.

21. மேற்கண்டபடி, நூற்பா 297.

22. மேற்கண்டபடி, நூற்பா 298.

23. மேற்கண்டபடி, நூற்பா 299.

24. மேற்கண்டபடி, நூற்பாக்கள் 283, 285, 286, 287.

பொருள்கோள இடமாகக் கொண்டு உள்ளுறை அமையும் எனக் கூறப்பட்டுள்ளதை நோக்கின் தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில், இன்று பெரிதளவில் வழங்கப் படும் 'குறியீடு' என்ற உத்திக்கு இவ்விதியும் ஒருவகையில் அடிப்படையாய் அமைகிறது எனக் கருத இடமுண்டாகிறது.

உள்ளுறைபாற் பட்டனவாகக் குறிக்கப்படும் மங்கலமொழி, அவையல்மொழி, மாறில் ஆன்மையிற் சொல்லிய மொழி ஆகியனவும் குறிப்பாகப் பொருளுணர்த்தும் உத்திகளாகக் கொள்ளத்தக்கன.[25] இவை உவமை போலவும் (ஒருவனைச் சிங்கம் வந்தது என்றல்), குறியீடுகள் போலவும் (துஞ்சூர் என இறந்தோரைக் குறித்தல்) அமைந்து குறிப்பாகப் பொருளையுணர்த்துகின்றன.

பேசாத பொருட்களைப் பேசுவதாகக் கற்பித்துக் கொண்டு அவற்றிடம் தமது மன உணர்வுகளை வெளியிடுவது போன்ற பாத்திரங்களின் பேச்சுகளை அமைப்பது ஓர் உத்தியாகும். இது பாத்திரங்களின் மனஉணர்வுகளை வெளிப்படுத்தும் வழியாகும்.

தொல்காப்பியர் ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது, புள், நெஞ்சு முதலானவற்றையும் பிறவற்றையும் கறி இவையனைத்தும் கேட்குந போலவும், கிளக்குந போலவும் தன்மையுடையன[26] எனக் கூறியுள்ளமை இவ்வுத்திக்குரிய அடிப்படையாய் உள்ளது.

'தொகுநிலைக் கிளவி' என்ற ஒன்றும் இவரால் குறிக்கப்படுகிறது.[27] உணர்த்த வேண்டிய கருத்தை வேறுபொருளில் தொக்கி நிற்கும்படி உணர்த்துவது

---

25. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 240.

---

26. மேற்கண்டபடி, நூற்பா 501.

27. மேற்கண்டபடி, நூற்பா 504.

இத்தன்மை. தலைவன் விரைவில் வரைந்து கொள்ள வேண்டுமெனக் கூறவிரும்பும் தோழி அதனை நேரடியாகக் கூறாது, 'இச்சிறுநல்லூர் பிரிந்துறைவோர் செயலற்று வருந்தும்படி வந்துள்ள வாடைக் காற்றோடு இன்னல் மிக்க உறையுமிடத்தையுடையதாகும் ஆதலால் சிலவாகிய வாழ்நாள்களை மட்டுமே உடைத்து'[28] என்ற கற்றுவழித் தொக்கி நிற்குமாறு உணர்த்துவது இதற்குச் சான்று. சங்க இலக்கிய அகப்பாடல்கள் பெரும்பான்மையும் இத்தன்மைத்தாக உள்ளன.

கூறவந்த பொருளுக்கு இசையான கருத்தைக் கூறி அதன்வழி, பொருளை உணர்த்துவது குறிப்பு உத்தியுள் ஒருவகை. ஒலியழுத்தம், அசையழுத்தம் ஆகியவற்றின் மூலம் குறிப்பாக உணர்த்துவது மற்றொரு வகை. தொல்காப்பியர் கூறும் குறிப்பெச்சம், சொல்லெச்சம்[29] என்னும் இருவகைகளும் இவ்வுத்தியைக் குறிக்கின்றன. இதனை முற்றுத் தொடருக்கு அகத்தே அமையும் எச்சம், முற்றுத் தொடருக்குப் புறத்தே அமையும் எச்சம் என இருவகைப்படுத்தலாம். தொல்காப்பியர் பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை, உம்மை, சொல், குறிப்பு எனப் பல எச்ச வகைகளைக் கூறுகிறார்.[30] இவற்றுள் பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை, உம்மை என்பன தொடருக்கு அகத்தே அமைவன. இதில் எதிர்மறை 'மாறுகொள் எச்சம்'[31] எனவும் குறிக்கப்படுகிறது. குறிப்பெச்சம் அனை இலக்கண நூல்களில்

---

28. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, (கழக வெளியீடு, சென்னை, 1972 மறுபதிப்பு), பா.55.

29. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 507.

30. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், இரண்டாம் பதிப்பு, (சென்னை, 1934), நூற்பாக்கள் 430, 439, 440, 441.

31. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம், எழுத்ததிகாரம், (கழக வெளியீடு, சென்னை, 1958 மறுபதிப்பு), நூ.291.

'ஒட்டணி' எனப்பெயர் பெற்றுள்ளது. சொல், குறிப்பு என்பன தொடருக்குப் புறத்தே அமைவன. இவை சொல்லுவார் குறிப்பால் எஞ்சி நின்ற பொருளை-யுணர்த்தும். இவ்வெச்ச வகைகளை செய்யுளின் உறுப்புகளில் ஒன்றாகக் குறிப்பிட்-டிருப்பதும் கருதத்தக்கது.

பாவகையைக் குறிக்கையில் மொழிகரந்து மொழியும் பழிகரப்பு அங்கதம் எனும் ஒருவகையைக் குறித்துள்ளார்.[32] எள்ளல் குறிப்பாகப் பொருளை வெளிப்படுத்துதற்குரிய உத்தியாக இதனைக் கருதலாம்.

பொருளைச் சுருக்கமாகவும், நுட்பமாகவும் உணர்த்த 'முதுமொழி'-யையும் சிறந்த கருவியாகக் கொண்டமையை,

> 'நுண்மையுஞ் சுருக்கமும் ஒளியு முடைமையும்
> மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
> குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
> ஏது நுதலிய முதுமொழி யென்ப'[33]

என்ற நூற்பா வழி அறியலாம்.

இடையியலில் கழிவு குறித்தல், ஆக்கம் குறித்தல், விழைவு குறித்தல், அச்சம் குறித்தல், பெருமை குறித்தல், ஐயம் குறித்தல், தேற்றப் பொருள் குறித்தல் என்பன போன்ற பல பொருண்மைகளில் என்னங்களை வெளியிடற்குரிய சொற்களை விளக்கியுள்ளார். 'மன்', 'கொல்', 'அம்ம' என்பனபோன்று வரும் பல இடைச்சொற்களும், அவை ஒவ்வொன்றும் எந்தெந்தப் பொருண்மையை உணர்த்தும் என்பதும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது. தனித்து நின்று பொருள் தராது பெயர், வினை ஆகியவற்றைச் சார்ந்தே பொருள் பயக்கும் தன்மையன

---

32. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 431.

33. மேற்கண்டபடி, நூற்பா 479.

இச்சொற்கள். ஆயினும் இவை ஒவ்வொன்றையும் தனி இயலில் விளக்கியிருத்தலே நோக்குமிடத்து வியப்பூனர்வு, ஐய உனர்வு என்பன போன்ற பொருண்மைகளை வெளிப்படுத்தற்குரிய குறியீடுகளாய் இச்சொற்களைத் தொல்காப்பியர் கருதியுள்ளார் என என்னுதற்கு இடமளிப்பதாய் உள்ளது.

செய்யுளியலில் இவர் கறும் வண்ணங்கள், இயைபு[34] ஆகியன பாடலுக்கு அழகு சேர்க்கும் ஒலிநிலை உத்திகளாகக் கொள்ளத்தக்கன. ஓரின எழுத்துகள் ஒன்றுக அமைந்து ஓசை நயத்தை அளிக்கும் தன்மையன இவை.

இம்முறைகள் அனைத்தும் தொல்காப்பியத்தில் பொதுவகையில் கறப்பட்டிருப்பதுபோல் தோன்றினும், இவை இலக்கிய வெளிப்பாட்டு முறைகளைக் கருத்தில் கொண்டு கறப்பட்டவையாகக் கொள்ளத்தக்கன.

1.2.2. அணி இலக்கண நூல்கள்

செய்யுளில் அமையும் பொருள் வெளிப்பாட்டு முறைகள், சொல்லழகுகள், சொல் விளையாட்டுகள் ஆகியவற்றின் பலவகைகளையும் அணி என்ற பெயரில் விளக்குவன அணி இலக்கண நூல்கள். அழகுபெறச் செய்வது என்ற காரணத்தின் பெயராக 'அணி' என்ற பெயர் அமைந்திருப்பினும் அணிகளுள் சில அழகு சேர்ப்பதற்கும், பொருள் புலப்பாட்டிற்கும் உதவுகின்றன. அழகு பெறச் செய்வதே அணி[35] என்றும், பண்பு, அழகு என்னும் இருதிறத்தாலும் பொருள் புலப்படுப்பது அணி[36] என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன. இருதிறத்திலும் அணிகள் பயன்படுத்தப்படுவது சிறப்புடைத்தாகும்.

---

34. இளம்பூரனர், தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 513-515, 541, 543.

35. நாராயண ஐயங்கார், மாறனலங்காரம், நூற்பா 86.

36. தி.வே. கோபாலையர், (பதிப்பாசிரியர்), இலக்கண விளக்கம், (சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சை, 1973), நூற்பா 620.

மாறுக அழகு சேர்க்கும் சொல் விளையாட்டுத் தன்மையையே முதன்மைப் பண்பாகக் கொண்ட அணிகளும் உள்ளன. இங்கு, தமது புலமைத் திறத்தை அனைவரும் அறியச் செய்தல் வேண்டும் எனும் தன்முனைப்புப் பண்பு மிகுந்து நிற்கக் காணலாம். சொல்லணிகளாகக் கறப்பெறும் சித்திரகவி, கரந்துறைச் செய்யுள், எழுத்தழிவணி, மாலைமாற்றணி, நீரோட்டகவணி, மாத்திரைச் சுருக்கவணி, திரிபங்கியணி, திரிபாகியணி, ஒற்றுப் பெயர்த்தலணி, பிறிதுபடு பாட்டணி முதலானவை சொல்விளையாட்டுகளின் வகைகளை விளக்குவன. பொருள் வெளிப்பாடு, திறமை வெளிப்பாடு என்ற இரண்டையும் அடிப்படைப் பண்பாகப் பெற்று அணிகள் உத்திகளாகச் செயல்படினும், இவற்றில் புலவர் திறனை வெளிப்-படுத்திக் கொள்ளும் நோக்கு மிகுந்துள்ளது. இடைக்கால இலக்கியங்கள் பலவும் இவ்வணி இலக்கண அமைப்பைப் பின்பற்றி அமைந்துள்ளன.

1.2.2.1. பொருள்கோள்

எல்லா இலக்கண நூல்களும் பொருள்கோள் வகையைக் குறிப்பிடு-கின்றன. கற்போர்தம் திறனுக்கு பொருளைக் கொண்டு கூட்டிக் கொள்ளுமாறு உடைய பாடல் அமைப்பு பொருள்கோள் எனப்படுகிறது. தொல்காப்பியர் கூறும் 'மாட்டு' என்பதற்கு நிகராக இதனைக் கருதலாம். பொருளைக் குறிப்பாக உணர்த்துதலையும், பாடலுக்கு அழகு சேர்த்தலையும் நோக்காகக் கொண்ட பிற உத்தி அமைப்புகளினின்றும் இவ்வமைப்பு மாறுபட்டு விளங்குகிறது. பொருளைப் புரிந்து கொள்ள, கற்போரைச் சிந்திக்க வைக்கக் கையாளும் முறைகள் இவ்வமைப்பில் மிகுந்துள்ளன. இவ்வகைப் பாடல்களும் இலக்கிய ஆட்சியில் உள்ளமையால் இவையும் இலக்கிய உத்தியாகக் கருதத்தக்கன. முன் கறப்பட்ட உத்திவகைகள் பொருள்புலப்பாட்டில் கருத்தைச் செலுத்துதலால் அமைவன. இப்பொருள்கோள் உத்திவகை கற்பவரைக் கருத்தில் கொண்டு அல்லது தனது திறனை வெளிக்காட்டுவதைக் கருத்தில் கொண்டு பொருளைக் கையாளுவதில் படைப்பாளன் அமைக்கும் உத்தி முறைகள் எனலாம். இவை புலனுறல்

வேண்டுமென்றே பயன்படுத்தப்படும் தன்மையன. முன்கூறப்பட்ட உத்திவகைகள் கட்டாய நோக்கின்றி அமையக் கூடியன.

1.3. உத்திகளின் நோக்கம்

பூலவனின் ஆளுமைப் பண்பை அடிப்படையாகக் கொண்டு காணுமிடத்துப் பாடுபொருளை விளக்குதல், பூலமைத் திறனை விளக்குதல் என்ற இருநோக்கங்களில் உத்திகள் கையாளப்படுவதையறியலாம். பாடுபொருளுக்கு இன்றியமையாமை அளித்து அதனைச் சுருக்கமாக, செறிவாக, பொருளுணர்வுக்கேற்ப வெளிப்படுத்த மேற்-கொள்ளும் முயற்சிகள் முதல் வகையைச் சாரும். பூலமைத்திறனை வெளிப்படுத்தும் வழிமுறைகளில் கருத்தைச் செலுத்துதல் இரண்டாவது வகையைச் சாரும். இவ்விரு வகையிலும் பூலவனது திறன் வெளிப்படுவதாக இருப்பினும் பின்னதில் அந்நோக்கு மிகுந்துள்ளது. குறிப்பிட்ட காலச் சூழலும் இத்தன்மைக்குக் காரணமாய் அமைந்தது எனலாம். நிகண்டுகளை இன்றியமையாது கற்க வேண்டும் என்று இருந்த கல்வி நிலை, சொல்வளனிலும், சொற்பொருளிலும் ஈடுபாடு, பூலவர்தம் பூலமைத் திறம் ஒன்றையே பயன்படுத்தி வாழ்க்கை நடத்த வேண்டிய தன்மை என்ற சூழலமைந்த இடைக்காலப் பகுதியில் இத்தன்மை மிகுந்து காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் பொருள் விளக்க நோக்கு மிகுந்துள்ளது. சித்திரகவி, சிலேடை போன்ற சொல் விளையாட்டு நிறைந்த இலக்கியங்கள் மிகுந்த சிற்றிலக்கியக் காலமாகிய இடைக்காலப் பகுதியில் பூலமைத்திறன் வெளிப்பாட்டு நோக்கம் மிகுந்து, இவ்விருபதாம் நூற்றாண்டுப் பகுதியில் பாடுபொருளை விளக்கும் நோக்கிற்கு முதலிடம் அளிக்கப்பட்டு வருகிறது.

1.4. உத்தியும் இலக்கியப் படைப்பும்

1.4.1. பாடுபொருளும் உத்தியும்

அகம், புறம், பக்தி, நீதி என்பனவற்றிற்கேற்ப உத்திகளின் பயன்பாடும் வேறுபடுகின்றன. குறிப்பாக உணர்த்தும் தன்மையதான உள்ளுறை,

இறைச்சி என்பன அகப்பாடல்களில் மிகுந்துள்ளன. புறப்பாடல்களில் பெரிதும் செய்திகள் நேரடியாக உணர்த்தப்படுள்ளன. அறநூல்களிலும், பக்தி இலக்கியங்களிலும் தம் கருத்தை மக்களிடையே பரவச் செய்தல் வேண்டும் என்பது நோக்கமாதலால் அதற்கேற்ப வலியுறுத்திக் கூறுதற்கான உத்திகள் மிகுந்துள்ளன. கட்டளை முடிபுகளும், முன்னிலை வினையைப் பயன்படுத்துதலும் இவ்விலக்கியங்களில் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.4.2. இலக்கிய வடிவமும் உத்தியும்

கவிதை உரைநடை என்ற பாகுபாட்டிற்கேற்ப உத்திகள் மாறுகின்றன. உரைநடையை விடக் கவிதை சுருக்கமான நடையைக் கொண்டிருப்பதால் குறிப்பாகப் பொருளுணர்த்தும் தன்மையும், சுருங்கச் சொல்லி விளக்கும் தன்மையும் அதில் மிகுந்துள்ளது. எளிமை, தெளிவு, சிறுசிறு தொடர்கள் என்பன சிறந்த உரைநடைக்-குரிய பண்பாதலால் இவற்றை உரைநடைக்குரிய உத்தியாகக் கொள்ளலாம். திரு.வி.க. போன்றோரின் வெற்றிக்கு இப்பண்புகளும் காரணமாய் அமைந்தன என்பது கருதத்தக்கது. உணர்வை வெளிப்படுத்தற்கும், நிகழ்ச்சியை வருணித்துக் காட்டுதற்கும் சிறுசிறு தொடர்கள் தகுந்த கருவியாகப் பயன்படுதலால் உரைநடையின் சிறந்த உத்தியாக இச்சிறு தொடர்களைக் கருதலாம். எதுகை, மோனை நயத்தை உரைநடையில் பயன்படுத்துவதும் அதனைச் சுவைபட அமைக்கும் ஓர் உத்தியாக உள்ளது. உரைநடையில் பயன்படும் வேற்றுமை உருபுகள் கவிதையில் நீக்கப்படுகின்றன

1.4.2.1. ஒலிவடிவமும் உத்தியும்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா எனப் பாவகையின் ஓசைவேறுபாட்டிற்கேற்ப உத்திகள் வேறுபடுகின்றன. வெண்பாவைக் காட்டிலும், ஆசிரியப்பா, கலிப்பா ஆகியவற்றில் பலவகையான உத்திகளைப் பயன்படுத்தும் வாய்ப்புளது. உரையாடலைச் சிறப்புற அமைக்க கலிப்பா ஏற்றதாயுளது. அவல உணர்வை வெளிப்படுத்தற்கும்

கலிப்பா பெரிதும் பொருந்தி வருகின்றது. நிகழ்ச்சிகளை விரிவாகவும், விளக்கமாகவும் வருணிக்க ஆசிரியப்பாவும், கலிப்பாவும் பயன்படுத்தப்படுகிறது. இசைப்பாடல்களுக்குத் துள்ளலோசை மிகுந்த கலிப்பா பின்பற்றப்படுகின்றது. எதுகை, மோனை அமைப்புகளும் இப்பகுதியில் கொள்ளத்தக்கன.

1.4.2.2. வரி வடிவமும் உத்தியும்

சித்திரகவி, புதுக்கவிதை போன்றவைகளில் வரிவடிவத்தில் உத்திகள் செயல்படுத்தப்படுகின்றன. புதுக்கவிதையில் பொருளுணர்வுக்கேற்ப வரிவடிவம் கையாளப்படுகிறது. சித்திர கவியில் முன்பே வகுக்கப்பட்ட இலக்கண அமைப்பிற்-கேற்பச் சொற்கள் அமைக்கப்படுகின்றன.

1.4.3. இலக்கிய வகையும் உத்தியும்

சிறுகதை, புதினம், காப்பியங்கள் என இலக்கிய வகைக்கேற்பவும் உத்திகள் வேறுபடுகின்றன. தமிழில் சங்கப் பாடல்கள் தனிநிலைப் பாடல்களாகக் கொள்ளத் தக்கன. தமிழைப் பொறுத்தவரை நாடகம் தனிப்பிரிவாக இல்லாது தனிநிலைப் பாடலோடும் காப்பியத்தோடும் சார்ந்தே இருத்தலால் அவற்றை நாடகக் கூறுபட அமைந்த தனிநிலைப் பாடல்கள் என்பர்.[37] இவை ஒரே யாப்பினதாகவும், சுருக்கமாகவும் அமைதலால் சுருங்கச் சொல்லி விளக்குதற்கு வேண்டிய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இறைச்சி, உள்ளுறை, உவமை என்பன மிகுந்துள்ளன. தொடர்நிலைச் செய்யுட்களாக அமையும் காப்பியங்கள் நீண்ட கதை அமைப்பு உடைமையால் முன்னுக்குப் பின் கதை நிகழ்ச்சியைத் தொடர்பு காட்ட வேண்டி இருப்பதால் அதில் பின்னோக்கு உத்தி,

---

37. ந.வீ. செயராமன், 'தனிப்பாடல்', சங்க இலக்கிய வகைகள், கருத்தரங்கு, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், பக். 2.

முன்னேக்கு உத்தி என்பன தவறுது இடம் பெறுகின்றன. பின் நிகழ்வைச் சுட்டுதற்காக கனவுக் காட்சி, தற்குறிப்பேற்றம் முதலியனவும், கிளைக்கதைகளைப் பயன்படுத்தலும் இன்றியமையாததாகிறது. இவ்வாறு ஒவ்வோர் இலக்கிய வகைக்கும் அளவு, பொருளமைப்பு என்பன வேறுபடுதலால் அதற்கேற்ப உத்திகள் வேறுபடுகின்றன.

1.4.4. படைப்பாளனும் உத்தியும்

ஒவ்வொரு படைப்பாளனுக்கும் உள்ள தனித்தன்மைக்கேற்ப, புதிய உத்திகள் படைக்கப்படுகின்றன. பழைய உத்திகள் வேறு நோக்கில் பயன்படுத்தப் படுகின்றன. சங்க இலக்கியத்தில் ஔவையார், கபிலர் போன்றோர்க்கெனச் சில தனிப்பண்புகள் காணப்படுகின்றன. பாத்திரத்தின் பண்பு வெளிப்பாட்டிற்குக் கடித அமைப்பைப் பின்பற்றிய சிறப்பு இளங்கோவைச் சாருகிறது. இருபதாம் நூற்றாண்டில் சிறுகதை, புதினம் போன்றவற்றில் பல புதிய உத்திகளைக் கையாளும் தன்மை மிகுந்து காணப்படுகிறது. இவ்வாறு தமிழிலக்கியம் அனைத்திலுமுள்ள உத்திகளைப் பகுத்துக் காண்பின் எந்தெந்தப் படைப்பாளரால் எவ்வெவ் உத்திகள் உருவாக்கப்பட்டன என்பதை ஓரளவு கண்டறிய இயலும். இது ஆசிரியர் பெயர் தெரியாத, காலம் அறியப்படாத இலக்கியங்களை அறிந்து கொள்ளுதலில் ஓரளவு துணைபுரிதலும் கூடும்.

1.5. உத்தி வகைகள்

உத்திகளை அவை அமையும் நிலைக்களனுக்கேற்ப அக அமைப்பில் அமைவன, புற அமைப்பில் அமைவன என இருவகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றைப் பொதுவகையில் கட்டமைப்பு உத்தி எனப் பெயர் சுட்டலாம். சொல், தொடர், வண்ணனை (அ) விளக்குமுறை, யாப்பமைப்பு ஆகிய நிலைகளில் அமைவன புற அமைப்பைச் சாரும். பொருள்நிலையில் பயன்படுத்தப்படும் உத்திகள் அகஅமைப்பைச் சாரும்.

1.5.1. புறஅமைப்பு உத்திகள்

1.5.1.1. சொல்நிலை உத்திகள்

1.5.1.1.1. ஒலிக்குறிப்புச் சொற்கள்

கறும் நிகழ்ச்சிக்கும், சூழலுக்கும் ஏற்ற ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துவது கற்போரை அச்சூழலோடு ஒன்றச் செய்யும் தன்மையதாகும். இவ்வொலிக் குறிப்புச் சொற்களைக் குறிப்பிட்ட ஒலியைப் புலப்படுத்தும் முறையில் அதே ஒலியைக் கொண்ட சொல்லாக அமைவது, ஓர் ஒலியைக் குறிக்கும் முறையில் அமையாது வேறு ஏதாவது ஒரு நிகழ்ச்சி, அளவு, உணர்ச்சி போன்றவற்றைக் குறிப்பதாக அமைவது என இருவகையாகப் பாகுபடுத்துவர்.[38]

வியப்புணர்வு, அச்சவுணர்வு என்பவற்றை வெளிப்படுத்தற்கு 'ஆ', 'ஓ' என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை குறிப்பிட்ட ஒலியைக் குறிக்காது உணர்ச்சியைக் குறிப்பதாக அமைவன. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தற்கும் இவ்வுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. அடி அளவில் குறைந்த பாடல்களுக்கு இவ்வுத்தி சிறந்த வாய்ப்பாக உள்ளது.

1.5.1.1.2. ஒலிவேறுபாட்டு உத்தி

மன், அம்ம, கொல் என்பன போன்ற இடைச்சொற்களைச் சேர்த்துக் கறுதல், ஏகார, ஓகார ஒலிகளைச் சேர்த்துக் கறுதல் என்பன இதில் அடங்கும். இரங்கற் குறிப்பையுணர்த்தவும், வியப்புணர்வை வெளிப்படுத்தவும் 'மாதோ', 'மன்', 'அம்ம' எனும் இடைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தை அடியொற்றி தமிழ் இலக்கியம் அனைத்திலும் இத்தன்மை மரபாகப் பின்பற்றப்பட்டுள்ளது

---

38. ஜெ. நீதிவாணன், நடையியல், (முல்லை வெளியீடு, மதுரை, 1979), பக். 43.

சொல்லின் இறுதியில் ஏகார, ஓகார ஒலிகளுக்கு அழுத்தம் கொடுத்துக் கறும்பொழுது அவைகள் பொதுவான பொருளைத் தவிர வேறொரு பொருளையும் உணர்த்தற்குரிய வன்மை பெறுகின்றன. தொல்காப்பியத்தில் எச்சவகையாகக் குறிப்பிடப்பெறும் பிரிநிலை, எதிர்மறை என்பன இவ்வகையில் கொள்ளத்தக்கன. பிரிநிலை, எதிர்மறை என்ற பொருள்களைத் தவிர இரக்கவுணர்வை வெளிப்படுத்தற்கும் ஏகார முடிபு பயன்படுகிறது.

1.5.1.1.3. வட்டார வழக்குச் சொற்கள்

வரலாற்றுப் புதினங்கள், வட்டார வழக்குப் புதினங்கள் போன்ற-வற்றில் கதைச் சூழலுக்கேற்பப் பாத்திரங்களின் பேச்சுகளையும் அமைக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. கதை நடந்த இடத்திற்கு அழைத்துச் செல்லும் சூழலை இது ஏற்படுத்துகின்றது. கவிதை, உரைநடை என்பவற்றை விடச் சிறுகதை, புதினம், நாடகம் என்ற இலக்கிய வகைகளில் இவ்வுத்தி மிகுதியாகப் பயன்படுகின்றது.

1.5.1.1.4. சொல்மடக்கு

கருத்தை வலியுறுத்திக் கறுதற்கும், பொருளுணர்வை வெளிப்படுத்தற்கும் இவ்வுத்தி கையாளப்படுகின்றது. வியப்புணர்வு, அச்சவுணர்வு ஆகியன இச்சொல் மடக்கு வழி வெளிப்படுகின்றது. நீதிநூற்கள் தமது கருத்தை வலியுறுத்தற்கு இதனைக் கையாண்டுள்ளன. நூல் முழுதும் இத்தகைய சொல்லமைப்பைக் கொண்டு விளங்கும் நூல்களும் உள்ளன. ஒவ்வொரு கருத்திலும் 'இன்று' என முடியும் 'இன்று நாற்பது', 'இனியது' என முடியும் 'இனியவை நாற்பது' என்பன இத்தன்மையன. பக்தி இலக்கியங்களிலும் இத்தன்மை காணப்படுகிறது.

1.5.1.1.5. பொருளுணர்வு மாற்ற உத்தி

குறிப்பிட்ட சொல்லின் பொருளுணர்வை மற்றொரு சொல்லுக்கு ஏற்றிக் கறுவது இத்தன்மைத்து. உளர்வின் உச்சநிலையில் இத்தன்மை அமைகிறது. 'செந்தமிழ்

நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' என்பதில் நாவின் சுவையைக் காதிலுல் கேட்கப்படும் சொல்லின் தன்மைக்கு ஏற்றிக் கூறியிருப்பது இதற்குச் சான்று.

1.5.1.1.6. சொல்லாட்சி

ஏற்ற இடத்தில் பொருளுக்குத் தக்க பொருத்தமான சொற்களை அமைப்பதும் ஓர் உத்தியே. ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருக்க அவற்றுள் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து அமைப்பது இத்தன்மையாகும். படைப்பாளனின் சொல்லளத்திற்கும் பயன்படுத்தும் தன்மைக்கும் ஏற்ப இவ்வுத்தி சிறக்கிறது. பொதுவாகப் பார்க்கும்பொழுது பொதுப்பொருள் பயக்கும் மிக எளிய சொல்லேயாயினும் பயன்படுத்தும் சூழலுக்கும், பொருளுணர்வுக்கும் ஏற்ப அதன் பொருள் சிறக்கிறது.

1.5.1.1.7. சொல் விளையாட்டு

ஒரு சொல்லுக்குரிய பொருளையொழித்து வேறு பொருளையுணர்த்தும் ஒன்றொழி பொதுச் சொற்கள் இவ்வகையில் பயன்படுத்தப்படும் ஒன்று. சிலேடை (அ) இரட்டுற மொழிதலையும் இவ்வகையில் அடக்கலாம். இடைக்கால இலக்கியங்-களில் சொல்விளையாட்டை மிகுதியாகக் காணலாம். எழுத்தெண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறியீடு போன்று அமைந்த சொற்களும் இவ்வகையில் அமைகின்றன. தமிழ் இலக்கியத்தில் இச்சொல் விளையாட்டுகளின் தொடக்க நிலையை அறநெறிச் சாரத்தில் காணலாம். இவற்றில் புலவனது திறனை வெளிப்-படுத்துவது முதன்மை நோக்காக உள்ளது.

1.5.1.1.8. அகரவரிசைச் சொற்கள்

பாடலில் எளிதில் நினைவு கொள்ளுதற்கென பாடலின் ஒவ்வோர் அடியின் முதற்சொல்லும் அகரவரிசையில் ஒலியமைப்பைக் கொண்டிருக்கும். சிறுவர்

இலக்கியங்களில் இத்தன்மையைக் காணலாம். தமிழில் 'ஆத்தி சூடி', 'கொன்றை வேந்தன்' என்பன இத்தன்மையன.

இவை தவிர இடக்கரடக்கல், மங்கல வழக்கு, ஆகுபெயர், எதிர்மறைச் சொற்கள் ஆகியனவும் சொல்நிலை உத்திகளாய் அமையத்தக்கன.

1.5.1.2. தொடர்நிலை உத்திகள்

1.5.1.2.1. வழுவமைதித் தொடர்

எதிர்காலத்தில் நிகழ இருப்பதை இறந்தகால முடிவில் கறும் கால வழுவமைதித் தொடர்களும் உத்தியாக அமைந்துள்ளன.ஒரு செயலின் அல்லது விளைவின் உறுதியை உணர்த்தற்கு இத்தன்மை பயன்படுத்தப்படுகிறது.

1.5.1.2.2. விழுத்தொடர்

உலகியல் உண்மைகளை எடுத்துரைக்கும் வகையில் இத்தன்மை மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு, கற்போரைச் சிந்திக்கத் தூண்டுவதே விழுத்-தொடர்களின் தலையாய பண்பாகவும், பணியாகவும் உள்ளது. அறக்கருத்தைப் பாடுபொருளாகக் கொண்ட நூல்களில் இத்தன்மை மிகுதியாகக் காணப்படுகிறது.

1.5.1.2.3. உம்மைத் தொடர்

ஒரே ஒரு தொடரில் மட்டும் உம்மையைப் பயன்படுத்தும்பொழுது அது குறிப்புப் பொருளை உணர்த்துகிறது. தொடர்ந்து வரும் ஒவ்வொரு தொடரிலும் பயன்படுத்தும்பொழுது நிகழ்ச்சிக் கோவையைச் சுட்ட வருகிறது.

1.5.1.2.4. அடைத்தொடர்

விளக்கமான பொருளைச் சுருங்கக் கறுதற்கும், பாத்திரங்களின் பண்புகளை இனங்காட்டுதற்கும் இவை பயன்படுகின்றன.

1.5.1.2.5. மரபுத் தொடர்

வாய்மொழியாக வளர்ந்த பழமொழிகள் அனைத்தையும் பொருள் வெளிப்பாட்டின் சிறந்த உத்திகள் எனலாம். நுட்பமாகப் பொருளை உணர்த்த வேண்டும் எனும் எண்ணம் இவைகளில் விஞ்சி நிற்கின்றன. இப்பண்பு காரணமாக இலக்கியப் படைப்பாளன் இவைகளை எடுத்தாளுகின்றான். இவை மக்களின் வழக்கிலிருந்து வந்தமையால் பாடலின் உட்பொருளை எளிதாகக் கற்பவர்க்கு உணர்த்தி விடுகின்றன.

1.5.1.2.6. கட்டளைத் தொடர்

பாத்திரங்களின் கற்றுகவல்லாத படைப்பாளன் நேரடியாகத் தமது கற்றுகப் பயன்படுத்தும்பொழுது அது படைப்பாளனது கருத்தை வலியுறுத்தும் உத்தியாகச் செயல்படுகிறது.

1.5.1.2.7. தொடர் மடக்கு

உணர்வு வெளிப்பாட்டு நிலையில் ஒரே தொடர் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகின்றது. அணி இலக்கண நூல்கள் ஒரே தொடரே மீண்டும் மீண்டும் வரும் 'மடக்கு' என்ற வகையைக் கூறுகின்றன. இது இருபொருள்படக் கூறுதற்கு மேற்கொள்ளப்பட்ட அமைப்பு முறையாகும்.

1.5.1.3. எண்ணின உத்தி

சொல், தொடர் நிலைக்கு மேலாக நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களின் பண்புகளையும் விளக்கிச் செல்லும் வகையில் மேற்கொள்ளப்படும் உத்திகள் இவ்வகையைச் சாரும்.

1.5.1.3.1. உவமை

இலக்கியத்தின் மிகப் பழமையான, அடிப்படை உத்தியாக விளங்குகிறது. அகப்பொருள், புறப்பொருள் முதலானவற்றில் தனிஒரு கருத்துக்கு உவமைப்படுத்துவதும், தனிஒரு பொருளுக்கு உவமைப்படுத்துவதும் விரவிக் காணப்படுகிறது. அறப்பொருளை விளக்கும் பாடல்களில் தனி ஒரு கருத்திற்கு உவமைப்படுத்துவது மிகுந்துள்ளது. பிறிது மொழிதலாக அமைவதும் இவ்வகையைச் சாரும். தொல்காப்பியம் வழி இது 'குறிப்பெச்சம்' எனப்பெயர் பெறுகிறது.

1.5.1.3.2. உருவகம்

உவமை அடிப்படையில் தோன்றியது உருவகம். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் வெளிப்படையான நிலையிலும், நுட்பமாகவும் உருவகங்கள் பயின்று வந்துள்ளன. வெளிப்படை உருவகங்கள் ஒரு பொருளின் தோற்றம், பண்பு என்பவற்றை விளக்க வந்தன. உள்ளுறையின் அமைப்பை நுட்ப உருவகத்தின் அடிப்படையாகக் கொள்ளலாம். படைப்போனின் ஆளுமையை உணர்த்தும் வகையிலும் இந்நுட்ப உருவகங்கள் கையாளப்படுகின்றன. பாரதியின் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலானவை இதற்குச் சான்றாகும்.

1.5.1.3.3. இறைச்சி, உள்ளுறை உவமம்

உவமை, உருவக அடிப்படையில் தோன்றிய இவை அகப்பொருளுக்குரியதாகப் பயின்று வருவன.

1.5.1.3.4. குறியீடு

உருவகமோ குறிப்பிட்ட ஓர் இடத்தில் குறிப்பிட்ட ஒரு காட்சியைக் காட்டி அந்த அளவில் அங்கேயே நிறைவு பெறுவது. ஆயின் குறியீடோ மீண்டும்,

மீண்டும் கவிதையில் வந்து, வந்து நம் உணர்விணைத் தூண்டும்,[39] எனும் விளக்கம் உருவகத்திலிருந்து குறியீடு வேறுபடுமாற்றைக் காட்டுகிறது. இது 'படிமம்' எனவும் குறிக்கப்பெறும். இவ்வுத்தி பிற்கால இலக்கியங்களில் வளர்ச்சிபெற்ற நிலையில் இருப்பினும், சங்க காலம் முதலே தோற்றம் கொண்டு விட்டது. குறிப்பிட்ட நிலத்திற்குக் குறிப்பிட்ட ஒழுக்கம் எனப்பகுத்திருப்பது இதற்கு அடிப்படையாய் அமைகிறது. பிற்கால இலக்கியங்களில் புராணக் கதைகளும், அவற்றில் வரும் பெயர்களும் குறியீடு போன்று பயன்படுத்தப்பட்டுப் பொருளுணர்த்தப் படுகிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது இத்தன்மை.

1.5.1.3.5. தற்குறிப்பேற்றம்

இயல்பாக நடக்கும் நிகழ்ச்சிகளில் தனது குறிப்பை ஏற்றிக் கூறுதல் இத்தன்மைத்தாகும். தனது உணர்வு மிகுதியை வெளிப்படுத்துதற்கோ, கற்பவரையும் அவ்வுணர்வைப் பெறச் செய்தற்கோ இவ்வுத்தி பயன்படுகிறது எனலாம். பெரும்பாலும் காப்பியங்களில் இவ்வுத்தி மிகுதியாகப் பயின்று வருகின்றது. பின் நிகழ்வைச் சுட்டுதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது.

1.5.1.3.6. பொருள் மடக்கு

மிகுந்த உணர்வு வெளிப்பாட்டு நிலையிலும், கருத்தை வலியுறுத்திக் கூறுதற்கும், பொருளுணர்வை நன்கு வெளிப்படுத்துதற்கும் இவ்வுத்தி பயன்படுகின்றது. ஒரே கருத்தே மீண்டும் மீண்டும் வருவது இத்தன்மைத்து. பாடலின் வடிவ நிலை, படைப்பாளனின் உள்ளநிலை என்ற இருநிலைகளில் இவ்வுத்தி அமைகின்றது. கலிப்பாவில் தாழிசைப் பகுதியில் ஒரே கருத்து மூன்று முறை கூறப்படுகிறது. மன்னன்

---

39. சு. பாலச்சந்திரன், 'குறியீட்டியல் ஓர் அறிமுகம்', திறனாய்வுக் கட்டுரைகள், (அணியகம், சென்னை, 1977), பக். 5.

புகழைப் பாடுதல், துன்ப உணர்வைப் புலப்படுத்தல் என்ற இடங்களில் இது பயன்படுத்தப்படுவதால் இப்பாவகை பொருளுணர்வுக்கேற்ற வடிவநிலை கொண்டதாக உள்ளது. படைப்பாளனின் விருப்பத்திற்கிணங்க வருவது மற்றொன்று. இது ஒரே பாடலின் அகத்ததாகவும், அடுத்தடுத்து வரும் பாடல்களிடையே அமைவதாகவும் இருவகைப்படும். ஐங்குறுநூற்றுப் பாடல்கள் இவ்வகைக்குச் சான்று. இத்தன்மை, பின்னர், சதகம், பதிகம் என்ற இலக்கிய வகையாக வளர்ந்தது. இவற்றுள் அந்தாதி அமைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.5.1.3.7. உருக்காட்சி வருணனை

கற்பவர் மனக்கண்ணில் படிக்கும்பொழுதே தாம் விளக்கும் காட்சியை உருப்படுத்திக் காட்டும் வகையில் வருணனையை அமைப்பது இத்தன்மைத்து. உவமை போன்றனவின்றி வெறும் எளிமையான சொற்கள் வாயிலாகவே விளக்கும் வருணனை இதிலடங்கும். பெண்கள் அலர்தூற்றும் காட்சியை விளக்க,

'சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி'[40]

எனக் கூறியிருப்பது இதற்குச் சான்றாகும்.

1.5.1.3.8. பின்னோக்கு உத்தி

நடந்த நிகழ்ச்சிகளை அல்லதுபோது கூறுது பிறகு ஒரு கட்டத்தில் பின்னோக்கு முறையில் காட்டப்படும் முறை பின்னோக்கு உத்தியாகும். காப்பியங்களில் இவை பெரிதும் இடம்பெறுகின்றன. இக்காலச் சிறுகதை, புதினம், நாடகம் போன்றவற்றிலும் இத்தன்மை மிகுந்துள்ளது. நிகழ்ச்சிப் பின்னலில் செறிவை ஏற்படுத்திப் படைப்பின் கட்டமைப்பிற்கு உதவுகிறது. மீவியற்கைக் கூறுகளும் இதற்குக் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

---

40. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, நான்காம் பதிப்பு, (கழக வெளியீடு, சென்னை, 1967), பா. 149.

1.5.1.4. யாப்பமைப்பு உத்திகள்

யாப்பமைப்பில் கையாளப்படும், எதுகை, மோனை, முரண், இயைபு, அளபெடைத் தொடை, பொழிப்புத் தொடை முதலிய அமைப்புகளில் கையாளப்படும் உத்திகள் இவ்வகையில் அடங்கும்.

1.5.2. அக அமைப்பு உத்திகள் (அ) பொருள்நிலை உத்திகள்

சொல், தொடர், வண்ணனை என்ற நிலையிலில்லாது பாடலின் பொருளமைப்பில் கையாளப்படும் உத்திகள் இவ்வகையின.

1.5.2.1. கிளைக் கதைகள்

காப்பியங்களில் கிளைக் கதைகள் பயன்படுத்தப்படுகின்றன. இலக்கியத்தின் விரிவு கருதியும், பொருள் சிறப்புக் கருதியும் இவை கையாளப்படுகின்றன. சிலப்பதிகாரம் இதற்குச் சிறந்த காட்டாகும். இதில் வரும் ஒவ்வொரு கிளைக்கதையும் பின்னிகழ்வைக் குறிப்பாக உணர்த்தல், பாத்திரங்களை உணர்வுச் சூழலுக்கேற்பப் படைத்துக் காட்டுதல் என்ற அடிப்படையில் அமைக்கப் பட்டுள்ளது.

1.5.2.2. கடித உத்தி

தமிழ் இலக்கியத்தில் முதன் முதலாகச் சிலப்பதிகாரத்தில் இவ்வுத்தி காணப்படுகிறது. இந்நூலில் பாத்திரத்தின் மனநிலையைக் கற்பவர்க்கு வெளிப்படுத்தும் உத்தியாகக் கடிதம் பயன்பட்டுள்ளது. தூது இலக்கிய வகைத் தோற்றத்திற்கான அடிப்படையில் இதுவும் ஒன்று.

கிளைக்கதை, கடிதம் என்ற இரண்டும் பாத்திரங்களின் கற்குக அமையும்பொழுது ஓர் இலக்கிய வடிவத்தின் உள் அமைப்பைச் சார்கின்றன.

புலவனது கற்றுக அமையும்பொழுது வடிவ நிலையில் அமைவதால் புற அமைப்பைச் சார்ந்து தனி இலக்கிய வகையாக உருப்பெறுகின்றது. 'கோகிலாம்பாள் கடிதம்' என்ற புதினம் இதற்குச் சான்று.

1.5.2.3. முன்னிலை உத்தி

பேசாத பொருட்களையும், நெஞ்சினையும் விளித்துக் கூறுவதாக அமைவது இத்தன்மைத்து. அகப்பொருள் பாடல்களில் இத்தன்மை மிகுந்துள்ளது. 'அகவுணர்வுகளை வெளியிடுவதில் ஏற்படும் ஒழுகலாற்றுச் சிக்கல்களை நீக்குவதற்காகப் புலவருலகம் படைத்துக் கொண்ட உத்தியாக இதனைக் கருதுவர்'.[41] இதற்கு 'உணர்வு வழுவமைதி' என்ற பெயரும் வழங்கப்படுகின்றது.

1.5.2.4. வான்மொழி

புராணங்களிலும், காப்பியங்களிலும் 'வான்மொழி' பயன்படுத்தப் படுகின்றது. இவை அனைத்தும் கதை நிகழ்ச்சியையும், கதைச் செய்தியையும் விளக்குதற்குரிய வழியாக அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் சிறிது மாறுபட்டு நூலாசிரியர் தன் வரலாற்றை உணர்த்தற்கு இவ்வான்மொழி ஓர் உத்தியாகக் கையாளப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில்சிலப்பதிகாரத்தில் மட்டும் இத்தன்மை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

1.5.2.5. கனவு

பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவும், பின் நிகழ்வைக் குறிக்கும் நிமித்தமாகவும் இலக்கியத்தில் கனவுக் காட்சி கையாளப்பட்டுள்ளது.

---

41. அ.அ. மனவாளன், 'சங்க இலக்கியம்', தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-1, (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975) பக். 40.

1.5.2.6. நனவோட்ட உத்தி

குறிப்பிட்ட உணர்வு வயப்பட்டு நிற்கும்பொழுது அந்நிலையில் மனம் போன போக்கில் முழு வாழ்க்கையையும் காட்ட முயல்வது இவ்வுத்தி. புதுமைப் பித்தனின் கதைகள் இதற்குச் சிறந்த சான்றாகும். இலக்கிய உத்திகளிலேயே மிகக் கடுமையானதும், சரியானபடி கையாண்டால் மிக மேலான கலையின்பம் தருவதாகவும், சிறிது நழுவினாலும் உருத்தெரியாத பள்ளத்தில் தலைகீழாகத் தள்ளி விழுவதுமான தன்மைத்தாக இதனைக் கருதுவர்.[42]

மேலும் பாத்திரப் படைப்புகளில் கையாளப்படும் முரண்பட்ட பாத்திரங்களைப் படைத்தல், இணையான பாத்திரங்களைப் படைத்தல் என்பன போன்றனவும் இவ்வகையில் அடங்கும்.

மேற்கூறிய அனைத்தும் 'தமிழ் இலக்கிய உத்திவகை'களைப் பற்றி, பொதுநோக்காகக் கோடிட்டுக் காட்டுவதாகும். தமிழ் இலக்கியம் முழுதையும் கொண்டு வரலாற்றுமுறையில் இவ்வுத்திகள் ஆய்வு செய்யப்பெறின் அது தமிழிலக்கிய வரலாற்றின் ஆய்விற்கும் பிறவற்றிற்கும் பெருந்துணை செய்வதாய் அமையும். அந்தாதி, வருக்க மாலை, அடிமுதல் முடிவரை வருணித்தல், பதிகம், சதகம், உலா, தூது, ஆற்றுப்படை என்ற இலக்கிய வகைகள் தோன்றுதற்கு இவ்வுத்தி வகைகள் காரணமாய் அமைந்துள்ளன. உத்திகளின் பயில்முறையைக் கண்டறிதல் வழி, பெயர் தெரியாத பாடல்களின் ஆசிரியரைப் பற்றியும் இனங்காண இயலும்.

---

42. இரா. தண்டாயுதம், தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், (தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972), பக். 42.

* * *

இயல் - 2

சங்க இலக்கியச் சொல்லுத்திகள்

2. சங்க இலக்கியச் சொல்லுத்திகள்

இலக்கியத்தில் பொருளை விளக்கும் நோக்கத்தில் பயன்படுத்துதல், புலமைத் திறத்தை வெளிப்படுத்தும் நோக்கில் பயன்படுத்துதல் என்ற இரு நிலைகளில் உத்திகள் கையாளப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்தில் பாடுபொருளை விளக்குதற்கான உத்திகளைக் கையாள்வது தலையாய நோக்காக உள்ளது. இவர்கள் கையாண்ட ஒவ்வோர் உத்தியையும் தனித்தனியே பகுத்துக் காணும்பொழுது இத்தன்மை நன்கு விளங்கக் காணலாம். சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் பல புலவர்களால் பாடப்பட்டதாய் இருப்பினும், உத்திகளின் பயன்பாட்டில் ஓர் ஒருமைப்பாடு புலனாகின்றது இலக்கியம், அது அமைய வேண்டிய தன்மை என்பது பற்றி ஒரு தெளிவான வரையறை-யைத் தங்களுக்குள் புலவர்கள் கொண்டிருந்தமையும் இதனால் பெறப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு சிறிது வேறுபடுவதாய் இருப்பினும், சுருக்கமும் செறிவும் எளிமையும் இவ்விலக்கியங்களின் தலைமைப் பண்புகளாக உள்ளன. இதற்குச் சொல்லையும் ஒரு கருவியாக்கி, மொழியின் பல தன்மைகளையும் பயன்படுத்தி, கூர்ந்த நோக்கோடும் அறிவுத்திறனோடும் கையாண்டுள்ளனர்.

சங்க இலக்கியச் சொல்லுத்திகளை இருநிலைகளில் பாகுபடுத்தலாம். குறிப்புப் பொருளையும் உணர்வுநிலைகளையும் விளக்குவன ஒருதன்மையதாகவும், பொருள்களின் தோற்றம், பண்பு ஆகியவற்றைக் காட்சிப்படுத்தல், உணர்வுநிலையை விளக்குதல் என்பன ஒருதன்மையதாகவும் இருவகைப்படுகின்றன.

2.1. ஒலிக்குறிப்புச் சொற்கள், ஒலிவேறுபாடு என்பன போன்றன முதல் வகையில் அடங்கும்.

2.1.1. ஒலிக்குறிப்புச் சொற்கள்

இவை ஒலியை அப்படியே உணர்த்தும் குறிப்புச் சொற்கள், வேறு பிறவற்றைக் குறிக்க வரும் ஒலிஒப்புமைச் சொற்கள் என இருநிலைகளில் அமைகின்றன.

2.1.1.1. நேரடிச் சொற்கள்

யாழின் ஒலி, வண்டின் முரற்சி,[1] அருவியோசையைக் குறிக்க[2] 'இம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இதுவே இடைவிடாது எழுந்த பேரலரைக் குறிக்கவும் வந்தது.[3]

'ஒல்' எனும் சொல் ஆரவாரத்தைக் குறிக்கவும், துன்ப உணர்வை வெளிப்படுத்தவும் வந்தது.

'... யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்'[4]

என்பதில் தலைவியின் அழுகையை உணர்த்த இவ்வொலிக் குறிப்புச் சொல் வந்தது. அருவியின் ஒலியும் இச்சொல்லால் குறிக்கப்பட்டது. இது வெறும் ஒலிநிலையில் மட்டும் அமையாது இறைச்சிப் பொருளைச் சுட்டுதற்குரிய கருவியாகவும் பயின்று வந்துள்ளது.

'வருவை யல்லில வாடைநனி கொடிதே
யருவரை மருங்கி லுய்மனி வரன்றி
யொல்லென விழிதரு மருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்ல றெய்யோ'[5]

---

1. 'பானன் தையது பண்புடைச் சீறியாழ்
யானர் வண்டின் இம்மென இமிரும்'
- பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, நான்காம் பதிப்பு, (கழகம், சென்னை, 1967) பா. 30.

2. 'பிரசமொடு விரைஇய வயங்குவெள் ளருவி
இன்னிசை யிமிழியங் கடுப்ப விம்மெனக்
கன்முகை யிடறகஞ் சிலம்ப வீழும்'
- பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு (கழகம், சென்னை, 1970), பா. 172.

3. 'இம்மென் பேரலர் இவ்வூர் நம்வயின்' - மேற்படி, பா. 323.

4. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, (கழகம், சென்னை, 1972) (மறுபதிப்பு), பா. 28.

5. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, (கழகம், சென்னை, 1966) (மறுபதிப்பு), பா. 233.

எனவரும் ஐங்குறுநூற்றுப் பாடலில் இத்தன்மையைக் காணலாம். மலையினின்று எழும் இந்த ஒலியைப் போன்று தலைவனும் மணவினைக்குரிய ஆரவாரத்தோடு வர வேண்டும் எனத் தோழி விரும்புவது இங்கு இறைச்சிப் பொருளாய் நின்றது.

திடீரென ஏற்படும் நிகழ்ச்சிகள், உணர்வு மிகுதித் தன்மையைப் புலப்படுத்த 'கதுமென'[6] என்ற சொல் பயன்பட்டது.

பாலைக்காட்சியை விளக்கும் நற்றிணைப் பாடல் ஒன்றில், கல் நிறைந்த பாதையில் செல்லும் மறவர்கள் காலில் அணிந்த வீரவளைகள் கற்களோடு இடிக்கின்ற ஓசையைக் குறிக்க 'கிடின்'[7] என்ற சொல் வந்தது. நிகழ்ச்சியை இயல்போடு விளக்கும் தன்மை இங்கு புலனாகின்றது.

விரைவுத் தன்மையை விளக்க 'ஒய்'[8] எனும் சொல் வந்தது. வருந்தும் நிலையைக் குறித்தற்கும்,[9] ஆழ்ந்த துயில் கொண்ட தன்மையைச்

---

6. 'திருமுகம் இறைஞ்சி நானுதி கதுமெனக்
காமங் கைம்மிகின் தாங்குதல் எளிதோ'

- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 39.

7. 'புறவணி கொண்ட பூநாறு கடத்திடைக்
கிழனென இடிக்குங் கோற்றொடி மறவர்' - மேற்படி, பா. 48.

8. 'ஐயவி புகைப்பவுந் தாங்கா தொய்யென
உறுமுறை மரபிற் புறநின் றுய்க்கும்'

- ஔவை துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு (முதல் பகுதி), (கழகம், சென்னை, 1960 மறுபதிப்பு), பா. 98.

9. 'பைதலங் குழவி தழீஇ ஒய்யென
அரும்புன் னுறுநரின் வருந்தி வைகும்'

- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 47.

சுட்டுதற்கும்,[10] துன்பத்தில் வரும் அலமரலைக் குறிக்கவும்,[11] பசித்துன்பத்தால் வருந்தும் நிலையைக் குறித்தற்கும்[12] இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

திடுக்கிடும் உளர்வுநிலையைச் சுட்ட 'துன்னென'[13] என்ற சொல் வந்தது. 'துடுமென' என்பது நீரில் பொருட்கள் விழும் ஒலியைக் குறிக்க வந்தது.[14]

திடீரென நிகழும் செயல்நிகழ்வைச் சுட்டவும்,[15] செயலின் விரைவைச் சுட்டவும்[16] 'ஞெரேரென' என்ற சொல்லும், வண்டின் ரீங்காரத்தைக் குறிக்க, 'பொரேரென'[17] என்ற சொல்லும் கையாளப்பட்டுள்ளது.

---

10. 'படாஅப் பைங்கண் பாடுபெற் றெய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன்'

- பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு (1-120), (கழகம், சென்னை, 1970), பா.102.

11. 'வளிமுனைப் பூளையின் ஒய்யென்று அலறிய' - மேற்படி, பா.199.

12. 'குடிமுறை பாடி யொய்யென வருந்தி
அடனசை மறந்தவெங் குழிசி மலர்க்கும்'

- ஔவை துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு (இரண்டாம் பகுதி), (கழகம், சென்னை, 1972 மறுபதிப்பு) பா.393.

13. 'அருஞ்சாரம் செல்வோர் நெஞ்சம் துன்னென'

- பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.87.

14. 'கும்பநிலை அன்ன முதைய ஆம்பல்
தூங்குநீர்க் குட்டத்துத் துடுமென வீழும்'

- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.280.

15. 'நசைநன் குடையர் தோழி ஞெரேரெனக்
கவைத்தலை முதுகலை காலின் ஒற்றி'

- பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.213.

16. 'கல்லென் சும்மையர் ஞெரேரெனப் பூதந்து'

- பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.

17. பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பரிபாடல் (பரிபாடல் திரட்டு (கழகம், சென்னை, 1969 மறுபதிப்பு) பா.1 பக்.36

ஓ, தெள, தல் என வெறும் ஓசையாக அமைந்த சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலைவன் ஒருவன் தன் ஆற்றுமையை வெளிப்படுத்தும் பாடலில்,

'ஓதமும் ஒலி 'ஓ' வின்றே ஊதையுந்
தாதுளர் கானல் தெளவென் றன்றே' [18]

எனக் கூறுகின்றான். இங்குக் கடலொலியை அதன் தன்மைக்கொப்ப 'ஓ' என்ற சொல்லாலும், வாடைக்காற்று ஒருவித ஓசையோடு வருதலால் அதனைத் 'தெள' என்ற சொல்லாலும் குறிப்பிட்டுள்ளார் புலவர்.

சுனையிலுள்ள சிறிய நீரைக் கையிலெடுத்து உறிஞ்சிக் குடிக்கும் தன்மையை,

'வெல்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய' [19]

எனும் குறுந்தொகைப் பாடலடிகள் அழகுற விளக்குகிறது. உடன்போகிய மகளை நினைந்து வருந்தும் செவிலி கூற்றாக அமைந்த இப்பாடலில் இது வெறும் ஒலிக் குறிப்பாக மட்டும் அமையாது, 'மகள் எவ்வாறு உள்ளாளோ' எனத் தனது மனக்கலில் கான விழையும் செவிலியின் உள்ள நிலையையும் கற்போர்க்கு உணர்த்துவதாய் உள்ளது.

இது தவிர, பாத்திரங்களின் உணர்வுநிலையைத் தனது சொற்களால் விளக்காது ஒலிக்குறிப்பாலேயே விளக்கும் தன்மையும் காணப்படுகிறது.

'குக்கு வென்றது கோழி அதனெதிர்
துட்கென் றன்றென் தூய நெஞ்சம்' [20]

---

18. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 319.

19. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 356.

20. மேற்படி, பா. 28.

எனும் தலைவியின் கூற்றுக அமைந்த பாடலடிகள் தலைவனைச் சிறிதும் பிரிந்திருக்க இயலாத அவளது உளர்வு நிலையைக் காட்ட வந்தது. சிறு உளர்வு நிலையை மிக்க வலிமையோடு காட்ட இக்குறிப்புச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சுருக்கம் கருதியும் எளிதாக உணர்த்துதற் பொருட்டும் ஒலிக்குறிப்பு அடிப்படையில் புதிய சொல்லையும் ஆக்கிக் கொண்டனர்.

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழ' [21]

என்ற பாடலடிகளில் தாளித்தாள் என்பதைச் சுட்டாது அதனால் உண்டாகும் ஓசையின் அடிப்படையில் 'குய்ப்புகை' என்ற சொல்லை ஆக்கிச் சுருக்கமான முறையில் பொருளை வெளிப்படுத்தியிருக்கக் காணலாம்.

2.1.1.2. அடுத்து நேரடியாக ஒலியை அப்படியே சுட்டும் தன்மையல்லாது ஒப்புமை அடிப்படையில் சொற்களை அமைத்து அதன்வழித் தனது கருத்தை விளக்குவது ஒலிக்குறிப்புச் சொற்களின் மற்றொரு வகையாக உள்ளது.

மனம் பரவிய சூழலைக் குறிக்கவும், [22] ஆரவாரமற்ற ஓசை-யடங்கிய அமைதியான தன்மையைக் குறிக்கவும், [23] விரைவுக் குறிப்பை

---

21. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.167.

22. 'எம்மொடு கழிந்தன ராயிற் தம்மென
வம்பலரித் தன்ன பொங்குமணற் கான்யாற்று'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.11.

23. 'கானமுங் கம்மென் றன்றே...'
- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.154.

உணர்த்தவும்[24] 'கம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பது இத்தன்மைத்தாகும். விரைவுக் குறிப்பை உணர்த்த 'வல்' எனும் சொல்லும் வந்தது.

'மெல்லிய இனிய கூறலின் வல்விரைந்
துயிரினுஞ் சிறந்த நாணு நனிமறந்
துரைக்க லுய்ந் தனனே'[25]

என்பது தன் களவொழுக்கத்தை அன்னையறிந்தமையைத் தோழிக்குக் கூறும் தலைவியின் கூற்றுக அமைவது. இதில் அன்னையறிந்தமையால் ஏற்பட்ட தலைவியின் மன நிலைமையையும் பதட்டத் தன்மையையும் 'வல்' என்ற குறிப்புச் சொல் உணர்த்துகிறது. தனிப்பட விரைவுக் குறிப்பை மட்டும் உணர்த்தவும் இது வருகின்றது.[26]

ஆரவாரம் மிகுந்த தன்மையைக் குறிக்கப் பெரும்பான்மையும் 'கல்' என்ற சொல் பயின்றுள்ளது. இதிலும் மிகுந்த பகுதி அலரால் உண்டாகும் ஆரவாரத்தைக் குறிக்க வந்தது.[27]

---

24. 'செந்நாய் ஏற்றை கம்மென ஈர்ப்ப'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.111.

25. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.17.

26. 'ஏகுமின் என்ற இனையர் வல்லே
இல்புக் கறியுந ராக...'
- மேற்படி, பா.17.

27. 'நல்லினை நெடுநகர் கல்லெனக் கலங்க'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.376.

பிரிவால் ஏற்படும் துன்பமிக்க சூழலை உணர்த்தவும்,[28] வறட்சி-யினாலும் வேறு காரணங்களாலும் அழிவுபட்டு கான்போர் இரங்கத்தக்க சூழலை உணர்த்தவும்[29] 'புல்லென' என்ற சொல் சுட்டப்பட்டது.

மென்மையான அசைவைக் குறிக்க 'பை' எனும் சொல் வந்தது.[30] இரக்கக் குறிப்பை உணர்த்த 'ஓ' எனும் சொல் பயின்றுள்ளது. கலித்தொகையில் இச்சொல் 'ஓ' எனத் தனிச்சொல்லாகவும், 'ஓஓ' என அளபெடுத்தும் மிகுதியாகப் பயின்று வந்துள்ளது.[31] உரையாடல் அமைப்பு இதில் சிறந்து விளங்குதலால் இத்தகைய அமைப்பு பயின்று வர மிகுந்த வாய்ப்புளது. இச்சொல் இகழ்ச்சிக் குறிப்பாகவும்[32] வந்தது.

---

28. 'மெல்லம் புலம்பன் பிரியிற் புல்லெனப்
புலம்பா கின்றே தோழி. . .'

- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 38.

29. 'கோடை நீடக் குன்றம் புல்லென'

- சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, (கழகம், சென்னை, 1968 மறுபதிப்பு), பா. 38.

30. 'தாவலர் அறிதல் ஓம்பிப் பையென
வீழாக் கதவம் அசையினன் புகுதந்து'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 102.

31. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, (கழகம், சென்னை, 1970 மறுபதிப்பு), பா. 144, 112.

32. 'ஓஒகான், நம்முள் நகுதல் தொடீஇயர் நம்முழும்
உசாவுவங் கோனடி தொட்டேன்'

- மேற்படி, பா. 94.

'ஏஎ' என்ற சொல்லும் இகழ்ச்சிக் குறிப்பை உணர்த்தற்குக் கையாளப் பட்டுள்ளது.[33] தலைவியிடத்துத் தோழி தனக்குள்ள உரிமையை வெளிப்படுத்தும் வகையிலும் இச்சொல் பயின்று வந்துள்ளது.[34] கலித்தொகையில் மட்டும் இச்சொல்லாட்சி மிகுந்துள்ளது.

2.1.2. ஒலி வேறுபாடு

எழுத்து வடிவில் உள்ள படைப்பை நேரில் பேசுவதைப் போன்ற உணர்வுநிலையோடும், ஓசை வேறுபாட்டோடும் விளக்க, புலவனுக்கு அசைச் சொற்களும், ஏகார ஓகார ஒலிகளும் மிகவும் இன்றியமையாததாகின்றன.

2.1.2.1. இடைச்சொற்களும் அசைச்சொற்களும்

அம்ம, கொல், தில், தெய்ய, மதி, மன், மன்ற, மாதோ, யாழ என்ற சொற்கள் உணர்வு வேறுபாடுகளைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் கொல், மாதோ, மன், மன்ற என்பன மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. இதில் கொல், மன்ற, மன் என்பன உணர்வு நிலையைக் குறிப்பதோடு தொடருக்குப் புறம்பாக வேறொன்றையும் எச்சப் பொருளாக உணர்த்தி நின்றன.

---

33. 'ஏஎ, தெளிந்தேம்யாம் தாயாதி எல்லாம்வல் எல்லா
பெருந்தாட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு
வருந்தல்நின் வஞ்சம் உரைத்து'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, (கழகம், சென்னை, 1970 மறுபதிப்பு), பா.89.

34. 'ஒண்டொடீ, நாணிலன் மன்ற விவன்;
ஆயின் ஏஎ,
பல்லார்நக் கெள்ளப் படுமடன் மாவேறி' - மேற்படி, பா.61.

வியப்புணர்வு, இரக்கவுணர்வு, ஏளனக் குறிப்பு, துன்பம் தீர்ந்து பெருமூச்செறியும் உணர்வுநிலை, சினக்குறிப்பு போன்றவைகளை உணர்த்த 'அம்ம' எனும் சொல் வந்தது. 'அம்மே' என ஏகாரம் பெற்றும் பயின்றுள்ளது.[35]

வியப்புணர்வைக் குறிக்க 'அம்ம' எனும் சொல் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது.[36]

'நோகோ யானே நோதக வருமே
பெயன் மழை பூரவின் ஞாகிவெய் துற்று
வலமின் றம்ம காலையது பண்பென'[37]

எனப் பகைவர் நாட்டின் அழிவுகண்டு இரங்குவதாக வரும் 'பாடலடிகளில் 'அம்ம' என்பது இரக்க உணர்வைச் சுட்ட வந்தது.

தலைவியைப் பிரியேன் எனச் சூளுரைத்து அதனைப் பொய்த்த தலைவனை இடித்துரைக்கும் தோழி,

'நலனுண்டு துறத்தி யாயின்
மிகநன் றம்ம மகிழ்நநின் சூளே'[38]

---

35. 'சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே'

- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 120.

36. 'மழவர் பெருமகன் மாவள் ஓரி
கைவளம் இயைவ தாயினும்
ஐதேகு அம்ம இயைந்துசெய் பொருளே' - மேற்படி, பா. 52.

37. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 3/6.

38. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 384.

எனக் கறுவதில் இகழ்ச்சிக் குறிப்பை வெளிப்படுத்த 'அம்ம' என்ற சொல் வந்தது.

தலைவியின் வேறுபாடு கழங்கிறற் தெரியுமென்று வேலன் கூறியது கேட்டுச் சினந்து செவிலிக்கு அறத்தொடு நிற்கும் தோழி,

'கழங்கிறு னறிகுவ தென்று
னன்று லம்ம நின்றவிவ னலனே' [39]

எனக் கறும் தொடரில், 'அம்ம' என்பது சின உணர்வைச் சுட்டிநிற்கக் காணலாம்.

தலைவன் வரைவு நீட்டித்தலால் அஞ்சியிருக்கும் தலைவிக்குத் தோழி வரைவு மலிந்த செய்தியைக் கூறுகின்றாள். அது கேட்ட தலைவி,

'துறைகெழு கொண்க னல்கி
னுறைவினி தம்மவிவ் வழுங்க லூ ரே' [40]

எனக் கறுவதாக அமைந்த இவ்வடிகளில், 'துன்பம் தீர்ந்ததெனப் பெருமகிழ்ச்செறியும் தலைவியின் நிலையை 'அம்ம' என்ற சொல் உணர்த்தியது. இத்தகு சொல் வெறும் உணர்வு நிலையை மட்டும் விளக்காது, அவ்வுணர்வு நிலையில் பாத்திரங்களின் பேச்சில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளையும் உணர்த்தி நிற்பது ஆழ்ந்து படிப்பின் நன்கு புலனாகும்.

'அன்னே' எனும் சொல் துன்ப உணர்வைப் புலப்படுத்த மிக அரிதாகப் பயின்று வந்துள்ளது. தலைவன் வாராமை குறித்துத் தன் ஆற்றுமையை வெளிப்படுத்தும் தலைவி,

'உரைத்திசின் தோழியது பூரைத்தோ அன்றே
அருந்துயர் உழத்தலும் ஆற்றும் இதன்றலைப்

---

39. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 248.

40. மேற்படி, பா. 181.

பெரும்பிறி தாகல் அதனினும் அஞ்சுதும்
அன்னே இன்னும் நன்மலை நாடன்
பிரியா நன்பினர் இருவரும் என்னும்'[41]

எனக் கூறுகிறாள். இதில் 'அன்னே' என்பது 'ஐயகோ' என்ற பொருளில் துன்ப உணர்வைச் சுட்டியது.

அச்சத்தோடு கூடிய ஐவுணர்வை வெளிப்படுத்தவும்,[42] வியப்புணர்வை வெளிப்படுத்தவும்,[43] இரக்கவுணர்வை வெளிப்படுத்தவும்,[44] தலைவன் தன்னை நினைப்பானே மாட்டானே என வருந்தும் தலைவியின் தடுமாற்ற மனநிலையைக் குறித்தற்கும்[45] கொல் எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

41. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 302.

42. 'கானல் ஆயம் அறியினும் ஆனது
அலர்வது அன்றுகொல் என்னும் அதனால்
புலவர்வது கொல்லவன் நட்பெலா'

- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 72.

43. 'திருமணி பூரையு மேனி மடவோள்
யார்மகள் கொல்லிவள் தந்தை வாழியர்'

- மேற்படி, பா. 8.

44. 'கூற்றத் தனையை யாகலிற் போற்றார்
இரங்க வினிவது கொல்லோ...'

- சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 98.

45. 'நம்மனைத் தன்ன மென்மை யின்மையின்
நம்முடை யுலகம் உள்ளார் கொல்லோ
யாங்கென உணர்கோ யானே...'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 27[illegible]

என்ன செய்வதென அறியாது அலமரும் உள்ளநிலையைக் குறிக்க ஒவ்வொரு கருத்தின் இறுதியிலும் 'கொல்' எனும் சொல்லிலக் கையாளும் தன்மையும் உள்ளது.[46]

'போற்றூர் இரங்க விளிவது கொல்லோ'[47] என்பதில் 'கொல்' என்பது இரக்க உணர்வை வெளிப்படுத்துவதோடு, அழிதல் கடாது என எச்சப் பொருளையும் தருகின்றது. இவ்வாறு எச்சப்பொருள உணர்த்தற்கு இது மிகுதியாகப் பயின்றுள்ளது. பொதுவகையில் சங்க இலக்கியத்தில் மிகுதியாகப் பயின்று வருவதும் இவ்விடைச்சொல்லாக உள்ளது.

'தில்' எனும் இடைச்சொல் விரைவுக் குறிப்பை உணர்த்தவும்,[48] தனது கருத்தைத் தின்னமாக எடுத்துரைக்கும் உணர்வை வெளிப்படுத்தற்கும், ஏளனக் குறிப்பாகவும்[49] வந்தது. 'தில்ல' என்ற வடிவமும் பயன்படுத்தப் பட்டுள்ளது.[50]

---

46. 'மூட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யாணுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 28.

47. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 98..

48. 'தொய்ம்மயிர் எருத்தின் பெய்ம்மணி ஆர்ப்பப்
பூங்கதில் பாகநின் தேரே...'
- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 81.

49. 'நம்முறு துயர நோக்கி யன்னை
வேலற் றந்தா ளாயினவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
யறியுமோ தில்ல செறியெயிற் றூயே'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 241.

50. மேற்படி, பா. 241.

'தெய்ய' எனும் இடைச்சொல் வியப்புணர்வு, விரைவுக் குறிப்பு என்பவற்றை உணர்த்தி நின்றது.[51] ஐங்குறுநூற்றில் இது ஓகாரம் பெற்று 'தெய்யோ' என வந்தது. பொதுவாக ஐங்குறுநூற்றில் பெரும்பாலான இடைச்சொற்கள் ஓகாரம் பெற்று வந்தன. ஓசைச்சிறப்பு கருதி இவ்வாறு அமைந்துள்ளன எனலாம். 'தெய்யோப் பத்து' என்ற தனிப்பகுதியும் இந்நூலில் உள்ளது. இப்பகுதியில் இச்சொல்லுக்குத் தனிப்பொருள் கிடையாது. இதில் உள்ள பத்துப் பாடல்களின் இறுதியும் 'தெய்யோ' என்ற சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. உணர்வுக் குறிப்பு, பேச்சில் உள்ள ஏற்ற இறக்கம் முதலியவற்றைச் சுட்ட இச்சொல் வந்தது.

'யாங்குவல் லுநையோ வோங்கல் வெற்ப
விரும்பல் கந்தற் றிருந்திழை யரிவை
தீதில மாமை தேயப்
பசலில பாயப் பிரிவு தெய்யோ'[52]

என்பது தலைவனுக்குத் தோழி கூறுவது. இதில் 'தெய்யோ' என்பது பொருள் ஏதுமின்றிப் பேச்சில் உள்ள ஓசைவேறுபாட்டை உணர்த்த வந்தது.

இரைஞ்சிக் கேட்கும் உணர்வு நிலையை விளக்க 'மதி' எனும் முன்னிலை அசைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[53] இது பெரும்பான்மையும் தோழி தலைவனுக்குக் கூறும் கற்றுகளில் பயின்று வந்துள்ளது.

---

51. 'கையுற வீழ்ந்த மையில் வானமொ
டாரு காதலர்ப் பொழுதே யுதவுற்
றொரியிழை தெளிர்ப்ப முயங்கிப்
பிரியல மென்கமோ வெழுகமோ தெய்யோ'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 241.

52. மேற்படி, பா. 231.

53. மேற்படி, பா. 478.

'மன்' என்பது பெரும்பான்மையும் கழிவிரக்கப் பொருளை உணர்த்த வந்தது.[54] இப்பொருளிலேயே ஒவ்வொரு கருத்திற்குப் பின்னும் 'மன்னே' எனும் சொல்லைக் கையாளும் தன்மையும் காணப்படுகின்றது.[55] இது இரக்க மிகுதியை அப்படியே உணர்த்துவதாக உள்ளது. பணிவாகக் கேட்கும் தன்மையையும் இச்சொல் நன்கு வெளிப்படுத்துகின்றது.[56] எத்தகைய பொருளுணர்வுமின்றியும் ஒருசில இடங்களில் பயின்று வந்துள்ளது.[57]

'மன்ற' என்பது தேற்றப் பொருளிலும்,[58] கழிவிரக்கப் பொருளிலும்[59] பயின்று வருகின்றது. பெரும்பான்மையும் கழிவிரக்கப் பொருளிலும்

---

54. 'அறுகுள நிறைக்குந போல வல்கலு
மழுதன் மேவல வாகிப்
பழிதீர் கண்ணும் படுவ மன்னே'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 11.

55. 'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற்றுள நனிபல கலத்தன் மன்னே'

- சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 235.

56. 'யாயு மறிய உரைத்தீயின் யானுற்ற
நோயுங் கடீகுவை மன்'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 111.

57. 'மயிலறி பறியா மன்னே
பயில்குரல் கவரும் பைம்பூறற் கிளியே'

- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 13.

58. 'வேலன் வேண்ட வெறிமிக வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே' - மேற்படி, பா. 34.

59. 'சிதைந்தது மன்றநீ சிவந்தனை நோக்கலின்'

- சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 37.

சிறிதளவு தேற்றப் பொருளிலும் வருகின்றது.[60] அரிதாக மகிழ்ச்சிப் பொருளிலும், சில உணர்விலும்[61] கையாளப்பட்டுள்ளது. 'மன்' என்பதன் மாற்றுவடிவமாகவும் இதனைக் கருதலாம்.

இரக்கவுணர்வு,[62] வியப்புணர்வு[63] என்பனவற்றைச் சுட்ட 'மாதோ' எனும் சொல்லும் பயின்றுள்ளது. 'யாழி' என்பதும் 'உம்மே' என்பதும் செய்யுளின் ஓசையை நிறைத்தற்கு மட்டும் அரிதாகக்[64] கையாளப்பட்டுள்ளது.

---

60. 'எக்கர் ஞாழ லரும்பூழுதி ரவிழினர்
நறிய கமழுந் துறைவற்
கினிய மன்றவென் மாமைக் கவினே'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 146.

61. 'நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉ நாட
வல்ல மன்ற பொய்த்தல்
வல்லாய் மன்றநீ யல்லது செயலே' - மேற்படி, பா. 287.

62. 'அன்றை யனைய வாகி இன்றுமெம்
கண்ணுள் போலச் சுழலும் மாதோ
....
எமரிட் டுறுதர வளித்த காடே'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 48.

63. 'கட்டி னிலைக்கு மிழிதினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனெ
டார்பூ ணெறிய னெடுந்தகை போரே'

- சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 82.

64. 'சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்'
- அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 39.

'கல்லதர் மன்னுங் கான்கொல் லும்மே
கனையிருள் மன்னுங் கண்கொல் லும்மே' - மேற்படி, பா. 158.

இறுதியாக 'மோ' எனும் முன்னிலை அசைச்சொல்லும் குறிப்பிடத் தக்கது. இறைஞ்சிக் கேட்கும் தன்மையை வெளிப்படுத்த இது பயன்படுத்தப் பட்டுள்ளது.[65]

பொதுவாகக் 'கொல்', 'மன்ற', 'மன்' என்பவைகளின் மிகுந்த பயன்பாட்டைக் காணும்பொழுது கழிவிரக்கம், ஐயம், அச்சம் போன்ற உணர்வுகளை முழுமையாக உணரும்படி செய்தற்கு இவை மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. இச்சொற்களைப் பயன்படுத்தும்பொழுதெல்லாம் இவ்வுணர்வு தன்னல் வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே, இந்த உணர்வுகளுக்கு இச்சொற்கள் அடையாளம் என்ற பொருளில் குறியீட்டுச் சொற்களாகவும் இவைகளைக் கருதலாம். சான்றுகப் பாரி இறந்தபின் அவனை நினைந்து,

'ஈண்டுநின் ஒூர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் ஒூர்க்குந் தோன்று மன்ற'[66]

எனக் கறும் பாடலில் 'மன்ற' என்ற சொல் வழி, கட்புலனாகவும், புகழ் காரணமாகச் செவிப்புலனாகவும் தோன்றிய பாரியின் பறம்பு இனிக் கட்புலனாக மட்டுமே தோன்றும் என்பது எச்சமாக உணர்த்தப்பட்டது. இதில் 'மன்ற' எனும் சொல்லைப் பயன்படுத்தாத வழி இப்பொருளைத் தெளிவுற வரையறுக்க இயலாது.

இவ்வாறே உடன்போகிய மகளை நினைந்து வருந்தும் செவிலி, 'ஒருமகள் உடையேன் மன்னே'[67] எனக் கூறிப் பின்னர் அவள் தலைவனுடன்

---

65. 'மால்வரை நாட வரைந்தனை கொண்மோ'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 289.

66. சு. துரைசாமிப்பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 114.

67. நற். 184. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 184.

சென்றுவிட்ட நிகழ்ச்சியை விளக்குகிறாள். இங்கு இச்செய்தியைக் கூறுதற்கு முன்பே, 'மன்' என்ற சொல்வழி, 'அவளையும் இழந்தேன்' என நிரனைந்து வருந்தும் அவளது கழிவிரக்க உணர்வு கற்போருக்கு உணர்த்தப்படுகிறது. இவற்றின்வழி இவை குறியீட்டுச் சொற்களாகவும் செயல்படுவதை நன்கு தெளியலாம்.

2.1.2.2. ஒலியழுத்தம்

ஏகார ஓகார ஒலிகளை மிகுத்துக் கூறுவது இத்தன்மையைச் சாரும். சங்கப் பாடல்கள் அனைத்தும் 'ஏகார' முடிபு கொண்டு தேற்றப் பொருளில் வந்தன. பாடலை வாய்மொழியாகச் சொல்லி வருகிறபோது அது எந்த இடத்தில் முடிகிறது என்பதைத் தெரிவிக்கும் குறியீடாகவும் இவ்வேகாரத்தைக் கருதுவர்.[68] வெறும் முடிபை உணர்த்தும் குறியீடாக மட்டுமன்றி தனது கருத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் தேற்றப் பொருளுக்கும் இன்றியமையாமை கொடுக்கும் வகையில் இவ்வேகாரம் கையாளப்பட்டுள்ளது.[69] மேலும், கழிவிரக்கப் பொருளை உணர்த்துவதோடு எச்சமாகப் பொருளை உணர்த்தவும் இவை பயின்று வந்தன. மன், கொல் என்பன ஏகார, ஓகார இசை பெற்று வருதலும் இதனுள் அடங்கும்.

'... ... பெருங்க ழுடன்
இனிய ழுகலி னினிதி னியன்ற
இன்ழு மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் பூத்தே ழுடே'[70]

---

68. ஜெ. நீதிவாணன், நடையியல், பக். 42.

69. 'காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே'
- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 44.

70. மேற்படி, பா. 288.

என்பதில் 'இனிதோ' என்ற ஓகாரத்தின் வழி 'இல்லை' என்பது எச்சமாக உணர்த்தப்பட்டது.

'அரிய வஞ்சினஞ் சொல்லியும் பன்மான்
தொலைவுள முன்கை பற்றியும் விடினமுடித்து
வருது மென்றன ரன்றே தோழி' [71]

என்பதில் 'என்றனரன்றே' என்ற ஏகாரம் வரலில்லை என்ற எச்சத்தை உணர்த்துவதோடு தலைவியின் ஆற்றுமையுணர்வையும் வெளிப்படுத்தியது. செயல் தன்மையில் முன்பு விளக்கப்பட்ட இடைச்சொற்களும், இப்பகுதியில் உள்ள ஏகார ஓகார ஒலிகளும் ஒருதன்மையனவாயுள்ளன. எனவே இவற்றிடையுள்ள தொடர்பு சிந்திக்கத்தக்கது. மன், தில் என்ற சொற்களின் பயன்பாட்டு இடத்தை நோக்கும்பொழுது அவை செய்யுளின் ஓசையை நிறைத்தற்கு அமைந்தனவாய் உள்ளன. இந்நிலையில் எச்சப் பொருளையும், உணர்வு வேறுபாட்டையும் சுட்டுதற்கு ஏகார, ஓகார ஒலிகள் முதல் நிலையினதாக இருந்து, அவற்றின் வளர்ச்சி நிலையாக இடைச்சொற்கள் இப்பொருள உணர்த்தும் தன்மை பெற்றிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டாகிறது.

2.1.3. விளிச் சொற்கள்

சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களாக அமையினும் நாடகப் பாங்குடையன. இந்நாடகப் பாங்கிற்கு 'தோழி', 'நாட' என்ற விளிச்-சொற்கள் சிறந்த அடிப்படையாய் உள்ளன. கலித்தொகையில், இம்முன்னிலைச் சொற்களுடன் 'எல்லா' என்பதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. [72]

---

71. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 175.

72. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 25, 61, 63, 64, 81, 97, 107, 112, 113, 142, 144.

'எல்லா' என்பது தோழியால் கையாளப்படுகின்றது. பாடலின் தொடக்கத்தில் அமைந்து தலைவியின் கவனத்தை ஈர்ப்பதாகவும், தலைவியிடத்துத் தோழிக்குள்ள மிகுந்த உரிமையைக் காட்டுவதாகவும் வருகின்றது.[73] வியப்புணர்வைல் நீட்டி விளிக்கும் தன்மையைச் சுட்ட 'தோழி' என்ற சொல் 'தொழீஇ'[74] என அளபெடுத்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.1.4. அடைச்சொற்கள்

பொருள்களின் பண்பினை உணர்த்தற்கும், சுருங்கச் சொல்லி விளக்குதற்கும் அடைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெயரடை, வினையடை என்ற இரண்டிலும் பெயரடைகள் மிகுதியாக அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் இயற்கை வருணனை மிகுந்துள்ளமையால் அங்கெல்லாம் அடைச்-சொற்கள் மிகுதியாகப் பயின்று, பொருட்களின் தோற்றம், நிறம், பண்பு என்பனவற்றை நுட்பமாக உணர்த்திப் படைப்பாளனின் நுட்பமான நோக்கு திறனையும் உணர்த்தி நிற்கின்றன. கற்பனைப் புனைவு, இயல்புப் புனைவு என்ற இரண்டு தன்மையில் இயல்புப் புனைவுப் பண்பை இவை மிகுதிப்படுத்துகின்றன. காலங்கடந்தும் தனித்திலங்கும் சங்க இலக்கியச் சிறப்புக்கு இப்பண்பும் ஓர் அடிப்படையாக உள்ளது. பெயரடை மட்டுமன்றி வினையடைகளும் அமைந்து விரிவான பொருளைத் தன்னுள் அடக்கி விளக்குகின்றன.

'தீண்டா வைமுள் தீண்டி நாஞ்செலற்
கேமதி உலவ தேரே'[75]

---

73. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 25.

74. மேற்படி, பா. 103, 104.

75. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 21.

என்பது விரைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுவது. கரிய தாற்று முள்ளால் தீண்டாத நிலையிலேயே விரைவாகச் செல்லும் தன்மையுடையது தலைவன் தோல்பூட்டப்பட்ட குதிரை என்பதைத் 'தீண்டா வைமுள்' என்பது உணர்த்துகின்றது. அதனைத் தீண்டி செலற்கேமதி எனக் கூறுகின்றான். இதன்வழித் தேர் இன்னும் விரைவாகச் செல்ல வேண்டுமென விரும்புவதும், அதன்வழித் தலைவியைக் காண விரையும் அவனது உள்ள நிலையும் குறிப்பாக உணர்த்தப்படுகின்றது. எளிய சொல்லாகவே இருப்பினும் 'தீண்டா' எனும் அடைச்சொல் இப்பொருள் விளக்கத்திற்கு அடிப்படையாய் உள்ளது.

'சேயரி பரந்த ஆயிழை மழைக்கண்
உருஅ நோக்கம் உற்றனென்
பைதல் நெஞ்சம் உய்யு மாறே'[76]

என்பது தலைவியை அடைய வேண்டுமெனத் தோழியை வினவும் தலைவன் கற்றுக அமைவது, இதுவரை பெறுத உணர்வைத் தலைவியை முதன்முதலாகக் கண்டபோது உணர்ந்தேன் என்பதைச் சுட்டும் வகையில் 'உருஅ நோக்கம்' என்ற அடை அமைந்தது. இவ்வாறு அடைச்சொற்கள் வழி விரிந்த பொருளையும் சுருக்கமாகவும் செறிவாகவும் விளக்குவது சங்க இலக்கியத்தின் தனிப்பண்பாக உள்ளது.

2.1.5. சொல்லாட்சிகள்

சூழலுக்கும் பொருளுணர்வுக்கும் தக ஏற்ற இடத்தில் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தல் சிறந்த சொல்லாட்சியாகிறது.

அகப்பொருள் பாடல்களில் பாத்திரங்கள் தமக்குள் குறிப்பாகப் பொருளையுணர்த்திக் கொள்ளும் வண்ணமும், பாத்திரங்களின் உள்ளநிலையைக்

---

76. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.75.

குறிப்பாக உணர்த்தும் வகையிலும் இச்சொல்லாட்சிகள் அமைகின்றன. புறப்பொருள் பாடல்களில் சுருங்கச் சொல்லி விளக்க இச்சொல்லாட்சிகள் அமைகின்றன.

தனித்திருக்கும் நிலை 'புலம்பு'[77] எனப்படும். 'பகற்குறியிலும் தலைவன் வராததைச் சுட்ட தோழி,

'கருங்கோட்டுப் புன்னை பூம்பொழில் புலம்ப'[78]

எனக் கறுகின்றாள். உயர்திணைக்குச் சுட்ட வேண்டிய சொல்லை அஃறிணைக்குப் பயன்படுத்திய வழி, தாம் சோலைக்கு வந்தபொழுது தலைவன் இல்லாததைச் சுட்டுகின்றாள்.

மறைமுகமாகவும் சுருக்கமாகவும் பொருளை விளக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'கானல் மாலைக் கழிப்புக் கம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனூர் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
வசைவன் டார்க்கு மல்குறு காலைத்
தாழை தளரத் தூங்கி மாலை
யழிதக வந்த கொண்டலொடு...'[79]

---

77. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), 'சொல்லதிகாரம்', தொல்காப்பியம், நூ. 331.

78. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 123.

79. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 40.

என்பது தலைவி தன் ஆற்றாமையை உணர்த்தும் பாடல். தலைவியின் துன்பத்திற்குக் காரணமான மாலைப்பொழுதின் வருணனையாக அமைவது இப்பகுதி. இதில் தலைவியின் உள்ள நிலைக்கேற்ற சூழல அமைக்கும் வகையில் 'கம்ப', 'பாடெழுந்-தொலிப்ப', 'தாழை தளர' என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இயற்கை வருணன போன்றவற்றில் இச்சொல்லாட்சிகள் பொருள்களின் தோற்றத்தை அப்படியே காட்சிப்படுத்துவதாய் உள்ளது. இதனைச் சொல்லுருக் காட்சி எனலாம்.

'காந்த பூதிய மணிநிறத் தும்பி'[80]

என்பதில் தும்பி மலரில் அமர்ந்திருக்கும் காட்சியை விளக்க வேறு சொற்களைப் பயன்படுத்தாது 'ஊதிய' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

'துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி'[81]

என்பதில் மந்தி தன் சுற்றத்தினரை அமர்த்திய செய்கையை விரிவான சொல் விளக்கங்களால் கூறது 'கைகவியாக் குறுகி' என்ற ஒரு சொல் மூலமே காட்டி-யுள்ளார். 'கீழே அமருங்கள்' என்று கைகையால் குறிப்பிடும்பொழுது கையைக் கவித்து ஆட்டும் தன்மையை இங்குக் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

புறப்பொருளில் சுருங்கச் சொல்லி விளக்கும் வகையில் சொற்கள் ஆளப்பெற்றுள்ளன.

'தன்போல் வேந்தன் முன்பூகுறித் தெறிந்த
புறப்புண் ணுணி மறத்தகை மன்னன்'[82]

---

80. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 17.

81. மேற்படி, பா. 57.

82. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 65.

என்பதில் புறப்புண் எனக் குறிப்பிட்டிருப்பினும் அது புறப்புண்ணல்ல; மார்பில் பாய்ந்த வேல் முதுகில் ஏற்படுத்திய புண் என்பதை உணர்த்த 'முன்பு குறித்தெறிந்த' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது.

இவைபோன்று ஒவ்வொரு சொல்லையும் மிக ஆழ்ந்து எண்ணிய நிலையில் படைத்துள்ளனர் சங்கப் புலவர்கள். இவ்வாறு இடத்துக்கேற்ப பொருளுக்குத் தக சொற்களைத் தேர்ந்தெடுத்து அமைப்பது தலையாய உத்தியாக உள்ளது.

2.1.6. எதிர்மறைச் சொல்லுணர்வு

சுட்டவிரும்பும் கருத்திற்கு எதிரான பொருளுடைய சொற்களைப் பயன்படுத்துவது இத்தன்மை. அகப்பொருள் பாடல்களில் பாத்திரங்கள் தங்களுக்குள் உணர்த்த விழையும்மன உணர்வுகளை வெளிப்படுத்த இத்தகு சொற்கள் கையாளப்படுகின்றன. புறப்பொருளில் இந்நிலை சற்று விரிந்து முழுப்பாடல் நிலையில் அமைகிறது. புகழ்வது போல இகழ்வதாகக் கறும் பாடல் இத்தன்மைத்து.

செல்வம் என்றும் அழியக் கூடியது. பிரிவுத் துன்பத்தால் வருந்தும் தலைவி இதனைக் 'கேடில் விழப்பொருள்' எனச் சுட்டுகிறாள்.

'கேடில் விழப்பொருள் தருமார் பாகிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே' [83]

என்பதில் தன்னையும் வருந்தவிட்டு நிலையில்லாத பொருளைத் தேடித் தலைவன் சென்றுள்ளான் என்ற ஆற்றாமை உணர்வை வெளிப்படுத்த, 'கேடில் விழப்பொருள்' எனக் கூற வைக்கிறார் புலவர்.

---

83. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 216.

'அன்னாய் வாழிவேண் டன்னைய:தெவன் கொல்
வரையர மகளிரி னிரையுடன் குழீஇப்
பெயர்வுழிப் பெயர்வுழித் தளிராது நோக்கி
நல்ல னல்ல னென்ப
தீயேன் றில்ல மடிலகிழ வோர்க்கே' [84]

என்ற பாடல் அலரால் ஏற்படும் துன்பத்தைத் தலைவனுக்கு உணர்த்துவது. இதில், தலைவியைத் தூற்றுகின்றனர் என்பதைக் குறிப்பாக உணர்த்த 'நல்லள் நல்லள் என்ப' எனக் கறுகிறாள். 'நல்லள்' என்பது எதிர்மறைப் பொருளைத் தந்து இகழ்ச்சிக் குறிப்பாக நின்றது. இவை பாத்திரங்களை அவர்களது உணர்வுக்கேற்ப அப்படியே படைத்துக் காட்டும் முயற்சியில் எழுகின்ற ஒருதன்மை எனலாம்.

2.1.7. சொற்பொருளுணர்வு மாற்றம்

உணர்வு மிகுதி காரணமாக ஒரு சொல்லுக்குள்ள பொருளுணர்வு வேறுபொருளுக்கு ஏற்றிக் கூறப்படுகிறது.

'உள்ளின் உள்ளம் வேமே உள்ளா
திருப்பினெம் அளவைத் தன்றே' [85]

என்பது ஆற்றாளாகிய தலைவியின் கூற்று. தீயின் தாக்குதலால் நேரும் 'வெந்த நிலை', துன்ப மிகுதி காரணமாக வருந்தும் உள்ள நிலைக்கு ஏற்றிக் கூறப்-பட்டுள்ளது. வேகும்பொழுது ஏற்படுவது பொருள் நைந்து போகும் நிலை. தலைவியின் உள்ளமும் துன்பத்தால் நைந்துபோகும் நிலையைச் சுட்டி நிற்கின்றது 'உள்ளம் வேமே' எனும் சொல்.

'..... ....
அழலவிர் மலிப்பு னையர்
பெயலா லுவென் கண்ணே தெய்யோ' [86]

---

84. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 204.
85. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 102.
86. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 232.

என்பதில் மழையைக் குறிக்கப் பயன்படும் 'பெயல்' எனும் சொல் துன்ப மிகுதியால் வந்த கண்ணீர் கருதி அதனைச் சுட்டி நின்றது. பிற வகை உத்திகளைக் காட்டிலும் இத்தன்மை சிறுபான்மையாகக் காணப்படுகிறது. ஒருவகையில் காணும்பொழுது இதுவும் உவமை அடிப்படையில் செயல்படுவதைக் காணலாம். 'உள்ளம் நெருப்பு ஆகின்றதைப் போல் உள்ளது', 'பெயலைப் போன்று கண் பொழிந்தது' எனக் கருது உணர்வு மிகுதியைக் காட்ட இவ்வாறு கறப்பட்டுள்ளது. இதில் மறைமுகமாக உள்ளம் நெருப்பிற்கும், கண் மேகத்திற்கும் உருவகப்படுத்தப்பட்டிருப்பதையும் உணரலாம்.

2.1.8. புதிர்ச் சொற்கள்

தன் மகன் மிகச் சிறுவயதினனாய் இருப்பதால் அவனைப் போருக்கு அனுப்ப இயலாததை நினைந்து வருந்தும் தாயின் உள்ளக்கிடக்கையை,

'பலர்மீது நீட்டி மண்ணெனென் சிறுவனைக்
கால்வழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் எறுவை போர்ப்பித் தனனே'[87]

என வெளிப்படுத்துகிறது புறநானூற்றுப் பாடல் ஒன்று. இதில் கால்கழிகட்டில் என்பது இறுதிச் சடங்கில் பயன்படும் கருவியைச் சுட்டி நின்றது.

பாட்டங்கொற்றனின் 'குதிரை மலை'யைச் சுட்டுகையில் 'ஊராக் குதிரை' எனக் குறித்திருப்பதும், வஞ்சி நகரத்தை 'பூவா வஞ்சி' எனக் குறித்திருப்பதும் இத்தன்மைத்தாகும்.[88] இவை புதிர் போன்று செயல்பட்டு இலக்கியச் சுவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மிகவும் அரிதாகவே இவ்வழக்கு பயின்று வந்துள்ளது.

---

87. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 286.

88. மேற்படி, பா. 32, 168.

2.1.9. குறியீட்டுச் சொற்கள்

மரபு அடிப்படையிலும் பயன்பாட்டு ஒருமைப்பாட்டின் அடிப்படையிலும் சங்க இலக்கியத்தில் சொற்கள் குறியீடுகளாகச் செயல்பட்டுள்ளன.

பாடலின் ஒரு பகுதியில் கையாளப்பட்ட ஒரு சொல் அதேபொருளில் பாடலின் வேறு பகுதியில் வேறு காரணத்துக்காகப் பயன்படுத்தப்படும்பொழுது அச்சொல் குறியீடாகச் செயல்படுகிறது. பதிற்றுப்பத்தில் சேரலாதன் போர் செய்தற்கு முன் அவனது பகைவர் நாட்டின் நிலை,

'கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணொருமையி னிரைதருங் குநவும்'[89]

என வருணிக்கப்பட்டுள்ளது. 'கான்போரைத் தடுத்து நிறுத்திக் கொள்ளும் செல்ல வளமுடையது' என்பதை இவ்வருணனை குறிப்பாக உணர்த்தி நின்றது. இதில் 'பூத்த நெய்தல்' என்பது செல்ல வளத்திற்கு உவமையாய் நின்றது. இவ்வாறு பகைவர் நாட்டின் வருணனையை அடுத்து சேரனின் வீரம் போன்றவற்றை விளக்கி, இறுதியாக அவனது நாட்டு வளன் சிறக்க,

'மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசியிகந் தொரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே'[90]

என வாழ்த்துகின்றார். முன்பு கான்போரைத் தடுக்கும் செல்ல வளத்தைக் குறிப்பாகச் சுட்டி நின்ற 'பூத்த நெய்தல்' என்ற சொல்லின் அடிப்படையில், 'நீ காத்த நாடு கான்போரைத் தடுக்கும் செல்ல வளமுடையது' என்ற பொருளை உணர்த்தும் வகையில் 'பூத்தன்று' என்ற சொல் குறியீடாய் நின்றது. அல்லாதவிடத்து இச்சொல் சரியான பொருள் பயவாது நிற்பதும் குறிப்பிடத்தக்கது.

---

89. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 2/3; 3-4.

90. மேற்படி, பா. 2/3; 26-28.

ஒருசொல் ஒருமுறை ஓர் உணர்வைக் குறிக்கவந்து அடுத்த முறை அவ்வுணர்வைச் சுட்ட வேண்டிய இடங்களிலெல்லாம் அச்சொல்லே பயன்பட்டு அவ்வுணர்வைக் குறித்தற்குரிய அடையாளமாக, குறியீடாக நிற்கின்றது.

'சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்
தெல்லற் பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனூர் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலு மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே' [91]

என்ற தலைவி கூற்றாக அமைந்த பாடலில் 'துன்பம் பயப்பது மாலை' என்பது முதலில் விளக்கப்பட்டு அடுத்து வரும் பகுதிகளில் 'மாலை' என்ற சொல்லைத் துன்பம் என்ற பொருளை விளக்கப் பயன்படுத்தியுள்ளார். எனவே இங்கு 'மாலை' என்பது குறியீட்டுச் சொல்லாய் நின்றது.

அடுத்து, உணர்வுகளைச் சுட்டநிறச்சொற்களும் குறியீடுகளாய் நின்றுள்ளன. சிறப்பாகச் சின உணர்வைச் சுட்ட மட்டும் இப்பயன்பாடு உள்ளது. மன்னன் கோபம் கொண்டதால் பகைவர் நாடு அழிந்தது என்பதைச் சுட்ட,

'சிதைந்தது மன்றநீ சிவந்தனை நோக்கலின்' [92]

எனக் கூறப்பட்டுள்ளது. இதில் சினம் காரணமாக உண்டாகும் மெய்ப்பாட்டு அடிப்படையில் நிறப்பெயர் கோபத்தைச் சுட்டும் குறியீடாய் நின்றது.

அகப்பாடல்களில் தலைவியின் நலன் தொடர்பாகவே 'நுதல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பசலைக்கும் நுதலுக்கும் மிகுதியும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இவ்வடிப்படையில் பல பாடல்களில் 'நுதல்' என்ற சொல் மட்டுமே பசலையைச் சுட்டி நிற்கின்றது.

---

91. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 234.

92. சு. துரைசாமிப் பிள்ளை, (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 3/7.

'படுமழை பொழிந்த சாரலவர் நாட்டுக்
குன்ற நோக்கினென் தோழி
பண்டை யற்றே கண்டிசின் நுதலே' [93]

என்ற பாடல், 'தலைவனின் குன்றத்தை நோக்கியமையால் என் நுதல் பண்டையதாக உள்ளது' எனும் பொருளை உணர்த்துகின்றது. தலைவன் குன்றத்தை நோக்கியதால் பசலை நீங்கியது என்பது இங்கு உணர்த்தப்படும் குறிப்பாகும். இவ்வாறே,

'இன்ன ளாயினள் நன்னுதல் ...' [94]

என்பதில் நுதல் என்ற சொல்லாட்சிவழி 'இன்னது' என்பது பசலையைச் சுட்டி நிற்பது பெறப்படுகிறது.

ஒவ்வொரு நிலத்துக்குரிய தலைவனுக்கும் இன்ன பெயர் எனச் சுட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

'ஊரன்', 'மகிழ்நன்' என்பன மருதநிலத் தலைவனையும், மருதத் திணையையும் சுட்டி நிற்கின்றன. 'சேர்ப்பன்', 'துறைவன்' என்பன நெய்தல் நிலத் தலைவனையும், நெய்தல் திணையையும் குறிக்கின்றன. 'நாடன்' என்பது குறிஞ்சி நிலத் தலைவனையும், குறிஞ்சித் திணையையும் சுட்டி நிற்கின்றது. முல்லைத் திணைப் பாடல்கள் பெரும்பான்மையும், வினைமுற்றி மீளும் தலைவன் நெஞ்சிற்குக் கூறுவதாகவும், தலைவியின் நிலை விளக்கப்படுவதாகவும் அமைதலால் இவற்றில் பெயர் சுட்டப்படவில்லை. சுட்டும் இடத்திலும் அவனது தேரொலியைச் சுட்டும் வகையிலோ 'நெடுந்தகை தேர்' எனக் கூறுதல் வழியோ தலைவன் வரவு குறிக்கப் பெறுகின்றது. தலைவனின் தந்தையைக் குறிக்கும்போது மட்டும் 'பூறவணி நாடன்' என்ற சொல் கையாளப்படுகிறது. பாலைத்திணையில் 'அருஞ்சுரமிறந்தோன்'

---

93. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 249.

94. மேற்படி, பா. 98.

என்ற முறையில் சுட்டப்படுகிறது. 'மகிழ்ந', 'ஊர' என்பதிலும் பெரும்-பான்மையும் பரத்தையிற் பிரிந்த தலைவனுக்கு வாயின் மறுக்கும் நிலையில் 'மகிழ்ந' என்பது சுட்டப்பட்டுள்ளது. மற்றபடி இருசொற்களும் விரவி வந்துள்ளன.

பொதுவகையில் அந்தந்த நிலத்தலைவர்களைச் சுட்டும் குறியீடுகளாய் 'ஊரன்', 'சேர்ப்பன்', 'நாடன்' என்ற சொற்கள் உள்ளன.

'நாட னென்கோ வூர னென்கோ
பூமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ
யாங்ஙன மொழிகோ வோங்குவாட் கோதையை' [95]

என்ற பாடலும் இதற்குச் சிறந்த சான்றாக அமைவதைக் காணலாம். இதில் 'நாடன்', 'ஊரன்', 'சேர்ப்பன்' என்பன முறையே குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்களைச் சுட்டி அந்நிலங்களுக்கெல்லாம் சேரமான் கோக்கோதை மார்பன் உரியன் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறே 'ஊர்', 'சேரி' என்ற சொல்லாட்சிகளும் உள்ளன. பொதுமக்கள் அனைவரையும் குறித்து நிற்க 'ஊர்' என்ற சொல்லும், உறவினர்கள் சேர்ந்த பகுதியைக் குறிக்கச் 'சேரி' என்ற சொல்லும் வந்தது.

'ஊஉ ரலரெழச் சேரி கல்லென' [96]

எனவரும் தொடரில் ஊரும், சேரியும் வேறுபடுவது சுட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு புலவனின் தனிப்பட்ட பயன்பாட்டு அடிப்படையிலும், மரபு அடிப்படையிலும் சங்க இலக்கியத்தில் குறியீட்டுச் சொற்கள் அமைந்துள்ளன. இக்குறியீடுகள் ஒரு பாடலளவில் மட்டும் நிற்பதாகவும், பல பாடல்களுக்குரிய பொதுப்பண்பாக நிற்பதாகவும் உள்ளன.

---

95. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 49.

96. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 262.

2.1.10. இரட்டுற மொழிதல்

அகநானூற்றில் ஒரு பாடலில் மட்டும் இத்தன்மை காணப்படுகின்றது. கார் கழிந்து இளவேனிற் பருவமும் வந்தது. தலைவியை விரைவாக வரைந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்தக் கருதிய தோழி பருவ வருணனையைக் கூறி இப்பருவத்தில் 'ஈயல் பெய்தட்ட இன்புளி வெஞ்சோறு உண்ணுதற்கு வர வேண்டும்' எனக் கூறுகின்றாள்.

'களவும் பூரித்தன விளவும் பழுநின' [97]

எனப் பருவ வருணனை தொடங்குகின்றது. இதில் 'களவும் பூரித்தன' என்பது களாப்பழத்தைக் குறித்ததோடு உடன் அவர்களது களவொழுக்கத்தையும் குறித்து நின்றது. இடைக்காலத்தில் பெருகியிருந்த சொற்சிலேடைக்கு முதல் நிலையாக இதனைக் கருதலாம்.

2.2. சொல்லுத்திகளின் இரண்டாவது வகையில் விளைமுற்றுச் சொற்கள், சொல்மடக்கு என்பன அமையும்.

2.2.1. விளைமுற்றுச் சொற்கள்

விரைவுக் குறிப்பு முதலிய உணர்வு நிலையை விளக்குவதோடு, ஒரு பொருளின் பண்பையோ, செயலையோ, முழுத்தோற்றத்தையோ அப்படியே காட்சிப்படுத்தற்கு இச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

'அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறந்தில் யுலகமு மன்றே யதனற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை' [98]

---

97. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 394.

98. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 206.

Phd 1928

என்பது அதியமான் பரிசில் நீட்டிக்க ஔவையார் கினந்து பாடிய பாடலடிகள். இதில் 'காவிரனம்', 'சுருக்கினம்' என்ற விரனமுற்றுச் சொற்கள் அவரது கின உணர்வையும், அங்கிருந்து நீங்க விழையும் விரைவையும் உணர்த்துகின்றன.

'செய்யன் சிவந்த வாடையின் செல்வரைச்
செயிலத் தண்டளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்' [99]

எனவரும் திருமுருகாற்றுப்படை அடிகள் இவ்வாறு விரனமுற்றுச் சொற்களை அடுக்கி முருகனின் தோற்றத்தைக் காட்சிப்படுத்தியுள்ளன. இவ்வாறு உணர்வு வேறுபாடு, பொருள்களின் பண்பு விளக்கம் என்ற இரண்டிற்காக விரனமுற்றுச் சொற்களைப் பயன்படுத்துவது பரவலாகக் காணப்படுகிறது.

2.2.2. விரனத்தொகைச் சொற்கள்

'... .... தழையோர்
கொய்குழை அரும்பிய குமரி ஞாழல்' [100]

என்பதில் கொய்யக் கொய்ய அரும்பிக் கொண்டே இருக்கும் என்னும் தன்மையை உணர்த்தற்கு 'கொய்குழை' என்ற விரனத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பொருள்களின் சிறு பண்பினையும் சுருக்கமாகவும் நுட்பமாகவும் உணர்ந்த இச்சொற்களைக் கையாண்டுள்ளனர்.

---

99. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'திருமுருகாற்றுப்படை', பத்துப்பாட்டு, ஏழாம் பதிப்பு, (சென்னை, 1974), அடிகள் 206-214.

100. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.54.

MUL
PhD1928

2.2.3. ஒருபொருட் பலசொல்

ஒரே செயலின் பலநிலைகளை உணர்த்த ஒருபொருட் பலசொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

'உள்ளினென் அல்லமே யானே உள்ளி
நினைத்தனென் அல்லமே பெரிதே நினைத்து
மருண்டனென் ... ...' [101]

என்பது பொருள் முற்றிப் பூகுந்த தலைவன் தோழிக்குச் சொல்லியது. இதில் உள்ளினென், நினைத்தனென் என்பன ஒருபொருளுடையன போல் தோன்றினும் தலைவியை இடையறாது நினைத்தலை முதற்சொல்லும், அவளாற் பெறும் இன்பத்தை நினைத்தல் இரண்டாவது சொல்லும் உணர்த்துகின்றன. இவ்வாறு நுட்பத்தோடும் உட்கோளோடும் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

2.2.4. சொல் மடக்கு

பொருளுணர்வு கருதியும், இலக்கியச்சுவை கருதியும் சொல்மடக்கு கையாளப்பட்டுள்ளது. இதில் பொருளுணர்வு கருதிக் கையாள்வது மிகுந்துள்ளது.

'வரையா மையோ வரிதே வரையின்
வரைபோல் யாளை வாய்மொழி முடியன்
வரைவேய் புரையு நற்றோள்' [102]

என்பதில் 'வரை' என்பது 'மலை', 'திருமணம்' என்ற பொருளில் மடக்காக வந்தது. சொல்லின்பம் கருதி இவ்வாறு ஆளப்பட்டிருப்பினும், பொருள்நலனும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் வந்த யமகம், திரிபு என்பவற்றிற்கு அடிப்படையாக இவ்வமைப்பைக் கொள்ளலாம்.

---

101. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 99.

102. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 390.

மகிழ்வான உள்ளநிலை, வெறுப்புணர்வு, வியப்புணர்வு, இரக்கவுணர்வு, ஆற்றுமை உணர்வு என்பன போன்ற உணர்வு நிலைகளை விளக்குதற்கு 'சொல்மடக்கும்' ஒரு வாயிலாக உள்ளது.

'மெல்லிய லோயே மெல்லிய லோயே
நன்னுன் நீத்த பழிதீர் மாமை
வன்பின் ஆற்றுதல் அல்லது செப்பிற்
சொல்ல கிற்கு மெல்லிய லோயே' [103]

என்பது வரைவு மலிந்த செய்தியறிந்த தலைவி தோழிக்குக் கூறியது. இங்குத் தலைவியின் மகிழ்ச்சி மிகுந்த உள்ளநிலையை வெளிப்படுத்தும் வகையில் சொல்மடக்கு கையாளப்பட்டுள்ளது.

'காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே...' [104]

என்பது தலைவியைக் கண்டு வேறுபட்ட தலைவனுக்குப் பாங்கன் கூறுவது. பாங்கன் சினமும், வெறுப்பும் கலந்த உணர்வுநிலையில் தலைவனை இடித்துரைக்கும் தன்மையை இச்சொல்மடக்கு வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறே இரக்கவுணர்வு, [105] வியப்புணர்வு, [106] ஏளனக்குறிப்பு, [107]

---

103. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 368.

104. மேற்படி, பா. 204.

105. 'அளியளோ அளியளெந் நெஞ்சமர்ந் தோளே' - மேற்படி, பா. 56.

106. 'தன்பெருமையின் றகவுநோக்கிக்
குன்றுறழ்ந்த களிறென்கோ
தொய்யுளைய மாவென்கோ
மன்றுநிறைய நிரையென்கோ
மனைக்களமரொடு களமென்கோ
ஆங்கவை, கனவென மருள வல்லே...'
- சு. துரைசாமிப்பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 387.

107. 'நயந்தோ ருண்கண் பசந்துபனி மல்க
வல்லன், வல்லன் பொய்த்தல்
தேற்று துற்ற சூள்வாய்த் தல்லே' - பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 37.

பக்தியுணர்வு[108] ஆகியவைகளை விளக்கச் சொல்மடக்கு கையாளப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு கருத்தின் இறுதியிலும் சொல்மடக்கைக் கையாள்வது வியப்புணர்வையும், இரக்கவுணர்வையும் வெளிப்படுத்தற்குரிய கருவாக உள்ளது.

ஐங்குறுநூற்றில் 'கள்வன்பத்து' என்ற பகுதியில் எல்லாப் பாடல்களும் 'எவன்கொலன்னோ' என்ற சொல்லோடு முடிவு பெற்றுள்ளன. இதில் ஒவ்வொரு பாடலும் பரத்தையிற் பிரிந்த தலைவனை நினைந்து ஆற்றுமை உணர்வை வெளிப்படுத்துவதாகவும், இற்செறித்த தலைவியைக் கண்டு துன்புறுவதாகவும், சிறுபான்மை தோழி தலைவியை ஆற்றுவிப்பதாகவும் உள்ளது. எனவே, இவ்வுணர்வுகளுக்கேற்ப ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இச்சொல் பயின்று வந்துள்ளது. இத்தன்மை ஐங்குறுநூற்றில் மட்டும் காணப்படுகிறது. வேறு சங்க இலக்கியங்களில் இல்லை.

உணர்வு மிகுதி மட்டுமன்றி விரைவு மிகுதி, பொருளின் மிகுதி ஆகியவற்றைச் சுட்டும் இடங்களிலும்[109] சொல்மடக்கு பயின்று வந்துள்ளது.

சொற்கள் அடுத்தடுத்து மடக்கி வருதல், ஒவ்வொரு கருத்தின் இறுதியிலும் மடக்கி வருதல், ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் மடக்கி வருதல் என்ற மூன்று நிலைகளில் சொல்மடக்கு சங்க இலக்கியங்களில் பயின்றுள்ளது.

---

108. 'அன்னை யாகலின் அமர்ந்தியா நின்னைத்
துன்னி துன்னி வழிபடு வதன்பயம்
இன்னு மின்னுமவை யாகுக
தொன்முதிர் மரபினின் புகழினும் பலவே'

- பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பரிபாடல், பா. 14; 29-36.

---

109. 'விரைபு விரைபு கைமிகைமிகை யீண்டி'

- மேற்படி, பா. 12; 30, 36-37, 100-101.

பெயர்ச் சொற்கள் பெரும்பான்மையும் சொல்மடக்காக வந்தன.[110] சிறுபான்மை வினைச்சொற்கள் வந்தன.[111]

உணர்வை வெளிப்படுத்துவதோடு பாத்திரங்களின் எண்ணங்களைக் குறிப்பாக உணர்த்தும் வகையிலும் சொல்மடக்கு வந்துள்ளது.

'துடைத்தொறுந் துடைத்தொறுங் கலங்கி
யுடைத்தெழு வெள்ள மாகிய கண்ணே'[112]

என்பதில் துன்ப உணர்வைக் காட்டியும் பிறர் அறியக் கூடாது என நினைக்கும் தலைவியின் உள்ளப்பாங்கே நன்கு வெளிப்படுத்தப்படுவதாய் உள்ளது.

தலைவர பொருள்களின் நிகழ்ச்சிகளின் இயக்கத்தை அப்படியே காட்சிப்படுத்தற்கும் சொல்மடக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

'பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்'[113]

என்பதில் புனத்துள் நுழையும் பன்றி பல்லியின் குரல் கேட்டு மெல்லப் பின்வாங்கிய தன்மை 'மெல்ல மெல்ல' என்ற சொல்மடக்குவழி நன்கு விளக்கப்பட்டுள்ளது.

---

110. 'சிறுவெள்ளங் குருகே சிறுவெள்ளாங் குருகே'
-பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), நற்றிணை, பா.70.

111. 'காட்டவுங் காட்டவுங் காணுள் கலுழ்சிறந்து'
- உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப்பாட்டு, 22.

112. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.358.

113. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.98.

ஆற்றுமை உணர்வு, துன்ப உணர்வு இவைகளை வெளிப்படுத்தும்பொழுது இச்சொல்மடக்கு 'வாயிலோயே வாயிலோயே'[114] 'பல்சான்றீரே பல்சான்றீரே'[115] என முன்னிலை விளிகளாகவும் அமைந்துள்ளன.

2.2.5. தனிச்சுட்டுச்சொல்

ஆற்றுமையுணர்வையும் வேறுசில உணர்வுகளையும் வெளிப்படுத்தற்குச் சுட்டுச் சொற்களைத் தனிச்சொல்லாகப் பயன்படுத்துவதும் ஒருவழியாகக் கையாளப்பட்டுள்ளது.

'அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாட்டார் வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடார் எல்வளை நெகிழ ஏங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே'[116]

என்பது தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் கூற்று. இதில் தலைவியின் ஆற்றுமையுணர்வை வெளிப்படுத்தும் வகையில் 'அவரே', 'யானே' எனும் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை சீர்களின் எண்ணிக்கையில் மாறுதலை ஏற்படுத்தினும் உணர்வு வெளிப்பாடு கருதி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இங்குச் செய்தியை வெளிப்படுத்தும் தன்மைக்கு முதலிடம் அளிக்கப்படுவதை உணரலாம்.

பல சிறப்புகளையும் ஒருங்கே கூறுமிடத்து ஒவ்வொன்றின் சிறப்பையும்

---

114. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 246.

115. மேற்படி, பா. 206.

116. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 216.

தனியே சுட்டுதற்கும் இத்தன்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.[117] பொருளோடு கற்போர் உணர்வை ஒன்றுபடுத்த இது உதவுகிறது. புறப்பாடல்களில் இவ்வாட்சி மிகுந்துள்ளது.

இத்தனிச் சொற்கள் பெரும்பான்மையும் ஏகார முடிவு பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

2.2.6. எண்ணுப் பெயர்கள்

ஒரு பொருளின் பல சிறப்புகளை விளக்கும்பொழுது இவ்வாறு எண்ணுப் பெயர்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்றே, இரண்டே, மூன்றே எனச் சுட்டி ஒவ்வொரு சிறப்பையும் கூறுவது இத்தன்மைத்தாகும். ஒரு சில பாடல்களே இத்தன்மையதாய் உள்ளன.[118]

2.2.7. சொல்லெச்சம்

பொருளைச் சுருக்கமாகவும் செறிவாகவும் விளக்குதற்கும் பாத்திரங்களின் உணர்வைச் சூழலோடு விளக்குதற்கும் சொல்லெச்சம் கையாளப்படுகிறது.

---

117. 'வேலே, குறும்படைந்த வரன்கடந் தவர்
... ...
... ...
மடைகலங்கி நிலைதிரிந் தனவே
களிறே, ...
... ...
பரூஉப்பிணிய தொடிகழிந் தனவே
மாவே, ...
களனுழந் தசைஇய மறுக்குளம் பினவே'

- சு. துரைசாமிப் பிள்ளை, (உரையாசிரியர்), புறநானூறு, பா. 97.

118. ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்லிளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமுழுக் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளித் கிழங்குவீழ்க் கும்மே,
நான்கே, அணிநிற வோரி பாய்தலின்...' - மேற்படி, 109, 156.

'... ... ...
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே' [119]

எனும் தலைவி கற்று தலைவன் பிரியாது இருக்கவும் பிரிந்தானென நினைத்துக் கண்கள் உறங்காவாயின என்ற பொருள்படும். இதில் நினைத்து என்ற சொல் எச்சமாக நின்றது.

'துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன
வீங்கின மாதோ தோழியென் வளையே' [120]

என்பது தலைவன் மீண்டு வந்துழித் தலைவி கூறிய பாடல். இங்குத் தலைவன் பிரிந்தவுடன் வளைநெகிழ்ந்தன, வந்தவுடன் செறிந்தன என்பது பொருள். இதில் வந்தவுடன் என்பது எச்சமாக நின்றது. தலைவன் வந்து விட்டான் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில், தலைவன் வரவை விரைந்து சொல்ல விழைகிறது தலைவியின் உள்ளம். இவ்வுள நிலையைத் தெளிவுபடுத்திக் காட்டும் வகையில், 'பிரிந்தென நெகிழ்ந்தன வீங்கின மாதோ' என வந்தவுடன் என்ற சொல்லை எச்சமாக வைத்துக் கூறவைக்கிறார் புலவர்.

ஒருவனுடைய இரு முரண்பட்ட பண்பைச் சுட்டுமிடத்து அவ்வேறுபாட்டை நன்கு விளக்கவும் சொல்லெச்சம் கையாளப்பட்டுள்ளது.

'அண்ணல் யாஎன வேந்தர்க்
கின்னு முகிய வினியோன் குன்றே' [121]

என்பது பாரியின் சிறப்பைக் கூறுவது. இதில் அவனது இரு முரண்பட்ட பண்புகளை நன்கு விளக்கும் வகையில் 'நட்டோர்க்கு' என்ற சொல்லை எச்சமாக வைத்து, 'இன்னுமுகிய வினியோன்' எனப் பொருள் முரண்பாடுடைய சொற்கள் அடுத்தடுத்து நின்று கற்போரைச் சிந்திக்க வைக்கின்றது.

இவ்வாறு பொருளுணர்விற்குச் சிறிதளவு உதவும் சொல்லெச்சங்கள் சங்க இலக்கியத்தில் அரிதாகப் பயின்றுள்ளன.

---

119. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 5.
120. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 192
121. சு. துரைசாமிப்பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 115.

இயல் - 3

சங்க இலக்கியத் தொடர் உத்திகள்

3. சங்க இலக்கியத் தொடர் உத்திகள்

சங்கப் பாடல்களில் சொல் நிலையில் மிகுதியான உத்திகள் இடம்பெற்ற அளவிற்குத் தொடர்நிலையில் உத்திகள் அமையவில்லை. வினைமுற்றுத் தொடர்களும், வினையெச்சத் தொடர்களுமே தொடர்நிலையில் தலையாய உத்திகளாகச் செயற்பட்டுப் பாடலின் உணர்ச்சி மிகுந்த நடைக்கும் பாடலின் செறிவிற்கும் காரணமாயுள்ளன. மரபுத்தொடர், தொடர் மடக்கு, அந்தாதித் தொடரமைப்பு போன்றன ஆங்காங்கே சில இடங்களில் பயின்று வந்துள்ளன.

3.1. வினைமுற்றுத் தொடர்கள்

உணர்வு வெளிப்பாடுகளுக்கேற்பத் தொடரமைப்பிலும் மாற்றம் நிகழ்கிறது. பொதுவாகச் சங்க இலக்கியப் பாட்டல்கள் ஒவ்வொன்றும் வினைமுற்றுத் தொடர்கள், 'செய', 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினையெச்சத் தொடர்கள் ஆகியன விரவி வந்த அமைப்புடையன. ஆயின் உணர்வு வெளிப்பாடு, பண்பு விளக்கம், காட்சி விளக்கம் ஆகியவற்றிற்குத் தொடரமைப்பைக் கருவியாகக் கையாளும்பொழுது வினைமுற்றுத் தொடரோ, வினையெச்சத் தொடரோ நிரலாக அடுக்கிவரும் தன்மை காணப்படுகிறது. அகப்பாடல்கள், பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து என்பவைகளைக் காட்டிலும் புறநானூற்றுப் பாடல்களில் இவ்வினைமுற்றுத்தொடர் மிகுதியாகப் பயின்றுள்ளது. அகப்பாடல்களில் இறைச்சி, உள்ளுறை என்பன தலையாய உத்திகளாய் இருத்தலின் அவற்றை வெளிப்படுத்தற்கென இயற்கை வருணனைகள் மிகுந்த இடத்தைப் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு என்பன புறநானூற்றைப் போன்று சிறுசிறு தன்னுணர்வுப் பாடல்களாக அமையாது தொடர்நிலையாக அமைந்து மிகுந்த வருணனையைக் கொண்டுள்ளன. இது காரணமாக இப்பாடல்களில் சிறு வினைமுற்றுத் தொடர்களை மிகுதியும் பயன்படுத்த வாய்ப்பில்லை எனலாம். அகப்பாடல்களிலும் உவமை, இறைச்சி போன்ற எவற்றையும் மேற்கொள்ளாதபோது பாத்திரங்களின்

உணர்வுகளை நேரடியாக வெளிப்படுத்தும் முயற்சியில் இவ்விணைமுற்றுத் தொடர்கள் கையாளப்பட்டுள்ளன. எனவே புலவன் தன்னுணர்வையோ, பாத்திரங்களின் உணர்வுகளையோ, பண்பு செயல் இவற்றின் தன்மையையோ உவமை போன்ற பிறவழிகளை மேற்கொள்ளாது நேரடியாக வெளிப்படுத்த முனையும்பொழுது விணைமுற்றுத் தொடர்கள் இன்றியமையாத கருவியாக விளங்குகிறது என்பது தெளிவாகிறது. சங்கப் பாடல்களில் பொதும் உணர்வு வெளிப்பாடு கருதி விணைமுற்றுத் தொடர்கள் கையாளப்பட்டுள்ளன. இதனை அடுத்து பண்புவிளக்கமும் காட்சி விளக்கமும் கருதி இவை கையாளப்பட்டுள்ளன.

உணர்வு வெளிப்பாட்டிலும் ஆற்றுமையுணர்வு, இரக்கவுணர்வு என்பவற்றை வெளிப்படுத்த மிகுதியாகப் பயிலப்பட்டுள்ளது.

'சீரார் செல்வியும் வந்தன்று
வாரார் தோழிநங் காத லோரே;
பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்;' [1]

என்ற பாடலடிகள் இதற்குச் சான்றாகும். இது தவிர வியப்புணர்வு, விரைவுணர்வு என்ற நிலைகளிலும் இத்தொடர் பயின்று வந்துள்ளது.

'தோள்கவி னெய்தன தொடிநிலை நின்றன
நீள்வரி நெடுங்கண் வாள்வனப் பூற்றன
வேந்துகோட் டியானை வேந்துதொழில் விட்டென
விரைசெல னெடுந்தேர் கடைஇ
வரையக நாடன் வந்த மாறே' [2]

---

1. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 36; 10-15.

2. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 498.

என்பது தலைவன் வந்ததும் இதுநாள் வரை வருந்திய தலைவியின் நிலையில் ஏற்பட்ட மாற்றம் கண்டு தோழி வியந்துரைப்பதாகும். இதில் தோழியின் வியப்புணர்வை வெளிப்படுத்த இத்தொடரமைப்பு கையாளப்பட்டுள்ளது. விரைவுணர்வை வெளிப்படுத்தும் பாடலும் இத்தன்மைத்து.[3]

இவ்வாறு உணர்வு மிகுந்த நிலையில் சொற்கள் சிறிது சிறிதாக வெளிப்படும் தன்மைக்கேற்ப உணர்வு மிகுந்த நிலையை வெறும் மொழிநடையால் வேறுபடுத்திக் காட்ட சிறுசிறு வினைமுற்றுத் தொடர்களைக் கையாண்டுள்ளனர்.

சங்கப் பாடல்கள் சிலவற்றில் பாடல் முழுதும் இத்தொடரமைப்பு அமைய பெரும்பான்மையானவற்றில் பாடலின் முதல், இடை, கடை ஆகிய ஏதேனும் ஒரு பகுதியில் மட்டும் அமைந்துள்ளது. இவ்வமைப்பு, பாடலில் இருவேறுபட்ட மொழிநடையை உண்டாக்கி அவ்வேறுபாடே பாடலில் உணர்த்தப்படும் உணர்வு நிலையையும் சுட்டுவதாக உள்ளது.[4]

---

3. 'ஆறுவனப் பெய்த வலர்தா யினவே
வேந்துவிட் டனனே மாவினந் தனவே
முன்னுறக் கடவுமதி பாந
நன்னுத லரிவை தன்னலம் பெறவே'

- பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 483.

4. 'முன்னுள்ளு வோளைப் பின்னுள்ளி னேனே
ஆழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே
பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே
நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
....'

- சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 132.

பொருள்களிடத்துப் புலவனுக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையிலும் இவ்விரினமுற்றுத் தொடர்கள் பயின்றுள்ளன. பரிபாடலில் இறைவனுடைய பண்புகளை விளக்குகையில் அப்பண்புண்மையின் உறுதிப்பாட்டை விளக்கும் வகையிலும் தமக்கு அவனிடத்துள்ள இறைமை அன்பை வெளிப்படுத்தும் வகையிலும் ஒவ்வொரு பண்பையும் தனித்தனி விரினமுற்றுத் தொடர்களைக் கொண்டு சுட்டியிருப்பது இதற்குச் சான்றாகும்.[5] புறப்பாடல்களில் இத்தன்மை மன்னர், வள்ளல் ஆகியோரது பண்பை விளக்குகிறது.[6] அகப்பாடல்களில் இது தலைவியின் நலனைக் காட்டுகிறது.[7]

பண்பு விளக்கத்திற்கு மட்டுமன்றி நிகழ்ச்சியை அப்படியே காட்சிப் படுத்தற்கும் இத்தொடர்கள் பயின்று வந்துள்ளன. முல்லைக்கலியில் எருதுகளின் ஓட்டத்தைக் குறிக்கையில்,

'எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு
கலங்கினர் பலர்'[8]

எனவும், அதியமானின் போர்க்கோலத்தை,

'கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியலே மிடற்றது பசும்பூண்'[9]

எனவும் கூறியிருப்பது இதனை உணர்த்தும்.

---

5. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பரிபாடல், பா. 4; 50-73.
6. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 221; 1-4.
7. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 255, 25.
8. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 102; 21-24.
9. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 100; 1-2.

அடுத்து அறக்கருத்தை விளக்குமிடத்துப் பெரும்பான்மையும் இவ்விதினமுற்றுத் தொடர் பயின்று வந்துள்ளது.[10] தனது கருத்தை, எளிதில் கேட்போர் மனதில் பதியச் செய்தற்கும், அதனை விரைந்து செயல்படுத்தத் தூண்டுதற்கும் இவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. அகப்பாடல்களிலும் அறக்-கருத்தைக் கையாளும்பொழுது இத்தன்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.[11]

பின்னர் வந்த 'பக்தி' இலக்கியங்களுக்கும், அறநூற்களுக்கும் இது ஓர் அடிப்படைப் பண்பாக உள்ளது எனலாம்.

அறக்கருத்தை மட்டுமன்றி வேறு கருத்தையும், தெளிவுபடவும் உறுதியாகவும் எடுத்துரைத்தற்கும் இத்தன்மை பயன்படுத்தப்பட்டுள்ளது.[12]

சங்கப் பாடல்களுள் மிகவும் சுருக்கமான எளிமையான ஆனால் செறிவான பாடல்களுக்கும் இவ்விதினமுற்றுத் தொடர்கள் சிறந்த கருவியாகப் பயன்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.[13]

---

10. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 18, 19-21, 104, 182, 183, 186, 192, 204, 205, 214, 360.

11. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 33, 6-14.

12. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 191, 216, 6-12.

அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 391.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 302.

13. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 3, 45, 110, 121, 122, 123, 208, 209.

3.2. வினையெச்சத் தொடர்கள்

வினைமுற்றுத் தொடர்களைப் போன்று 'செய' 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினையெச்சத் தொடர்களை நிலைலாக அடுக்கிக் கூறுவதும் உத்தியாகக் கொள்ளப்படுகிறது. ஒருபொருளை அல்லது நிகழ்ச்சியை அப்படியே காட்சிப் படுத்தற்கு இவ்வினையெச்சத் தொடர்களும் ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்தில் புலவன் தன் வறுமை நிலையை விளக்குதல்,[14] உலக வாழ்வின் இயல்பை விளக்குதல்,[15] இறந்த மன்னர்களின் பண்புச் சிறப்புகளை எடுத்துக் காட்டுதல்,[16] மன்னன் தன்னைப் புரந்த தன்மையை விளக்குதல்,[17] மாலைக் காட்சி போன்ற பொழுது வருணனைகளை விளக்குதல்,[18] போர்க்களக் காட்சிகளை வருணித்தல்,[19] அகப்பாடல்களில் தலைவியின் உள்ள நிலையை விளக்குதல்[20] என்ற இடங்களில் இத்தொடரமைப்பு கையாளப்பட்டுள்ளது.

---

14. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 164, 47, 159.

15. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 194.

16. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 196.

17. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 377.

18. வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'குறிஞ்சிப் பாட்டு', பத்துப்பாட்டு, அடிகள் 215-230.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 33; 1-15.

19. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 23.

20. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 141.

3.3. உம்மைத் தொடர்கள்

விளைமுற்றுச் சொற்களைப் போன்று மிகுந்த ஆட்சி இல்லையெனினும் ஆங்காங்கே சுருங்கச் சொல்லி விளக்கவும், குறிப்பாகப் பொருளையுணர்த்தவும் இத்தொடர் பயின்றுள்ளது. பரிபாடல், உம்மைத் தொடர்களை அடுக்கிக் கறி திருமாலின் சிறப்பையும் பெருமையையும் நன்கு விளக்கியுள்ளது.[21]

'தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா ரும்பென
ஓரை யாயங் கறக் கேட்டும்
இன்ன பன்பி னினைபொரி துழக்கும்'[22]

என்ற பாடலில் 'கறக்கேட்டும்' என்ற உம்மை வழி 'முன்பெல்லாம் கூறுதே தெய்யும் தன்மையன்' என்பதைக் குறிப்பாகச் சுட்டித் தலைவியின் செயல் வேறுபாட்டை உணர்த்தி நின்றது.

3.4. தொடரமைப்பு உத்தி

பொருட்குறிப்பு கருதி எழுவாயை இறுதியாக அமைக்கும் தொடரமைப்பும் ஒரு சில இடங்களில் பயின்றுள்ளது.[23]

'எறிந்து சிதைந்த வாள்
இலை தொரிந்த வேல்
பாய்ந்தாய்ந்தா மா'[24]

---

21. ரா. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்) பரிபாடல், பா. 2; 5-27.
22. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 48.
23. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, 7-10; 1-4.
    அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 181; 12-13.
24. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, 7-9; 5-7.

என்பதில் எழுவாயைக் காட்டிலும் அதன் செயலுக்கு இன்றியமையாமை அளிக்க இவ்வாறு கறப்பட்டுள்ளது. இதன்வழி மன்னனின் போர் ஆற்றல் தறிப்பாக உணர்த்தப்படுகிறது.

3.5. அடைத்தொடர்கள்

அகப்பாடல்களில் இறைச்சி, உள்ளுறை ஆகியவற்றை உணர்த்தற்குரிய இன்றியமையாத கருவியாக அடைத்தொடர்கள் விளங்குகின்றன. பாடற்பொருளுக்குப் புறம்பான செய்திகளை விளக்குதற்குப் புலவனுக்கு அடைத்தொடர்கள் சிறந்த வாய்ப்பாக உள்ளன.

'... ... ... குட்டுவன்
குடவரைச் சுனைய மாயிதழ்க் குவளை
வண்டுப்பு வான்போது கமழும்
அஞ்சில் ஓதி அரும்படர் உறவே' [25]

என்பதில் குவளைக்கு அடையாக அமைந்த வருணனை குட்டுவனைச் சுட்டுதற்குரிய வாய்ப்பாகக் கொள்ளப்பட்டது. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்தும் புலவர்,

'எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' [26]

என வாழ்த்துகிறார். இங்கு, பஃறுளி யாற்றிற்கு அடையாக அமைந்த வருணனை வழி இப்பாண்டியனது முன்னோனும் சுட்டப்படுகிறான். இவ்வாறு தாம் விரும்பும்

---

25. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 105; 7-10.

26. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 9.

மன்னர்களைப் பற்றி எல்லிடத்திலும் சுட்ட அடைத்தொடர்களைக் கையாண்டிருப்பது சங்கப் பாடல்களின் குறிப்பிடத்தக்க பண்பாகும். அகநானூற்றில் இப்பண்பு மிகுதியாக உள்ளது. மற்றும் பண்பாட்டுச் செய்திகள், இயற்கை நுட்பம் போன்றனவும் இவ்வடைத்தொடர்கள் வழி விளக்கப்படுகின்றன.

3.6. சிறப்புத் தொடர்

'வாழிதோழி', 'அம்ம வாழி தோழி' என்பது அகப்பாடல்களில் பெரிதும் பயின்று வரும் தொடராகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு என்பவைகளில் மட்டும் இத்தொடர் கையாளப்பட்டுள்ளது. கலித்-தொகையில் சில இடங்களில் மட்டும் இடம் பெற்றுள்ளது.[27] தலைவி, தோழி ஆகிய இருவரின் கற்றுக மட்டும் அமையும் இத்தொடர் அவர்களது உணர்வு வேறுபாட்டைச் சுட்டுதற்குரிய வாயிலாக உள்ளது. பெரும்பான்மையும் தலைவியின் கற்றுக வந்து அவளது ஆற்றுமையுணர்வைச் சுட்டி நிற்கின்றது இத்தொடர். துன்ப உணர்வில் பேசும்பொழுது பெருமூச்செறிந்து நிற்கும் நிலையால் தோன்றும் இடைவீட்டைச் சுட்ட வந்ததாகவும் இதனைக் கொள்ளலாம். இத்தொடர் பயின்று வரும் இடங்கள் அனைத்தையும் பார்க்கும்பொழுது இப்பண்பு தெற்றெனக் காணக் கிடக்கின்றது.

'அம்ம வாழி தோழி யாவதும்
தவறெனின் தவறே இலவே வெஞ்சுரத்து
... ...
... ...
அரிய கானஞ் சென்றோர்க்கு
எளிய வாகிய தடமென் தோளே'[28]

---

27. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, 26-22, 41-1; 42-10.

28. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.77.

என்பது தன்னை ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைவி கூறுவது. தனது மெலிவை அனைவரும் குறை கூறுதல் கண்டு வருந்தும் தலைவியின் ஆற்றுமையுணர்வையும் இது சுட்டி நிற்கின்றது.

'பிரிந்தோர் வந்துநப் புணரப் புணர்ந்தோர்
பிரிதல் சூழ்தலின் அரியதும் உண்டோ
என்றுநாம் கறிக் காமஞ் செப்புதஞ்
செப்பாது விடினே உயிரொடும் வந்தன்று
அம்ம வாழி தோழி
யாதனின் தவிர்க்குலங் காதலர் செலவே' [29]

என்ற பாடலும் இதனை உணர்த்தும்.

சிறுபான்மை தோழி தலைவியை ஆற்றுவித்தற்கும் இத்தொடர் வந்துள்ளது.

'செய்பொருட்கு அகன்றன ராயினும் பொய்யலர்
வருவர் வாழி தோழி பூறவின்
பொன்னீக் கொன்றையொடு பிடவுத்தளை அவிழ
இன்னிசை வானம் இரங்குமவர்
வருதும் என்ற பருவமோ இதுவே' [30]

என்ற பாடல் இதற்குச் சான்றாகும். வருந்தாது, ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்தும் தன்மையைச் சுட்டுவதாக உள்ளது 'வாழிதோழி' எனும் தொடர்.

---

29. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.79.

30. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.246.

ஒருசில இடங்களில் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகவும்,[31] அச்சத்தின் வெளிப்பாடாகவும்[32] வந்துள்ளது.

'அம்ம வாழி தோழி நலமிக
நல்ல வாயின வளியமென் றூளே
மல்ல லிருங்கழி நீரறல் விரியூ
மெல்லம் புலம்பன் வந்த மாறே'[33]

என்பது வரைவிடைப் பிரிந்த தலைவன் வந்தானெனத் தலைவி கூறுவது. தலைவியின் மகிழ்ச்சி வெளிப்பாடாக இத்தொடர் இங்கமைந்தது.

'இரவின் வரூஉம் இடும்பை நாம்உய
வரைய வந்த வாய்மைக்கு ஏற்ப
நமர்கொடை நேர்ந்தனர் ஆயின் அவருடன்
நேர்வர்கொல் வாழி தோழி...'[34]

என்ற பாடல், தலைவன் வரைய வந்த செய்தியைத் தோழி கூறுவது. தலைவன் வரைய வருவது மகிழ்ச்சியை அளிப்பினும் தமர் அதற்கு உடன்படுவரோ, தலைவனுடன் மகிழ்ந்து பேசுவரோ எனும் ஐயமும் அச்சமும் தோன்றுகிறது. இவ்வுணர்வை வெளிப்படுத்தும் வகையில் 'வாழிதோழி' என்ற தொடர் இங்குக் கையாளப் பட்டுள்ளது. நற்றிணையின் இப்பாடல் ஒன்றில் மட்டும் இத்தொடர் இவ்வுணர்வில் பயின்றுள்ளது.

---

31. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 361, 146.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 86.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 120, 252.
32. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 393.
33. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 120.
34. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 393.

ஐங்குறுநூற்றில் மருதத்தில் 'தோழிக்குரைத்த பத்து' என்ற பகுதியும், நெய்தலில் 'தோழிக்குரைத்த பத்து' என்ற பகுதியும் 'அம்மவாழி தோழி' என்ற தொடரைக் கொண்டு தொடங்கப் பெற்ற பாடல்களைக் கொண்டுள்ளன. மருதத்தில் இது தலைவி, பரத்தையரின் ஆற்றுமையுணர்வை வெளிப்படுத்துவதாகவும், நெய்தலில் தலைவியின் ஆற்றுமையுணர்வை, வெளிப்படுத்துவதாகவும் உள்ளன. இவ்வாறே குறிஞ்சித்திணையில் 'அம்மவாழிப் பத்து' என இத்தொடரையே பெயராகக் கொண்ட பகுதி உள்ளது. இதில் தோழி தலைவிக்குக் கூறுவதாகவும் தலைவி தோழிக்குக் கூறுவதாகவும் கற்றுகள் அமைந்துள்ளன. எனவே சங்கப் புலவர்கள் உணர்வு வெளிப்பாட்டிற்குரிய கூறுக இத்தொடரையும் ஒரு கருவியாகக் கொண்டனர் என்பது பெறப்படுகின்றது. துன்ப மிகுதியில் எவரையேனும் விளித்துக் கூறுவது அவர்களது உணர்வுகளுக்கு ஒரு வடிகாலாய் அமைகிறது என்ற அடிப்படையில் 'தோழி' என்ற விளியிலிருந்து வளர்ந்த மரபாக இதனைக் கொள்ளலாம். கலித்தொகையில் இவ்வுணர்வுகளை விரிவாக விளக்குதற்கேற்ற யாப்பு முறை உள்ளமையால் இத்தன்மை பெரிதும் பயிலப்படவில்லை எனலாம்.

அடுத்து, புறநானூற்றில் வரும் 'சீறியாழ் செவ்வழி பண்ணி' என்ற தொடர் குறிப்பிடத்தக்கது. 'பேகன்' எனும் மன்னன் தன் மனைவியைப் பிரிந்தவிடத்து அவன் தவற்றைச் சுட்டிக் காட்டப் பல புலவர்களும் பாடிய ஐந்து பாடல்களில் மூன்றனுள் 'சீறியாழ் செவ்வழி பண்ணி' என்ற தொடர் பயின்றுள்ளது.[35] மாலைப்பொழுதிற்குரிய செவ்வழி தலைவனைப் பிரிந்தோர்க்குத் துன்பம் தருவது என்ற அடிப்படையில், அவன் மனைவியின் துன்பநிலையைச் சுட்ட இத்தொடர் இப்பாடல்களில் பயின்றுள்ளது.

---

35. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 144, 146, 147.

'பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப
ஆருயிர் அணங்குந் தெள்ளிசை
மாரி மாலையுந் தமியள் கேட்டே' [36]

என்ற பாடல் இந்த ஒப்புநோக்கத்தக்கது.

3.7. தொடர் மடக்கு

'சொல் மடக்கு' சங்கப் பாடல்கள் அனைத்திலும் பயின்று வந்திருப்பினும் தொடர் மடக்கு ஐங்குறுநூறு, கலித்தொகை என்ற இரண்டில் மட்டும் மிகுதியாகப் பயின்றுள்ளது. நூல் அமைப்பும், யாப்பமைப்பும் இதற்குக் காரணமாயுள்ளன.ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களைக் கொண்ட பகுதிகளின் தொகுதியாக அமைவது ஐங்குறுநூறு. ஒருபொருள் மேன்மேலும் தாழிசைகளைக் கொண்ட கலியாப்பால் அமைந்தது கலித்தொகை. எனவே இவைகளில் தொடர் மடக்கு, பயின்று வரும் வாய்ப்புளது.

ஐங்குறுநூற்றில் ஒரு பகுதியிலுள்ள பத்துப் பாடல்களையடக்கியதாகத் தொடர் மடக்கு அமைந்துள்ளது. 'வேட்கைப் பத்தி'ல் உள்ள பத்துப் பாடல்களும் 'வாழியாதன் வாழியவினி' என்ற தொடக்கத்தைக் கொண்டு, மூன்றாவது அடி 'எனவேட்டோளே யாயே யாமே' என்ற தொடரைக் கொண்டு அமைந்துள்ளன. நெய்தலில் 'சிறுவெண்காக்கைப் பத்து' என்ற பகுதியில் எல்லாப் பாடல்களும் 'பெருங்கடற்கரையது சிறுவெண் காக்கை' என்ற தொடரைக் கொண்டு தொடங்கப் பெற்றுள்ளன. 'இளவேனிற் பத்து', 'அவரோ வாரார் தான்வந் தன்றே' என்ற தொடக்கத்தைக் கொண்டுள்ளன. 'கள்வன் பத்து', 'எவன் கொலன்னோ' என்ற

---

36. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 214.

தொடரால் முடிவு பெற்றுள்ளன. இவை ஆற்றுமை, துன்பம் என்ற உணர்வுகளை வெளிப்படுத்த வந்தன. தலைவனைக் குற்றம் சாட்டி வினவுவதாக அமைந்த 'கிழவற் குரைத்த பத்து' இடித்துரைக்கும் வகையில், 'கண்டிகு மல்லமோ கொண்க நின்கேளே' என்ற தொடரைக் கொண்டு தொடங்கப் பெற்றுள்ளன. வாய்மொழிப்பாடற் பண்பினை இது உணர்த்துகின்றது.

கலித்தொகையில் 'குரவைப் பாட்டு',[37] 'ஊசற் பாட்டு'[38] என்ற பகுதிகளில் இசைப்பாடலுக்கேற்ப துள்ளலோசை பொருந்தி தொடர் மடக்கு வந்தது. இவற்றில் ஓசைச் சிறப்பிற்காகத் தொடர் மடக்கு பயின்று வந்தது. ஒருசில பாடல்களில், ஒருபொருள் மூன்றடுக்கி வரும் தாழிசைப் பகுதிகளில் பொருள் மட்டுமன்றி தொடரும் மடக்கி வருகின்றது.[39] உணர்வு வெளிப்பாட்டிற்காகவும், கருத்தை வற்புறுத்தவும் இவை பயின்றுள்ளன. ஐங்குறு-நூற்றைப் போன்றல்லாது இது யாப்பமைப்பால் நேர்ந்த தொடர்மடக்காகும்.

3.8. பொருள்மயக்கத் தொடர்

இத்தன்மை நற்றிணையில் ஓர் இடத்தில் மட்டும் காணப்படுகின்றது.[40]

'இரவரின் வாழேன் ஐய மைகூர் பனியே'

என்ற தொடரில் 'வாழேன்' என்ற சொல் 'இரவரின் வாழேன்', 'மைகூர் பனியே வாழேன்' என இரு தொடருக்கும் சென்று சேர்ந்து பொருளைத் தருகிறது. பின்னர் வந்த தாப்பிசைப் பொருள்கோளுக்கு இத்தன்மை அடிப்படையாய் அமைந்-துள்ளது எனலாம்.

---

37. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.39.

38. மேற்கண்டபடி, பா.131.

39. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.134.

40. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.292:8-9.

3.9. மரபுத் தொடர்

இலக்கியத்தையோ, பேச்சு வழக்கையோ அடிப்படையாகக் கொண்டு பொருளுணர்த்தும்படி தொடர்களை அமைத்திருப்பது இத்தன்மைத்தாகும். சங்கப் பாடல்களில் ஒருசில இடங்களில் மட்டும் மிக அரிதாகப் பயிலப்பட்டுள்ளது. கலித்தொகையும், பதிற்றுப்பத்தும் இம்மரபுத் தொடர் பயின்றுவந்த நூல்களாகும்.

தோழி அறத்தொடு நிற்கும் நிலையில் தலைவியின் கற்பொழுக்கத்தைக் குறிப்பாக உணர்த்த,

'அருமழை தரல் வேண்டில் தருகிற்கும் பெருமையளே'[41]

எனக் கூறுகிறாள். இங்கு

'தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'[42]

என்ற குறள் அடிப்படையில் தலைவியின் கற்பொழுக்கத்தைக் குறிப்பாக உணர்த்தி நிற்கக் காணலாம்.

தலைவனின் துன்பம் கண்டு அவனுக்குக் குறை நயக்குமாறு தோழி கூற தலைவி அதற்கு,

'தெருவின்கண், காரணமின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த்தல் ஏதில
நீநின் மேற் கொள்வ தெவன்'[43]

எனக் கூறுகிறாள். வழிப்போக்கரின் வருத்தம் கேட்டுத் தாமும் வருந்தும்

---

41. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 39-6.

42. மு. வரதராசனார் (தெளிவுரை), திருக்குறள், (சென்னை, கழகம், 1973, மறுபதிப்பு), 55.

43. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 60; 12-14.

வாரணாசியில் இருப்போர் பழக்கத்தைச் சுட்டும், 'வாரணவாசிப் பதம்பெயர்த்தல்' என்ற வழக்குத் தொடரைக் கொண்டு, 'ஏதிலாரினைக் கண்டு வருந்த வேண்டாம்' என்பதைத் தோழிக்கு உணர்த்துகிறாள்.

அடுத்து, பதிற்றுப்பத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் புகழுமிடத்து,

'பெருஞ்சோ றுதத்தற் கெறியும்
கடுஞ்சின வேந்தேநின் றழுங்குதுரன் முரசே'[44]

எனக் கூறப்படுகிறது. இது வஞ்சித் தினைக்குரியதாகக் கூறப்படும்,

'ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்வேர் விளக்கமும் ... ...'[45]

என்ற தொல்காப்பிய அடிப்படையில் சேரனின் வென்றியைக் குறித்து நின்றது.

3.10. அந்தாதித் தொடரமைப்பு

புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, கலித்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து என்பவற்றில் அந்தாதி அமைப்பு இடம் பெற்றுள்ளது. பிற்காலத்தில் தோன்றிய அந்தாதி இலக்கிய வகைக்கு சங்கப் பாடல்களில் உள்ள இவ்வந்தாதி அமைப்பு அடிப்படையாய் உள்ளது. இவைகளில் கையாளப்பட்டுள்ள இவ்வமைப்பு பெரும்பான்மையும் நிகழ்ச்சிக் கோவையைச் சுட்டுவதாய் அமைகிறது. புறநானூற்றுப் பாடல்களில் இவ்வந்தாதி

---

44. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, 3-10; 43-44.

45. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம், நூ. 65.

அமைப்பு மிகுந்துள்ளது.[46] நற்றிணை,[47] கலித்தொகை,[48] குறுந்தொகை[49] ஆகியவற்றில் ஒரு பாடலில் அமைய, அகநானூற்றில்[50] இரு பாடல்களில் அமைந்துள்ளது. மேற்கூறியனவற்றில் ஒரு பாடலுக்குள் அந்தாதி அமைப்பு அமைய ஐங்குறுநூற்றிலும் பதிற்றுப்பத்திலும்[51] தொடர்ந்து வரும் பாடல்களுக்-கிடையே வருகிறது. இவற்றில் ஒரு பாடலின் முடிவுத் தொடர் அடுத்த பாடலின்

---

46. 'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்' - சு. துரைசாமிப்பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, 2, 1-3.

'துப்புறுவர் புறம்பெற்றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
... ...
... ...
சீருடைய விழைபெற்றிசினே
இழைபெற்ற பாடினிக்கு' - மேற்படி, 11; 9-14.

'களிறுசென்று களனகற்றவும்
களனகற்றிய வியலாங்கண்' - மேற்படி, 26; 3-4.

'செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்' - மேற்படி 30; 1-2.

'தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்து' - மேற்படி, 214; 8-11.

47. 'குன்றகத் ததுவே கொழுமிளைச் சீறூர்
சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத் ததுவே பிறர்' - அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 95; 7-9.

48. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 103; 9-10, 21-22; 23-24; 27-28.

49. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, 99; 1-3.

50. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, 122; 2-3, 4-5, 6-7; 8-9; 10-12; 13-15; 330; 9-10.

51. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, நான்காம் பத்து.

தொடக்கமாகத் தென்படுகிறது. பதிற்றுப்பத்தில் தொடரளவில் மட்டும் தொடர்பு அமைய ஐங்குறுநூற்றில்[52] பொருளமைதியிலும் தொடர்பு காணப்படுகிறது. 'தொண்டிப்பத்து' என்ற இப்பகுதி, தலைவன் தலைவியைப் பற்றி நினைந்து பார்ப்பதாக அமைவது. இந்த எண்ணக்கோவையை உணர்த்தும் வகையில் இதில் அந்தாதி அமைப்பு இடம் பெற்றுள்ளது. தலைவன் தலைவியைக் காணுதல், அன்பு கொள்ளுதல், தோழியைக் காணுதல், அவள் வரைவு கடாதல் என்பன நிரலாகக் கூறப்பட்டுள்ளன. ஐங்குறுநூற்றின் பிற பகுதிகளில் பத்துப்பாடல்களும் தனித்தனியாக அமைந்திருக்க இப்பகுதியில் மட்டுமே தொடர் நிகழ்ச்சியாக அமைகின்றன. இவ்வாறு பொருள் தொடர்பு பட்டு வருதல் அக்காலத்தே ஒரு புதுமையெனவும், இப்புதுமையே பிற்காலத்துக் கோவை நூல்களுக்குத் தொடக்கமெனவும் கூறுவர்.[53]

---

52. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 171, 180.

53. மேற்கண்டபடி, பக். 231.

* * *

இயல் - 4

வண்ணச் சுத்திகள்

4. வண்ணின உத்திகள்

'வண்ணின' என்ற சொல் 'விளக்கம்' என்ற பொருளில் இக்கட்டுரையில் ஆளப்படுகின்றது. சொல், தொடர் என்ற நிலைகளுக்கு மேலாகப் பொருளை விளக்கிச் செல்லும் முறையிலும், பாடலமைப்பிலும் கையாளப்படும் உத்திகள் இவ்வகையைச் சார்ந்தனவாகும்.

4.1. பொதுவகையில் கையாளப்படுவன

பொதுவாகப் பொருளை விளக்கிச் செல்லும் முறையிலும் வெளிப்படையாகப் பொருளை உணர்த்துவன, குறிப்பாகப் பொருளை உணர்த்துவன என்ற இருநிலைகள் உள்ளன.

4.1.1. வெளிப்படையாகப் பொருளை உணர்த்துவன

4.1.1.1. உவமை

'சங்க இலக்கிய த்தில் உவமைகள்'[1] என்ற ஆய்வு நூலில் விளக்கப்பட்டுள்ள விரிவான செய்திகளைத் தொடர்ந்து, அதிலிருந்து வேறுபட்ட நோக்கில் அமைந்த செய்திகள் உவமை பற்றிய இப்பகுதியில் காணப்படுகின்றது.

1. சங்க இலக்கிய உவமைகள் பிற்காலத்தில் தோன்றிய பல அணிவகைகளுக்கும் அடிப்படையாய் அமைந்துள்ளன. சங்க இலக்கிய உவமைகளை இருபத்தொரு வகையாகப் பிரிக்கலாம்.[2]

---

1. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், (சென்னை, அலையகம், 1973), முனைவர் பட்டத்திற்காக 1971ல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டது.

2. மேற்படி, பக்.7.

2. 'சமாதி' எனப்படும் 'இடம் மாற்று உவமை'[1], மாறனலங்காரத்தில் கூறப்படும் 'இரட்டை[2] உவமை', தண்டியலங்காரம் கூறும் 'அ[3]ற்புத உவமை' எனப்படும் 'இல்பொருள்[4] உவமை', 'எடுத்துக்காட்டு உ[5]வமையணி', 'எதிர் மறுப்பு[6] உவமை அணி' அல்லது 'விலக்கு உவமை அணி', 'ஐயஉவமை' அல்லது 'மருட்கை[7] உவமை', 'தடுமாறு[8] உவமை', 'தற்குறிப்பே[9]ற்ற உவமை', 'திரிபு[10] உவமை' அல்லது 'விகார உவமை', 'நிரல்நிறை[11] உவமை', 'ஒட்டணி'[12], 'நுவலா நுவ[13]ற்சியணி' எனப்படும் 'பிறிதுமொழிதல் அணி', 'பொதுநீங்கு[14] உவமை', 'பொருள்[15] உவமை' அல்லது 'விபரீத உவமை', 'மாலை[16] உவமை', 'முரண்[17] உவமை' அல்லது 'விரோத அணி', 'வேற்றுமை[18] அணி' என்ற அணிவகைகளுக்குச் சங்க இலக்கிய உவமைகள் அடிப்படையாய் உள்ளன.[3]

3. பொருளும் உவமையும் ஒன்றை ஒன்று நிகர்க்கின்றது என்று கூறும் சமநிலைக் கூற்று பெரும்பான்மையாகக் காணப்படுகின்றது. அன்ன, போல, புரைய, நேர், மான, ஒப்ப என்ற உருபுகள் இதற்குரியனவாக வருகின்றன.[4]

4. பொருளை மற்றொரு உவமையோடு ஒப்பிட்டு அதனை விட உயர்ந்தது என்னும் உறழ்வுக் கூற்று இரண்டாவது நிலையாக வருகின்றது. 'இன்', 'இனும்' எனும் உருபுகள் இதற்குரியன.[5]

---

3. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், (சென்னை, அலையகம், 1973), முனைவர் பட்டத்திற்காக 1971ல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டது, பக். 7-57.

4. மேற்படி, பக். 65.

5. மேற்படி, பக். 66.

5. இவை தவிர 'மருள', உறழ்' என்பன முரண்பாட்டைத் தொிவிப்பனவும், 'வென்ற', 'பொருத, 'ஏசும்', ஏய்ப்ப', 'கடுப்ப' முதலான வெல்லுதல் நிலையைக் குறிப்பனவும் வேறுபல உருபுகளும் உள்ளன.[6]

6. இவ்வுருபுகள் அனைத்தையும் 'செய்', 'செய', 'செய்து', 'செய்யும்', 'செய்த' என்ற வினைவாய்பாட்டு அடிப்படையிலும், முற்றுவினை, குறிப்புவினை, பெயர் வடிவம், தொகை வடிவம் என்ற அடிப்படையிலும், தொடர்நிலை என்ற அடிப்படையிலும் பகுக்கலாம்.[7]

7. 'போல', 'அன்ன' என்பனவும் அவற்றின் மாற்றுவடிவங்களும் மிகுதியாக வழங்குகின்றன. சங்க இலக்கியங்களுக்குள் இப்பயிற்சி வேறுபடுகின்றது.[8]

8. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்ட, இறப்ப, ஒன்ற, ஒடுங்க, ஓட, ஓட்ட, கள்ள, நடுங்க, நந்த, நலிய, நாட, பூல்ல, மதிப்ப, மறுப்ப, வியப்ப என்ற உருபுகள் சங்க இலக்கியங்களில் வழக்கிழந்து விட்டன. தொல்-காப்பியர் கூற்த அமர், அவிர், ஆக, இகலிய முதலான இருபத்தெட்டு உருபுகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.[9]

9. உவ்மையை வெளிப்படுத்த சங்க இலக்கியங்கள் மேற்கொண்ட முறைகளை பிறழ்வுபட உணர்தலாகக் கூறல், துணைப்புனர் உத்தி, வாழ்த்தியல்

---

6. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், (சென்னை, அலையகம், 1973), முனைவர் பட்டத்திற்காக 1971ல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டது, பக். 66.

7. மேற்படி, பக். 68-73.

8. மேற்படி, பக். 73.

9. மேற்படி, பக். 76.

மரபுகள், எண்ணியல் மரபுகள், சொற்பொருள் மாறல், மிகைபடக் கூறல், இயல்பூபடக் கூறல், சார்த்திக் கூறல், சொற்றொடர் பயில்வு என ஒன்பது வகையாகப் பகுக்கலாம்.[10]

10. சங்க இலக்கிய உவமப் பொருள்களை, சூழ்நிலை பற்றிய உவமங்கள், அரிய காட்சிகளை உவமையாக அமைத்தல், நடைபெறுத நிகழ்ச்சிகளை உவமையாக்குதல், செய்மைக் காட்சிகளை உவமையாக்குதல், இடச்சார்போடு பொருந்திய உவமைகள், கதைகளை உவமையில் அமைத்தல், பழமொழிகளை உவமையாக அமைத்தல், உவமைகளை நகைச்சுவையாக அமைத்தல், தனித்தன்மை வாய்ந்த உவமைகள், மனநிலையைச் சித்திரிக்கும் உவமைகள் எனப் பத்து வகையில் அடக்கலாம்.[11]

11. இவ்வுவமைகளினின்று இயற்கை, அகப்பொருள், புறப்பொருள், கலை, அறிவியல், கடவுளர் பற்றிய செய்திகள் அறியப்படுகின்றன.[12]

12. வரலாற்று உவமைகள் புறப்பாடல்களிலும் அகப்பாடல்களில் மிகுதியாகப் பயிலப்பட்டுள்ளன.[13]

இவை சங்க இலக்கிய உவமைகள் பற்றி, 'சங்க இலக்கிய உவமைகள்' என்ற நூல் கண்டறிந்த செய்திகளாகும்.[14]

---

10. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், (சென்னை, அனியகம், 1973), முனைவர் பட்டத்திற்காக 1971ல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டது, பக். 95-123.

11. மேற்படி, பக். 127-162.

12. மேற்படி, பக். 163-218.

13. மேற்படி, பக். 202.

14. உருவகம், உள்ளுறை, இறைச்சி பற்றியும் இந்நூலில் காணப்படுகின்றது. இக்கட்டுரையில் இவை தனிப்பகுப்பில் காணப்படும்.

இவை தவிர வேறுசில சிறப்புப் பண்புகளும் சங்க இலக்கிய உவமைகள் வழி அறியப்படுவனவாக உள்ளன.

உவமப் பொருளையே முன்னிலைப்படுத்திக் கூறுவதாக ஒரு பாடல் உள்ளது. உவமை வெளிப்பாட்டில் இது ஒரு புதிய முறை எனலாம். பிரிவில் ஆற்றுளாய தலைவி, தங்களை முன்னிலைப்படுத்தி, 'நிற்கரந்த உறையும் இல்லை-யெனினும், என் தோள்போல நீயும் சிறுகச் சிறுக மறைகின்றியாகலின் என் தலைவனைக் காட்டவில்லை'[15] எனக் கூறுகிறாள். தங்களை முன்னிலைப்படுத்திக் கூறுவதாயிருப்பினும் தங்கள் தேயும் தன்மை தோள்நலம் அழிதற்கு உவமைப்படுத்தப் பட்டிருப்பது உணரத்தக்கது.

ஒரே பாடலில் ஒரு கருத்தை விளக்கப் பல உவமைகள் பயின்று வந்த தன்மையும் உள்ளது. அடிப்படையில் இவை சில நுட்ப வேறுபாடுகளோடு பயன்படுத்தப்பட்டிருப்பது கூர்ந்து உணரத்தக்கதாகும்.

'மறப்புலி யுடலின் மான்கண முளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருஞ முண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிப் போருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொலிய
அரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ'[16]

என ஔவையார் அதியமானைப் புகழ்ந்து பாடுவது இத்தன்மைத்து. புலி, ஞாயிறு, பகடு ஆகியவற்றுக்கு அதியமான் உவமைப்படுத்தப்பட்டுள்ளான். பொதுவகையில்

---

15. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 196.

16. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 90.

இவைகள் அதியமானின் வலிமையைக் குறிப்பதாய் இருப்பினும், அடிப்படையில் சில பண்பு வேறுபாடு கருதி இவ்வுவமைகள் படைக்கப்பட்டுள்ளன. அதியமானின் உடல் வலிமை, புகழ் வலிமை, மனவலிமை என்பனவற்றைக் குறிக்கும் வகையில் முறையே புலி, நாயிறு, பெருமிதப்பகடு என்பன கையாளப்பட்டுள்ளன. உவமையை மிக நுட்பமாகக் கையாண்ட தன்மை இங்குப் புலனாகின்றது.

சங்க இலக்கிய உவமைகளனைத்தையும் காட்சி விளக்க உவமைகள், கருத்து விளக்க உவமைகள் என இருவகையாகப் பாகுபடுத்தலாம். ஒரு பாடலில் பாடலின் மையக் கருத்துத் தொடர்பான செய்திகளை விளக்கப் பயன்படும் உவமைகள் 'கருத்து விளக்க உவமை' என்ற பெயரால் சுட்டப்படுகின்றன. இயற்கைக் காட்சிகள் போன்ற வருணனைகளில் கையாளப்படும் உவமைகள், 'காட்சி விளக்க உவமை என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன. பொதுவகையில் கருத்து விளக்க உவமைகளைக் காட்டிலும் காட்சி விளக்க உவமைகள் மிகுந்துள்ளன. எட்டுத்தொகை நூல்களில் இருவகை உவமைகளும் விரவிக் காணப்படுகின்றன. பத்துப்பாட்டில் காட்சி விளக்கத்திற்கென உவமைகளைப் பயன்படுத்துவது மிகுந்துள்ளது. கருத்து விளக்கத்திற்கெனப் பயன்படுத்துவது அருகிக் காணப்படுகின்றது. எட்டுத்தொகைப் பாடல்கள் பெரும்பான்மையும் தனித்தனிப் பாடல்களாய்ச் சுருங்கிய முறையில் உள்ளமையால் அவற்றில் கருத்து விளக்கத்திற்கென அமைந்த உவமைகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் போக்கும் உள்ளது.[17]

---

17. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 25, 64, 75, 87, 109, 133, 153, 182, 183, 226, 289, 295.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 9, 18, 80, 99, 102, 119, 121, 128, 133, 171, 176, 202, 272, 273, 298, 305, 309, 368.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 356, 424
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 68.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்); அகநானூறு, பா. 90, 157, 186, 196, 252, 353.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 51, 54, 59, 60, 65, 87, 89, 100, 102, 104, 118, 155, 173, 184, 206, 218, 286, 290, 313, 329.

'வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னே ரன்ன விளைய ரிருப்ப' [18]

என்பது ஔவையார் அதியமானைப் பாடியது. ஆட்டுக்கிடையில் ஓர் ஆடு சென்ற வழியே பிற ஆடுகளும் செல்லும். அதுபோல இவன் சென்ற வழியே பிற வீர இளைஞர் அனைவரும் செல்வர் எனும், அதியமானது தலைமைத் தன்மையை இவ்வுவமை சுருங்கச் சொல்லி விளக்கியுள்ளது.

தவிர, உவமையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முழுப் பாடலும் அமைந்த சுருக்கமான பாடல்களும் உள்ளன. [19]

'ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே' [20]

என்ற பாடல் இதற்குச் சான்றாகும். எளிய சுருக்கமான பாடல்களில் சில இத்தன்மையதாயுள்ளன. மேற்கூறிய இருபண்புகளும் எட்டுத்தொகைப் பாடல்-களுக்கேயுரியதாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

---

18. மேற்கண்டபடி, பா. 286.

19. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 87, 109, 153, 266, 284, 360, 320, 381.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 8, 61, 62, 91, 139, 152, 388, 394, 399.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 42, 82, 92, 94, 106, 142, 174, 193, 199, 220, 276, 290, 299, 331.

20. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 399.

பத்துப்பாட்டு நூல்களுள் ஆற்றுப்படை நூல்களில் உவமை மிகுந்து காணப்படுகின்றது. பிறவற்றில் மதுரைக் காஞ்சி மிகுதியான உவமைகளைக் கொண்டிருப்பினும் பொதுவாகப் பார்க்கும்பொழுது ஆற்றுப்படை நூல்களில் உவமைகள் மிகுந்திருப்பது புலனாகும். திருமுருகாற்றுப்படையின் தொடக்கமே உவமையைப் பெற்றுள்ளது.

'உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி' [21]

எனவரும் இத்தொடக்கம் பாட்டுடைத் தலைவனின் பண்பு விளக்கமாக உள்ளது.

முல்லைத்திணைக்குரிய கரு, உரிப்பொருட்களை முழுமையாக விளக்க முனைவது முல்லைப்பாட்டு. இதில் கார்ப்பொழுது வருணனையுடன் பாடல் தொடங்கப்பெற்று அடுத்து சிறுபொழுது வருணனை, உரிப்பொருள் விளக்கம் என்ற முறையில் பாடல் அமைந்துள்ளது. இங்கு முல்லைக்குரிய திருமாலைக் குறிக்க வேறு இடமின்மையாலும், தவறுது சுட்ட வேண்டுமாதலாலும் உவமை தகுந்த கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளது. 'மாவலி வார்த்த நீர் தன் கையிலே சென்றவுடன் உயர்ந்-தெழுந்த திருமாலைப் போல மேகங்கள் திரண்டெழுந்தன' [22] எனப் பொழுது வருணனை பற்றிய உவமையில் உவமப் பொருளாகப் பயன்படுத்திய வழி, முல்லைத் திணைக்குரிய கடவுளாகிய திருமால் சுட்டப்பட்டுள்ளான்.

---

21. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'திருமுருகாற்றுப்படை', பத்துப்பாட்டு, 1-3.

22. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப் பாட்டு, 1-5.

பட்டினப்பாலையும் உவமையை அடிப்படையாகக் கொண்டு, உவமப் பொருளின் மிக விரிவான வருணனையால் எழுந்த ஒன்றாகும். கரிகாலனின் வேலும், கோலும் இப்பாடலில் உவமப் பொருட்கள். உவமப் பொருளின் உயர்வு காரணமாக அவனது பட்டினச் சிறப்பும், வீரச்சிறப்பும் விரிவாக விளக்கப் பட்டு அதுவே நூலுக்குரிய அடிப்படையாகவும் நின்றது.

ஆற்றுப்படை நூல்கள் பொருநன், பாணன், கூத்தன் முதலியோரைப் பொருட்செல்வம் பெறுதற்காக ஆற்றுப்படுத்துவதாக அமைய திருமுருகாற்றுப்படை இறைவனருளைப் பெற ஆற்றுப்படுத்துவதாக அமைவதால் இதிலுள்ள உவமைகள் இறைவனுடனும் அவனது ஊர்களுடனும் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. பிற ஆற்றுப்படை நூல்களில் யாழின் தோற்றம், வழிக்காட்சி முதலான அனைத்தும் தலைவனது உவமை வழியாகவே விளக்கப்பட்டுள்ளன. முழுமையாகப் பார்க்கும்பொழுது நூல்களின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை செய்திகள் உவமையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. ஆற்றுப்படை நூல்களுள் பெரும்பாணாற்றுப்படையில் மிகுதியான உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வள்ளலிடத்துச் செல்லும் வழியை விளக்குகையில் அங்குள்ள ஒவ்வொரு சிறு காட்சியையும் உவமைவழி விளக்குகின்றது. இவ்ஆற்றுப்படை நூற்கள் ஆற்றுப் படுத்தும் நோக்கை அடிப்படையாகக் கொண்டமையால் ஆற்றுப்படுத்தப்படுபவன் மனதில் செய்திகள் அப்படியே பதிய வேண்டும் எனும் பொருளமைதிப் பொருத்தம் கருதி இவ்வாறு மிகுதியான உவமைகள் பயன்படுத்தப்பட்டன எனக் கருத இடமுண்டு.

நிரலாகத் தொடர்ந்து உவமைகளை அமைக்கும் அடுக்கு உவமைகளைப் பயன்படுத்துவது இந்நூல்களின் தனிச் சிறப்பாக உள்ளது. இவை யாழின்

அமைப்பு,[23] போர்க்களக் காட்சி,[24] வெறியாடுகளம்,[25] கலப்பையின் வடிவம்,[26] பாடினியின் தோற்றம்,[27] வழிக் காட்சிகள்[28] முதலியன இவ்வடுக்கு உவமையால் விளக்கப்பட்டன. அடுக்கு உவமையில் அந்தாதி உவமையும் அடங்கும். இவ்வுவமை அணி இலக்கண நூல்களில் பின்பற்றப்படாமை குறிப்பிடத்தக்கது. உவமை பொருளாகியும், பொருள் உவமையாகவும் மாறிமாறி வரினும் இரண்டும் முதலில் குறிப்பிட்ட பொருளையே சிறப்புச் செய்து வருவது காணுந்தகைமைத்து.

---

23. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பொருநராற்றுப்படை' பத்துப்பாட்டு, 4-20.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 221-226.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), பெரும்பாணாற்றுப்படை, பத்துப்பாட்டு, 4-16.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மலைபடுகடாம்', பத்துப்பாட்டு, 25-37.
---

24. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மதுரைக்காஞ்சி', பத்துப்பாட்டு, 375-383.
---

25. மேற்கண்டபடி, 279-285.

26. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பெரும்பாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 197-200.
---

27. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பொருநராற்றுப்படை', பத்துப்பாட்டு, 25-47.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 14-31.
---

28. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'திருமுருகாற்றுப்படை', பத்துப்பாட்டு, 167-172.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு 70-76, 145-151, 164-169.
உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பெரும்பாணாற்றுப்படை' பத்துப்பாட்டு 45-50, 51-57, 83-88.

'ஈர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை...' [29]

என்பதில் பிடியின் கை விறலியின் குறங்கிற்கு உவமைப் பொருளாக அமைய விறலியின் குறங்கு வாழைக்கு உவமையாகி நின்றது. பிடியின் கை, வாழை என்ற இரண்டும் விறலியது குறங்கின் வடிவம், வளமை என்னும் இருவேறு தன்மைகளை உணர்த்த வந்தன.

உவமைப்படுத்துவதில் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியன ஓரளவு ஒப்புமையுடன் விளங்குகின்றன. [30] விறலியின் அடியை நாயின் நாவிற்கு உவமையாக்கல், வள்ளலைச் சார்ந்த பூரவலன் பல பொருட்களை அடைவது, மலைபடு பொருட்கள் அருவிவழி கடலிலச் சென்று சேர்தற்கு உவமைப்படுத்துதல், [31] யாழின் உறுப்புகளைப்

---

29. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 19-21.
---

30. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பொருநராற்றுப்படை', பத்துப்பாட்டு, 42.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 18-19.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மலைபடுகடாம்', பத்துப்பாட்டு, 42-43.
---

31. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பெரும்பாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 427-428.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மலைபடுகடாம்', பத்துப்பாட்டு, 51-53.

பெண்ணின் உறுப்புகளுக்கு ஒப்புமையாக்கல்[32] என்பனவற்றில் இவை ஒருதன்மையவாக உள்ளன. காட்சி விளக்கம் கருதி உவமைகளைப் பயன்படுத்துவது பத்துப்பாட்டு நூல்களின் பொதுத்தன்மையாகவும், அவ்வுவமைகளை அடுக்கு உவமைகளாகவும் பயன்படுத்துவது அதிலுள்ள ஆற்றுப்படை நூல்களின் சிறப்புப் பண்பாகவும் விளங்குகிறது.

எட்டுத்தொகையில் கலித்தொகையின் கலித்தாழிசைப் பாடல்களின் தாழிசைப் பகுதிகள்[33] உவமை பெற்று வருவது பெரும்பான்மையாக உள்ளது. பொருள் மடக்காக வரும் இப்பகுதியில் உவமையைக் கையாள்வதும் ஒரு மரபு என்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பதாய் உள்ளது இப்பண்பு.

இவ்வாறு சங்க இலக்கிய உவமைகள் அனைத்தும் மிக நுட்பமான முறையில் கையாளப்பட்டுள்ளன.

4.1.1.2. உருவகம்

உவமையியலுக்குத் தனி இயல் வகுத்த தொல்காப்பியர் உருவகத்தைப் பற்றி வெளிப்பட எங்கும் சுட்டவில்லை.

'பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் துவம மாகும்'[34]

---

32. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பொருநராற்றுப்படை', பத்துப்பாட்டு, 25-47.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பெரும்பாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 4-16.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மலைபடுகடாம்', பத்துப்பாட்டு, 31-34.

33. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 8, 9, 17, 20, 22, 23, 25, 34, 38, 41, 43, 48, 53, 57, 68, 118, 120, 121, 132, 137, 150.

34. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம்-பொருளதிகாரம், நூ. 280

என்ற நூற்பா உருவக அமைப்பைக் குறிப்பாக உணர்த்தி நிற்கின்றது. சங்க இலக்கியங்களிலும் உவமை பயின்றுவந்த அளவிற்கு உருவகங்கள் பயிலப்படவில்லை. உவமையை வெளிப்பட அமைக்காது மறைமுகமாக அமைக்கும்பொழுது அது உருவகமாகின்றது.

சங்க இலக்கியத்தில் உள்ள உருவகங்களை ஒரே ஒரு பொருளுக்கு ஒரே ஒரு உருவகம் அமையும் தனிநிலை உருவகம், உருவகங்களுள் தொடர்ச்சி கண்டு அவற்றை இணைத்து ஒரு முழுமைக் காட்சியாக அமைக்கும் முற்று உருவகம், உருவகங்களை மட்டும் கூறிப் பொருள்களைக் கூறாமல் விடுக்கும் ஒருசார் உருவகம், உருவகங்கள் தேய்ந்து பயில்வுச் சொற்களாக வழங்கும் தேய்ந்த உருவகம் என நால்வகையாகப் பகுப்பர்.[35]

கையாண்ட தன்மை, பொருளுணர்த்தும் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கிய உருவகங்களை வேறு முறையிலும் பகுக்கலாம். உவமையைப் போன்று உருவகங்களையும் கருத்து விளக்க உருவகங்கள், காட்சி விளக்க உருவகங்கள் என இருவகையாகப் பகுக்கலாம்.

செவிகளைச் செய்யாகவும், முன்னோர் மொழிகள் நீராகவும், நாவு ஏராகவும் கொண்டு உழுவோராக புதிய கவிதைகளை இயற்றும் புலவர்களையும் உருவகித்துள்ளமை[36] கருத்து விளக்க உருவகத்திற்குச் சான்றாகும். 'முல்லை முகையை எயிற்றிற்கு உருவகப்படுத்துவது'[37] காட்சி விளக்க உருவகத்திற்குச் சான்றாகும்.

---

35. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், பக். 83, 84.

36. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 68.

37. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 126.

காட்சி விளக்க உருவகங்களைக் காட்டிலும், கருத்து உருவகங்களே சங்க இலக்கியங்களில் மிகுந்துள்ளன. 38

---

(38) காட்சி உருவகம்

அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 17, 54, 392.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, 1, 126, 186, 398, 347.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, 16, 68, 243.

சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, 4/3; 7-12, 5/10; 8-16.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, 36, 80, 103.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, 30, 82, 247.

சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, 369, 370, 371, 373.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 1-7, 146-149, 164-167.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப்பாட்டு', 93-97.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மதுரைக் காஞ்சி', பத்துப்பாட்டு, 29-38.

கருத்து விளக்க உருவகம்

அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, 3, 88, 339.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, 5, 17, 76, 114, 184, 197, 305, 321, 387.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, 4, 271, 304

சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, 14, 38, 90.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, 68, 101.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, 82, 273, 276.

சு. துரைசாமிப்பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, 134, 173, 181, 185, 206, 207, 346, 371, 369.

உருவகப்படுத்தப்படும் தன்மையைக் கொண்டு சங்க இலக்கிய உருவகங்களைத் தெளிவு உருவகங்கள், நுட்ப உருவகங்கள் என இருவகைப் படுத்தலாம்.

4.1.1.2.1. தெளிவு உருவகங்கள்

காட்சி விளக்கம், கருத்து விளக்கம் என்ற நோக்கத்தில் பயன்படுத்தப்படும் உருவகங்கள் இத்தன்மையனவாகும். அமைப்பைக் கொண்டு இவ்வுருவகங்களை ஐந்து வகையாகப் பாகுபடுத்தலாம்.

(1) குறிப்பு உருவகம்

குறிப்பிட்ட ஒரு சொல்லின் வழி உருவகத் தன்மையைக் குறிப்பாக உணர்த்துவது ஒருவகை. சங்க இலக்கிய உருவகங்களில் இரு பாடல்கள் இத்தன்மைத்தாயுள்ளன.[39]

'வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கு முரணுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை'[40]

என்ற பாடலடிகள் 'சொல்லேருழவராகிய பரிசிலர், தம் சொற்களாகிய விதையை வள்ளியோர் செவியாகிய புலத்தில் விதைத்துப் பரிசிலாகிய நெல்லை விளைவித்துக் கொள்வர்' என்ற பொருளை உணர்த்துகின்றன. 'வயங்குமொழி வித்தி' என மொழியை விதையாக உருவகித்த ஒன்றின்வழி எஞ்சிய உருவகங்கள் குறிப்பாக உணர்த்தப்பட்டன. கருத்தைச் சுருங்கச் சொல்லி விளக்க இத்தன்மையை மேற்கொண்டுள்ளனர்.

---

39. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 17.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 206.

40. மேற்படி.

மேற்கூறியது போன்று ஓர் உருவகத்தின்வழி அதன் தொடர்பான பிற உருவகங்களையும் குறிப்பாகக் காட்டுவதல்லாது, ஓர் உருவகத்தின் வழி விரிந்த பொருளைக் குறிப்பாக உணர்த்துவது இக்குறிப்பு உருவகத்தின் மற்றொரு வகையாகும்.[41]

'கழனி யூரன் மார்பு
பழன மாகற்க வெனவேட் டேமே'[42]

என்ற தோழி கூற்றுக அமைந்த பாடலில் 'பழனம்' என்ற உருவகச் சொல் வழி தலைவன் பரத்தைமை ஒழுக்கில் ஈடுபடுதல் கூடாது. அவன் மார்பு மகளிர் பலர்க்கும் பொதுவாக ஆதல் கூடாது எனத் தோழி விரும்புவது குறிப்பாக உணர்த்தப்படுகின்றது.

(2) தனிநிலை உருவகங்கள்

ஏதேனும் ஒரு பண்பிற்கும், செயலுக்கும் மட்டு உருவகப்படுத்தப்பட்டு வருவது இத்தன்மைத்தாகும். சங்க இலக்கியத்தில் இத்தகு உருவகங்களே மிகுந்துள்ளன.[43] இவை தனிச்சொல்லாகச் செயற்பட்டு உணர்வுகளைச் சிறுசொல்லில்

---

41. மேற்படி, பா. 207.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, 321.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, 4,

42. மேற்படி.

43. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 88, 339, 39
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 1, 5, 76, 126, 184, 186, 197, 321, 369, 387, 395.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 4, 68, 243, 271, 304.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 20, 142, 101, 145.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 134, 173, 181, 207.

செறித்துக் காட்டுவனவாக உள்ளன.

'அறவிலை வணிக முயலன் ...' [44]

'குருதிப் பூவின் குலக்காந் தட்டே' [45]

'கண்தர வந்த காம ஒள்ளெரி' [46]

'நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கான லானே' [47]

'செல்ப வென்பவோ கல்வரை மார்பர்' [48]

என்பன போன்று வருவன இத்தன்மைத்தாகும். இவற்றில் பயில்பு மிகுதியால் தனக்குரிய பொருளை இழந்து வழங்கும் சொற்களை 'தேய்ந்த உருவகங்கள்' என்பர். [49] 'குழலிவேளில்', 'கன்னி விடியல்', 'பூத்த சுற்றம்' என்பன போன்ற சொற்கள் இவ்வகையினதாகக் கருதப்படுகின்றன.

---

44. மேற்படி, பா. 134.

45. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 1.

46. மேற்படி, பா. 305.

47. மேற்படி, பா. 184.

48. மேற்படி, பா. 76.

49. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், பக். 90.

(3) தொடர் உருவகங்கள்

தனி ஒரு பொருளையல்லாது ஒரு நிகழ்ச்சி முழுதையும் நிரலாக உருவகப்படுத்தல் வழிக் காட்டுவது தொடர் உருவகங்கள் எனப்படும்.[50] இதனை 'முற்று உருவகம்' எனவும் கூறுவர்.[51]

'காதல் நோய்' இளமுளையாகவும், அது வளர்ந்து 'அம்பல்' எனும் அங்குரனையாகி, 'ஊராக்காதல்' எனும் தளிரைப் பரப்பி, புலவர்களால் கறப்படும் 'நாணில்' பெருமரமாகி, 'அலர்' எனும் அரும்பாகி வளர்ந்தது'[52] என்ற அகநானூற்றுப் பாடல் உருவகம் இதற்குச் சான்றாகும். பொருளின் இன்றியமையாமையை உணர்த்தவும்,[53] கறும் கருத்தைத் தெளிவாக விளக்கவும்,[54] ஆற்றுமை உணர்வை வெளிப்படுத்தவும்,[55] மகிழ்ச்சி மிகுந்த உணர்வுச் சூழலை விளக்கவும்[56] இவ்வுருவகங்கள் பயின்று வந்துள்ளன.

---

50. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.68.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.82, 273, 276.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.185, 369.

51. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், பக்.86.

52. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.273.

53. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.369.

54. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.68.

55. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.273, 276.

56. மேற்படி, 82.

(4) சார்நிலை உருவகம்

'என', 'ஆக' என்ற பின்னெட்டுகளையும் பெறாது, தனி உருவகச் சொல் போலவுமல்லாது ஒரு பொருளுக்கு எது உவமையாகக் கொள்ளப்படுகின்றதோ அப்பொருளை மட்டும் கொண்டு வருவது, இவ்வகை உருவகம். உவமப் பொருளே உருவகமாக நின்று முன்னுள்ள சொல்லைச் சார்ந்து வரும்பொழுது பொருளை உணர்த்துகின்றது.

'பைந்நலை அவரை பவழம் கோப்பவும்
கருநலை காயா கணமயில் அவிழவும்' [57]

என வருவன இத்தன்மையவாகும். இவ்வகையை 'ஒருசார் உருவகம்' எனவும் கூறுவர்.[58] ஒருசில உருவகங்களே இத்தன்மையனவாயுள்ளன.[59] நிலவருணனைகளில் மட்டும் இது இடம்பெற்றுள்ளது. மேலும் இது பத்துப்பாட்டு நூல்களுக்குரிய சிறப்புப் பண்பாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(5) முழுப்பாடல் உருவகம்

முழுப்பாடலும் உருவகமாக அமைந்த நிலையில் இரு பாடல்கள் உள்ளன. இவை ஒரு கருத்தைப் பல உருவகங்களால் தொடர் உருவகமாக உருவகப்படுத்துவது, உருவகமாகவே பாடற்பொருளை விளக்குவது என்ற இரு நிலைகளில் அமைந்துள்ளன.

---

57. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 164-165.

58. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், பக். 88.

59. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப்பாட்டு, 146-149, 164-167.

உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப்பாட்டு, 93-97.

'கல்பார் கோத்து ஞாலத் தியங்கும்
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
உய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்க ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே'[60]

என்ற பாடல் 'உருளையையும், பாரையும் கோத்து உலகின் கண்ணே செலுத்தும் காப்புடைய சகடந்தான் செலுத்துவோன் மாட்சிமைப்படின் இனிதாகச் செல்லும். அல்லாதவிடத்துப் பகையாகிய சேற்றில் அழுந்தும்' என முழுதும் உருவகமாய் அமைந்திருத்தலைக் காணலாம்.

'நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்தனெ னியறேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வல்கலும்
ஆர லருந்த வயிற்ற
நாரை மிதிக்கு மென்மக ணுதலே'[61]

என்பது முழு உருவகமாக அமைந்து பாடற்பொருளை விளக்குவது. தலைவியைக் குறியிடத்து நிறுத்தி வந்த தோழி தலைவனுக்கு அதைக் குறிப்பாகப் புலப்படுத்துவது இப்பாடல். இது முழுக்க முழுக்க உருவகக் கவிதை போன்று அமைந்துள்ளது. தலைவி பாவையாக உருவகிக்கப்பட்டுள்ளாள். தலைவி தனியிடத்து நிறுத்தப் பட்டுள்ளாள் என்பதை உணர்த்த 'நெய்தல் நிலத்தின் கண் பாவையைக் கிடத்தி வந்தேன்' எனவும், அல்லாதவிடத்துத் தலைவியின் நெற்றி பசப்பூரப்பெறும் என்பதை உணர்த்த, 'நாரை மிதிக்கும் என் மகணுதலே' எனவும் கறுகிறார். தமிழிலக்கியத்தில் பிற்காலத்தில் தோன்றிய உருவகக் கவிதைகள் பலவற்றிற்கும் முதல்நிலையாக, அடிப்படையாக இப்பாடல் விளங்குகின்றது.

---

60. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 185.

61. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 114.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள உருவகங்களில் மிகுதியும் எத்தகைய பின்னெட்டும் இன்றி வந்துள்ளன. ஒருசில மட்டும் 'ஆக', 'என்', 'ஆல்', என்னும்' என்ற பின்னெட்டுகளை உருபாகப் பெற்று வந்துள்ளன,[62] பொருளில் மட்டுமன்றி நூற்பெயரிலும் உருவகத்தைக் கையாண்டிருப்பதை 'மலைபடுகடாஅம்' என்பதும் பதிற்றுப்பத்தில் உள்ள 'வரம்பில் வெள்ளம்' என்பதும் உணர்த்தும். 'மலைபடுகடாஅம்' என்பது யானையின் மதத்தால் உண்டாகும் ஓசைக்கு ஆகுபெயராக அமைந்து இதன்வழி 'மலை' யானைக்கு உருவகப்படுத்தப் பட்டு அதில் எழும் ஓசைகளெல்லாம் யானைக்கு மதம் பெருகிய வழி எழுந்த ஓசைக்கு உருவகமாகிய வழி அமைந்த பெயராயிற்று.) சேரனது படையின் அளவிறந்த தன்மையைக் குறிக்க வந்த உருவகத்தால் 'வரம்பில் வெள்ளம்' என்ற பெயர் அமைந்தது.

4.1.1.2.2. நுட்ப உருவகம்

தெளிவு உருவகத்திலுள்ள காட்சி விளக்கம், கருத்து விளக்கம் என்பவற்றுக்கு மேலாகக் குறிப்பிட்ட மன உணர்வு காரணமாகப் படைக்கப்படுவன இவ்வுருவகங்கள். உருவகப்படுத்தப்படுவதற்கான தொடர்பை நுட்பமாகக் கூர்ந்துணர வைக்கும் தன்மையுடையன. உள்ளுறைகளை இந்நுட்ப உருவகத்தின் அடிப்படையில் தோன்றி வளர்ந்ததாகக் கொள்ளலாம்.[63]

தொல்காப்பியர் கறும்,

'வேறுபட வந்த உவமைத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்'[64]

---

62. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 88.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 126, 186, 398.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 346.

63. உள்ளுறை பற்றி 4.1.2.1.1. என்ற பகுதியில் விளக்கப்படும்.

64. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம் பொருளதிகாரம், பா. 305

என்ற நூற்பா இந்நுட்ப உருவகத்தைக் குறித்தது எனலாம். நுட்ப உருவகங்கள் அனைத்தும் உவமை அடிப்படையின ஆயினும் உவமையினின்று வேறுபட்ட அமைப்பில் விளங்குவதையும் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்.

திணையுருவகம்[65]

உயர்திணையை அஃறிணையாகவும், அஃறிணையை உயர்திணையாகவும் உருவகிப்பது திணையுருவகம்; சங்க இலக்கியத்தில் பரிபாடல், கலித்தொகை என்ற இருநூல்களில் மட்டும் இத்திணையுருவகம் காணப்படுகின்றது. பரிபாடலில் வையைப் பெண்ணாகவும்[66], பரத்தையை எருதாகவும்[67], படைச்சாலாகவும்[68], தலைவனை வையையாகவும்[69] உருவகித்துள்ளனர். கலித்தொகையில் தலைவனை முருகனாகவும்[70], பரத்தையைக் கடவுளாகவும்[71], குதிரையாகவும்[72], யானையாகவும்[73], பூதப் பூனலாகவும்[74] உருவகித்துள்ளனர். தலைவி, தோழி ஆகியோரின் ஆற்றுமை உணர்வின்

---

65. அ.அ. மணவாளன், 'சங்க இலக்கியம்', தமிழ் இலக்கியக் கொள்கை - தொகுதி-1, பக். 41ல் உள்ள சொல்லாட்சி.

66. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பரிபாடல் 11; 41-49.

67. மேற்படி, 20; 58-63.

68. மேற்படி, 20; 48-58.

69. மேற்படி, 6; 68-78.

70. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 43.

71. மேற்படி, பா. 93.

72. மேற்படி, பா. 96.

73. மேற்படி, பா. 97.

74. மேற்படி, பா. 98.

வெளிப்பாடாகவும், சின உணர்வின் வெளிப்பாடாகவும் இவ்வுருவகங்கள் அமைந்துள்ளன. பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் தனது குற்றத்தை ஏற்றுக் கொள்ளாது குதிரை ஏற்றத்திற்குச் சென்று வந்ததாகக் கூறுகின்றான். தலைவி சினந்து,

'அறிந்தேன் குதிரைதான்
பால்பிரியா ஐங்கந்தற் பன்மயிர்க் கொய்சுவல்
மேல்விரித் தியாத்த சிகழிகை செல்வுளை
நீல மணிக்கடிகை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியல் மென்காதிற் பூல்லிகைச் சாமரை
... ...'[75]

எனக் குதிரை, பரத்தை ஆகிய இருவர்க்கும் பொருந்துமாறு பரத்தையை வருணித்திருப்பது இதற்குச் சான்றாகும்.

பிற்காலத்தில் தோன்றிய சிவனுக்கும், தேங்காய்க்கும் சிலேடை கூறுதல் போன்ற பொருட்சிலேடை வளர்ச்சிக்கு இத்திணையுருவகத்தை அடிப்படையாகக் கொள்ளலாம். மேலும் பக்தி இலக்கியங்களில் தம்மை நாயாக உருவகித்துக் கொள்ளுதல், இறைவனுக்குத் தோழனாகக் கூறுதல் என்பன போன்ற நுட்ப உருவகங்களுக்கு முதல்நிலையாகவும் சங்க இலக்கியத்தின் இத்திணையுருவகத்தைக் கருதலாம்.

சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை இத்தன்மை அகப்பொருளுக்கு உரியதாக விளங்குகின்றது. மேலும் கலித்தொகை, பரிபாடல் என்ற இரண்டில் மட்டுமே இவ்வமைப்பு காணப்படுவதும் குறிக்கத்தக்கது. இவ்விரு நூல்களிலும் ஆசிரியர் நல்லந்துவனார் பாடல்களில் மட்டும் இத்தன்மை காணப்படுவதும் குறிப்பாகச் சுட்ட வேண்டிய ஒன்றாகும். இதனை நோக்குமிடத்து இப்பாடல்கள் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் தோன்றி, தொகுப்பித்தோரால் வேறுபட்டன என்பது தெளிவாகின்றது.

---

75. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.96.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் உருவகங்கள் மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டிருப்பினும், மிக நுட்பமாக அமைந்து பிற்கால இலக்கியத் தன்மைகளுக்கும் அடிப்படையாய் விளங்கக் காணலாம்.

4.1.1.3. மிகை வருணனையும் மிகைக் கற்பனையும்

உள்ளதை உள்ளவாறும், இலக்கிய நயத்தோடும் கூறும் இயல்புப் பூனவுப் பண்புடையது சங்க இலக்கியம். இவற்றில் மிகைவருணனைக்கோ மிகைக் கற்பனைக்கோ பொதும் இடமளிக்கப்படவில்லை. நிகழ்ச்சிகளை மிக விரிவாக விளக்குவதும், இறைவன் சிறப்பை விரிவாகப் பாடுவதுமாகிய பரிபாடலில் மட்டும் மிகை வருணனை காணப்படுகின்றது. இசைப் பாடல்களாய் உள்ளமையால் இத்தன்மை நேர்ந்தது எனலாம். பிற சங்க இலக்கியங்களில் உணர்வுகளை வெளிப்படுத்தற்கும் செய்தியை வெளிப்படுத்தற்குமுரிய கருவியாக ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. சேரனின் வீரத்தை உணர்த்த, 'சேரன் கொடுத்த பலியைத் தொடுதற்குப் பேய்களும் அஞ்சி நடுங்கின. எழுதுகளும் மொய்க்கவில்லை'[76] எனக் கூறியிருப்பதும்

'அஞ்சுவந்த போர்க்களத்தான்
ஆண்டலை யணங்கடுப்பின்
வயவேந்த ரொண்குருதி
சினத்தீயிற் பெயர்பூபொங்கத்
தெறலரும் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற்
றொடித்தோட்கை துடுப்பாக
ஆடுற்ற வுன்சோறு'[77]

எனவரும் மதுரைக் காஞ்சி அடிகளும் தனிப்பிடத்தக்கன. இத்தன்மை பின்வந்த கலிங்கத்துப்பரணி போன்ற நூல்களில் அமைந்த வருணனைக்கு அடிப்படையாய் உள்ளது. இவ்விரு இடங்களைத் தவிர பிறவற்றில் போர்க்களத்தைப் பற்றி இத்தகு கற்பனை காணப்படவில்லை.

---

76. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 3/10.
77. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மதுரைக்காஞ்சி', பத்துப்பாட்டு

புறநானூற்றில் சேரனின் வீரச்சிறப்பையும் காவற்சிறப்பையும் உணர்த்தவும்,[78] ஆய்அண்டிரனின் பெருமையை உணர்த்தவும்,[79] உலக நிலையாமையை உணர்த்தவும்,[80] மிகை வருணனையும் மிகைக் கற்பனையும் கையாளப்பட்டுள்ளன. இவை தவிர இயல்பாக நிகழும் நிகழ்ச்சியில் தனது குறிப்பை ஏற்றிக் கூறும் தற்குறிப்பேற்றமும் ஒருசில இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது.[81]

காப்பியங்களில் பின்நிகழ்வைச் சுட்டவும், தனது குறிப்பை உணர்த்தவும் தற்குறிப்பேற்றம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையும் தலைவியின் மன உணர்வை வெளிப்படுத்தத் தலைவி கூற்றாகவும் தோழி கூற்றாகவும் தற்குறிப்பேற்றம் அமைந்துள்ளது.[82]

'சோலையில் உள்ள மாமரங்களில் உள்ள காய குயில்கள், "நிலையில்லாத பொருள்தேடும் வாழ்க்கையை ஏதுவாகக் கொண்டு, அறிவுடையீர் நும்முடைய துணையை விட்டுப் பிரியாதீர்" எனக் கையற்றுக் கழறுவது போலக் கூவாநிற்ப அவ்விளவேனிற் பருவத்திலும் பிரிவாழுயின் அறத்தினுங் காட்டில் பொருள் பொது போலும்'[83] எனத் தலைவி கூற்றாக வரும் நற்றிணைப்பாடல் இதற்குச்

---

78. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 20.

79. மேற்படி, பா. 41.

80. மேற்படி, பா. 359.

81. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 88, 243, 378.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 116.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 33, 119, 121, 129, 130, 134.

82. மேற்படி, பா. 33.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 88, 243, 378.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 116.

83. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 243.

சான்றாகும். குயிலின் இயல்பான கூவுதலுக்குத் தலைவியின் உள்ள நிலைக்கேற்பப் புலவன் தன் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளான்.

உவமை உருவக வாயிலாகவும் இத்தற்குறிப்பேற்றம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.[84]

'முழங்குதிரை முழவின் பாணியின் பையப்
பழம்புன் உறுநரின் பரவையின் ஆலும்'[85]

'கண்ணீர் அருவியாக அழுமே தோழி'[86]

என்பன இதற்குச் சான்றுகளாகும்.

4.1.1.4. பின்புல வருணனை

பாடற்பொருளுக்கும் பாத்திரங்களின் உள்ள நிலைக்கும் ஏற்ற வருணனை 'பின்புல வருணனை' என இங்குக் குறிக்கப்படுகின்றது. நாடகத்திற்கும் ஓவியத்திற்கும் இன்றியமையாது வேண்டுவது பின்புலக் காட்சியாகும். நாடகக் கூறும் சிறிது பொருந்தி வருகின்ற சங்கப் பாடல்களுக்கு அப்பண்பை மிகுதிப்படுத்தும் வகையில் 'பின்புல வருணனை' விளங்குகின்றது.

பாத்திரங்களின் உள்ளநிலையைக் கருத்தில் கொண்டவண்ணம் இப்பின்புல வருணனை அமைக்கப்பட்டுள்ளது. அகப்பாடல்களில் இத்தன்மை மிகுந்துள்ளது. இவற்றில் நற்றிணை, கலித்தொகை, அகநானூறு என்பன சிறப்பாகக் குறிக்கத்தக்கன. குறுந்தொகை, ஐங்குறுநூறு என்பவற்றைக் காட்டிலும் இவைகள் பாடல் அடியளவில் மிகுந்திருப்பது இதற்கு ஒரு காரணமாய் அமைகின்றது. பெரும்பான்மையும் தலைவியின்

---

84. மேற்படி, பா.88, 378.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.129, 130, 134.

85. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.378.

86. மேற்படி, பா.88.

துன்பநிலைக்கு ஒத்ததாக இக்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.[87] இப்பாடற் பகுதிகளும் தலைவி கூற்றுகளும் தோழி கூற்றுகளும் அமைந்து பொழுது வருணனைகளாக உள்ளன. அனைத்திற்கும் மேலாக இவை நெய்தல், முல்லை, பாலை என்ற திணைகளுக்குரியதாக மட்டும் வருவதும் குறிக்கத்தக்கது. தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்கும் நிலை இம்மூன்று திணைகளில் நிகழ்தற்கேற்ப இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வருணனைகள் பாடலின் தொடக்கமாக அமைந்து, பாடற்பொருள் இத்தன்மைத்து என உணர்த்தும் அறிமுகமாகவும் செயல்படுகின்றன.

தலைவன் பிரிந்தானெனத் தலைவி வருந்தியிருக்கும் நிலையைக் காட்டும் பாடலில், 'திங்களுந் தோன்றியது; கடலும் ஒலியடங்கவில்லை; தாழையும் அரும்பு மலரா நின்றது; அன்றிற் பறவையும் ஒலியா நின்றது'[88] எனும் வருணனை தலைவி கூற்றுகளே அமைக்கப்பட்டுள்ளது. தலைவியின் துன்ப மிகுதியைக் காட்டுவதாக மேற்குறித்த வருணனை விளங்குகின்றது.

பின்புல வருணனைகளில் சில இறைச்சிப் பொருளையும் உணர்த்தி நிற்கின்றது. ஆயின் பின்புல வருணனைகள் அனைத்தும் இறைச்சிப் பொருள உணர்த்துவதில்லை. தலைவனை விளிக்கும் சேர்ப்ப 'நாட' என்ற விளிக்கு அடையாக அமைவனவும், அருஞ்சுர வருணனையும் உள்ளுறைப் பொருளை உணர்த்த வந்தவையெனினும், சிறந்த பின்புலக் காட்சியாகவும் அவைகள் விளங்குகின்றன.

---

87. மேற்படி, பா. 224, 335, 378, 382.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 129, 134, 143.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 103.

88. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 335.

'குறும்பூழ்ச் சேவல் தான் மறைந்திருந்த பூதர் தனித்துக் கிடக்கும்படி பறந்து போய் அகன்ற பாழ்மனையின் இறப்பினது ஒருபக்கத்தே புகுந்து தனிமையில் நெட்டுயிர்ப்புக் கொள்ளும் தன்மையுடைய கடத்தற்கரிய நெறியிற் சென்ற தலைவன் நமக்கு அருள மாட்டாரோ'[89] என்பது தலைவி தோழிக்குக் கூறியது. தலைவி தனித்திருக்கத் தலைவன் பிரிந்து அரிய பாலை நெறியில் வருந்தும் தன்மை இங்கு உள்ளுறையாய் உணர்த்தப்பட்டதோடு, அதற்கேற்ற பின்புலமாக அமைந்திருப்பதும் கண்கூடு.

தலைவி கற்றுகவன்றி, தலைவன் கற்றுகவும் அவனது உளநிலையைக் காட்டும் வகையில் பின்புல வருணனை அமைந்துள்ளது.[90] 'தம்மைப் பிரிந்தமையால் தலைவி எவ்வாறு துன்புற்றிருப்பாளோ' என வருந்தியிருக்கும் தலைவனின் உள்ளநிலை பிரிவுணர்வினைப் பிரிந்து ஆண்மான் வருந்திக் கிடக்கும் காட்சியை விளக்கும் வழி வருணனைவழி சுட்டப்பட்டிருப்பது இதற்குச் சான்றாகும்.[91] முல்லை, பாலை என்ற இரு திணைகளுக்குரியதாக இத்தன்மை விளங்குகின்றது.

பாத்திரங்களின் உளநிலைக்கேற்ப பின்புலவருணனை அமைகின்றது என்பதை மேற்கூறியவற்றின் வழித் தெளியலாம். இவை உள்ளுறை, இறைச்சியை உணர்த்த வந்ததாகவும் அமைய, உளநிலை ஒன்றையே கருத்தில் கொண்டும் அமைக்கப்படுகின்றன என்பதைச் சுட்டும் வகையில் நற்றிணையில் ஒரு பாடல் விளங்குகின்றது.

விரைமுற்றி மீளுந் தலைவன் தலைவியை நினைந்தவாறே வருகின்றான். காணும் காட்சிகள் அவனுக்குத் தலைவியை நினைவுறுத்துகின்றன. இத்தகு

---

89. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 103.

90. மேற்படி, பா. 21, 34, 51, 244, 371.

91. மேற்படி, பா. 371.

உள்ளநிலையை விளக்க,

'இறையும் அருந்தொழில் முடித்தெனப் பொறைய
கண்போல் நீலம் சுனைதொறும் மலர' [92]

என்ற வருணனை அமைந்துள்ளது. பொதுவாக நீலமலர்கள் கண்ணுக்கு உவமைப்-படுத்தப்பட, இங்குக் கண்களை நீலமலருக்கு ஒப்பிடுதல்வழி இக்குறிப்பு உணர்த்தப் பட்டது.

இவ்வாறு தலைவன் தலைவி நிலை மட்டுமின்றி, உடன்போகிய மகளை நினைந்து வருந்தும் தாயின் நிலையைக் காட்டுவதாகவும் இப்பின்புல வருணனைகள் அமைந்துள்ளன. [93]

தலைவி தலைவனொடு அரிய பாலை வழியைக் கடந்து சென்றதை அறிந்த தாயின் வருத்தத்தை விளக்கும் பாடலில், பெண்யானையை அணைத்துக் கொண்டு களிற்றியானை வழிநடத்திச் செல்லும் காட்சி வருணிக்கப்பட்டிருப்பது இதற்குச் சான்றாகும். [94]

முல்லைப்பாட்டில் தலைவன் வரவை நினைந்து வருந்தும் தலைவியின் நிலை,

'பருவர லெல்வளை கழைமா யோனெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து' [95]

---

92. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 161.

93. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 165, 189, 321.

94. மேற்படி, 189.

95. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப்பாட்டு, 21-22.

எனவும், உடன் கன்று ஒன்று தாயின் வருகையை நினைந்து அலமரும் நிலை,

'சிறுதாம்பு தொடுத்த பசிலைக் கன்றின்
உறுதுய ரலமர வேக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் ...' [96]

எனவும் விளக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின் சூழ்நிலை நன்கு விளக்க ஒத்த இரு காட்சிகள் விளக்கப்பட்டுள்ளன. இதனை 'இணைக்காட்சி' எனலாம். பின்புல வருணனையின் ஒரு தன்மையாக உள்ளது இது. சூழலுணர்வைக் கற்போர்க்குத் தெளிவாகப் புலப்படுத்தற்குப் புலவன் இதனை உத்தியாகக் கையாளுகின்றான்.

அகப்பொருளில் மட்டுமின்றி புறப்பொருளிலும் இப்பின்புல வருணனை அரிதாகப் பயின்று வந்துள்ளது. [97] இவை மன்னர்களின் சிறப்பை விளக்கும் பின்னணிக் காட்சிகளாயுள்ளன.

செய்தியைக் காட்டிலும் ஊர் வருணனைக்கு மிகுதியான இடமளித்து அதன்வழி மன்னனின் செல்வசிறப்பு, வீரச்சிறப்பு என்பவற்றை உணர்த்துவது ஒருவகையாக உள்ளது. [98] கற்பனையாக இயற்கைக் காட்சியைப் படைப்பதன் வழிக்காட்டுவது மற்றொரு வகையாக உள்ளது.

---

96. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப்பாட்டு, 21-22.

97. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 324, 325.

சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 5/1; 7-13.

98. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 324, 325.

செங்குட்டுவன் கடலிற் சென்று போருடற்றிய சிறப்பைக் கூறும் பாடலில் யானை வேங்கைப்பூவைத் தலையிலணிந்து கொண்டு சென்ற தோற்றத்தைப் படைவீரர்க்கு ஒப்புமைப்படுத்தியிருப்பது இத்தன்மைத்தாகும்.[99]

சங்கப் புலவர்கள் பாடற்பொருளில் மட்டுமின்றி அதனை வெளிப்படுத்தும் சூழலமைப்பு, காட்சியமைப்பு போன்றவற்றிற்கும் இன்றியமையாமையளித்து அவைகளையும் உத்திகளாகப் பயன்படுத்திக் கொண்ட தன்மை மேற்கண்டவற்றினின்றும் தெளிவாகப் புலனாகின்றது.

4.1.1.5. உருக்காட்சி வருணனை

பொதுவாக உணர்வுகள், தோற்றம் போன்றவற்றை விளக்க உவமைகளும் உருவகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தன்மை எதுவுமின்றி வெறும் சொற்களால், விளக்கும் முறையைக் கொண்டே ஏதேனும் நிகழ்ச்சியையோ, பொருளின் தோற்றத்தையோ அப்படியே காட்சிப்படுத்தும் வண்ணம் அமைக்கும் வருணனை இங்கு 'உருக்காட்சி வருணனை' என்ற சொல்லால் சுட்டப்படுகின்றது. படிமக் காட்சியைக் குறிக்கவும் 'உருக்காட்சி' என்ற சொல் ஆளப்படுகின்றது.[100]

---

99. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 5/1; 7-13.

100. திருமதி தே. தியாகராஜன், 'உருக்காட்சி', லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர் - 1972-1973, பக். 121.

இக்கட்டுரையில் இச்சொல் இப்பொருளில் ஆளப்படவில்லை. இதனை வேறுபடுத்திக் காட்டவே 'உருக்காட்சி வருணனை' எனக் குறப்படுகின்றது. மிகுதியான அளவு எனக் கூற இயலாவிடினும் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே இவை பயின்று வந்துள்ளன.[101]

தலைவன் பிரிந்தானெனத் தலைவி பெருகிவரும் கண்ணீரை விரல் முனியால் துடைத்தெறிகிறாள். இதனை,

'மாயித ழேந்திய மலிந்துவீ ழாரிப்பனி
செல்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியா'[102]

என நெடுநல்வாடை அப்படியே காட்சிப்படுத்தியுள்ளது. இதனையே அகநானூறும்,

'ஆயிதழ் மழைக்கண் மல்க நோய்கூர்ந்து
பெருந்தோள் நினைக்குங் கலுழ்ந்துவார் அரிப்பனி
மெல்விரல் உகிரிற் றெறியினள் ...'[103]

---

101. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 61, 90, 98, 110, 120, 149, 187, 324.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 105, 167, 188, 358.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 185, 255, 256.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 2/2, 9, 2/6, 3/3, 5.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 115.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 42, 49, 66, 102, 110, 169, 203, 248, 257, 261, 373.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 42, 100, 103, 278.
உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'சிறுபாணாற்றுப்படை', பத்துப் பாட்டு, 41-83.
உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு' பத்துப் பாட்டு, 22-23, 74-76.
உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'நெடுநல்வாடை', பத்துப்பாட்டு, 162-166.

102. மேற்படி, 164-165.

103. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, 373.

எனக் காட்டுகின்றது. தலைவனைப் பிரிந்த தலைவி தலையில் கை வைத்து கண்ணீர் மல்க அமர்ந்திருக்கும் காட்சி,

'செல்கதிர் மழுகிய பூலம்பூகொண் மாலை
மெல்லிரல் சேர்த்திய நுதலங் மல்கிக்
கயலுமிழ் நீரிற் கண்பனி வார'[104]

என விளக்கப்படுகின்றது.

இவ்வாறு எந்தெந்த நிகழ்ச்சிகளை எவ்வெவ்வாறு விளக்க வேண்டும் என்ற அறிவு நுட்பத்தோடு சிறு அசைவுகளையும் மிக நுட்பமாகப் படைத்தல்வழி இவ்வுருக்காட்சி வருணனை அமைகின்றது. புலவனது பட்டறிவுத் திறன் இதற்கு மிக இன்றியமையாததொன்றுகின்றது.

இயற்கைக் காட்சி வருணனைகளை விட மனிதர்கள், சிறுபான்மை உயிரினங்கள் ஆகியவற்றின் உணர்வுகளையும், மெய்ப்பாடுகளையும் உடல் உறுப்புகளின் அசைவுகளையும் காட்டுவது இவ்வுருக்காட்சி வருணனையின் தலையாய பண்பாகும். உள்ளதை உள்ளவாறு விளக்குதற்கும், சுவைபட விளக்குதற்கும் சங்கப் புலவர்கள் இதனைச் சிறந்த உத்தியாகப் பயன்படுத்தியுள்ளனர். அவர்களது உளவியல் அறிவும், உலகியற் பட்டறிவுத்திறனும் இதற்குத் துணைநின்றுள்ளன.

4.1.1.6. பொருள் மடக்கு

ஒருபொருள் பலமுறை அடுக்கி வருதல் பொருள் மடக்காகும். சொல் மடக்கும், தொடர் மடக்கும் பயின்று வந்த அளவிற்குப் பொருள் மடக்கு ~~மிகுதியாக~~ பயிலப்படவில்லை. ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகியவற்றில் மட்டும் இத்தன்மை காணப்படுகின்றது.

---

104. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 169.

ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணையும் பத்துப் பகுதிகளைக் கொண்டு அவை ஒவ்வொன்றும் பத்துச் செய்யுட்களின் தொகுதியாக விளங்குகின்றன. இப்பத்துப் பாடல்களும் ஒரு பொருள் நுதலி வருவனவாக உள்ளன. இவை ஆற்றுமையுணர்வு மகிழ்ச்சியுணர்வு என்ற அடிப்படையில் பொருளை வெளிப்படுத்துகின்றன.

குறிப்பிட்ட சேர மன்னனைப் பற்றிய பத்துப் பாடல்களை அமைப்பது என்ற வகையில் பதிற்றுப்பத்தும் இப்பொருள் மடக்கு அமைப்பில் கொள்ளத்தக்கது. இவ்வாறு ஒவ்வொரு பகுதியும் ஒருபொருள் நுதலி வரும் பத்துப்பாடல்களைக் கொண்டிருக்கும் இவ்விரு நூல்களின் அமைப்பைப் பின்வந்த பதிக வளர்ச்சிக்குரிய கருவாகக் கருதலாம்.

கலித்தொகையில் வரும் தாழிசைப் பகுதிகளும் இப்பொருள்மடக்கில் கொள்ளத்தக்கன. யாப்பமைப்பு அடிப்படையில் இப்பொருள் மடக்கு அமையினும் கருத்தை வற்புறுத்தற்கும், உணர்வை வெளிப்படுத்தற்கும் இவ்வமைப்பை வாய்ப்பாகக் கொண்டுள்ளனர். இவையே பொருள் மடக்கின் அடிப்படை நோக்கமும் ஆகும்.

தோழி தலைவனைச் செலவழுங்குவிக்க,[105] தலைவியின் ஆற்றுமை-யுணர்வை வெளிப்படுத்த,[106] தலைவன் தனது கருத்தை வற்புறுத்த,[107] முக்கோற் பகவன் செவிலியை வற்புறுத்த[108] என்ற பொருள்களில் கலித்தொகையில் பொருள் மடக்கு அமைந்துள்ளது. ஒரே கருத்தைப் பலவாறு கூறும் திறனும் இங்கு வெளிப்-படுகின்றது.

---

105. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 1, 2, 5, 7, 8, 10, 14, 15, 17, 22, 25, 28.

106. மேற்படி, பா. 4, 11, 16, 23, 26, 27.

107. மேற்படி, பா. 13, 20.

108. மேற்படி, பா. 9.

4.1.2. குறிப்பாகப் பொருளையுணர்த்துவன

4.1.2.1. அகப்பொருளுக்குரியன

(தொல்காப்பியர் காட்டும் உத்திகளில் மாறுகொள் எச்சம்,[109] சொல்லெச்சம்,[110] குறிப்பெச்சம்,[111] பழிகரப்பு அங்கதம்,[112] குறிப்பு மொழி,[113] பிசிநிலை,[114] முதுமொழி,[115] இறைச்சி,[116] உள்ளுறை,[117] இனமொழி,[118] ததையும் வழக்கம் எனப்படும் பகுதிக் கிளவி;[119] தத்தங் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச்சொற்கள்;[120] சொல்லுவான் குறிப்பாற்

---

109. இளம்பூரணர் (உரையாசிரியர்), பொருளதிகாரம், தொல்காப்பியம், நூ. 291.

110. மேற்படி, நூ. 507.

111. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), 'சொல்லதிகாரம்', தொல்காப்பியம், நூ. 440.

112. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 431.

113. மேற்படி, நூ. 481.

114. மேற்படி, நூ. 478.

115. மேற்படி, நூ. 479.

116. மேற்படி, நூ. 225, 226, 227.

117. மேற்படி, நூ. 50, 51, 238, 49, 239, 240.

118. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), 'சொல்லதிகாரம்', தொல்காப்பியம், நூ. 60.

119. மேற்படி, நூ. 17.

120. மேற்படி, நூ. 250.

பொருள் வேறுபடும் சொற்கள்;[121] பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை, உம்மை, எனும் எஞ்சுபொருட்கிளவிகள்;[122] முன்னத்தின் உணரும் கிளவி[123] என்பன குறிப்பு உத்திகளாகும். இவை செய்யுள் வகையாகவும், பாடலின் பகுதியாகவும் இடம்பெறும் தன்மையன. இவற்றுள் சங்க அகப்பாடல்களுக்கே-யுரியன என்ற வகையில் இறைச்சி, உள்ளுறை என்பன விளங்குகின்றன. இவற்றுக்கு மேலாக முழுப்பாடலளவில் அல்லது முழுப்பாடலுக்கும் புறம்பாக ஒரு குறிப்புப் பொருளை உணர்த்தி நிற்பதும் சங்க அகப்பாடல்களின் தலையாய பண்பாக உள்ளது. இத்தன்மை தொல்காப்பியத்தில் நேரடியாகச் சுட்டப்படவில்லை. ஆயின் செய்யுளின் உறுப்புகளில் ஒன்றாகப் 'பயன்'[124] என்பதைக் குறிப்பிட்டு அதனை,

'இதுநனி பயக்கும் இதன்மா றென்னுந்
தொகுநிலைக் கிளவி பயனெனப் படுமே'[125]

என விளக்கியிருத்தல் வழி பெறப்படுகின்றது. இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு,

'சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் வாரினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே'

என்ற பாடலை எடுத்துக்காட்டி 'இதனூற் பயன் வரைந்து கோடல் வேண்டும் என்பது' என விளக்கியிருப்பதும் இதனை உணர்த்தும். எனவே முழுப்பாடலுக்கும்

---

121. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), 'சொல்லதிகாரம்', தொல்காப்பியம், நூ. 281.

122. மேற்படி, நூ. 430, 431, 434, 435, 436.

123. மேற்படி, நூ. 459.

124. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 310.

125. மேற்படி, நூ. 504.

புறம்பாகத் தொகைநிலையாக உணர்த்துவது என்ற அடிப்படையில் 'தொகுநிலைக் கிளவி' என்பது சங்கப் பாடல்களின் குறிப்பு உத்தியுள் ஒன்றைச் சுட்டப் பயன்-படுத்தப்பட்டுள்ளது. பாடலுக்குப் புறம்பாகப் பொருள் தொக்கி நிற்பது அகப்பாடல்களில் மிகுந்திருப்பதாலும், பாத்திரங்கள் தங்களுக்குள் உணர்வு காரணமாகவோ, வேறு காரணமாகவோ வேண்டுமென்றே மறைத்துக் கறும் நோக்கோடு தொக்கி நிற்குமாறு கறுவது அகப்பாடல்களின் தன்மையாயிருத்தலாலும் 'தொகுநிலைக் கிளவி' என்ற சொல்லும் கையாளப்பட்டுள்ளது.

(ஆக இறைச்சி, உள்ளுறை, தொகுநிலைக் கிளவி என்பவற்றோடு 'படிமக் காட்சி' என்பதும் சேர்ந்து சங்க அகப்பாடல்களுக்குரிய குறிப்பு உத்திகளாக உள்ளன.)

4.1.2.1.1. இறைச்சியும் உள்ளுறையும்

(இறைச்சியும் உள்ளுறையும் அகப்பாடல்களுக்குரிய தலையாய உத்திகளாக விளங்குகின்றன.)

வெளிப்படையாகத் தோன்றுது வேறொன்றினைக் கருவியாகக் கொண்டு அதன்வழி மறைவாக உறையும் பொருள் உள்ளுறை. இவ்வுள்ளுறை கருப்பொருட்களைக் கருவியாகக் கொள்ள வேண்டும் என்பர் தொல்காப்பியர்.[126]

---

126. 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே'

- மேற்படி, நூ. 50.

'இறைச்சி' என்பது கருப்பொருள் எனப் பொருள்படும். தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள 'இறைச்சி' என்ற சொல்லாட்சிகள் அனைத்தும் 'கருப்பொருள்' எனப் பொருள்படுவதாக உள்ளன.[127]

'இறை' என்பதற்கு 'இறு' என்பது விகுதியடியாகக் கொள்ளப் பட்டு 'இருக்கச் செய்தல்' என அதற்குப் பொருள் கூறப்படுகின்றது.[128] எனவே, 'அகப்பாடல் ஒன்றில் நிலமும் பொழுதும் அமைத்து நிலத்தில்

---

127. 'பூணர்ந்துடன் போகிய கிழவோள் மகனையிருந்து
இடைச்சுரத் திறைச்சியும் விகனயும் சுட்டி'
- மேற்படி, நூ. 146.

'ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்' - மேற்படி, நூ. 168.

'இறைச்சி தானே உரிப்பூறத் ததுவே' - மேற்படி, நூ. 225.

'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தொரியு மோர்க்கே'
- மேற்படி, நூ. 226.

'அன்பூறு ததுவன இறைச்சியிற் சுட்டலும்
வன்பூறை யாகும் வருந்திய பொழுதே'
- மேற்படி, நூ. 227.

'இறைச்சிப் பொருள்வயிற் செய்யுட் கிளக்கு
மயற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான'
- ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), 'சொல்லதிகாரம்' தொல்காப்பியம், நூ. 196.

---

128. அ. சிவலிங்கனார், 'உள்ளுறை', Papers on Tamil Studies, (International Institute of Tamil Studies, Madras, 1980) பக். 12.

நடைபெறும் உரிப்பொருளாகிய ஒழுக்கத்தைக் கூறும்போது சில கருத்துரைகளைக் குறிப்பாக விளக்குதற்காக இறுத்தப்படுவன்'[129] இறைச்சி எனப்பட்டது.

இவ் இறைச்சியையும் உள்ளுறைபாற் கொண்டு உள்ளுறை, இறைச்சி இரண்டும் ஒன்றெனக் கருதும் கருத்தும் உண்டு.[130] கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உரிப்பொருளை உணர்த்தும் என்ற வகையில் இரண்டும் ஒன்றுபடுகின்றன. ஆயின் பொருளை உணர்த்தும் முறையில் இரண்டும் நுட்பமாக வேறுபடுகின்றன. 'இறைச்சிக்கும் உள்ளுறையுவமத்துக்கும் கருப்பொருள் நிலைக்களன் என்பதாலேயே வேற்றுமை மறந்து ஒருமை காண வேண்டுவதில்லை'[131] என்ற கற்றும் இங்குக் கருதத்தக்கது.

உள்ளுறையில் பொருளை உணர்த்தற்குக் கருப்பொருட்கள் ஒரு கருவியாக ஊடகமாகக் கொள்ளப்படுகின்றன.

'இறைச்சி' எனச் சுட்டப்படுவதில் கருப்பொருட்கள் நேரடியாகத் தாமே நின்று அதற்குப் புறம்பான ஒரு பொருளையுணர்த்தும். இப்பொருள் நுட்பமாக உளரும் தன்மைத்து. தொல்காப்பிய நூற்பாக்களைக் கொண்டே இவ்வேறுபாட்டைத் தெளியலாம்.

---

129. அ. சிவலிங்கனார், 'உள்ளுறை', Papers on Tamil Studies, பக்.12.

130. 'இறைச்சியிற் பிறக்கும் பொருளும் உள்ளுறை உவமமும் ஒன்றென்பதும், வேறு என்பதும் கூற வேண்டா. உள்ளுறை இன்றுமே இறைச்சியிற் பிறக்கும் பொருள்தாம் என்பதே என் கருத்து'.
- மேற்படி, பக். 27.

'... உள்ளுறையே இறைச்சி ஆகும் என்பதும் தெரிகிறது'.
- ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், பக். 240.

131. ம.ரா.போ. குருசாமி, தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், (நரேந்திரசிவம் பதிப்பகம், கோவை, 1980), பக். 128.

'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே' [132]

என உள்ளுறைப் பொருளை உணர்த்தற்குரிய கருவியை மட்டும் வரையறுத்துக் கூறியவர்,

'இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே
திறத்தியல் மருங்கில் தெளியு மோர்க்கே' [133]

என இறைச்சிப் பொருளை உணரும் தன்மையையும் வரையறுத்துள்ளமை இதனை உணர்த்தும். மேலும் இறைச்சி உரிப்பொருள் புறத்ததாக வரும். [134] உள்ளுறை, அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பத்தை உணர்த்தவும், [135] மங்கல மொழியாகவும், அவையல் மொழியாகவும், மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியாகவும் [136] வரும் எனக் கூறியிருப்பதும் உள்ளுறையும் இறைச்சியும் வேறுபடுமாற்றைச் சுட்டுகின்றன.

---

132. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 50.

133. மேற்படி, நூ. 226.

134. மேற்படி, நூ. 225.

135. 'அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே'
- மேற்படி, நூ. 239.

136. 'மங்கல மொழியும் அவையல் மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியுங்
கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப'
- மேற்படி, நூ. 240.

எனவே,

'இறைச்சி தானே உரிப்புறத் ததுவே' [137]

என்ற நூற்பாவில் உள்ள இறுதி ஏகாரம் தேற்றப் பொருளைச் சுட்ட வந்ததாகவும் கொள்ள இடமுண்டு.

உடனுறை, உலமம், சுட்டு, நகை, சிறப்பு என உள்ளுறையை ஐவகையாகப் பகுத்துக் கூறுகின்றார் தொல்காப்பியர். [138] இவற்றுள் உலமம் ஒன்றிற்கு மட்டும் தனியே விளக்கம் கூறிப் பிறவற்றை விளக்கவில்லை. இவர் கூறிய ஐந்தின் தன்மையையும் காணுமிடத்து இவற்றை ஒருவகைக்கீழ் அடக்க இயலவில்லை. உடனுறை, சுட்டு, நகை, சிறப்பு என்பன உள்ளுறை தோன்றுதற்கான காரணங்கள் என்ற வகையில் அடக்கத்தக்கன. ('உலமம்' என்பது உள்ளுறையின் அமைப்பு என்ற வகையில் அடக்கத்தக்கது. எனவே எந்த அடிப்படையில் தொல்காப்பியர் இவற்றை ஐவகையாகப் பகுத்தார் என்பது விளங்கவில்லை. உடனுறை, சுட்டு, நகை, சிறப்பு என்பன உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களாலும் தெளிவுபடவில்லை.)

'உடன் உறைவது ஒன்றினைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது உடனுறை'. [139]

'ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதோர் பொருட்படுதல் சுட்டு'. [140]

---

137. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 225.

138. 'உடனுறை உலமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே'
- மேற்படி, நூ. 238.

139. மேற்படி, நூ. 238, உரை - பக். 352.

140. மேற்படி, நூ. 238, உரை, பக். 353.

'நகையினூற் பிறிதொரு பொருள் உரை நிற்றல்'[141] நகை.

'இதற்குச் சிறந்தது இ.:து எனக் கறுவதனானே பிறிதோர் பொருள் கொள்ள வைப்பது சிறப்பு'[142] என்பன இவைகளுக்கு அளிக்கப்படும் விளக்கங்களாகும்.

'உடனுறை', 'சுட்டு' என்பன சொல்லளவிலேயே 'உடனுறையும் பொருள்', 'சுட்டுப் பொருள்' என்ற பொருளைத் தெளிவாக விளக்குகின்றன.

'எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப'[143]

என 'நகை' மெய்ப்பாட்டியலில் விளக்கப்பட்டுள்ளது.

'தெய்வம் அஞ்சல் பூரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்
பூனர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாதல்
அருண்மிக உடைமை அன்புமிக நிற்றல்
பிரிவாற் றுமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொல் மாறுக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே'[144]

எனச் 'சிறப்பு' எனச் சுட்டப்படும் அழிவில் சுட்டப் பொருள்களும் மெய்ப்பாட்டியலில் கறப்பட்டுள்ளன. உள்ளுறையும் அகப்பொருளுக்குரியதாதலால் உள்ளுறையின் ஐந்து வகைகளுள் சுட்டப்பட்ட 'சிறப்பு' என்பது மேலே சுட்டப்பட்ட பத்துப்பொருட்கள் காரணமாகத் தோன்றுவது எனலாம்.[145] உவமையியலில் சுட்டப்பட்ட 'சிறப்பு'

---

141. மேற்படி.
142. மேற்படி.
143. மேற்படி, நூ. 248.
144. மேற்படி, நூ. 268.
145. மேற்படி, நூ. 275.

என்பது அகப்பொருளைச் சுட்டாது பொதுநிலையில் அமைவது. இவ்வாறு உடனுறை, சுட்டு, நகை, சிறப்பு என்பன சொல்லளவிலாகவும், அவரது நூற்பாக்களின் வாயிலாகவுமே விளங்க நிற்றலால் இந்நான்கையும் தொல்காப்பியர் தனியே விளக்கவில்லை. எஞ்சியது உவமம் ஒன்றே. இவ்வுவமத்தைப் பொதுவுவமை-, யிலிருந்து வேறுபடுத்திக் காட்ட இதனை மட்டும் தனியே எடுத்தோதியுள்ளார் எனக் கருதலாம்.

'உடனுறை முதலாயின ஐந்தும் உள்ளுறைகளே எனினும் கருத்து வேறுபாடு மோதல்களில் பெரிதும் இடம்பெறுவன உள்ளுறை உவமமும் இறைச்சியுமே'[14] என்ற கூற்றிற்கொப்ப சங்க இலக்கியங்களுள்ளும் 'உள்ளுறை உவமம்', 'இறைச்சி' என்ற இரண்டு மட்டும் தெளிவாக அறியக் கிடைப்பனவாக உள்ளன.

4.1.2.1.1.1. உள்ளுறை உவமம்

'உள்ளுறுத் திதமேடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் துரைப்பது உள்ளுறை யுவமம்'[147]

என்பது உள்ளுறை உவமத்திற்குக் கூறும் வரையறை. அகப்பாடல்கள் அனைத்தும் தோழி, தலைவன், தலைவி, செவிலி, கண்டோர் முதலியோர் கற்றுகளாக அமைவன. எனவே உவமையியலில் உவமைப் பொருள்களுக்கெனத் தோழி, தலைவன், தலைவி ஆகியோருக்குக் கூறப்படும் வரையறைகள் இவ்வுள்ளுறை உவமத்திற்கும் கொள்ளத்தக்கன.[148]

---

146. ம.ரா.போ. குருசாமி, தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், பக். 127.

147. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 51.

148. மேற்படி, நூ. 297, 298, 299, 300, 303.

4.1.2.1.1/1.1. பண்புகள்

1. உவமை, உருவகம் என்ற இரண்டும் இணைந்த நிலையில் உள்ளுறை உவமம் செயல்படுகின்றது.

'அழகிய வள்ளையினது நுண்ணிய கொடிகளை உழக்கித் திரிந்து வாளைமீனைப் பற்றித் தின்ற கர்த்த பற்களையுடைய நீர் நாயானது பிரம்பினது பழைய கொடிப்பிணக்கத்தினூடு புகுந்துறையும் தன்மையுடைய கழாஅர்' 149 என்பது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்குத் தலைவி வாயின் மறுக்கும் கற்று. இதில் வள்ளையின் நுண்ணிய கொடிகள் பரத்தையர்க்கும், நீர்நாய் தலைவனுக்கும், பிரம்பின் பழைய கொடி தலைவிக்கும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. உழக்கித் திரிதல், புகுந்துறைதல் எனும் நீர்நாயின் வினைகள், பரத்தையரொடு திரிதல், தலைவியின் இல்லத்தில் புகுந்துறைதல் எனும் தலைவனின் வினைகளுக்கு உவமையாயின.

2. சங்க இலக்கியங்களில் இவ்வுள்ளுறைகள் உட்பொருளை உணர்த்துவதோடு இலக்கியச் சுவை பயக்கும் இயற்கை வருணனையாகவும் சுருங்கச்சொல்லி விளங்க வைப்பனவாகவும் அமைந்துள்ளன.

3./நாட', 'ஊர', 'சேர்ப்ப', 'துறைவ' என்ற முன்னிலை விளிகளுக்கும், 'நாடன்', 'ஊரன்', 'சேர்ப்பன்' எனும் படர்க்கைச் சுட்டிற்கும் அடைச்சிறப்பாக அமைக்கும் வருணனை இதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவை முறையே குறிஞ்சி, மருதம், நெய்தல் திணைக்கு உரியனவாக வருவன. பாலையில் தலைவன் பொருள்வயிற் பிரிந்து செல்லும் சுர வருணனை வழியும், முல்லையில் தலைவன் வினைமுற்றி மீண்டுவரும் வழிவருணனையை விளக்குகையிலும், தலைவனின் தேர் வருகையைச் சுட்டும் வகையிலும் பருவ வருணனை வழியும் இவ்வுள்ளுறைகள் உணர்த்தப்பட்டன.

---

149. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.6.

இவ்வாறின்றிச் சிறுபான்மை,

தலைவியின் நலனுக்கு ஏதேனும் ஊரை உவமப்படுத்தி அவ்வூர் பற்றிய வருணனை வழி உணர்த்துவதும்,[150]

தலைவியின் மனைக்கு ஒப்பூமையாக ஓர் ஊரை ஒப்பூமைப்படுத்தி அவ்வூரைச் சிறப்பிக்கும் வருணனைவழி உணர்த்துவதும்,[151]

தலைவியின் ஊருக்கு அடையான வருணனைவழி உணர்த்துவதும்,[152]

தலைவனின் சிறுகுடிக்கு அடையான வருணனைவழி உணர்த்துவதும்,[153]

தலைவன் பரத்தையொடு ஆடிய நீர்த்துறைக்கு அமைந்த வருணனைவழி உணர்த்துவதும்,[154]

தலைவனின் மலைவருணனைவழி உணர்த்துவதும்,[155]

பாடலில் உள்ள வெளிப்படை உவமையில் உவமப்பொருளுக்கு அடையாக அமைந்த வருணனைவழி உணர்த்துவதும்,[156]

தலைவியின் மடமைப் பண்பை விளக்கும் நிகழ்ச்சி வருணனைவழி உணர்த்துவதும் காணப்படுகின்றது.[157]

---

150. அ.நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.185, 258, 350, 395.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.54, 55, 56, 57, 58.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.6, 10, 60.

151. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.280.

152. மேற்படி, பா.101, 121, 138, 367, 267.

153. மேற்படி, பா.81, 82, 191, 203, 323, 340.

154. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.226.

155. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.40.

156. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.356, 391.

157. மேற்படி, பா.379.

மேற்குறிப்பிட்டவை போலல்லாது, வெறும் இயற்கை வருணனை மட்டுமே அமைந்து உள்ளுறைப் பொருளை உணர்த்தும் தன்மையும் உள்ளது.

'எருமைநல் லேற்றினை மேய லருந்தெனப்
பசுமோ ரோடமோ டாம்ப லொல்லா
செய்த வினைய மன்ற பல்பொழிற்
றுதுண லெறுக்கைய வாகி யிவள்
போதவிழ் முச்சி யுதும் வண்டே' [158]

என்ற பாடல் இத்தன்மைத்து. தலைவி இற்செறிக்கப்பட்டமையால் அவள் தன் தமரை வெறுத்து தலைவனின் தண்ணளியை நாடுகின்றாள் என்பது அதில் உணர்த்தப்பட்ட உள்ளுறையாகும்.

4. உள்ளுறைப் பொருளை உணர்த்தும் வருணனைக் காட்சிக்கு உவமையை அமைத்து, அவ்வுவமை உள்ளுறைப் பொருளுக்கு ஆக்கமளிப்பதாகவும் உள்ளுறையுவமங்கள் அமைந்துள்ளன.[159] உள்ளுறைக்கான வருணனை உருவகமாகவும் விளங்குகின்றது.[160]

5. ஒரு பாடலில் ஓர் உள்ளுறையின்றி அதற்கு மேற்பட்ட உள்ளுறைகளும் அமைந்துள்ளன. நற்றிணையிலும் ஐங்குறுநூற்றிலும் ஒரே வருணனையில் இரு உள்ளுறைகளும்,[161] ஐந்து உள்ளுறைகளும்[162] இடம்பெற்றுள்ளன. கலித்தொகைப் பாடல்கள் சிலவற்றில் தனித்தனிக் கொச்சகங்களில் இவை இடம்பெற்றுள்ளன.[163]

---

158. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.93.

159. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.25.

160. மேற்படி, பா.41, 42.

161. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.85, 119, 151.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.61, 81.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.119.

162. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.328.

163. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.43, 44, 45.

(6.) (உள்ளுறையாக உணர்த்திய கருத்தையே மீண்டும் வெளிப்படையாகவும் விளக்கும் தன்மை சில பாடல்களில் காணப்படுகின்றன.)[164]

'அடிப்பகுதி பூதைந்து போம்படி மேல்காற்று கொணர்ந்து குவித்த மணற்குவியல் பரவுதலானே நெடிய பனைகள் குறிய பனைகளாகத் தோன்றுகின்ற கடற்றுறையையுடைய தலைவனிடத்து நீ கற்புக் கடம் பூண்டமையை யான் கூறுதலானே அன்னை அறிந்து கொண்டனள். எனவே தலைவனைச் சேரும் நாள் வார்த்திருத்தலோ அரிது. மிகவும் அணித்தேயாதலால் வரைவு நிகழ்தற்குரிய ஏதுக்கள் நம்மனைக்கண் நிகழ்கின்றன'[165] என்பது தோழி தலைவிக்குக் கூறுவது. நெடிய பனையின் அடிமணலில் பூதைந்து குறியதாகியது என்றது வரைவுக்கு நெடிதாயிருந்த காலம் அணித்தே வந்தது என்ற உள்ளுறையை உணர்த்தியது. இக்கருத்தே 'அவன் மார்பூக வென்ற நாளே துறகி ஈங்காதின்றே' என வெளிப்படையாகவும் உணர்த்தப்பட்டது.

கருத்தை வற்புறுத்திக் கூற இத்தன்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.)

மேற்குறிப்பிட்ட பாடலில் உள்ளுறைக் கருத்தே நேரடியாக உணர்த்தப் பட்டதைப் போலன்றி, உள்ளுறையில் உணர்த்தப்பட்டதே வேறோர் உவமை வழியாகவும்,[166] முழுப்பாடலளவில் தொக்கி நிற்கும் பொருளாகவும்[167] அமைந்த தன்மையும் ஒருசில பாடல்களில் உள்ளன.

---

164. மேற்படி, பா. 50, 52, 53.

அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, 163, 219, 239.

பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 248.

165. மேற்படி.

166. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 180.

167. மேற்படி, பா. 292.

பரத்தையிற் பிரிந்த தலைவிக்கு வாயில் நேருமாறு கூற, தலைவி அதற்கு உடன்படாமையால் சினந்த தோழி, 'தலைவனும் பரத்தையொழுக்கம் நீங்குவானல்லன். தலைவியும் புலவி நீங்குவாளல்லள். இருவர் பகையும் யான் இறந்தொழியின் தீரும்' என நொந்து கூறுகின்றாள்.[168] இப்பாடலில் முதலில் 'நாரை உரிஞ்சுதலால் தடம்பையுள் முயிறு உதிரும் ஊரன்' என்ற வருணனைவழி 'தலைவி சினமிகுத்தலான் என்னுடலினின்றும் உயிர் நீங்கும்' என்பது உள்ளுறையாய் உணர்த்தப்பட்டது. இக்கருத்தே மீண்டும், 'இருபெருவேந்தர் பொருதகளத்தில் புன்னை மரத்தை வீழ்த்த பகைமை முடிதல்போல இவ்விருவருடைய பகைமையும் யான் இறந்தால் நீங்கும்' என உவமையாகவும் விளக்கப்பட்டது.

தோழி தலைவனை வரைவு கடாவும் பாடல் ஒன்றில், 'ஆற்றின் ஏதத்தை மட்டும் கூறி, 'இத்தகைய வழியில் வருதலை நினைந்து வருந்தும் தலைவியின் துன்பம் தீர விரைவில் வரைந்து கொள்ள வேண்டும்'[169] என்பதைத் தொகை நிலையாகக் கூறுகின்றாள். இக்கருத்தே 'சந்தன மரத்தில் சுற்றிய கொடியை அறுத்து தேன்கொள்ளும் கானம்' என்ற வருணனைவழி பெறப்படும் உள்ளுறையாகவும் உள்ளது.

7. அகப்பொருளுக்கேற்பச் செய்திகளை மறைமுகமாக உணர்த்தவும், நிகழ்ச்சியோட்டத்திற்கும், கூறிவரும் செய்தியோட்டத்திற்கும் தடையில்லாதவாறும் அதே நேரம் கூற வேண்டிய எல்லாக் கருத்துகளையும் உணர்த்தற்கும் உள்ளுறை பயன்படுத்தப்படுகின்றது.

---

168. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 180.

169. மேற்படி, பா. 292.

சங்க இலக்கியங்களில், தோழியை இரந்து பின்னிற்கும் தலைவன் அவளிடம் நேரடியாகக் கேட்க இயலாத செய்தியை உள்ளுறையாக உணர்த்துகின்றன. வருந்தியிருக்கும் தலைவியைத் தன்னுடன் சேர்க்க வேண்டும் என்பதை, இறலின் குப்பை உணங்குதிறன் நோக்கி அதனை புன்னை நிழலின் முன் கொணர்ந்து பரப்பும் துறை[170] என்ற வருணனைவழி உணர்த்தியிருப்பது இதனை உணர்த்தும்.

தோழி தலைவியை ஆற்றுவிக்கும் கூற்றுகளில் வெளிப்படையாகத் தலைவிக்கு ஏற்பப் பேசுவது போல இருப்பினும் ஏற்ற காரணங்களைக் கூறி ஆற்றுவிக்க உள்ளுறையைப் பயன்படுத்துகின்றாள். 'இலங்குகோல் ஆய்தொடி நெகிழப் பிரிந்தவர் விரைவில் வருவர்' என்பதை வெளிப்படையாகக் கூறி, தலைவன் தனக்குத் தாயத்தின் கிடைத்த பொருளை விரும்பாது தானே பொருளீட்டி வரச்சென்றுள்ளான் என்பதை, நிலத்தில் உதிர்ந்து இயல்பாகக் கிடைக்கும் மலர்களை உண்ணாது கரடிகள் இருப்பை மரத்தில் ஏறும் சுரன்[171] என்ற வருணனைவழி விளக்கியிருப்பது இதற்குச் சான்றாகும்.

தலைவியோ தோழியோ தங்களது விரிவான எண்ணங்களைச் சுருங்கச் சொல்லி விளக்க உள்ளுறையைப் பயன்படுத்தினர். தலைவன் வரைவொடு வந்தான் என்பதை மட்டும் கூறி, அலர் அடங்க வந்தான், இதுநாள் வரை இருந்த களவுச் செய்தியை நன்முறையில் வெளிப்படுத்தினான்[172] என்பவற்றை உள்ளுறையாக விளக்குவது இதனை உணர்த்தும்.

---

170. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 101.

171. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 171.

172. மேற்படி, பா. 160.

இவ்வாறே தலைவன் தலைவியின் எண்ணவோட்டங்கள்,[173] களவொழுக்கத்தில் தலைவியின் துன்பம், இற்செறிப்பு,[174] தலைவன் பரத்தையரை நாடும் தன்மை[175] முதலியன உள்ளுறைப் பொருள்களாக விளக்கப்பட்டுள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் தலைவி தலைவனைக் கண்ட நிகழ்ச்சிகளை நிரலாகக் கூறி, தோழி செலவிலக்கு அறத்தொடு நிற்கின்றாள். இவற்றில் தலைவனின் உயர் குடிப்பிறப்பு, தலைவிக்கு அவனையே மணமுடிக்க வேண்டும் என்ற விருப்பம் ஆகியவற்றை உள்ளுறையாக உணர்த்துகின்றாள்.[176] இங்குக் கூறிவரும் நிகழ்ச்சியோட்டம் தடைப்படாது இருக்கவும் உள்ளுறை கையாளப்பட்டுள்ளது.

8. உள்ளுறைகள் மிகுதியாகத் தோழி கூற்றிலும் அடுத்து தலைவி, தலைவனின் கூற்றுகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாத்திரங்களின் ஆளுமை, செயற்பாடுகள் என்பவற்றிற்கேற்ப இவை அமைந்துள்ளன. தொடக்கத்திலிருந்து இறுதிவரை தோழியே தலைவியோடு நெருங்கிய தொடர்புடையவளாயிருந்து அவளது எண்ணங்களனைத்தையும் நிறைவேற்றுகின்றவளாதலின் தோழி கூற்றில் உள்ளுறை மிகுந்துள்ளது.

திணைகளில் குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை, முல்லை என்ற வரிசை முறையில் உள்ளுறைகளின் அளவு இடம்பெற்றுள்ளது.

---

173. மேற்படி, பா. 119, 121.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 29.

174. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 270.

175. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங். 1.

176. உ. வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'குறிஞ்சிப்பாட்டு', பத்துப்பாட்டு, 186-199.

நற்றிணையில் மிகுதியான உள்ளுறைகள் கையாளப்பட்டுள்ளன.

ஐங்குறுநூறு, நற்றிணை என்ற இரண்டு மட்டும் முல்லைத்திணையில் உள்ளுறையைப் பெற்றுள்ளன.

ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு என்ற மூன்று மட்டும் பாலைத் திணையில் உள்ளுறையைப் பெற்றுள்ளன.

4.1.2.1.1.1.2. வகைகள்

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென உள்ளுறுத்துரைப்பது உள்ளுறையுவமம் என்பது பொதுப்பண்பாக இருப்பினும், சங்க இலக்கியங்களிலுள்ள உள்ளுறையுவமங்கள் அனைத்தையும் தொகுத்துக் காணின் அவை அமைப்பு முறையில் மிக நுட்பமாக வேறுபடுகின்றன. இவ்வேறுபாடுகளைக் கொண்டு இவற்றை மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம்.

1. உள்ளுறைப்படுத்தப்படுதற்கான அடிப்படைக் காரணம் எளிதில் தெளிவாக விளங்கும் வகையில் அமைந்த உள்ளுறை முதல் வகையினதாகும். இவ்வகை உள்ளுறைக்குப் பொருள்களின் ஒவ்வொரு செயலுக்கும், சிறு அசைவுக்கும் இன்றியமையாமை அளித்து வருணனை அமைக்கப்பெறும். இதில் 'போல' என்பது மறைந்து நின்று உள்ளுறைப் பொருளை உணர்த்தும்.

'கயலார் நாரை போர்விற் சேக்குந்
தண்டுறை யூரன் ... ...' [177]

என்ற வருணனையில் நாரை உணவு தேர்ந்தபின் நெற்போரில் சென்று சேரும் என அதன் செயலுக்கு இன்றியமையாமை அளித்து வருணனை அமைக்கப்பட்டுள்ளது. களவின்பத்தை நுகர்ந்த தலைவன் தலைவியை மணந்து இல்லில் தங்க வேண்டும் என்பது

---

177. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.9.

இதன்வழி உணர்த்தப்பட்டது. சங்க இலக்கியங்களில் உள்ள உள்ளுறை உவமங்களில் பெரும்பான்மையும் இவ்வகையைச் சார்ந்தனவாக உள்ளன. இவ்வகை உள்ளுறை-யுவமம் உரையாசிரியர்களால் உவமப்போலி எனக் குறிக்கப் பெறுகின்றது.

மேற்கோட்டியது போன்று இயல்பான இயற்கைக் காட்சியை அமைப்பதோடு உள்ளுறையாக உணர்த்த வேண்டிய கருத்தை இயற்கைக் காட்சிகளில் ஏற்றிக் கூறி வருணனையை அமைப்பது இதன் மற்றொரு வகையாக உள்ளது.

'நாரையிரல் இன்பம் நுகரப் பெற்று செயலற்ற பேடை கழிக்கரைகளில் பெயர்ந்து சென்று சிறிய மீனையும் உண்ணுது தாழையின் பெரிய கிளைகளின்கண் வருத்தத்துடன் உறையா நிற்கும்' [178] என்ற வருணனை தலைவனால் நலனுண்ணப்பட்ட தலைவி உண்டியும் விரும்பாது இற்செறிக்கப்பட்டு வருந்தி உறங்கா நிற்கும் நிலையை உணர்த்தியது. வேண்டுமென்றே புலவன் அமைத்த வருணனை என்பது இங்குத் தெளிவாக விளங்குகின்றது. 'தற்குறிப்பேற்ற உள்ளுறை உவமம்' என இதனைக் கூறலாம். சங்க இலக்கியங்களில் சிறுபான்மை இவ்வகை உள்ளுறையுவமங்கள் இடம்பெற்றுள்ளன. [179]

2. முதல் வகையைப் போன்றல்லாது உள்ளுறைப்படுத்தப்படுதற்கான காரணத்தை உய்த்துணரும் வகையில் அமைத்திருப்பது இரண்டாவது வகை) இயல்பான காட்சி மட்டும் சுட்டப்பட்டு அதில் ஒரு நிகழ்வை, வேறுபாட்டைக் கற்போரே உணரும்படி செய்து, அதன்வழி உள்ளுறைப் பொருளை உணர்த்துவது இதன் தன்மை.

'மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்டுறை யூரன் ... ...' [180]

---

178. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 178.

179. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 119, 66.

180. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 6.

என்ற வருணனையில் பொய்கைக்குத் தாமரை அணியாவதுபோலத் தலைவி அணியாகும் வண்ணம் தலைவன் அவளை வரைந்து கொள்ள வேண்டும் என்பது உள்ளுறையாய் உணர்த்தப்பட்டது. பொய்கைக்குத் தாமரை அணியாகும் என்பது உய்த்துணரும் தன்மையது.[181] ஐங்குறுநூற்றில் இத்தன்மை மிகுதியாகக் காணப்படுகின்றது.

இவ்வகை உள்ளுறையே உவமை அமைப்பைக் கொண்டு விளங்குவது இதன் மற்றொரு தன்மையாக உள்ளது. இதில் உவமையை வெளிப்படையாக அமைத்து, அதில் உள்ளுறைப்படுத்தப்படுதற்கான காரணம் உய்த்துணரப்படும்.

'கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்'[182]

என்ற வருணனையில் 'வேழம் கரும்பின் பூவைப் போன்று பூக்கும்' என்பது பொருள். இங்கு, 'சிறப்பில்லாத வேழம், சிறப்புடைய கரும்பைப் போன்று பூக்கும்' என்பது உய்த்துணரப்பட்டு, அதன்வழி 'குலமகளிரல்லாத பரத்தைக் குலமகள் போலத் தலைவனுக்குத் தோற்றுகின்றாள்' என அவனது பரத்தைமையொழுக்கம் உள்ளுறையாய்ச் சுட்டப்பட்டது. இத்தன்மையும் சிறுபான்மையே பயிலப்பட்டுள்ளது.[183]

---

181. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 1, 2, 3, 6, 7, 8, 10, 16, 57, 58, 89, 91, 249, 283, 287.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 91, 249.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 16.

182. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 12.

183. மேற்படி, பா. 12, 13, 17, 18, 68, 98, 280.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 76, 108, 206.

அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 188.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 9.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 44, 69, 70, 71.

(3.) எடுத்துக்காட்டு உவமையமைப்பைப் பெற்று வந்த உள்ளுறையுவமம் மூன்றாவது வகையாகும். தறைந்த அடி அளவுடைய குறுந்தொகை,[184] ஐங்குறுநூறு[185] என்ற இரண்டில் மட்டும் இத்தன்மை காணப்படுகின்றது.

'நாட', 'ஊர' என்பனவற்றிற்கு அடையாக அமைவதைப் போன்றல்லாது வெறும் வருணனையாக அமைவது இத்தன்மை.

'அளிய தாமே செல்வாய்ப் பைங்கிளி
னன்றக் தறவர் கொய்தினைப் பைங்கா
லிருவி நீள்புனங் கண்டும்
பிரித லேற்றுப் பேரன் பினவே'[186]

என்ற பாடல் 'தினைப்பயிர்களை அரிந்த பின்பும் விட்டு நீங்காத பேரன்புடையன கிளிகள்' எனும் பொருளுடையது. தினையை அரிந்த பின்னரும் கிளிகள் அதனையே நினைந்து வருதல் போலத் தலைவி இல்லின்கண் இருந்தாலும் உன்னையே நினைந்து கொண்டிருக்கின்றாள் என்பது உள்ளுறையாக உணர்த்தப்பட்டது. எடுத்துக்காட்டு உவமையமைப்பைப் பெற்றிருப்பினும் அகப்பொருளாதலால் உள்ளுறையாயிற்று.

இவ்வாறு சங்க இலக்கிய உள்ளுறைகள் அனைத்தையும் இம்மூன்று வகைகளுக்குள் அடக்கி விடலாம். இவற்றுள் சிறுபான்மை இருதியிரண்டு வகைகளைச் சார எஞ்சிய அனைத்தும் முதல் வகையில் அடங்குவனவாகும்.

4.1.2.1.1.2. இறைச்சி

தொல்காப்பிய உரைகளிலிருந்தும், சங்க இலக்கிய உரைகளிலிருந்தும் பொருட்புறத்துப் பிறந்த இறைச்சி,[187] கருப்பொருள் புறத்துப் பிறந்த இறைச்சி,[188]

---

184. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 112.
185. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, 93, 284, 301.
186. மேற்படி, பா. 284.
187. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 41.

இறைச்சியிற் பிறக்கும் பொருள்[189] என்ற வகைகள் பெறப்படுகின்றன. எவ்வரை-யறையைக் கொண்டு இவ்வகைகள் கூறப்படுகின்றன என்பதும் தெளிவாக விளங்கவில்லை. தொல்காப்பிய நூற்பாக்களில் இவைகள் சுட்டப்பெறவில்லை. இந்நூற்பாக்களை மட்டும் கொண்டு காணுமிடத்து, 'இறைச்சி' என்பது உரிப்பொருளை மட்டுமே உணர்த்துவது. நன்கு ஆய்ந்து தெளிவோர்க்கு இப்பொருள் புலனாகும். அன்புறு தகுவன இதில் சுட்டப்படும் என வரையறுக்கலாம்.

சங்க இலக்கியங்களில் உள்ளுறைகளைக் காட்டிலும், இறைச்சிகள் குறைந்த அளவினதாகவே உள்ளன.

உள்ளுறைகளைப் போன்றே நாட, ஊர, சேர்ப்ப என்பதற்கு அடைச் சிறப்பாகவும், வழிவருவினையாகவும் அமைந்துள்ளன.

பாலை, குறிஞ்சி, நெய்தல், முல்லை, மருதம் என்ற வரிசைமுறையில் திணைகளில் இறைச்சிகள் இடம்பெற்றுள்ளன.

உள்ளுறைகளைப் போன்றே இறைச்சிகளும் நற்றிணையில் மிகுதியாகப் பயின்றுள்ளன.

இறைச்சிகள் தலைவனின் பண்பு தொடர்பாகவும், தோழி தலைவியை ஆற்றுவிப்பதாகவும், தோழி தலைவனைச் செலவழுங்குவிப்பதாகவும், தலைவி தன் ஆற்றுமையை வெளிப்படுத்துவதாகவும், தலைவியை விரைந்து காண வேண்டுமெனும் தலைவனின் நெஞ்ச உணர்வை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

தோழி, தலைவி, தலைவன் என்ற மூவரது கூற்றுகளே இவற்றில் இடம் பெற்றுள்ளன. பிறர் கூற்றுகள் இடம்பெறவில்லை. இவர்களில் தோழி கூற்று மிகுந்துள்ளது. தோழியை அடுத்து தலைவி, தலைவன் என்ற வரிசையில் இடம் பெற்றுள்ளன.

---

189. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 43.

குறிஞ்சித் திணையிலும், நறுந்தொகையிலும் தலைவன் கூற்றில் இறைச்சி இடம்பெறவில்லை.

முல்லைத்திணையில் மட்டும் இறைச்சிகள் தலைவன் கூற்றில் மிகுந்துள்ளன. வினைமுற்றி மீளும் தலைவனின் எண்ணவோட்டங்களை, மன உணர்வுகளை வெளிப்படுத்துவதாக முல்லைத்திணையில் தலைவன் கூற்றுகள் அமைந்திருத்தலால் இத்தன்மை எனலாம்.

பாலைத்திணைப் பாடல்கள் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையைக் காட்டுதலால் இத்திணையில்தான் தலைவி கூற்றில் இறைச்சிகள் மிகுந்துள்ளன.

ஒரே பாடலில் இறைச்சி, உள்ளுறை என்ற இரண்டும் இடம்பெற்றுள்ள தன்மையும் காணப்படுகின்றது.[190]

சங்க இலக்கியங்களில் இறைச்சிகள் கையாளப்பட்ட தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மூவகையாகப் பாகுபடுத்தலாம்.

1. அன்பு நிகழ்ச்சிகளை விளக்கி அதன்வழி இறைச்சியை வெளிப்படுத்தல் முதல் வகையாகும். காணும் காட்சிகளையும் கடந்து பாத்திரங்களின் உள்ளங்களில் எழும் எண்ண அலைகளை விளக்குவது இத்தன்மை.

இரண்டு காட்சிகளைக் காட்டி, இத்தகைய காட்சியைக் கண்டும் தலைவன் வரவில்லையென வருந்தும் தலைவி கூற்றுகளும், 'இத்தகு காட்சியைக் காண்பாராதலால் தலைவன் விரைந்து வருவான் என ஆற்றுவித்தும் தோழி கூற்றுகளும், 'இவைகளைப் போன்று நாமும் தலைவியை விரைந்து சேர வேண்டும் என எண்ணும் தலைவனின் கூற்றுகளும் இவை அமையும்.

---

190. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, 263, 302, 333, 353.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.85.

'பெருங்கை என்கின் பேழ்வாய் ஏற்றை
இருள்துணிந் தன்ன குவவுமயிர்க் குருளை
தோன்முலைப் பிணவொடு திளைக்கும்
வேனில் நீடிய சுரன்இறந் தோரே' 191

என்பது பிரிவில் மாறுபட்ட தலைவியை ஆற்றுவிக்கும் தோழி கற்றில் அமைந்த வருணனை. ஆண்கரடி பெண்கரடியோடும் தனது குட்டியோடும் இருந்து மகிழும் வழியைக் கடந்து வருதலால் அக்காட்சி உன்னை நினைவூட்டித் விரைந்து வருவர். எனவே ஆற்றியிரு என்பது இதன்வழி உணர்த்தப்படும் இறைச்சியாகும்.

களவொழுக்கத்தில் இரவுக்குறி காணவரும் தலைவனை நினைந்து வருந்தும் தலைவி, 'பெண்புலியின் பசியைப் போக்க வேண்டி ஆண்புலி இரைதேடிப் பதுங்கியிருக்கும் நெறியிலே வருகின்றவன்' 192 எனக் கறுகின்றாள். இத்தகைய காட்சியைக் கண்டு வருபவனுயிருந்தும் தன்னுடைய துன்பம் தீர வரைய முயன்றிலனே எனத் தலைவி வருந்துவதும் அதேநேரம் வருவான் என உள்ளத்தில் கொள்ளும் நம்பிக்கையும் இங்கு இறைச்சிப் பொருளாக உணர்த்தப்பெற்றது.

'மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
மகளி ரன்ன துணையொடு வதியு
நிழன்முதி ரிலஞ்சிப் பழனத் ததுவே
கழனித் தாமரை மலரும்
கலின்பெறு சுடர்நுத றந்தை யூரே' 193

---

191. மேற்படி, பா. 201.

192. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 332.

193. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 94.

என்பது வரைவிடை னவத்து மீளும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவது. எருமை துணையொடு வதியும் காட்சியைக் காணும் தலைவன், தானும் தலைவியை விரைந்து காண வேண்டும் என எண்ணுவது இறைச்சிப் பொருளாக உணர்த்தப்பட்டது.

இவ்வாறு அன்பு காட்சிகளின்வழி உணர்த்தப்படும் தன்மையே சங்க இலக்கிய இறைச்சிகளில் மிகுந்துள்ளது.[194] எல்லாத் திணைகளுக்கும் உரியதாக இத்தன்மை பயின்று வந்துள்ளமையும் குறிப்பிடத்தகுந்தது. இப்பண்புகள்,

'அன்பு தகுவன இறைச்சியிற் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே'[195]

என்பதற்கொப்ப அமைந்து இக்கூற்றை உறுதிப்படுத்துவனவாய் உள்ளன.

2. தலைவனின் நாட்டுச் சிறப்பைக் கூறி அதனுடன் தலைவனின் பண்பை ஒப்பிட்டுக் காணும் மன உணர்வை வெளிப்படுத்துவது இரண்டாம் வகை. இது தலைவனை மட்டுமே சுட்டி வருவது.

'பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு
நின்கிளை மருங்கிற் சேறி யாயின்'[196]

---

194. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 37, 92, 118, 256, 314, 242, 332, 383, 231, 319, 338, 218, 123, 117, 31.

பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, 16, 18, 79, 92, 37, 183, 363, 255, 278.

பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, 31, 133, 147, 205, 277, 353, 23, 147, 84, 526, 304, 154, 173.

195. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 227.

196. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 102.

என்பது விரைந்து வரைந்து கொள்ளாத தலைவனை நினைந்து வருந்தும் தலைவியின் கற்று. தலைவனுடைய சார்பால் பலர்க்கும் பயன்தரும் தன்மையுடையதாயிருந்தும் தலைவன் தமக்கு அருமும் பண்பினராக இல்லை என வருந்தும் தலைவியின் உள்ளநிலை இந்த இறைச்சியாகச் சுட்டப்பட்டது. 'நாடன்', 'ஊரன்' என்பனபோன்று முல்லைத்திணையில் தலைவன் எத்தகைய பெயராலும் சுட்டப்படவில்லையாதலால் இவ்வகை இறைச்சி முல்லைத்திணையில் இடம்பெறவில்லை.[197]

3. வெளிப்பட வந்த உவமைவழி இறைச்சிப் பொருளை உணர்த்துவது மூன்றாவது வகையாக உள்ளது. தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, 'தலைவன் சென்ற நாட்டில் மேகம் மகளிர் பொலந்தொடி போல மின்னும்'[198] எனக் கூறுகின்றாள். 'மின்னல் உனது தொடியை நினைவூட்டி உன்னையும் நினைவூட்டுமாதலால் விரைந்து வருவர்' என ஆற்றுவிப்பது இந்த இறைச்சிப் பொருளாக உள்ளது. சிறுபான்மையளவே இவ்வகை இறைச்சி பயின்று வந்துள்ளது.[199] காற்பருவத்தை நினைவூட்டும்

---

197. மேற்படி, பா. 93, 173, 365, 70, 268, 17, 70, 88.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 13, 9.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 5, 198, 141.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 45, 123, 131.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 2, 72, 168, 98.

198. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 197.

199. மேற்படி, பா. 274, 286, 197, 242, 333.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 282.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 423, 464, 452, 484.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 28.

நிகழ்ச்சிகள், தலைவியை நினைவூட்டும் பொருட்கள் என்பன இவற்றில் உவமப் பொருட்களாக அமைந்துள்ளன. தோழி கற்பூகவும், தலைவியை ஆற்றுவிப்பதாகவும் மட்டும் இவ்வகை இறைச்சி அமைகின்றது. உவமை வழி உணர்த்துவதாக இவ்வகை அமையினும், உள்ளுறை உவமத்திலிருந்து இது முற்றிலும் மாறுபட்டு விளங்குவதாகும்.

'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே'

என்பது பொதுவகையில் 'இறைச்சி'யைக் குறிப்பதாகினும் மேற்குறிப்பிட்ட இறைச்சி வகைகளில் இறுதியிரண்டையும் குறிப்பாகச் சுட்டி நிற்கின்றது எனலாம். இன்ன கருத்தை உள்ளுறையாக உணர்த்த இன்ன வருணனை உவமமாக அமைந்தது என்ற அமைப்புடைய உள்ளுறை உவமத்தைப் போலல்லாது, கருப்பொருட்கள் வெறுமனே நின்று குறிப்பை உணர்த்தியிருப்பது இவ்எண்ணத்திற்குக் காரணமாய் அமைந்தது. இவற்றுள் முதல்வகை 'அன்பும் தகுவன இறைச்சியிற் சுட்டலும்' என்பதற்கொப்ப அமைந்திருத்தலால் அதனை இங்குக் குறிக்கவில்லை.

இவ்வாறு சுட்டப்படும் கருப்பொருள் காட்சிகளுக்கும் மேலாக வேறொரு பொருளை உணர்த்துவது இறைச்சி எனப்படுகின்றது.

'சொல்லிச் சென்றபடி மீண்டு வாராத தலைவனைப் பற்றி நினையும் தலைவி, அவன் மலையில் வீழும் அருவியைப் பார்க்கிறாள்; வளம் செறிந்த கழனிகளையும் பொழில்களையும் பார்க்கிறாள். இவற்றைப் பார்த்து அவள் புலம்பும்போது செயலற்றுக் கலங்கும் அப்பேதையின் இதயக் குமுறலை நாம் கேட்க முடிகின்றது. 'இந்த உலகத்தில் பொய்தான் எப்படிச் செழித்துச் சிறக்கிறது, பார்த்தாயா!' எனப்புலம்பும் அவள் நெஞ்சக் குமுறலின் குறியீடுகளே இங்கு வந்த இயற்கைக் காட்சிகள். இவ்வியற்கைக் காட்சிகள் இவ்வாறு குறியீடுகளாக இருப்பதோடு அமைவதில்லை; அதன்மேலும் அக்காட்சிகளில் வேறொரு

உட்குறிப்பு அடிநாதமாக எழுந்து படிக்கின்றவர்களின் இதயத்தை மெல்லென வருடுகின்றது. அந்த மறு எதிரொலியால் ஓர் உறுதி ஏற்படுகின்றது. சூள் பேணுது பொய்த்தான் மகிலயில் இப்படி வளம் இருக்க முடியுமா! வளமார்ந்த காட்சியிலிருந்தே தலைவன் பொய்த்தல் அறியான் என்ற குறிப்பும் கிடைக்கிறது. இப்படி மறு எதிரொலியாக வருவதே இறைச்சி எனப்படும்' [200] எனும் விளக்கமும் இதனை உணர்த்தும்.

உள்ளுறை உவமம் - இறைச்சி வேறுபாடுகள்

1. இரண்டும் நிலம் பொழுது பற்றிய வருணனைகளை நிலைக்களன்களாகக் கொண்டு தலைவனுக்கும், அவனது ஊருக்கும், அவன் செல்லும் வழிக்கும் அடைச்சிறப்பாக விளங்கும் வருணனைகளாக அமைந்துள்ளன.

2. தெளிவாக உவமை, பொருள் என வேறுபடுத்திக் காணும் வகையில் அமைந்திருப்பது உள்ளுறை உவமம்.

முற்றிலும் உவமை அமைப்பிலிருந்து மாறுபட்டு விளங்குவது இறைச்சி.

3. உள்ளுறை உவமத்தில் நீண்ட வருணனைகளும் இடம்பெறும்.

4. இறைச்சி அனைத்தும் உய்த்துணரும் வகையில் அமைந்தவை.

உள்ளுறை உவமம், உவமை அமைப்பைக் கொண்டு அதன்வழி உள்ளுறை படுத்தப்படுதற்கான காரணத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ளும் வகையிலும், சிறுபான்மை உய்த்துணரும் வகையிலும் அமைந்ததாகும்.

5. உள்ளுறை உவமம், உருவத்தோடும் தொடர்புடையதாக இருக்கும். இறைச்சிக்கும் உருவகத்திற்கும் தொடர்பு இல்லை.

---

200. தெ.பொ. மீனாட்சிசுந்தரம், 'மேற்கோள்', தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், பக். 121.

6. உள்ளுறை உவமத்தில் தற்குறிப்பேற்றமும் இருக்கும். இறைச்சி தற்குறிப்பேற்றத்திற்கு இடமளிக்காது இயல்பான வருணனைகளையே பெற்றிருக்கும்.

7. இறைச்சி, உள்ளுறை உவமம் இரண்டும் தலைவனைச் செலவழுங்குவிக்க, பிரிவில் தலைவியின் ஆற்றுமையுணர்வை வெளிப்படுத்த, தலைவியை ஆற்றுவிக்க, பிரிவிடை தலைவனின் எண்ணத்தை வெளிப்படுத்த என்பனவற்றிற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

உள்ளுறை உவமத்தில் மேற்குறித்த செய்திகளோடு வரைவு கடாதல், இற்செறித்தலை உணர்த்தல், தலைவன் தலைவியின் குடிச்சிறப்பை உணர்த்தல், வாயின் மறுத்தல், வாயிலாக வரும் பாணனைத் தாக்குதல் என்பனவைகளும் விளக்கப்படும்.

8. உள்ளுறை உவமத்தில் உணர்வுநிலையோடு, புறத்தோற்றம், பண்பு நலன்கள், நிகழ்ச்சி விளக்கங்கள் என்பனவும் இடம்பெறும். இறைச்சியில் முழுமையாக உணர்வுநிலக்கு மட்டுமே இடமளிக்கப்படும்.

9. இரண்டும் உணர்வுநிலையோடு தொடர்புடையனவாயிருப்பினும் வெளிப்படுத்தும் முறையில் இரண்டும் வேறுபடுகின்றன. உள்ளுறை உவமத்தில் ஒரு செய்தியை மற்றவர்க்கு எடுத்துரைத்தல் என்ற நிலையில் உணர்வுகள் வெளிப்படுத்தப் படுகின்றன. அ.தாவது மெய்ப்பாடுகள், புறத்தோற்ற மாறுபாடுகள் இவற்றைச் சுட்டுதல்வழி மனநிலையில் ஏற்பட்ட மாற்றம் உணர்த்தப்படுகின்றது. இறைச்சியில் இதற்கு முற்றிலும் மாறுக, பாத்திரங்கள் குறிப்பிட்ட காட்சியைக் காணும்பொழுது குறிப்பிட்ட உணர்வுவயப்பட்டு நிற்கும் நிலையை அடிப்படையாகக் கொண்டு விளக்கப் படுகின்றது.

10. இறைச்சியில் கருப்பொருட்களைச் சுட்டும் 'இறைச்சி' என்ற சொல்லே கருப்பொருளில் பெறப்படும் குறிப்புப் பொருளைச் சுட்டுதற்குரிய பெயராகவும் ஆகிவந்துள்ளது.

உள்ளுறை உவமமும் கருப்பொருட்கள் வாயிலாகவே உணர்த்தப்படினும், அவற்றில் கருப்பொருட்கள், உவமப் பொருட்கள் என்ற நிலையில் செயல்படுகின்றன. இறைச்சியில் கருப்பொருட்களே நேரடியாக நின்று குறிப்புப் பொருளை உணர்த்துகின்றமையால் இப்பெயர் பெற்றது எனலாம்.

11. இறைச்சி தோழி, தலைவி, தலைவன் ஆகிய மூவர் கற்றுகளாக மட்டும் அமையும். உள்ளுறை உவமம் இம்மூவரோடு பிறர் கற்றுகளாகவும் அமையும்.

4.1.2.1.2. படிமக் காட்சி

ஓர் இலக்கியப் படைப்பில் ஒரு சொல்லோ, பொருளோ தொடர்ந்து பயன்படுத்தப்படும் இடங்கள் அனைத்திலும் குறிப்பிட்ட பொருளுணர்வையே அளிப்பதாக அமையின் படிமக் காட்சி எனப்படுகின்றது. சொற்கள் குறியீடுகளாய் நிற்பது குறியீட்டுச் சொற்கள் என முற்பகுதியில்[201] குறிக்கப்பட்டது. 'படிமக் காட்சி' எனும் இப்பகுதி பொருட்கள் குறியீடுகளாய் நிற்பதைச் சுட்டுகின்றது.

சுருங்கச் சொல்லி விளக்கவும், குறிப்பிட்ட பொருளின் காட்சியைக் கற்பவர் மனதில் தோற்றுவிக்கும் வழி, கருத்தைக் குறிப்பாகவும், எளிதாகவும் உணர்த்தவும் சங்க இலக்கியங்களில் இத்தன்மை பயன்படுத்தப்பட்டுள்ளது. அகப்பாடல்களுக்கு மட்டும் உரியதாய் உள்ளமையால் இது, பாத்திரங்கள் தங்களுக்குள் உணர்த்திக் கொள்ளும் குறிப்பாக உள்ளதோடு, பாத்திரங்களின் அகவுணர்வுகளை நுட்பமாக வெளியிட புலவன் மேற்கொண்ட முயற்சியாகவும் விளங்குகின்றது.

சங்க இலக்கியங்களிலுள்ள படிமக் காட்சிகளை இயற்கைப் படிமக் காட்சிகள், தனிப்படிமக் காட்சிகள், மரபுப்படிமக் காட்சிகள் என மூவகையாகப் பாகுபடுத்தலாம்.

---

201. காண்க: இயல் இரண்டில்.

4.1.2.1.2.1. இயற்கைப் படிமக் காட்சிகள்

ஒவ்வொரு திணைக்கெனக் குறிப்பிட்ட கருப்பொருட்களை வரையறுத்து அவை அவ்வத்திணைகளுக்குரிய படிமக் காட்சிகளாய் விளங்குவது சங்க இலக்கியங்களின் குறிப்பிடத்தக்க பண்பாகும். இவற்றுள் கார்ப்பருவவருணனையும், இளவேனிற் பருவ வருணனையும் இன்றியமையாததாக விளங்குகின்றது. இப்பருவ வருணனைகள் இயற்கை நிகழ்ச்சியை உள்ளபடியே காட்டுவதெனினும் புலவன் குறிப்பிட்ட நோக்கத்தில் பயன்படுத்துவதால் அவை சிறந்த படிமக் காட்சிகளாய் அமைகின்றன. 'பிரிவினையிற் பிரிந்த தலைவனின் வருகை' என்பதைச் சுட்டும் படிமக் காட்சியாய் இவ்விரு வருணனைகளும் விளங்குகின்றன. தோழி தலைவியை ஆற்றுவிக்கும் இடங்களிலும், தலைவன் வரவில்லையென வருந்தும் தலைவியின் ஆற்றுமையுணர்வை வெளிப்படுத்தும் இடங்களிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. கார்ப்பருவ வருணனையில் முல்லை, பித்திகை, குருக்கத்தி என்பன குறிப்பிடத்தக்கவையாயுள்ளன.

'நம்வயிற் பூரிந்த கொள்கையொடு நெஞ்சத்து
உள்ளினள் உறைவோள் ஊரே முல்லை
நுண்முகை யவிழ்ந்த பூவின்
பொறைதலை மணந்தன்று உயவுமார் இனியே' [202]

என்பது பொருள்வயிற் பிரிந்த தலைவனின் கூற்று. இதில் 'முல்லையின் நுண்ணிய அரும்பு மலர்ந்த பூவு' என்ற வழி கார்காலம் குறிப்பாக உணர்த்தப்பட்டது. கார்காலம் வந்தமையால் தன் வரவை எதிர்நோக்கியிருக்கும் தலைவியின் நிலையை நினைந்து பார்த்து அவளைக் காண விழையும் தலைவனின் உள்ளநிலை குறிப்பாக உணர்த்தப்-படுகின்றது.

தலைவன் பிரிந்தானென ஆற்றுளாய தலைவி, 'குயிலினுங் காட்டில் ஆற்றுநீர் கொடிதாக உள்ளது. அதனினுங் கொடிதாக குருக்கத்தியொடு, பித்திகை

---

202. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 59.

மலரை விற்கும் மடமகள் உள்ளாள்' [203] எனக் கூறுகின்றாள். பித்திகையும், குருக்கத்தியும் கார்காலத்தை உணர்த்தி அப்பருவத்தில் வரவேண்டிய தலைவன் வரவில்லையென வருந்தும் தலைவியின் உள்ளநிலையை வெளிப்படுத்துகின்றது.

ஐங்குறுநூற்றில் 'இளவேனிற்பத்து' என்ற தனிப்பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் உள்ள பத்துப் பாடல்களிலும் இளவேனிற் பருவத்தில் மலரும் மலர்கள் ஒவ்வொன்றுடன் சுட்டப்பட்டுள்ளன. நுணவம், கோங்கம், குரவம், பாதிரி, புன்கு, மரா, மா, வேம்பு என்பன இவற்றில் குறிக்கப்பட்டவையாகும். இவை இளவேனிற் பருவத்தைச் சுட்டி, தலைவன் வரவில்லையென வருந்தும் தலைவியின் நிலையைக் காட்டுகின்றன.

வேங்கை, வேம்பு ஆகியனவும் இதில் பயன்படுத்தப்படுகின்றன. தலைவன் சிறைப்புறத்தாலுக வரைவுகடாவும் தோழி, 'தினைப்பயிர்கள் வளர்ந்-தமையால் தந்தை கவண் வீசுக என உரைத்தனன். 'உடனே தாய் வேங்கையும் மலர்க' என என்முகம் நோக்கினள்' [204] எனத் தலைவிக்குக் கூறுவதாக அமைந்த பாடலில் வேங்கை மலர்வது தினையாயும் காலத்தைக் குறித்து தினையாரிந்ததும் இற்செறிக்கப்படுவதையும் உணர்த்தியது.

பிரிவில் வருந்தும் தலைவி, 'நிலங்கரி கள்ளியங் காடிறந் தோரே வேப்ப ஒண்பழம் உள்ளார் கொல்லோ தோழி' [205] என வினவுகின்றாள். வேப்ப ஒண்பழம் இளவேனிற் பருவத்தைச் சுட்டி இப்பருவத்தும் தலைவன் வரவில்லையென வருந்தும் தலைவியின் ஆற்றுமை இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறே மாலைநேர வருணனையும் தலைவியின் ஆற்றுமையை உணர்த்தும் காட்சியாய் உள்ளது. பிரிவிடை வருந்தும் ஒவ்வொரு தலைவியின் கூற்றிலும் இது இன்றியமையாது இடம்பெறுகின்றது.

---

203. மேற்படி, பா. 97.
204. மேற்படி, பா. 206.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 266.
205. மேற்படி, பா. 67

பூந்தாது, பீர்க்கம்பூ, கொன்றைப்பூ, சூரழற்பூ, பொன் என்பன அவற்றின் பொன்னிறத்திற்காகப் பயின்று அந்நிறம் தலைவியின் பசலையைச் சுட்டும் பொருள்களாய் வந்தன. இவற்றுள் பீர்க்கம்பூவும், பொன்னும் மிகுந்த ஆட்சி பெற்றுள்ளன.

'இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செம்பூநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்பூதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே' [206]

என்பது பருவம் வந்துழியும் தலைவன் வாராமையால் வருந்திய தலைவி தோழிக்குக் கூறுவது. 'தலைவன் வாராமையால் தலைவியின் நெற்றியில் பசலை பாய்ந்தது என்பதைச் சுட்ட மாரிப்பீரத் தலர்சில கொண்டு காட்ட வேண்டும்' எனக் கூறுகின்றாள்.

தலைவன் விரைவில் வரைந்து கொள்ள வேண்டுமென விழையும் தலைவி தலைவன் சிறைப்புறத்தானாக இருக்க, 'ஒருவன் வந்து என்னை நோக்கி நெடிது நினைந்து சென்றனன். அதற்கே இவ்வூர், புன்னையின் பூந்துகளை நோக்கி என்னையும் நோக்குகின்றனர்' [207] எனக் கூறுகின்றாள். புன்னையின் தாது பசலையைக் குறிக்கும் படிமமாய் நின்று தலைவியின் மாற்றத்தை உணர்த்தியது.

'தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே' [208]

---

206. மேற்படி, பா. 98.

207. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 180.

208. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 41.

'முற்றெழில் நீலமலரென உற்ற
இரும்பீர் வடியன்ன உண்கட்டும் எல்லாம்
பெரும்பொன் னுண்டென் பா யினி' [209]

என்ற கற்றுகளும் இத்தன்மையை உணர்த்தி நின்றன. கைக்கிளையாக வரும் புறப்-பாடல் ஒன்றிலும் இத்தன்மை காணப்படுகின்றது. [210]

இறைச்சிப் பொருளைச் சுட்ட வரும் அன்பூறு தருவனவான விலங்கு, பறவை ஆகியவற்றின் இயல்புகளும் படிமக் காட்சிகளாய்ச் செயல்படுவது இன்றியமையாது குறிக்கத்தக்கது. இக்காட்சிகள் பயின்று வரும் இடங்களனைத்தும் தலைவியின் ஆற்றாமையையும் விளைவயிற் பிரிந்து மீளும் தலைவனின் நெஞ்ச உணர்வையும் காட்டுவதாக உள்ளன.

4.1.2.1.2. 2. தனிப்படிமக் காட்சிகள்

இயற்கைப் பொருட்கள், மரபுப் பொருட்கள் என்ற இரண்டுமல்லாது புலவன் தன் எண்ணப்படி பொருட்களைக் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே பயன்-படுத்தும்பொழுது அவை தனிப்படிமக் காட்சிகளாகின்றன.

வளையல் நெகிழ்தல்

தலைவியின் துன்பநிலை, உடல் மெலிவு, மகிழ்ச்சியுணர்வு என்பவற்றைச் சுட்ட வளையல் சிறந்த கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வரைந்து கோடற்கு முயலாது களவிலொழுகும் தலைவன் சிறைப்-புறத்தாகை இருக்க தோழி தலைவியிடத்து, 'நந்தலைவன் வாராதிருப்பினும்

---

209. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 64.

210. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 84.

இருப்பாளுக; இவ்வூரில் வளையல் விற்போரிடத்துச் சிறிய வளையல்களும் உண்டு'[211] எனக் கூறுகின்றாள். தலைவன் காலம் நீட்டிப்பதால் தலைவியின் துன்பம், அவள் உடல் மெலிவு என்பன இந்த உரைத்தப்பட்டுத் தலைவன் விரைவில் வரைந்து கொள்ள வேண்டுமென்பதும் குறிப்பாக உணர்த்தப்பட்டது.

இவ்வாறு தலைவன் பிரிவைத் தலைவி ஆற்ற இயலாது என்பதை உணர்த்தற்கும்,[212] தோழி தலைவியின் ஆற்றுமையை உணர்த்தற்கும்,[213] தலைவனைக் கண்டமையால் தலைவிக்கு நேர்ந்த உளமாற்றத்தைக் குறிக்கவும்,[214] தலைவன் பல மகளிரையும் துன்புறச் செய்பவன் என்பதை உணர்த்தற்கும்[215] இது பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, 'தண்புனத்தில் வெண்கதாள மலர்களைக் காணுந் தலைவன் இப்பூவிய மலர்கள் தங்காம்பினின்றும்

---

211. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 117.

212. மேற்படி, பா. 11, 125, 216, 289, 304, 371.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 20.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 26.

213. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 163, 285.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 23.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 365

214. மேற்படி, பா. 303.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 198.

215. மேற்படி, பா. 25, 38.

கழன்று உதிர்தலைப் போன்று நின்கை வளைகள் கழன்று வீழும் எனக் கருதுவான்'[216] என்று கூறுகின்றாள். இந்த வெண்கதாள மலர் வளையலுக்கு ஒப்புமைப் பொருளாகி அது தலைவியின் மெலிவை உணர்த்தும் படிமக் காட்சியாகவும், தலைவன் விரைந்து வருவான் என்ற குறிப்பைத் தலைவிக்கு உணர்த்துவதாகவும் உள்ளது. தலைவன் தலைவி நினைவாகவே உள்ளான் என்பதும் இக்காட்சிவழி உணர்த்தப்படுகின்றது. இக்குறிப்பை உணர்த்தற்கெனப் புலவன் வேண்டுமென்றே இதனைப் பயன்படுத்திய தன்மையோடு, பாத்திரங்கள் உளவியல் தன்மையோடு படைக்கப்படுதற்கு உதவுவதும் இந்தப் பெறப்படுகின்றது.

தலைவியின் துன்ப உணர்வையும், தலைவியின் உடல் மெலிவையும் சுட்ட 'நெகிழ்ந்த வளை' மிகுதியாகப் பயின்று, தலைவனுக்கு வாயின் மறுக்க 'செறிந்த வளை' அரிதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'உற்றின் றூறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் றூற்றெனுஞ் செறிந்தன வளையே'[217]

என்பது தோழி தலைவனுக்கு வாயின் மறுப்பது, 'செறிந்த வளையை'ச் சுட்டி, 'தலைவி உன் அன்பை நினைந்தே மகிழ்ந்திருக்கின்றாளாதலின் நீ வரவில்லையென உடல் மெலியவில்லை. எனவே நீ இங்கு வர வேண்டாம்' என வாயின் மறுப்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றாள். ஐங்குறுநூற்றில் 'வளைப்பத்து' என்ற பகுதியிலுள்ள பாடல்களில் தலைவியின் மெலிவைச் சுட்ட வளையல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு வளையலைக் குறிப்புப் பொருளை உணர்த்தும் படிமக் காட்சியாய்ப் பயன்படுத்தும் வழித் தலைவனை, 'எல்வளை நெகிழ்த்தோன்'[218]

---

216. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 282.

217. மேற்படி, பா. 61.

218. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 56.

எனச் சுட்டும் மரபும் காணப்படுகின்றது.

தோள் வாடுதல்

வளையல் நெகிழ்தலைப் போன்று தோள் வாடுதலும் தலைவியின் மனவருத்தத்தைக் குறிக்கும் படிமக் காட்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'ஐயலி அன்ன சிறுவீ ஞாழல்
செல்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறை அணிந் தன்றவ ரூரே பிறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
பூலம்பணிந் தன்றவர் மணந்த தோளே' [219]

எனத் தலைவி கற்பு அமைந்த பாடலில் வளைநெகிழ்தலையும் தோள்சாய்ந்ததையும் சுட்டியவழித் தலைவனின் பிரிவும் உணர்த்தப்பட்டது. தோழி தலைவனை வரைவு கடாதற்கும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. [220]

நெற்றி

தலைவியின் களவொழுக்கத்தைச் சுட்ட வந்த படிமக் காட்சியாக நெற்றி உள்ளது. தலைவனை வரைவு கடாவும் தோழி, 'தலைவியின் நெற்றியைக் கண்டு அன்னை அஞ்சி அயர்கின்றாள்' [221] எனக் கூறுகின்றாள். களவொழுக்கத்தால் தலைவியின் புறத்தோற்றத்தில் நேர்ந்த மாறுதலையும், அதனை அன்னை அறிந்தமையையும் சுட்டி, இனி இற்செறிக்கப்படுவதும் உறுதி எனவே விரைந்து வரைந்து கொள்ள வேண்டும் என்பதையும் குறிப்பாக உணர்த்துகின்றாள்.

---

219. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 50.

220. மேற்படி, பா. 239.

221. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 194.

4.1.2.1.2.3. மரபுப் படிமக் காட்சிகள்

மக்கள் வாழ்க்கையில் மரபாகப் பின்பற்றிவரும் செயல்களைப் படிமக் காட்சிகளாகப் பயன்படுத்துதல் இவ்வகையைச் சாரும்.

தினைப்புனக்காவல்

தலைவி தினைப்புனக் காவல் செய்வது தலைவன் அவளைக் காண வாய்ப்பளிப்பதாய் உள்ளது. இம்மரபை அடிப்படையாகக் கொண்டும் சங்கப் பாடல்களில் குறிப்பாகப் பொருள் உணர்த்தப்பட்டுள்ளது. தலைவியின் அன்னைக்கு அறத்தொடு நிற்கும் தோழி, 'வெறியாட்டெடுக்கும் அன்னையே தலைவியைத் தினைப்-புனத்திற்கு அனுப்பின் அவள் இழந்த அழகைப் பெறுவாள்'[222] எனக் கூறுகின்றாள். தலைவியின் களவொழுக்கம் இங்குக் குறிப்பாக உணர்த்தப்பட்டது. இவ்வாறே தலைவனை இனிக் காணுதல் கூடும் என்பதைத் தலைவிக்கு உணர்த்தற்கும்,[223] தலைவி இற்செறிக்கப்படுவாள் என்பதை உணர்த்தற்கும்[224] இத்தினைப்புனக் காட்சி பயன்-படுத்தப்பட்டுள்ளது.

வெறியாட்டு

தலைவியின் நிலையில் ஏற்படும் மாறுதல் கண்டு வெறியாட்டெடுக்கும் மரபை அடிப்படையாகக் கொண்டு வெறியாட்டெடுக்கும் நிகழ்ச்சி படிமக் காட்சியாய் அமைந்துள்ளது. சங்க இலக்கியங்களில் இது தலைவியின் களவொழுக்கம் வெளிப்படப்-போதும் நிலையைக் குறிப்பாகச் சுட்டுவதாக உள்ளது. 'அன்னை வெறியாட்-டெடுத்தாள்' என்பதை மட்டும் குறிப்பிட்டு அதன்வழி, தலைவன் விரைந்து வரைந்து

---

222. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 35.

223. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 207.

224. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 57.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 302.

கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்தும் அகநானூற்றுப் பாடல் இதற்குச் சான்றாகும்.[225] ஐங்குறுநூற்றில் 'வெறிப்பத்து' என்ற பகுதியில் பத்துப் பாடல்களிலும் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்று களவொழுக்கத்தை உணர்த்தவும், தலைவனுக்கு இற்செறிப்பை உணர்த்தவும் 'வெறியாட்டு' பயன்படுத்தப்பட்டுள்ளது.

படிமக் காட்சிகள் பயின்ற தன்மையை உள்ளுறை உவமம், இறைச்சிவழி அமைந்த படிமம், உவமை வழி அமைந்த படிமம், வருணனையாக அமைந்த படிமம் என மூவகையாகப் பிரிக்கலாம்.

உள்ளுறை உவமம் வழி அமைந்த படிமத்திற்குச் சிறந்த சான்றாக ஐங்குறுநூறு விளங்குகின்றது. இதிலுள்ள சிறுவெண்காக்கைப்பத்து, கேழற்பத்து, குரக்குப்பத்து, வேழப்பத்து, கள்வன்பத்து, சிறுவெள்ளாங்குருகுப்பத்து என்பன இத்தன்மையன. ஒவ்வொன்றும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பகுதிகளில் ஒவ்வொரு பாடலிலும் உள்ளுறைப் பொருளை உணர்த்தற்கு முறையே, காகம் தலைவனைக் குறிப்பதாகவும், கேழல் தலைவனைக் குறிப்பதாகவும், குரங்கு தலைவனைக் குறிப்பதாகவும், வேழம் பரத்தையைக் குறிப்பதாகவும், நண்டு தலைவனைக் குறிப்பதாகவும், சிறுவெள்ளாங்குருகு பரத்தையைக் குறிப்பதாகவும், பயின்று வந்துள்ளன. அன்றாட நிகழ்வுகளாக அமைந்த காட்சிகள் இறைச்சிவழி அமைந்த படிமத்திற்குச் சான்றாகும்.

பொன், பீர்க்கம்பூ முதலியவற்றைத் தொடர்ந்து பசலைக்கு உவமைப் படுத்தி வருவது உவமைவழி அமைந்த படிமக் காட்சியாகும்.

கார்கால வருணனை, இளவேனிற் பருவ வருணனை, வினையல் நெகிழ்தல் தோள் நெகிழ்தல், வெறியாட்டெடுத்தல் என்பனவற்றை விளக்குவது வருணனைவழி அமைந்த படிமக் காட்சிகளாகும்.

---

225. மேற்படி, பா. 138.

இவ்வாறு சங்க இலக்கியங்களிலுள்ள படிமக் காட்சிகள், படைப்போரால் பாத்திரங்கள் தங்களுக்குள் உணர்த்திக் கொள்ளும் குறிப்புகளாய்ப் படைக்கப்படினும் படிப்போர் நிலையிலும் இவை குறிப்புப் பொருளை உணர்த்துவனவாய்ச் செயற்படுகின்றன.

4.1.2.1.3. தொகுநிலைக் களவி

சங்க இலக்கிய அகப்பாடல்கள் அனைத்திலும் தலைமை இடம்பெற்றுள்ள தன்மையாக உள்ளது இது. இத்தொகுநிலைக் களவி இலக்கியச் சுவையை மிகுதிப்படுத்துவதோடு பாத்திரங்களின் பேச்சுகளை அவற்றின் உளநிலைக்கேற்பப் படைப்பதாகவும் உள்ளது. தோழி தலைவியை விரைந்து வரைந்து கொள்ளுமாறு வேண்டுதல், தலைவியைப் பிரிதல் கூடாதெனக் கூறுதல், தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் என்பவைகளில் பேசுபவர்கள் தமது மையக் கருத்தைத் குறிப்பாகத் தொக்கி நிற்குமாறு கூறுவதாகப் படைத்திருப்பது பாத்திரங்களின் உளநிலைக்கேற்ப, அவைகளின் கற்றில் கையாண்ட உத்தி எனலாம்.

கருத்தின் ஒரு பகுதியை மட்டும் கூறி எஞ்சியதைக் கூறாமலே விட்டுவிடும் தன்மையிலும், எகார ஓகார ஒலியமுத்தங்களின் வழியும் இத்தொகுநிலைக் களவி உணர்த்தப்படுகின்றது.

'அவளொடு போகிய பெண்ணின் தாய்' என்ற பெயரை எடுத்தேன். அவள் ஆயத்தார் இதனைத் தந்தனர்' [226] என உடன்போகிய மகளை நினைந்த தாய் கூறுகின்றாள். தலைவியின் களவொழுக்கத்தை முன்பே தனக்கு உணர்த்தவில்லை எனக் கூறுவது இந்த எச்சமாக உள்ளது. கருத்தில் ஒரு பகுதி மட்டும் கூறப்பட்டு எஞ்சியது கூறாமல் குறிப்பாக உணர்த்தப்பட்டது.

---

226. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 380.

'தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யாஅனைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பிற் ரூஅய்
இதழிழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூங்க வனமுலை நனைத்தலும்
காணூர் கொல்லோ மாணிழை நமரே' 227

என்பது செலவுக் குறிப்பறிந்துவேறுபட்ட கிழத்தியைத் தோழி ஆற்றுவிக்கும் பாடல். 'கொல்லோ' என்பதன் ஓகாரம் வழி 'நினது கண்ணீரைக் காணுவார் ஆதலால் பிரியமாட்டார். எனவே ஆற்றியிரு' என்பது தொகுநிலைக் கிளவியாயிற்று.

தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, 'தலைவன் விரைந்து வருவான்' என்பதை மட்டும் கூறி, 'எனவே ஆற்றியிரு' என்பதையும், 'வருந்தாதே' என்பதை மட்டும் கூறி 'விரைவில் வருவான்' என்பதையும் 'தொகுநிலைக் கிளவி'யாய் உணர்த்துவது உண்டு. 228

தலைவனைச் செலவுங்துவிக்கும் தோழி தலைவன் பிரிந்தால் என்ன நிகழும் என்ற எதிர்காலச் செய்திகளை மட்டும் கூறி அதன்வழி, 'பிரிதல் கூடாது' என்பதைத் தொகுநிலைக் கிளவியாய்ச் சுட்டும் தன்மையும் உள்ளது. இவ்வகையில் தோழியின் பேச்சு மிக நுட்பமாக அமைக்கப்பட்டுள்ளது. எவ்விதம் கூறினால் தலைவன் பிரியாதிருப்பான் என அவ்வகையைத் தேர்ந்து பேசுபவளாகத் தோழி படைக்கப்படுகின்றாள். பாத்திரங்களை இயல்போடு படைக்க மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றாக இதனைக் கருதலாம்.

---

227. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 348

228. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 463, 467.

இளவேனிற் பருவத்து வருவேன் எனக்கூறும் தலைவனுக்குத் தோழி, 'அவள் அழியாது இருப்பின் மீண்டு வந்து இன்பம் நுகர்க'[229] எனக் கூறுவதை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். 'பிரிந்தால் தலைவி இறந்துபடுவாள். எனவே பிரிய வேண்டாம்' எனக் கூறுவது இந்தத் தொதநிலைக் கிளவியாய் அமைந்தது.

தோழி செவிலித்தாய் அறத்தொடு நிற்கும்பொழுதும் இவ்வகைக் கூற்று அமைகின்றது. தலைவன் சுற்றத்தார் மகட்கேட்டு வந்தபோது தோழி தலைவியை, 'தலைவன் துறை நிறைவேறுது போலும் நம் உயிர் என்னுவது'[230] என வினவுகின்றாள். 'தலைவியை இத்தலைவனுக்கே மணமுடிக்க வேண்டும்' என்பதை உணர்த்துவது இந்த, தொதநிலையாய் நின்றது.

இவ்வாறே தலைவனை வரைவு கடாவும்பொழுதும் மிக நுட்பமாகத் தோழி தனது கருத்தை வெளிப்படுத்துகின்றாள். 'தலைவியின் நெற்றியைக் கண்டு அன்னை அஞ்சி அழுது நின்றாள்'[231] என்பதை மட்டும் கூறி 'களவொழுக்கத்தால் ஏற்பட்ட மாற்றத்தை அன்னை அறிந்து கொண்டாள். தலைவி இனி இற்செறிக்கப் படுவாள். எனவே விரைந்து வரைந்து கொள்' என்பதைத் தொதநிலையாக உணர்த்துகின்றாள்.

தலைவனுக்கு வாயில் மறுக்கவும்,[232] களவொழுக்கத்தில் குறியிடம் உணர்த்தவும்[233] தோழி இத்தகு கூற்றுகள் படைக்கப்படுகின்றன.

---

229. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 368.

230. மேற்படி, பா. 228.

231. மேற்படி, பா. 194.

232. மேற்படி, பா. 46, 47, 48, 283.

233. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 30.

தோழி கூற்றுகவன்றி தலைவி, தலைவன், பாணன், பரத்தை முதலியோர் கூற்றுகவும் இது அமைகின்றது.[234]

இத்தொகுநிலைக்கிளவி மேற்காட்டியது போன்று நேரடியாகவன்றி, அஃறிணைப் பொருள்களின் மேல் ஏற்றிக் கூறுதல்,[235] உடல் உறுப்புகளைத் தனியாகப் பிரித்துக் கூறுதல்,[236] அஃறிணைப் பொருள்களை முன்னிலைப்படுத்திக் கூறுதல்[237] என்பவற்றின் வழியும் வெளிப்படுத்தப்படுகின்றது.

தலைவனுக்குத் தலைவியைக் காணும் வழியைக் குறிப்பாக உணர்த்தும் தோழி, 'தலைவனை விடக் கிளிகள் சிறந்தன போலும். நாளை முதல் அவை கொடிச்சியால் நோக்கவும்படும். ஒப்பவும்படும்' எனக் கிளியைச் சார்த்திக் கூறும் பாடல் இதற்குச் சான்றாகும்.[238] 'நாளை முதல் தலைவி தினைப்புனங் காக்க வருவாள். நீயும் அவளை அங்குக் காணலாம்' என்பது தலைவனுக்கு உணர்த்தப்படும் தொகுநிலைக் கிளவியாயிற்று.

மேலும் உள்ளுறை உவமம்,[239] இறைச்சி,[240] படிமக்காட்சி[241] என்பனவும் தொகுநிலையாக உணர்த்துவதில் பங்கேற்கின்றன.

---

234. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 4, 326, 393, 441, 480.

235. மேற்படி, பா. 5, 290, 301, 266.

236. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 56, 186.

237. மேற்படி, பா. 392.

238. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 290.

239. மேற்படி, பா. 91.

240. மேற்படி, பா. 5, 301, 266.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 37, 183.

241. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 198, 207, 217, 219, 222, 227, 234, 469.

மேற்கூறியது போன்று இலக்கியக் கூறுகளேயன்றி மக்கள் தம் வாழ்வில் மரபாகக் கொண்ட நெறிகளும் இதில் இடம் பெறுகின்றன.

தலைவன் வந்து தலைவியைக் காண்பதல்லது தலைவி சென்று அவனைக் காண்டல் மரபன்று.

'உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக்கில்லை' [242]

என்பதும் இதனை உணர்த்தும். 'நாங்கள் வந்து காண வேண்டுமாயின் நும்மூர் எத்திசையில் உள்ளது' [243] எனும் பொருளுடைய பாடல் தோழி தலைவனுக்கு வரைவுணர்த்தக் கூறுவது. 'தலைவனைக் காணாது இருக்கவும் இயலவில்லை. நாங்களும் அங்கு வர இயலாது. எனவே தலைவன் விரைந்து வரைந்து கொள்ள வேண்டும்' என இம்மரபை அடிப்படையாகக் கொண்டு தனது குறிப்பை உணர்த்துகிறாள் தோழி. இவ்வாறே தலைவிக்குத் தலைவன் தழையாடை கொடுக்கும் மரபை அடிப்படையாகக் கொண்டும், [244] தலைவன் பிறமகளிரொடு துணங்கையாடும் மரபை அடிப்படையாகக் கொண்டும் [245] இத்தொகுநிலைக்களவி அமைந்துள்ளது.

---

242. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 200.

243. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 237.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 8.

244. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 201.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 47.

245. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 364

கலித்தொகையில் பாலைத்திணையில் இத்தன்மை காணப்படுகின்ற அளவிற்கு பிற திணைகளில் இல்லை. பாடல்களின் பொருளமைதியும், பாடல்களின் அமைப்பும் இதற்கு ஒரு காரணமாகலாம்.

பரிபாடலில் ஐந்து பாடல்கள் இத்தன்மையனவாய் உள்ளன.[246] தலைவனுக்கு வாயின் மறுப்பதாக இவை உள்ளன. பதிற்றுப்பத்து புறப்பொருளாய் இருப்பினும் அகப்பாடல் தன்மையில் அமைந்த ஒரு பாடலில் இத்தொகுநிலைக்களவி காணப்படுகின்றது.[247]

முழுப்பாடலளவிலுமாகக் கொண்டு பாடற்பயனை உய்த்துணருமாறு அமைத்த 'தொகுநிலைக் களவி' என்ற தன்மையை, தண்டியலங்காரத்தில் கறப்படும் 'பாவிகம்'[248] என்பதற்குரிய அடிப்படையாகக் கருதலாம்.

4.1.2.2. புறப்பொருளுக்குரியன

சங்க இலக்கியங்களில் புறப்பொருளுக்கேயுரிய குறிப்பு உத்திகள் என இனமொழி, குறிப்பெச்சம் என்ற இரண்டு மட்டுமே பயின்றுள்ளன. இவையும் மிகுதியான அளவு பயின்று வரவில்லை.

4.1.2.2.1. இனமொழி

அகப்பொருளில் கையாளப்பட்ட 'தொகுநிலைக்களவி' என்ற உத்திக்கு இணையாக இதனைக் கருதலாம். அகப்பொருளில் இத்தன்மை பாடலின் மையப் பொருளை வேண்டுமென்றே மறைத்துக் கூறும் தன்மையதாயுள்ளது. இனமான

---

246. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பரிபாடல், பா. 6, 10, 13, 14, 16.

247. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 2/6.

248. சுப்பிரமணிய தேசிகர் (உரையாசிரியர்), தண்டியலங்காரம், (கழகம், சென்னை, 1960 மறுபதிப்பு), நூ. 91.

பொருள்களைக் கறி அதன்வழிக் குறிப்பை உணர்த்துவது புறப்பாடல்கள் சிலவற்றின் தன்மையாக உள்ளது. இதனையே தொல்காப்பியரும்,

'எடுத்த மொழியினுஞ் செப்பலு முரித்தே' [249]

எனக் குறிப்பிடுகின்றார். புறப்பாடல்களில் இது புலவன் கற்றுக அன்மையும்.

சங்க இலக்கியப் புறப்பாடல்களில் பரிசில் வேண்டும் நிலையைக் குறிப்பாக உணர்த்த, [250] துன்பச் செய்தியை மறைமுகமாக உணர்த்த, [251] மன்னர்களின் வீரச் சிறப்பைக் குறிப்பாக உணர்த்த [252] என்ற மூன்று நோக்கங்களில் இனமொழி பயன்படுத்தப்படுகின்றது.

'அரசன் வலியொடு எதிர்ந்தவரின் புறக்கொடையைப் பெற்றான். அப்புறக்கொடையில் பாடினியும் சிறந்த அணிகலனைப் பெற்றாள். பாணனும் பெற்றான்' [253] என்பது பேய்மகள் இளவெயினி பாடிய பாடல். 'இவர்களெல்லாம் பரிசில் பெற்றதைப் போன்று தானும் பரிசில் பெற வேண்டும் என்பது இங்குக் குறிப்பாக உணர்த்தப்பெற்றது.

---

249. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), 'சொல்லதிகாரம்', தொல்காப்பியம், நூ. 60.

250. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 11, 139, 160, 206.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 5/1.

251. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 231, 239.

252. மேற்படி, பா. 88, 125.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 3/9, 7/2

253. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 11.

அதியமான் இறந்ததை நினைத்துப்பாடும் ஔவையார், 'ஒண்ஞாயிறன்னேன் புகழ் மாயலவே' [254] எனக் கூறுகின்றார். இந்த 'உடல் மாய்ந்தது' என்பது தெளிப்பாகப் பெறப்படுகின்றது.

மலையமான் திருமுடிக்காரியின் வெற்றிச் சிறப்பைப் பாடும் வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார், 'நண்பர்க்கு நல்லமிழ்தம் போல விளங்குகின்றான்' என்று மட்டும் கூறி 'பகைவர்க்கு நஞ்சாவான்' என்பதை மறைமுகமாகப் பெற வைக்கின்றார். [255]

பரிசில் வேண்டி நிற்றலை நாகரிகமாக உணர்த்துதல், மங்கலமல்லாத செய்தியைத் தவிர்த்துக் கூறுதல், மன்னனது மறப்பண்பைக் காட்டுமிடத்து அவனது அறப்பண்பையும் சுட்டுதல் என்ற நோக்கங்கள் இவ்வாறு பாடுதற்குக் காரணமாயின.

4.1.2.2.2. தெளிப்பெச்சம்

அகப்பாடல்களில் கையாளப்படும் உள்ளுறையுவமத்திற்கு இணையாக புறப்பாடல்களில் தெளிப்பெச்சம் உள்ளது. அமைப்பில் இது உள்ளுறை உவமத்தை ஒத்துள்ளது. அகப்பாடல்களில் கருப்பொருள்வழி உள்ளுறை உவமம் உணர்த்தப்படும் புறப்பாடல்களில் இவ்வரையறை இல்லை. இவ்வேறுபாடு ஒன்றே இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுவதாக உள்ளது. அகப்பொருள் செய்தியைப் பாத்திரங்கள் தங்களுக்குள் தெளிப்பாக உணர்த்திக் கொள்ளும் தன்மையது உள்ளுறை உவமம். புறப்பொருளில் புலவன் தான் மறைமுகமாக உணர்த்த நினைக்கும் எண்ணங்களை இதன்வழி

---

254. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 11.

255. மேற்படி, பா. 125.

வெளிப்படுத்துகின்றன.[256] இது 'தத்தம் நிறப்பினுல் எய்திய பொருளை உணர்த்தும்' எனும் தொல்காப்பிய விதி அடிப்படையில் 'நிறப்பெச்சம்' எனச் சுட்டப்படுகின்றது.

சங்க இலக்கியப் புறப்பாடல்களில் இது,

மன்னனை 'நாட', 'நாடுகிழவோயே' என அழைக்கும் விளிக்கு அடையாகவும்,[257]

மன்னர்களது தன்னிற்ற அடையாகவும்,[258]

மன்னனைப் பெயரிட்டு அழைக்கும் விளிக்கு அடையாகவும்,[259]

அமைந்த வருணனைகள் வழியும், புலவன் கடந்து வந்த வழிவருணனையாகவும்,[260]

ஊர்வருணனையாகவும்[261] முன்றில் வருணனையாகவும்[262] அமைந்துள்ளது. இவ்வகையில் இது உள்ளுறை உவமங்களுக்கான வருணனையை ஒத்துள்ளது.

'கடவுட் பேணிய தறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்
புனத்தினை யயின நாட ...'[263]

---

256. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்), 'சொல்லதிகாரம்', தொல்காப்பியம், மூ. 440.

257. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 143, 157, 172, 202, 236, 283.

258. மேற்படி, பா. 108, 114, 115, 128.

259. மேற்படி, பா. 145, 176, 200.

260. மேற்படி, பா. 23.

261. மேற்படி, பா. 321, 322, 323, 354, 347, 348.

262. மேற்படி, பா. 247.

263. மேற்படி, பா. 143.

'நறவுப்பிழிந் தீட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுத முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் தன்றே' [264]

'மடத்தகை மாமயில் பணிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக' [265]

என்பவை இதற்குச் சான்றுகளாகும். உள்ளுறை உவம வருணனைகளைப் போன்றே இவை அமைந்திருப்பதும் காணத்தக்கது. பொதுவகையில் இவை நாட்டுச் சிறப்பு, பண்புச் சிறப்பு என்பனவற்றைச் சுட்டுவதுபோல இருப்பினும் உட்குறிப்பாக வேறு பொருளையும் உணர்த்தி நிற்கின்றன. [266] இவ்வருணனைகள் மன்னர்களின் புகழ், செல்வம், [267] வீரம் [268] ஆகியவற்றை உணர்த்தவும், புலவன் தனது தனிப்பட்ட உளக்குறிப்பை உணர்த்தவும், [269] மறைமுகமாகத் தனது வேண்டுகோளை உணர்த்தவும், [27]

---

264. மேற்படி, பா. 114.

265. மேற்படி, பா. 145.

266. மேற்படி, பா. 108, 102.

267. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 2/3; 3-4.

268. மேற்படி, பா. 6/1; 7-9.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 128, 283, 322.

269. மேற்படி, பா. 114, 115.

270. மேற்படி, பா. 23, 143, 145, 200.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 2/2; 10-13.

பொதுவாக நாட்டு மக்களின் சிறப்பை உணர்த்தவும்[271] பயன்படுத்தப்பட்டுள்ளன.

'குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆர மாதலி னம்பூகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே'[272]

என்பது பாரியின் பறம்புமலைச் சிறப்பைக் கபிலர் பாடுவது. இயற்கை வருணனையாக இருப்பினும் 'பறம்பு மலையுடைய பாரியின் புகழ் அயலில் எங்கும் பரவியிருந்தது' என்ற குறிப்பு இங்கு உணர்த்தப்பட்டது.

'கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்க ணெருமையி னிரைதடுக் நநவும்
....
பாடல் சான்ற பயங்கெழு வைப்பின்
நாடு ... ...'[273]

என்பது நெடுஞ்சேரலாதன் அழித்த பகைவர் நாட்டின் சிறப்பைக் கூறுவது. இவ்வருணனை 'கான்போரைத் தடுக்கும் செல்வ வளமுடையது' என்ற குறிப்பை உணர்த்தியது.

'மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் றெண்கண் கனிசெத் தடிப்பின்

---

271. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 247, 326, 342, 344, 354.

272. மேற்படி, பா. 108.

273. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 247, 326, 342, 344, 354.

'அன்னச் சேவன் மாறெழுந் தாலும்
கழலுடி யாஅய் மழைதவழ் பொதியில்'[274].

என்பது ஆய்அண்டிரனின் புகழைப் பாடுவது. 'மந்தி பலாப்பழமென நினைந்து முழவின அடிப்பின் அன்னச்சேவல் மாறெழுந்தொலிக்கும்' என்றது போர்ப் பறையொலி சிறிது கேட்டாலும் வீறுகொண்டெழுவன் என்ற குறிப்பை உணர்த்தியது.

பறம்பின் சிறப்பைக் கறும் கபிலர், 'நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல் வாரசும்பொழுகும் முன்றிலையுடைய நெடியோன் குன்று'[275] எனச் சிறப்பிக்கின்றார். 'பிழிந்திட்ட கோதிலிருந்தும் மது ஒழுகும் முன்றில்' என்ற வழி பாரி இறந்தாலும் அவனது நினைவு தன் உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கின்றது என்ற குறிப்பு உணர்த்தப்பட்டது.

பதிற்றுப்பத்திலும் இயற்கை வருணனை மிகுதியும் இடம்பெறவில்லை. இடம்பெற்ற சிறுபான்மை இடங்களிலும் இவ்வாறு குறிப்புப் பொருளை உணர்த்துவனவாயுள்ளன.[276]

உரையாசிரியர்கள் விளக்கப்படி 'குறிப்பெச்சம்' என்பது 'ஒட்டணி' எனப்படும் எடுத்துக்காட்டுவமையணியைக் குறிப்பதாக உள்ளது. புறப்பாடல்களிலும் தனிப்பட எடுத்துக்காட்டு உவமையாகத் திகழும் பாடல்களும் உள்ளன.[277]

---

274. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 128.

275. மேற்படி, பா. 114.

276. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 2/1; 21-23, 2/2; 10-13, 2/3; 3-4, 3/7; 7-8.

277. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 90, 203, 237, 335.

மேற்காட்டப்பட்டவைகள் உள்ளுறை உவம அமைப்பைக் கொண்டும், எடுத்துக்காட்டு உவமை போன்றும் இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் நின்று குறிப்புப் பொருளை எச்சமாக உணர்த்துதலால் இவ்வுத்தியும் 'குறிப்பெச்சம்' என்ற சொல்லாலேயே குறிக்கப்பெற்றது. எடுத்துக்காட்டு உவமையின் தோற்றத்திற்கு அடிப்படையாகவும் இதனைக் கருதலாம். அகப்பாடல்களில் உள்ளுறை உவமத்தைக் கையாண்ட பயிற்சி காரணமாகப் புறப்பாடல்களிலும் இத்தன்மையை மேற்கொண்டனர் எனலாம்.

4.1.2.3. அகத்திற்கும் புறத்திற்கும் உரியன

அகப்பொருள், புறப்பொருள் என்ற இரண்டிற்கும் உரியவையாக இகழ்ச்சிக் குறிப்பு, குறிப்பு முரண், வருணனைக் குறிப்பு என்ற மூன்று உத்திகள் இடம் பெறுகின்றன. அகப்பொருளில் இறைச்சி, உள்ளுறை என்பன தலையாய குறிப்பு உத்திகளாக விளங்குதலாலும், புறப்பொருளில் பெரும்பான்மையும் வெளிப்படையாக உணர்த்தப்படுதலாலும் அகத்திற்கும் புறத்திற்குமாகிய உத்திகள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

4.1.2.3.1. இகழ்ச்சிக் குறிப்பு

பழிப்பது போலப் புகழ்தல், புகழ்வது போலப் பழித்தல் என்ற இரண்டும் இதனுள் அடங்கும். அகப்பொருள் பாடல்களைக் காட்டிலும் புறப்-பாடல்களில் இத்தன்மை மிகுந்துள்ளது.[278] பழிப்பதுபோலப் புகழ்தல் புறப்பாடல்-களுக்குரியதாகவும் உள்ளது.

---

278. மேற்படி, பா.95, 107, 167, 300.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா.6/6.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), நற்றிணை, பா.337.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.184

தலைவனைச் செலவழுங்குவிக்கும் தோழி,

'பிரிந்துறை மரபின் பொருள்படைத் தோரே
சிறந்திசினோர் ... ...'[279]

எனக் கூறுவது தலைவனைப் புகழ்வது போல இருப்பினும், 'தலைவியிடம் பெறும் பயனை மறந்து பொருள்வயிற் சென்றவர் சிறந்தோராக மாட்டார்' என்ற குறிப்பை உணர்த்தியது.

தொண்டைமானுக்கு அதியமானின் சிறப்பை உணர்த்த விரும்பிய ஔவையார், தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலைப் புகழ்வது போலவும், அதியமானின் படைக்கலக் கொட்டிலைப் பழிப்பது போலவும் கூறி அதியமானின் சிறப்பை உணர்த்தியிருப்பது பழிப்பது போலப் புகழ்தலுக்குச் சான்றாகும்.[280]

அகப்பாடல்களில் இத்தன்மை ஓரிரு அடியளவில் அமைய, புறப்-பாடல்களில் முழுப்பாடலளவிலும் அமைந்துள்ளது.

4.1.2.3.2. குறிப்பு முரண்

இகழ்ச்சிக் குறிப்பைப் போன்று குறிப்பு முரணும் அகப்பாடல்களிலும் புறப்பாடல்களில் மிகுந்துள்ளது. எதிர்மறையாக வாழ்த்துதல்,[281] உடன்படுவது போல் கூறி மறுத்தல்[282] என்ற இருநிலைகளில் இக்குறிப்பு முரண் காணப்படுகின்றது.

---

279. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), நற்றிணை, பா.337.

280. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.95.

281. மேற்படி, பா.196, 198, 205, 209, 211, 351.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.1, 2.

282. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.37, 57.

முதல்வகை புறப்பாடல்களில், மன்னன் பரிசில் நீட்டித்தவிடத்தும் தம் தகுதியறிந்து பரிசு நல்காவிடத்தும் புலவர் தம் ஆற்றுமையை வெளிப்படுத்துவதாகவும், போரிலே குறிப்பிட்ட ஊருக்கு நேரவிருக்கும் அழிவை உணர்த்துவதாகவும் அமைந்த கூற்றுகளில் உள்ளன.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் அளிக்காது காலம் நீட்டிக்க, ஆற்றுத ஆலர் மூலங்கிழார், 'இயலாததை இயலுமென்றலும், இயலுவதை இல்லையென்றலும் இரப்போரை மெலிவித்தலாகும். நீ எம்மிடத்துச் செய்ததும் இத்தன்மைத்தே. எங்குடியோர் முன்பு இத்தன்மையைக் கண்டதும் இல்லை. எனவே நின்புதல்வர் நோயிலராக, நின்னுயுள் மிகுவதாக' எனப் பாடுகின்றார். 'நீ இத்தன்மையனாயிருத்தலால் உன் புதல்வர்க்கும் நினக்கும் துன்பம் உண்டாகும். இதிலிருந்து காத்துக் கொள்' என்ற குறிப்பு இதன்வழி உணர்த்தப்பட்டது. வாழ்த்துவதாக எதிர்மறைக் குறிப்பு பெற வைக்கப்பட்டது. 283

அகப்பாடல்களில் தலைவன் பரத்தையிற் பிரிந்து மீளுமிடத்து தலைவியும், தோழியும் தம் ஆற்றுமையுணர்வை வெளிப்படுத்தும் கூற்றுகளில் இக்குறிப்பு முரண் அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றில் 'வேட்கைப் பத்து' என்ற பகுதி இதற்குச் சிறந்த சான்றாகும். 'தலைவனும் பானனும் வாழ்கவென விரும்பினேம்' எனத் தோழி கூறுதல்வழி, 'பரத்தமையொழுக்கம் தலைவனுக்குத் துன்பத்தைத் தரும்' என்ற குறிப்பை உணர்த்தியது.

இரண்டாம் வகை போரின் அழிவையும், முன்னோர் சிறப்பையும் கூறி, போரினின்று தடுக்க மேற்கொள்ளும் முயற்சியாக அமைந்த கூற்றுகளில் உள்ளது.

---

283. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 196.

4.1.2.3.3. வருணனைக் குறிப்பு

அகப்பாடல்களில் உள்ளுறை, இறைச்சிக்கான வருணனை, புறப்பாடல்களில் குறிப்பெச்சப் பொருளை உணர்த்தும் வருணனை, உருக்காட்சி வருணனை, படிமக்காட்சிக்கான வருணனை என்பவற்றுள் அடங்காத பிற வருணனைகளும் குறிப்புப் பொருளை உணர்த்தி வருவது வருணனைக் குறிப்பு எனப்படுகிறது. ஒரு பொருளையோ, நிகழ்ச்சியையோ இத்தன்மையது என்று மட்டும் வருணித்தல்வழி கூறவந்ததைக் குறிப்பாக உணர்த்துவது இத்தன்மைத்தாகும். 'இப்பொருள் இத்தன்மைய என்று சொல்லும் முறையான் குறிப்பாற் பெறப்படுவனவும் உள' [284] எனத் தொல்காப்பியர் கூறுவதும் இதனை ஒக்கும். இது 'முன்னத்தினுணருங்கிளவி' எனத் தொல்காப்பியரால் சுட்டப்பெற்றுள்ளது.

'வெந்திறற் கடுவளி பொங்காப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்பநம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே' [285]

என்பது தலைவி கற்றுக அமைவது. இதில் தலைவன் சென்ற அருஞ்சுரம் இத்தன்மைத் எனத் தலைவி கற்றுக அமைந்த வருணனைவழி, தலைவன் சென்ற வழியருமைக்காகத் தலைவி அஞ்சுவது குறிப்பாக உணர்த்தப்பெற்றது. இவ்வாறு,

தலைவன் செல்லும் வழிஞதத்தை நினைந்து வருந்துவதை உணர்த்தவும், [286]
தலைவன் பிரிந்தவிடத்து நேர்ந்த துன்பத்தை விளக்கவும், [287]

---

284. இளம்பூரனர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், பா. 459.

285. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 39

286. மேற்படி, பா. 39.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 67, 309.

287. மேற்படி, பா. 37.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 29

தலைவி தலைவன் மாட்டுக் கொண்ட அன்பின் தன்மையைச் சுட்டவும்,[288]

தலைவனின் தகுதியைச் செவிலி நற்றாய்க்கு உணர்த்தவும்,[289]

தலைவன் தலைவியை அனைவரறிய வரைந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தற்கும்,[290]

தோழி தலைவனுக்குக் குறியிடத்தைக் குறிப்பாகச் சுட்டவும்,[291]

பரத்தமையொழுக்கிற் சென்ற தலைவனுக்குத் தோழி அவனது குடிப்பிறப்பின் உயர்வைச் சுட்டுதற்கும்,[292]

தலைவனின் செல்வச் சிறப்பை உணர்த்தற்கும்,[293]

தலைவனுக்குத் தலைவியின் அருமையை உணர்த்தவும்,[294]

தலைவன் பொருள்வயிற் பிரிவதன் உள்நோக்கத்தை உணர்த்தவும்[295]

அகப்பொருள் பாடல்களில் வருணனைக் குறிப்புகள் அமைந்துள்ளன.

'நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செல்வழி பண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
பரவுக்கடன் பூண்ட வன்மை யானே'[296]

---

288. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 2, 26, 76

289. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 15.

290. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 159.

291. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 92.

292. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 5

293. மேற்படி, பா. 3.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 19.

294. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 352, 353, (இவை புறப்பாடல்களாயினும் அகப்பொருள் தன்மையில் விளங்குகின்றன).

295. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 29.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 310

296. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 149.

இப்பாடலில் கோப்பெருநற்கிள்ளி பூண்ட வண்மை, அவனால் பூரக்கப்பட்டவர்கள் இத்தன்மையராயிருந்தனர் என்பதை விளக்கியவழி குறிப்பாக உணர்த்தப்பட்டது. இதுபோன்று,

'மக்களின் வாழ்க்கைச் சிறப்பை விளக்கும்வழி வள்ளன்மையை உணர்த்துவதும்,[297]

இறக்கும் தறுவாயில் ஒருவனுக்கு நேர்ந்த நிமித்தங்களைச் சுட்டுதல்வழி அவனது வள்ளன்மையை உணர்த்துவதும்,[298]

ஒரு மறவனது வேலை வருணிக்கும்வழி வீரத்தை உணர்த்துவதும்,[299]

அவனது செயல்களின் தன்மையை விளக்கும்வழி வீரத்தை உணர்த்துவதும்,[300]

ஊர் வருணனை, வாழ்க்கை நிலை முதலியவற்றை விளக்கும்வழி போரும் வீரமுமே உயிர்நிலையாக இருப்பதை உணர்த்துவதும்,[301]

தோற்ற வருணனைவழி வீரத்தைச் சுட்டுவதும்,[302]

பண்பு வருணனைவழி வீரத்தை விளக்குவதும்,[303]

பகைவர் செயலை விளக்கும்வழி வீரத்தை உணர்த்துவதும்,[304]

---

297. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 127, 320, 111.

298. மேற்படி, பா. 280.

299. மேற்படி, பா. 97, 332.

300. மேற்படி, பா. 269.

301. மேற்படி, பா. 311, 327.

302. மேற்படி, பா. 88, 100, 271.

303. மேற்படி, பா. 89.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, 2/8, 5/

304. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 41, 9

படைக்களத்தின் அமைப்பு, வீரர்கள் நிலையை விளக்கும்வழி வீரச் சிறப்பைச் சுட்டுவதும்,[305]

கடந்து வந்த வழி வருனையை விளக்கும் வழி, பாசில் வேண்டி நிற்பதைக் குறிப்பதும்,[306]

மற்றும் செல்வ வளத்தைச் சுட்டுவதும்,[307] இறந்த செய்தியை உணர்த்துவதும்,[308] தனது அறிவுரையைக் குறிப்பாக உணர்த்துவதும்[309] புறப்பாடல்களில் அமைந்த வருனைக் குறிப்புகளாக உள்ளன.

மேற்கூறியவாறு வீரம், செல்வம், புகழ், வள்ளன்மை முதலான பண்புகளோடு சில நுட்பமான உணர்வுகளும் இவ்வருனைக் குறிப்புவழி வெளிப்படுத்தப்-படுகின்றன. 'பாரி பறம்பின் சிறப்பு இத்தன்மைத்து' எனக் கூறுதல் வழி அவனது மறைவுக்கு இரங்கும் உணர்வு வெளிப்படுத்தப்படுவதும்,[310] இயல்பாக நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகள் எவ்வாறு மாறுபட்டன என்பதை மட்டும் விளக்கும் வழி, வடக்கிருக்கும் சேரமானுக்காக வருந்தும் புலவனின்துன்பநிலை உணர்த்தப்படுவதும்,[311] விழுப்புண் பட்டு இறந்த மகனைக் கண்டதாய் ஈன்ற பொழுதினும் பெரிது உவந்த உணர்வு நிலையை நுட்பமாகச் சுட்டுவதும்[312] இதனை உணர்த்தும்.

---

305. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 41, 93.

306. மேற்படி, பா. 3.

307. மேற்படி, பா. 40, 89.

308. மேற்படி, பா. 235, 280.

309. மேற்படி, பா. 24.

310. மேற்படி, பா. 114, 115.

311. மேற்படி, பா. 65.

312. மேற்படி, பா. 295, 286.

இவ்வருணனைக் குறிப்பு அகம், புறம் என்ற இரண்டிலும் இடம் பெற்றிருப்பினும், புறப்பாடல்களில் சிறப்பாக உள்ளது. அகப்பாடல்களில் அமைந்த வருணனைகள், இறைச்சி, உள்ளுறைக்கு மிகுந்த இடமளித்திருப்பதால் வருணனைக் குறிப்பு மிகுதியும் இடம்பெற வாய்ப்பில்லை. பத்துப்பாட்டிலும் மிகுந்த வருணனைகள் இடம்பெற்றிருப்பினும் அவை பண்பாட்டுச் செய்திகளை விளக்கும் நோக்குடையனவாயிருப்பதால் இத்தகு குறிப்புப் பொருளை உணர்த்தப் பயன்படுத்தப்படவில்லை.

எட்டுத்தொகையில் அமைந்த வருணனைகள் குறிப்பாகப் பொருளை உணர்த்துவதோடு இயற்கைச் சூழல், பண்பாட்டுச் செய்திகள் முதலியவற்றை உணர்த்துவனவாகவும் செயல்படுகின்றன. இவ்வாறு சில வருணனையையும் வெற்றுக அமைக்காது ஏதேனும் நோக்குடனேயே பயன்படுத்தியிருப்பது சங்கப் பாடல்களின் செறிவான அமைப்பிற்குக் காரணமாகின்றது.

4.2. பாடலமைப்பில் கையாளப்பட்டவை

மேற்கூறப்பட்ட உத்திகள் பாடலின் எப்பகுதியிலும் பொதுவகையில் அமையும் தன்மையன. இவ்வாறின்றி பாடலமைப்பையே கருவியாகக் கொண்டு பாடலின், தொடக்கம், முடிவு ஆகியவற்றில் அமைக்கப்படும் உத்திகள், பாடலில் நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்திக் காட்டுதலில் கையாளப்படும் உத்திகள், யாப்பமைப்பை வாய்ப்பாகக் கொண்டு கையாளப்படும் உத்திகள் என்பன இப்பகுதியில் காணப்படும்.

4.2.1. பொது அமைப்பில் அமைபவை

யாப்பமைப்பு நீங்கலாகக் கையாளப்படுபவை இப்பகுதியில் அடங்கும்.

4.2.1.1. தொடக்க, முடிவு உத்திகள்

பாடலின் அளவு வேறுபாடு காரணமாக எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் இவ்வுத்தி வகையில் சிறிது வேறுபடுகின்றன.

4.2.1.1.1. எட்டுத்தொகைப் பாடல்கள்

பாடற் பொருளுக்கேற்ற நேரடியான செறிவான தொடக்கத்தைக் கொண்டுள்ளன எட்டுத்தொகைப் பாடல்கள்.

அகப்பாடல்கள் சில பாத்திரங்களின் உளர்வுநிலையை நேரடியாகப் பாடலின் தொடக்கத்திலேயே வெளிப்படுத்துவனவாக உள்ளன.[313] இவை ஆற்றாமையுளர்வு, வியப்புளர்வு, சினவுளர்வு, பதற்ற உளர்வு என்பனவாகிய வெளிப்படுத்துகின்றன.

'காணினி வாழி தோழி யாணர்க்
கடும்பூன லடைகரை நெடுங்கயத் திட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்
கிறுமற் றெவனே நொதுமலர் தலையே'[314]

என்பது, தலைவன் வரைவொடு வந்தமையைத் தலைவி தோழிக்கு உணர்த்துவது. தலைவன் வரைவொடு வந்த மகிழ்வுளர்வை வெளிப்படுத்தும் வகையில், 'காணினி வாழி தோழி' என்ற தொடக்கம் அமைந்துள்ளது.

---

313. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.147.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.11.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.11, 67, 110, 171, 299, 305, 309, 323.

314. மேற்படி, பா.171.

வேறு சில, கேட்போர் கருத்தை ஈர்த்து உடனே செயல்படத் தூண்டும் தொடக்கத்தைக் கொண்டுள்ளன.[315] தோழி தலைவியை ஆற்றுவிக்கும் கற்றுகளில் இத்தன்மை உள்ளது.

பாத்திரங்களின் பேச்சுகளில் அவைகளின் உளவியல் தன்மைக்கேற்ப அமைந்த தொடக்கங்களும் உள்ளன.[316] 'தான் குறித்த பருவம் வந்தும் தலைவி எவ்வாறு வருந்துவாளோ' என என்னும் தலைவனுக்குத் தலைவியை நினைந்தவுடன் அவளது கண்களும் தோள்களும் முதலில் அவன் மனக்கண்ணில் தோன்றுகின்றன. இவ்வுளநிலையை விளக்குதற்கேற்ப,

'ஆடமை பூரையும் வனப்பிற் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி யிருந்த ஊரே'[317]

எனப் பாடல் தொடங்குவது இதனை உணர்த்தும்.

கூற வேண்டிய செய்தியைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் முதலிலேயே குறிப்பாக உணர்த்துமாறும் தொடக்கங்கள் அமைந்துள்ளன.[318] தலைவனின் பிரிவைத் தலைவிக்கு உணர்த்தும் தோழி,

'பெருநகை கேளாய் தோழி காதலர்
இருநாள் கழியினும் உயிர்வேறு படூஉம்
பொம்மல் ஓதி ... ...'[319]

---

315. மேற்படி, பா. 9, 10, 36, 83, 146, 248, 287, 379.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 26, 66, 91

316. மேற்படி, பா. 53, 151.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 12, 139

317. மேற்படி, பா. 131.

318. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 108, 251, 324, 348, 400.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 86.

319. மேற்படி, பா. 129.

என விளித்துத் தொடங்குகிறள். தலைவன் பிரிய இருக்கிறன் என்ற குறிப்பை உணர்த்த இவ்வாறு கறுகிறள். தலைவிக்கு மட்டுமின்றி கற்போர்க்கு உணர்த்தும் குறிப்பாகவும் இது உள்ளது. தோழியின் பேச்சுத்திறனுக்கேற்ப இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

புறப்பாடல்களில் இத்தொடக்க உத்தி புலவர்தம் எண்ணத்தை எடுத்த எடுப்பிலேயே விளக்கும் நேரடித் தொடக்கமாக அமைந்துள்ளது. புறப்பாடல்கள் அனைத்துமே இவ்வகையில் கொள்ளத்தக்கன.

உள்ளுறை, இறைச்சியைப் போன்று இத்தொடக்கங்களுக்குக் குறிப்பிட்ட வரையறையில்லையெனினும், புலவர்கள் பாத்திரங்களின இயல்போடு படைக்க மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றாக ஆங்காங்கே அமைந்த தன்மையாக உள்ளது.

எல்லாப் பாடல்களும் எழுவாயை முடிபாகக் கொண்டு விளங்குகின்றன. கற வேண்டிய செய்திக்கு இன்றியமையாமை அளித்து அதனை முதலில் கறி விடுதலால் இத்தன்மையைக் கொண்டுள்ளன. 'மாறுபட்ட சொற்றொடர் அமைப்பில் பாடலின் முடிவைச் சுட்டுதற்கான உத்தியாகவும் இதனைக் கருதுவர்.[320]

4.2.1.1.2. பத்துப்பாட்டு நூல்கள்

எட்டுத்தொகைப் பாடல்கள் குறிய அளவினதாய்ப் பல புலவர்கள் பாடிய தனிப்பாடல்களின் தொகுதியாக அமைவன. பத்துப்பாட்டில் உள்ளவை நீண்ட பாடல்களாய் அமைவதால் அவற்றில் நிகழ்ச்சிப் பின்னலுக்கும் இன்றியமையாமை அளிக்கப்பட்டுள்ளது. எட்டுத்தொகையில் அகப்பாடல்கள் பாத்திரங்களின் கற்றக அமைய, பத்துப்பாட்டில் புலவன் கற்றகவும் அமைந்துள்ளன. எனவே பாடலின்

---

320. ஜ. நீதிவாணன், நடையியல், பக். 5.

தொடக்கம், முடிவு என்பதோடு நிகழ்ச்சியைக் கோர்வையாக்கிக் காட்டும் முயற்சியிலும் புலவன் ஈடுபடுகிறான். சங்க இலக்கியங்களில் தோன்றிய இம்முயற்சியைக் காப்பிய வளர்ச்சியின் முதல் படிநிலையாகக் கருதலாம்.

1. முல்லைப் பாட்டு

முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளான இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்பதை விளக்குவது இப்பாடல்.

தொடக்கம்

முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது சிறுபொழுது என்ற இரண்டையும் விளக்குவதாகப் பாடல் தொடங்கப் பெற்றுள்ளது. தொடர்ந்து தலைவி வருந்தி நிற்கும் காட்சியை விளக்குதற்கேற்ப இத்தொடக்கம் அமைக்கப் பட்டுள்ளது.

'கோடுகொன் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்புயல் பொழிந்த சிறுபுன் மாலை' [321]

எனவரும் இவ்வருளினை, இன்றியமையா நிகழ்ச்சியைச் சுட்டவரும் குறிப்பை உணர்த்துவதோடு, அந்நிகழ்வைப் பற்றி கற்போரை அறியத் தூண்டும் ஆர்வத் தொடக்கமாகவும் உள்ளது. மேலும் 'எழிலி' எனப் பெண்பாலைச் சுட்டும் பெயரால் மேகத்தைக் குறித்து, அது 'சிறுபுன்மாலையில் பெரும்புயலைப் பொழிந்தது' என்பதைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பது, மாலைப்பொழுது கண்களில் பெயல் போன்று நீர் பெருக நிற்கும் தலைவியின் நிலையைப் பின்னல் விளக்குதற்-கேற்ற வருணனையாக உள்ளது. பாடற் பொருளுக்கும் பாடலின் தொடக்கத்திற்கும் அமைய வேண்டிய ஒருமைப்பாட்டைப் புலவர் கருத்தமை இங்குப் புலனாகிறது.

---

321. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப்பாட்டு, 5-6.

தலைவனும் தலைவியும் இல்லில் இருத்தல், தலைவன் கார்ப்பருவத்தில் வருவதாகக் கூறிப் பிரிதல் என்பவற்றைக் குறிப்பாக உணர்த்தி, தலைவன் வரவில்லையென வருந்தியிருக்கும் தலைவியின் காட்சி முதலில் காட்டப்பட்டு துன்பியல் தொடக்கமாக அமைகின்றது.

முடிவு

தொடக்கம் துன்பநிலையைக் காட்டுவதாக இருப்பினும் முடிவு இன்ப நிலையைக் குறிப்பதாக உள்ளது. இவ்வாறு பாடலின் தொடக்கம், முடிவு என்ற இருநிலைகளைக் கருவியாகக் கொண்டு, அவற்றில் துன்பம், இன்பம் என்ற முரண்பாட்டு நிலையை அமைத்திருப்பது கற்போர்க்கு ஆர்வத்தையும், மனநிறைவையும் அளித்தற்-கெனக் கையாண்ட உத்தியாக உள்ளது. இம்முடிவும் நேரடியாகத் தலைவனின் வரவைச் சுட்டாது,

'விரை விளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே
... ...
இன்ப விமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய வாலின ...' [322]

எனத் தேரின் ஒலியைச் சுட்டுவதோடு மட்டும் காட்சி முடிக்கப் பெற்றுள்ளது. தேரின் ஒலி தலைவனின் வருகையைச் சுட்டி தலைவியின் துன்பம் தீர தலைவன் வந்து விட்டான் என்பது உய்த்துணரப்படுவதாக உள்ளது. மேலும் 'விரைவிளங்கு நெடுந்தேர்' என்றமையால் தலைவன் விரைவை நன்முறையில் முடித்து மீண்டான் என்பதும் உணர்த்தப் பெற்றது. இவ்வாறு தொடக்கம், முடிவு என்ற இரண்டும் முறையே தலைவனின் பிரிவு, வரவு என்பவற்றை உய்த்துணர்வதாக அமைக்கப்பட்டுள்ளது.

---

322. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'முல்லைப்பாட்டு', பத்துப்பாட்டு, 103, 88-89.

நிகழ்ச்சிப் பின்னல்

முதலில் வருந்தியிருக்கும் தலைவியின் நிலை,[323] அடுத்துப் பாசறையில் தலைவனின் நிலை,[324] மீண்டும் வருந்தியிருக்கும் தலைவனின் நிலை[325] என மூன்று நிலையாகக் காட்சி பகுக்கப்பட்டுள்ளது. தலைவியின் நிலையை விளக்குமிடங்களில் அவள் தலைவனையே நினைந்து வருந்தியிருக்கும் தோற்றம் விளக்கப்பட்டுள்ளது. ஆயின் தலைவன் தான் கொண்ட வினையிலேயே கருத்துச் செலுத்துபவனாக விளக்கப் பட்டுள்ளான். பாத்திரங்கள் அவரவரது ஆளுமைக்கேற்ப இவ்வாறு படைக்கப் பட்டுள்ளனர்.

தலைவனின் பாசறை நிலையை விளக்கும்பொழுது பாசறையைப் பற்றிய விரிவான செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இது நிகழ்ச்சிப் பின்னலில் ஒரு நெகிழ்வை ஏற்படுத்துவதாய் இருப்பினும் பண்பாட்டுச் செய்திகளை விளக்கும் நோக்கில் புலவர் இவைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

2. மதுரைக் காஞ்சி

முதலில் பாண்டியனைப் பலவாறு விளிக்கும் தன்மை காணப்படுகிறது. ஒவ்வொரு விளிக்கும் பாண்டியனின் பண்புகளும், செயல்களும் அடைச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.[326] இதில் போர்க்களக் காட்சி பற்றிய விரிவான வருணனையும் இடம்பெற்றுள்ளது. பின் மதுரையின் அமைப்பும் சிறப்பும் விளக்கப் பட்டுள்ளது.[327] இவ்வாறு நீண்ட வருணனைகளே பாடலின் அமைப்பாக உள்ளது.

---

323. மேற்படி, 6-23.
324. மேற்படி, 24-79.
325. மேற்படி, 80-88.
326. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'மதுரைக் காஞ்சி', பத்துப்பாட்டு, 1-151.
327. மேற்படி, 152-699.

காப்பியங்களுக்குரிய நாடு வருணனை, நகர வருணனை என்பவற்றுக்கு அடிப்படையாக இதனைக் கருதலாம்.

'ஐம்பொறிக்கண் நிற்கப்படுவதாகிய நுகர்பொருட்களிடத்து நினக்கு என்ன உறவுண்டு. உன்னிடத்துள்ள மாயை கெடுவதாக. நாள் முழுதும் பேரின்பத்தை நுகர்க என்பது பாடலின் மையக்கருத்தாகும். இச்சிறுகருத்தை விளக்க நீண்ட வருணனை அமைக்கப்பட்டுள்ளது.[328] மேலும் பாடலின் இடையில் வரும் தொடரை இறுதியில்[329] சேர்த்துப் பொருள் கொள்ளுமாறு அமைக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை நீண்ட அமைப்புடைய இவ்வருணனையும், பொருள் கொள்ளும் முறையும் பாடலமைப்பில் கையாளப்பட்ட உத்திகளாக விளங்குகின்றன.

3. நெடுநல்வாடை

இது முல்லைப்பாட்டை ஒத்த அமைப்புடையது. முல்லைப்பாட்டைப் போன்று பொழுது வருணனையோடு தொடங்கப்பெற்று முதலில் ஆற்றுது வருந்தியிருக்கும் தலைவியின் நிலையும் அடுத்து, பாசறையில் தலைவனின் நிலையும் காட்டப்பட்டுள்ளது. தலைவனின் வரவும் நேரடியாகக் காட்டப்பெறுது, தலைவியை ஆற்றுவிக்கும் செவிலி கற்றின் வழிக் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது. தலைவனை நினைந்து வருந்துபவளாகத் தலைவியும், தன்னினையின் கண்ணே ஒருமைப்பட்டவளுகத் தலைவனும் படைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைப்பாட்டில் பொழுது வருணனையை அடுத்து உடன் தலைவியின் நிலையைக் காட்டும் செறிவான தொடக்கம் உள்ளது. நெடுநல்வாடையில் பொழுது வருணனை,[330] அப்பொழுதில் மக்களின் செயல்கள்,[331] பாண்டியனின் அரண்மனைத்

---

328. மேற்படி, 206-208.

329. மேற்படி, 780-782.

330. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'நெடுநல்வாடை', பத்துப்பாட்டு, 1-28.

---

331. மேற்படி, 28-72.

தோற்றம்,[332] கட்டிலின் அமைப்பு[333] என்பனவற்றை விளக்கியபின் தலைவியின் நிலை[334] காட்டப்படுகின்றது. நாடகத்திற்கு அமையும் காட்சியமைப்புகளைப் போன்று இங்கு, தலைவியைக் காட்டுதற்கு முன் அரண்மனைத் தோற்றம் முதலான காட்சியமைப்புகளுக்கு இன்றியமையாமை அளித்து விளக்கப்பட்டுள்ளது.

4. குறிஞ்சிப்பாட்டு

மேற்குறித்தவை புலவன் கற்குக அமைய குறிஞ்சிப் பாட்டு தோழி கற்குக அமைந்துள்ளது. முல்லைப்பாட்டைப் போன்று இதுவும் திணை அடிப்படையில் பெற்ற பெயரைக் கொண்டுள்ளது.

முல்லைப்பாட்டு, நெடுநல்வாடையைப் போன்று தனித்தனிக் காட்சியாக விளக்காது கதை கறுவதுபோல் நிரலாகச் செய்திகளை விளக்குவது இக்குறிஞ்சிப் பாட்டு. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் வகையில் தலைவி திணைப்புனம் சென்றது முதல் இயற்கைப் புணர்ச்சி எய்தியது வரை ஒவ்வொரு நிகழ்ச்சியும் விளக்கப் பட்டுள்ளது.

'அறத்தொடு நிற்கும் தோழி,
அன்னாய் வாழிவேண் டன்னை ...'[335]

எனப் பணிவோடு, செவிலியின் மனங்கொள்ளுமாறு செய்தியைக் கறத்தொடங்குபவளாகப் படைக்கப்படுகிறாள். இதுவே பாடலின் தொடக்கமாகவும் அமைந்துள்ளது. இங்குறு-நூற்றிலும் இந்நூலாசிரியரால் பாடப்பெற்ற 'அன்னாய்வாழிப் பத்தி'லுள்ள பாடல்கள் இத்தொடக்கத்தையே கொண்டுள்ளன.

---

332. மேற்படி, 72-114.

333. மேற்படி, 115-135.

334. மேற்படி, 136-166.

335. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'குறிஞ்சிப் பாட்டு', பத்துப்பாட்டு, 1.

நிகழ்ச்சி விளக்கத்தை நோக்காகக் கொண்டமைந்த பத்துப்பாட்டு நூல்கள் பண்பாட்டுச் செய்திகளை விரிவாக விளக்கச் சிறந்த வாய்ப்பாக விளங்குதற்கேற்ப இக்குறிஞ்சிப்பாட்டில் அமைந்துள்ள பூக்களைப் பற்றிய விளக்கம் இந்நூலுக்கேயுரிய சிறப்புப் பண்பாகும்.

5. பட்டினப்பாலை

தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது.

'வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்' [336]

எனவரும் பாடலின் தொடக்கம், 'எப்பொருளின் சிறப்பு இவ்வாறு கூறப்படுகின்றது, எதற்காகக் கூறப்படுகின்றது' எனும் சிந்தனைகளை எழுப்பும் ஆர்வத் தொடக்கமாக உள்ளது. பின் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும், [337] காரிகாலனின் சிறப்பும் [338] பற்றிய நீண்ட வருணனை பாடலின் உடற்பகுதியாக அமைந்துள்ளது.

தலைவன் கூற நினைக்கும் செய்தியை வெளிப்பட எடுத்துரைக்கும் தெளிவான முடிவாகப் பாடலின் முடிவு அமைந்துள்ளது.

பாடலின் இடையில் உள்ள அடிகளை [339] பாடலின் இறுதியோடு சேர்த்துப் பொருள் கொள்ளுமாறு பாடல் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பில் மதுரைக் காஞ்சியை ஒத்து விளங்குகிறது இந்நூல்.

---

336. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), 'பட்டினப்பாலை', பத்துப்பாட்டு, 1-2.

337. மேற்படி, 5-218.

338. மேற்படி, 220-299.

339. மேற்படி, 218-220.

ஆற்றுப்படை நூல்களில் இயற்கை வருணனையைக் கொண்ட இயல்பான தொடக்கங்கள் அமைந்துள்ளன. இவை ஒரு தலைவனை மையமாகக் கொண்டு பாடப்படுகின்றமையால் 'மலைகிழவோனே', 'நாடுகிழவோனே' எனப் பாட்டுடைத் தலைவனைச் சுட்டியவண்ணம் முடிவு பெற்றுள்ளன.

இவ்வாறு பாடற்பொருளுக்கு இயைய கருத்தை வெளிப்படுத்த பாடலமைப்பையும் உத்தியாகக் கையாண்டனர்.

மொத்தத்தில் பத்துப்பாட்டு நூல்களுள் முல்லைப்பாட்டு செறிவான அமைப்பைக் கொண்டு விளங்குகின்றது.

4.2.1.2. உரையாடல் அமைப்பு

தனிப்பாடல்களாய் அமைந்த சங்கப் பாடல்கள் உரையாடல் அமைப்பையும் பெற்று விளங்குகின்றன. சங்கப் பாடல்கள் நாடகப் பாங்கைப் பெற்று விளங்குதற்கு இப்பண்பும் ஒரு காரணமாக அமைகின்றது.

இப்பாடல்கள் ஒருமைக் கற்புகளே அமையினும் 'நாட', 'பெரும' என்ற முன்னிலை விளிகள், இருவர்க்கிடையே நடைபெறும் உரையாடல் அமைப்பைத் தோற்றுவிக்கின்றன.

ஒருவர் கற்றில் வேறொரு கற்றை நேர்க்கற்புகப் பயன்படுத்துவதும் இவ்உரையாடற் பண்பை மிகுதிப்படுத்துகிறது.

'பேரூர் கொண்ட ஆர்கலி விழவில்
செல்வாம் செல்வாம் என்றி அன்றிவன்
நல்லோம் நல்ல பலவாற் றில்ல
தழலும் தட்டையும் முறியுந் தந்திலை
ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கறி

அன்னை யோம்பிய ஆய்நலம்
என்னை கொண்டான்யாம் இன்மையா லினியே' [340]

என்பது தோழி கற்றுக அமைந்த பாடல். இதில், 'செல்வாம் செல்வாம் என்றி', 'இலை ஒத்தன நினக்கென' என்பவை, தலைவன் கூறியதைத் தோழி பயன்படுத்தும் நேர்க்கற்றுகளாகும். இவ்வடிப்படையில் ஒரு பாத்திரத்தின் கற்றுவழி மூன்று பாத்திரங்கள் உரையாடும் காட்சியும் தோற்றுவிக்கப்படுகின்றது. [341]

இவ் உரையாடற் சிறப்பிற்கு விளைமுற்றுத் தொடர்கள் மேலும் உயிரூட்டுவனவாய் உள்ளன.

'நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ' [342]

எனவரும் பாடல் இதற்குச் சான்றாகும்.

அகப்பாடல்களில் தலைவன், தலைவி, தோழி கற்றுக வருவது மரபாக அமைய, புறப்பாடல்களில் மறவன், தாய் முதலியோர் கற்றுக அமைப்பதும் உத்தியாக உள்ளது. [343]

சங்க இலக்கியங்களில் கலித்தொகையில் இவ்வுரையாடல் அமைப்பு சிறந்து விளங்குகின்றது. தனிச்சொல், சுரிதகம், தாழிசை என்ற உறுப்புகளைக்

---

340. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 223.

341. மேற்படி, பா. 81.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 8.

342. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 75.

343. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 277, 278, 279, 286, 287, 301, 302, 303, 304, 305, 306, 319.

கொண்ட கலியாப்பு முறை இதற்குச் சிறந்த வாய்ப்பாக உள்ளது. ஒருவர் கற்றிலேயே மற்றவர் கற்று அமைதற்கும் இது தகுந்த அமைப்பாக உள்ளது. இதில் 'எனவாங்கு' என்பது போன்று அமைந்த தனிச்சொற்கள் சுட்டுவிரகாக நின்று இருவர் கற்றுகளையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. பிற சங்கப் பாடல்கள் 'நாட', 'பெரும' என்ற முன்னிலை விளியாக மட்டும் அமைய 'கேண்மின்', 'கேளினி' என்ற சொல்லாட்சிகளையும் கலித்தொகை பெற்று விளங்குவது உரையாடற் பண்பை மிகுவிப்பதாய் உள்ளது. பொதுவாக முன்னிலை விளிகளைப் பெற்று விளங்கும் சங்கப் பாடல்கள் அனைத்தையுமே உரையாடல் பாங்குடையதாகக் கருதலாம்.

4.2.1.3. வாய்மொழிப் பாடற் கறுகளின் பயன்பாடு

வாய்மொழிப் பாடற்கறுகளையும் சங்கப் புலவர்கள் தமது பாடலமைப்பில் பயன்படுத்தியுள்ளனர். கலித்தொகையில் மட்டும் இப்பண்பு காணப்படுகின்றது. ஊசற் பாடல் வடிவிலும்,[344] உலக்கை குற்றிப் பாடும் வள்ளைப் பாட்டாகவும்[345] கலித்தொகையில் பாடல்கள் அமைந்துள்ளன. இவை தலைவியும், தோழியும் மாறி மாறித் தலைவனை இயற்படலும், இயற்பழித்தும் கூறுவதாக உள்ளன. பொதுவான அமைப்பில் நேரடியாகக் கருத்தை வெளிப்-படுத்துவதிலிருந்து மாறுபட்டு வாய்மொழிப் பாடலமைப்பைக் கருவியாகக் கொண்டுள்ளமை பாடலமைப்பில் கையாண்ட புதிய உத்தியாகும். இவ்வமைப்பு 'ஊசல் இலக்கியங்கள்' எனத் தனி இலக்கிய வகைத் தோற்றத்திற்கும் அடிப்படையாய் அமைந்துள்ளது. பண்பாட்டுக் கறுகளை இலக்கியப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும், உரையாடல் அமைப்புக்கு ஏற்ற வடிவம் என்பதாலும் இம்முறையைப் பின்பற்றியிருக்கக் கூடும்.

---

344. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 131.

345. மேற்படி, பா. 40, 41, 42.

4.2.1.4. எளிமையான பாடல்கள்

உவமை, உருவகம், இறைச்சி, உள்ளுறை என எத்தகைய உத்திகளும் பயிலப்படாது ஆழல் உள்ளங்களவர் தன்மையனவாகிய பாடல்கள் எளிமைப் பாடல்கள் எனச் சுட்டப்படுகின்றன. பாடலமைப்பு என்ற நிலையில் காணும்பொழுது இத்தகைய பாடல்களை யாப்பதும் ஓர் உத்தி எனலாம். பிற பாடல்களை யாப்பதைக் காட்டிலும் இதற்கு நுட்பமான அறிவும், ஆழ்ந்த பயிற்சியும் திறனும் தேவைப்படுகின்றது. இத்தகைய பாடல்கள் மிகவும் எளிமையாகவும், சுருக்கமாகவும், செறிவாகவும் விளங்குகின்றன. குறுகிய அளவுடைய பாடல்களைக் கொண்ட புறநானூறு,[346] குறுந்தொகை,[347] ஐங்குறுநூறு[348] என்பவற்றில் மட்டும் இத்தகைய பாடல்கள் அமைந்துள்ளன.

'உள்ளின் உள்ளம் வேமே உள்ளா
திருப்பினெம் அளைவத் தன்றே வருத்தி
வான்நோய் வற்றே காமம்
சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே'[349]

---

346. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 12, 45, 46, 47, 74, 81, 83, 84, 85, 110, 112, 121, 124, 183, 186, 187, 188, 191, 194, 218, 219, 232, 261, 277, 278, 279, 287, 310, 312, 317, 318, 319.

347. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 4, 23, 28, 39, 102, 161, 191, 195, 288.

348. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 64, 66 69, 173, 174, 313, 315, 334, 336, 351, 362, 361, 364, 367, 371, 374, 393, 394, 403, 404-410, 415, 426-430.

349. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 102.

'அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே' [350]

என்ற பாடல்கள் இத்தன்மைக்குச் சான்றுவன. உளர்வு நிலைக்கு முதன்மை அளிப்பனவாகவும், பொது உண்மையை விளக்குவனவாகவும் இவ்வகைப் பாடல்கள் விளங்குகின்றன.

4. 2. 2. யாப்பமைப்பில் கையாளப்பட்டவை

கலித்தொகை, பரிபாடல் ஆகிய இருநூல்களைத் தவிர பிற அனைத்தும் ஆசிரியப்பாக்களில் அமைந்தவை. இவற்றிலும் எதுகை, மோனை அமைப்பு இயல்பான முறையில் கையாளப்பட்டுள்ளதைத் தவிர, வலிந்து புகுத்தப் படவில்லை. கலித்தொகை, பரிபாடல் என்ற இரண்டில் மட்டும் எதுகை மோனை அமைப்புகள் சிறப்பாக அமைந்துள்ளன. ஓசைநயம் மிக்க சொல்லாட்சிகளுக்காக இவை கையாளப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி விளக்கம், இசைப் பாடல்கள் என்ற இரண்டும் ஒருங்கே அமைந்த பாடல்களில் துள்ளலோசை பொருந்திய யாப்பமைப்பின் வழி இசைப்பாடல் பொருந்திய அமைப்பு வேறுபடுத்திக் காட்டப்படுகின்றது. [351] இருவரிடையே நடக்கும் உரையாடலை வேறுபடுத்திக் காட்ட கலித்தொகையில் கொச்சகங்கள்

---

350. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 112.

351. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பரிபாடல், பா. 15.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 106.

சிறந்த கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.[352] ஐஞ்சீரில் தொடங்கி முச்சீரில் முடியும் இவ் ஒவ்வொரு பகுதியும் மாறி மாறி அமையும் ஒவ்வொருவர் கற்றையும் தனித்தனியே இனங்காட்டுவதாக உள்ளது. ஒரு பொருள் முன்றடுக்கி வரும் தாழிசையமைப்பு உணர்வு வெளிப்பாட்டிற்குச் சிறந்த வாய்ப்பாக அமைகின்றது. இவை தவிர யாப்பமைப்பில் மிகுதியும் உத்திகள் கையாளப்படவில்லை.

சொல், தொடர் என்ற உத்தி நிலைகளைக் காட்டிலும் வண்ணன நிலையில் உத்திகள் மிகுந்துள்ளமை மேற்கண்டவை வழி புலனாகின்றது.

---

352. மேற்படி, பா.63, 84, 85, 87, 88, 90, 91, 93, 95.

* * *

****
*   *
* இயல் - 5 *
*   *
****

****
*   *
* பொருளமைப்பு உத்திகள் *
*   *
****

5. பொருளமைப்பு உத்திகள்

படைப்பாளனின் சிந்தனையோட்டத்தால் பொருளமைப்பில் உண்டாகும் விளைவுகள் பொருளமைப்பு உத்திகளாகின்றன. தலைவன், தலைவி, தோழி முதலானோர் ஒருவருக்கொருவர் செய்திகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்திக் கொள்வதும், புலவன் நேரடியாகவோ, மறவன், தாய் முதலியோர் கூற்றுகளோ வீரம், கொடை முதலிய பண்புகளை விளக்குவதும் சங்கப் பாடல்களின் இயல்பான பொருளமைதியாகும். இப்பொருளமைதியோடு வேறுசில அமைப்புகளும் இடம் பெற்றுள்ளன. செய்தியைச் சுவைபடக் கூறுதற்கும், எளிதில் உணர்த்தற்கும் இவை பயன்படுகின்றன. இவற்றுள் சில தொல்காப்பிய மரபு அடிப்படையில் அமைந்தவை ஆகும்.

5.1. ஆற்றுப்படுத்தும் முறை

வள்ளல் ஒருவனிடத்துப் பொருள் பெற்ற ஒருவன் வேறொருவனையும் அவ்வள்ளலிடத்துச் செல்லுமாறு கூறுவது ஆற்றுப்படுத்தும் முறையாகும்.

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்' [1]

எனும் தொல்காப்பிய நூற்பா இதனை உணர்த்தும். குறிப்பிட்ட மன்னன் அல்லது வள்ளலின் கொடை, வீரம் முதலான பண்புகளை எடுத்துரைக்கக் கையாண்ட உத்தியாக இப்பொருளமைப்பு விளங்குகின்றது. பதிற்றுப்பத்திலும், புறநானூற்றிலும் இவ்வமைப்பு ஆங்காங்கே இடம்பெற்றுள்ளது. இதன் முழுமை பெற்ற அமைப்பு பத்துப்பாட்டில் அமைந்துள்ளது.

---

1. இளம்பூரணர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ.88.

முன்னிலைக் கூற்றும், பரிசில் கடாநிலையும் இப்பொருளமைதிக்கு அடிப்படையாய் விளங்குகின்றன.

விறலியை முன்னிலைப்படுத்தி மன்னன் புகழைக் கூறுவதாகவும்,[2]
இத்தகைய வழியைக் கடந்து வந்தேன் எனப் பரிசில் கடாவி நிற்கும்[3] நிலையாகவும்,
பரிசில் பெறத் தன்னுடன் விறலியையும் அழைப்பதாகவும்,[4]
விறலியரையும் பரிசிலரையும் முன்னிலைப்படுத்தி மன்னன் புகழைக் கூறுவதாகவும்,[5]
மன்னனைப் பாடிச் சென்றால் இன்னின்ன பெறுவை எனப் பாணனை முன்னிலைப்படுத்திக்[6] கூறுவதாகவும்,
மன்னனிடத்துச் செல்ல விரும்புவையாயின் அவன் இருப்பிடம் இத்தன்மைத்து எனவிறலியை முன்னிலைப்படுத்திக்[7] கூறுவதாகவும்,

---

2. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 2/8, 4/10
   சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 103, 105, 133.

3. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 5/1.

4. மேற்படி, பா. 5/9, 6/7, 6/10.

5. மேற்படி, பா. 6/8.

6. மேற்படி, பா. 7/7.
   சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 68, 69, 70, 138, 141, 180.

7. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), பதிற்றுப்பத்து, பா. 8/8.

பானன், விறலியின் ஏழ்மைத் தோற்றத்தைக் காட்சிப்படுத்துவதாகவும்,[8]
பரிசில் பெற வந்தோரையெல்லாம் விளித்துப் பாடுவதாகவும்,[9]
வேறொரு புலவனைக் குறிப்பிட்ட மன்னனிடத்துச் செல்லுமாறு
கறுவதாகவும்,[10]
எட்டுத்தொகைப் பாடல்களில் ஆற்றுப்படுத்தும் பொருளமைதி உள்ளது.

பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்-பாணாற்றுப்படை, மலைபடுகடாம் எனப்படும் கூத்தராற்றுப்படை ஆகியன பொருநனையும் பாணனையும், கூத்தனையும் ஆற்றுப்படுத்துவதாக அமைய திருமுருகாற்றுப்படை வீடு பெறக் கருதிய ஒருவனை நோக்கி வீடு பெற்றவொருவன் ஆற்றுப்படுத்துவதாக உள்ளது. இத்தன்மை பாணன், விறலி முதலானோரை வள்ளல்களிடத்து ஆற்றுப்படுத்தும் பொருண்மை அடிப்படையில் தோன்றியதாகக் கொள்ளலாம்.

யாழின் தோற்றம், பாடினியின் அழகு, வழிநடை வருத்தத்தால் நேர்ந்த துன்பம், ஆற்றின் கொடுமை, பொருநன் வழியில் தங்கியிருக்கும் தோற்றம், ஆற்றுப்படுத்துவோன் தனது பழைய வறுமைநிலை, இப்பொழுது பரிசில் பெற்று வரும் நிலை, வள்ளலிடத்துச் செல்லும் வழியின் தன்மை, அரண்மனைச் சிறப்பு, வள்ளலின் பண்புநலன்கள், அவனிடத்துச் சென்றால் வழிவருத்தம் நீங்கும் தன்மை, அவனளிக்கும் உணவின் தன்மை என்பன இவ்வாற்றுப்படை நூல்களில் விளக்கப்படும் செய்திகளாகும். மன்னர்களின் புகழை வெளிப்படுத்தக் கையாளப்பட்ட இவ்வமைப்பு பாணன், பொருநன் முதலியோர் நிலையையும் தெளிவாக விளக்குகிறது.

பாணனை முன்னிலைப்படுத்தி விளித்து அவனது வறுமைத் தோற்றத்தை அவனிடத்தேயே விரிவாக விளக்குவதை நோக்குமிடத்து அது ஆற்றுப்படுத்துவோனின் இரக்க மிகுதியை உணர்த்துவதோடு, அக்காலப் பாணர்களின் நிலையை ஏதேனும் ஒருவழியில் வெளிப்படுத்த வேண்டும் என்பது இவ்வாற்றுப்படை நூல்களின் உள்நோக்கமாக இருத்தல் கூடுமோ என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கின்றது.

---

8. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 135, 136.
9. மேற்படி, பா. 32.

புரவலரைப் புகழ மேற்கொள்ளப்பட்ட நிலையில் எட்டுத்தொகைப் பாடல்களில் கையாளப்பட்ட இவ்வமைப்பு, பாணன் நிலை, இயற்கைச் சூழல், பண்பாட்டுச் செய்திகள் என்பவற்றையும் விளக்குதற்குரிய அமைப்பாக ஆற்றுப்படை நூல்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. தொல்காப்பியத்துள் குறிக்கப்பெறும் ஐந்து நிலப் பிரிவுகளைத் தனிப்பட, பெயர் சுட்டி விளக்கும் தன்மை சங்க இலக்கியத்துள் இவ்வாற்றுப்படை நூல்களில் சிறப்பாகக் காணப்படுகின்றது.

5.2. முன்னிலைப்படுத்தும் முறை

தோழி, தலைவன், தலைவி முதலானோரை விளிக்கும் முன்னிலைக் கூற்றைத் தவிர்த்து, இயற்கைப் பொருட்களையும், நெஞ்சையும் முன்னிலைப்படுத்திக் கூறும் பொருளமைதியுடைய பாடல்கள் இவ்வகைக்குரியன. அகம் புறம் என்ற இரு நிலைகளிலும் உணர்வு மிகுதியை வெளிப்படுத்த இப்பொருளமைதி கையாளப்பட்டுள்ளது.

அகப்பாடல்களில் பாத்திரங்களின் உணர்வுத் தூண்டுதலுக்கு எவ்வெப் பொருட்கள் காரணமாக உள்ளனவோ அவ்வப் பொருட்களே முன்னிலையாக அமைந்து உணர்வை வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் மழை,[11] கடல்,[12] முல்லை மலர்,[13] தீங்கள்,[14] மேகம்,[15] காகம்,[16] மாந்தளிர்,[17] மாலைநேரம்,[18]

---

11. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.158.
    பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.188.
    அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.126,137, 139,248.
12. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.163.
    பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.129.
13. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.162.
    சு.துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.242.
14. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.144.
15. மேற்படி, பா.144.
    பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.158.
    அ.நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.238.
16. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.391.
17. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.142.
    பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.365.

நண்பு[19], வாடை[20], கிளி[21], கதை[22], தும்பி[23], சேவல்[24], நாரை[25], வெள்ளாங்குருகு[26], நிலவு[27], ஞாயிறு[28], பூவு[29], ஆறு[30], சுடர்[31], நொச்சித் தழை[32], குயவன்[33], நகரம்[34], கற்றம்[35], அன்னம்[36] என்பன முன்னிலைப் பொருட்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

---

19. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.170.

20. மேற்படி, பா.125, 163;
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.235.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.193.

21. மேற்படி, பா.102, 376.

22. மேற்படி, பா.83.

23. மேற்படி, பா.277.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.2,39

24. மேற்படி, பா.107.

25. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.54.

26. மேற்படி, பா.70.

27. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.48.

28. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.142.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.8,374.

29. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.420.

30. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பரிபாடல், பா.11.

31. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.142.

32. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.272.

33. மேற்படி, பா.228, 256.

34. மேற்படி, பா.250.

35. மேற்படி, பா.227, 230.

36. மேற்படி, பா.67.

அகப்பாடல்களில் இப்பொருளமைதி பெரிதும் தலைவி கற்றுக அமைந்துள்ளது. தலைவன் கற்றுகளில் அவனது மனநிலையை வெளிப்படுத்தவும்,[37] தோழி கற்றுகளில் தலைவியை ஆற்றுவிக்கவும், தலைவனுக்குக் குறிப்பை உணர்த்தவும்,[38] கையாளப்பட்டுள்ளது. இப்பொருளமைதி தலைவியின் ஆற்றுமை உணர்வை வெளிப்படுத்துவதோடு 'தலைவனைக் காட்டுவையாயின் இன்னின்ன நன்மைகளைச் செய்வேன்' எனக் கறுவதாகவும்,[39] முன்னிலைப்படுத்தப்படும் பொருட்களின் தோற்றம், தன்மை என்பவற்றை விளக்குவதாகவும்[40] அமைந்துள்ளது. இப்பண்புகள் தூது இலக்கியங்களுக்குரிய அடிப்படையாகத் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

புறப்பாடல்களில் இவை புலவன் கற்றுகவே அமைந்துள்ளன. ஒரு பாடல் மட்டும் கணவனை இழந்த பெண்ணின் கற்றுக அமைந்துள்ளது.[41] புறப்பாடல்களில் இம்முன்னிலைப்படுத்தும் முறை அவை உணர்வை வெளிப்படுத்துவதாக அமையினும் அறுபான்மை மன்னர்களின் புகழை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[42] இவற்றுள் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் பாடிய பாடல் தூதுப்பாடலைப் போன்று அடைய வேண்டிய இடத்தையும், கற வேண்டிய செய்தியையும் அவ்வாறு சென்று வந்தால் பெறும் பயனையும் விளக்கும் பொருளமைப்பைக் கொண்டுள்ளது.[43]

---

37. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா.162.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்); நற்றிணை, பா.139.

38. மேற்படி, பா.83, 102, 248, 376.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.125.

39. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.144.

40. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.277.

41. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா.256.

42. மேற்படி, பா.8, 67.

43. மேற்படி, பா.67.

மேற்கறிய பொருட்கரியயடுத்து நெஞ்சை முன்னிலைப்படுத்திக் கறுவது இப்பொருளமைதியில் இன்றியமையாது குறிக்கத்தக்கது. இத்தன்மை தலைவன் கற்றிலேயே மிகுந்து காணப்படுகின்றது.[44] தலைவன் விரைவயிற் பிரிந்தவிடத்துக் கறுவதாகவும், செலவழுங்கும்பொழுது கறுவதாகவும், தலைவியைத் தன்னுடன் சேர்க்க வேண்டுமெனத் தோழியை வேண்டுவதாகவும், தலைவியைப் பெற்றமையால் மகிழும் உள்ள நிலையை வெளிப்படுத்துவதாகவும், பொருள்வயிற் பிரிந்து மீளும் தலைவனின் மனநிலையை உணர்த்துவதாகவும் தலைவன் கூற்றில் இப்பொருளமைதி அமைந்துள்ளது. தோழி கூற்றாகவும்,[45] தலைவி கூற்றாகவும்[46] அரிதாகக் கையாளப்பட்டுள்ளது. இவ்வாறு தலைவி கூற்றில் இயற்கைப் பொருட்கரிய முன்னிலைப்படுத்துவதும், தலைவன் கூற்றில் நெஞ்சை முன்னிலைப்படுத்துவதுமாகிய இருவேறு பண்பாடுகள் முன்னிலைப்படுத்தும் முறையாகிய இப்பொருளமைதியில் காணப்படுகின்றது. நெஞ்சுரம் வாய்ந்தவன் ஆண்மகன், மென்மை வாய்ந்த பண்பினள் பெண்மகள் என்ற அவரவரது ஆளுமைப் பண்பிற்கேற்ப இத்தன்மை அமைக்கப் பட்டுள்ளது எனலாம். பொருளமைப்பிலும் உளவியல் தன்மையைக் கருத்தில் வைத்த சங்கப் புலவர்களின் கர்த்த அறிவும் இங்குப் புலனாகின்றது.

செலவழுங்குவதாக நெஞ்சிற்குக் கறும் அடிப்படையில் எழுந்த பட்டினப்-பாரிலையும் இன்றியமையாது குறிக்கத்தக்க ஒன்றாகும். 'காரிகாலன் வேலினும்

---

44. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 126, 137, 140, 141, 80, 204, 298, 146, 312, 377, 346, 341.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, 19, 33, 77, 21, 79, 43, 5, 351, 353, 337, 225, 191, 131.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 347, 377.

45. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 301.

46. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 91.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 123.

வெம்மையது காடு. கோலினும் தன்னியது இவள் தோள்கள். எனவே பட்டினம் பெறினும் வாரேன் நெஞ்சே' என்பது பாடற்பொருள். இதில் களிகாலனின் வேலின் வெம்மையையும், கோலின் தண்மையையும் உணர்த்தற்கு ஓர் அளவுகோலாகத் தலைவியின் தோளும், தலைவன் செல்லும் காடும் கொள்ளப்பட்டுள்ளது. களிகாலனின் சிறப்பையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் வெளிப்படுத்த நெஞ்சொடு கறிச் செலவழுங்கும் பொருளமைதி சிறந்த வாய்ப்பாகக் கையாளப்பட்டுள்ளது.

நெஞ்சொடு கறும் பொருளமைதி புறப்பாடல்களில் புலவனின் தன்னுணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. பரிசில் கடாநிலையாகவும்,[47] கையறு நிலையாகவும்[48] அமைந்த இரு பாடல்கள் மட்டும் இவ்வகையில் விளங்குகின்றன.

5.3. நிகழ்ந்தது நினைத்தல்

அகப்பாடல்களிலும், புறப்பாடல்களிலும் பாத்திரங்களின் கற்றிலோ, புலவர்களின் கற்றிலோ கடந்த கால நிகழ்ச்சியை நினைந்து பார்ப்பதாக அமைந்த பொருளமைப்பு 'நிகழ்ந்தது நினைத்தல்' என்று கறப்படுகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் 'நிகழ்ந்தது நினைத்தல்'[49] என்பது பாலைக்குரிய மரபாகவும், தலைவனின் கற்றுகவும் அகப்பொருளுக்கு மட்டும் உரியதாக வருவது. இம்மரபோடு வேறு சில தன்மைகளிலும், 'நிகழ்ந்தது நினைத்தல்' எனும் பொருளமைதி சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. அகப்பாடல்களில் இத்தன்மை,

> தலைவி புலவி நீங்கித் தன்னொடு புதுப்புனல் ஆடவேண்டும் என விரும்பும் நிலை,[50]

---

47. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 101.
48. மேற்படி, பா. 237.
49. இளம்பூரனர் (உரையாசிரியர்), 'பொருளதிகாரம்', தொல்காப்பியம், நூ. 46.
50. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 72, 73, 74.

இடைச்சுரத்துத் தலைவியை நினைந்த நிலை,[51]
ஊடல் நீட்டித்தமை யாற்றுத தலைவனின் நிலை,[52]
முதன் முதல் தலைவியைக் கண்டு நீங்கிய தலைவனின் நிலை,[53]
தலைவன் பிரிவை என்னி வருந்தும் தலைவியின் நிலை,[54]
உடன்போகிய மகளை நினைந்து வருந்தும் தாயின் நிலை,[55]

என்பனவற்றை உணர்த்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புறப்பாடல்களில் இப்பொருளமைதியுடைய பாடல்கள் அனைத்தும் கையறு நிலைப் பாடல்களாக விளங்குகின்றமை குறிக்கத்தக்கது.[56] மறைந்த ஒருவனின் கடந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றிய என்னம் துன்ப உணர்வை மிகுக்கும் உளநிலைக்கேற்ப கையறு நிலைப் பாடல்களில் இத்தன்மை கையாளப்பட்டுள்ளது. மேலும், கையறுநிலைப் பாடல்களிலும், மகட்போக்கிய தாய் இரங்கும் நிலையிலும் கடந்த கால நிகழ்ச்சியோடு, நிகழ்காலத்தை ஒப்பிட்டுக் காணும் தன்மையும் காணப்படுகின்றது.

---

51. மேற்படி, பா. 363.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 106, 113, 318.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 5, 244.

52. மேற்படி, பா. 86, 136.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா. 370.

53. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 62, 142, 152, 162, 164, 198, 230.

54. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 193, 325.

55. மேற்படி, பா. 396.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, 143, 145, 305.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 105, 145, 153, 207, 219, 275, 369.

56. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 112, 113, 116, 117, 120, 225, 232, 234, 235, 243.

5.4. நிகழ்வது நினைத்தல்

கடந்த காலத்தை நினைந்து பார்ப்பது போன்று நிகழ்காலச் செய்திகளை நினைந்து பார்ப்பதாகக் கறும் பொருளமைதியும் உள்ளது. இப்பொருளமைதி முழுதும் தலைவன் கற்றுக அமைந்து தலைவன் தலைவியிடத்துக் கொண்ட அன்பை வெளிப்படுத்துவதாக விளங்குகிறது. பிரிவுவயிற் பிரிந்துள்ள தலைவன் 'தலைவி எத்தன்மையளோ' என எண்ணுவதாக அமைவன இப்பாடல்கள்.[57] ஒரு பாடல் மட்டும் தலைவி கற்றுக அமைந்துள்ளது.[58] தலைவன் பிரிந்தவிடத்து, 'அவன் இத்தகைய பூவைத் தலையில் சூடிக் கொண்டு சென்றிருப்பனோ' எனத் தலைவி எண்ணுவதாக அமைவது இப்பாடல்.

5.5. நிகழ இருப்பதை நினைத்தல்

குறிப்பிட்ட மன உணர்வு நிலையில் இருந்து கொண்டு நடக்க இருக்கும் நிகழ்ச்சியை முன்னமேயே தன் மனக்கண்ணில் காண்பதைப் போன்ற பொருளமைப்பில் தலைவனின் உணர்வு வெளிப்படுத்தப்படுவதாகவும் பாடல்கள் அமைந்துள்ளன. இத்தன்மையனவாக ஒருசில பாடல்கள் மட்டும் காணப்படுகின்றன.[59] இவையும் தலைவன் கற்றுக விளங்குவனவாகும். தலைவியைக் காண விரையும் தலைவன்,

---

57. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, 19, 35, 41, 47, 54, 57, 83, 84, 87, 124, 144, 169, 174, 214, 224, 279.

பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 195, 197.

அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, 157, 371, 374.

58. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 281.

59. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 9, 280, 289, 335.

அவன் தலைவியைக் கண்டவுடன் செய்ய இருக்கும் செயல்களையெல்லாம் அவளுக்கு முன்பே அவனது மனம் சென்று செய்வதைப் போன்று கூறுவது இதற்குச் சான்றாகும்.[60] தலைவி கூற்றாக ஒரு பாடல் அமைந்துள்ளது.[61] இப்பாடல் வரைவு மலிந்தமையைக் கேட்ட தலைவியின் உள்ள நிலையை விளக்குகிறது. புறப்பாடல் ஒன்றும் இத்தன்மையைக் கொண்டுள்ளது.[62] இப்பாடல் விழுப்புண்பட்ட வீரன் ஒருவனது மனைவியின் உள்ள நிலையைக் காட்டுகிறது. வீரன் பட்ட விழுப்புண் மிகவும் பொிதாயிருந்தமையாலும், நிமித்தங்களும் தீமை பயப்பதாக இருந்தமையாலும் அவ்வீரனின் மனைவிக்கு அச்சம் தோன்றுகிறது. இந்நிலையில் தலைவன் இறந்தால் நேரும் விளைவுகளும், கைம்மை நோன்பும் அவளது எண்ணத்திற்கு வரும் தன்மை இப்பாடலில் விளக்கப்படுகிறது.

'ஒரு குறிப்பிட்ட உணர்வு வயப்பட்டு நிற்கும்போது, ஒரு முழு வாழ்க்கையையும் மனம் போன போக்கிலேயே காட்ட முயல்வது நினைவோட்ட உத்தி'[63] என்பர்.

சங்க இலக்கியங்களில் காணப்படும் 'நிகழ இருப்பதை நினைக்கும்' பொருளமைப்பு இந்நினைவோட்ட உத்தியிலிருந்து வேறுபட்டிருப்பினும் இவ்வுத்திக்குாிய அடிப்படையான நினைவோட்டத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது எனலாம்.

5.6. நிகழ்ந்தது கூறுதல்

மேற்கூறிய 'நிகழ்ந்தது நினைத்தல்' என்ற அமைப்பினின்றும் இது வேறுபட்ட ஒன்றாகும். முன்னது பாத்திரங்கள், நடந்த நிகழ்ச்சியை தமக்குள்

---

60. மேற்படி, பா. 9.

61. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 368.

62. சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 280.

63. இரா. தண்டாயுதம், தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், பக். 42.

என்னுவதாகவும், புலவன் தனக்குள் என்னுவதாகவும் அமைவது. 'நிகழ்ந்தது கறுதல்' என்பது ஒரு பாத்திரம் மற்றொரு பாத்திரத்திற்கு நடந்த நிகழ்ச்சியைக் கறுவதாக அமைவது. அகப்பாடல்களுக்கு மட்டும் உரியதாக வருவது. இதனைப் 'பின்னேக்கு உத்தி' எனவும் கறலாம். காப்பியங்களில் நிகழ்ச்சிப் பின்னலின் செறிவிற்காக இவ்வுத்தி பயன்படுத்தப்படுகின்றது. சங்க இலக்கியங்களைப் பொறுத்த வரை இத்தன்மை பொருளமைப்பில் கையாளப்பட்ட உத்தியாகும். மேலும் அகப்-பாடல்கள் தனிப்பாடல்களாய் அமைந்துள்ளமையால் அவற்றில் நிகழ்ச்சிப் பின்னலுக்கென இவ்வுத்தியைப் பயன்படுத்த வாய்ப்பில்லை. சங்க இலக்கியங்களில்,

தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பதாகவும்,[64]

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பதாகவும்,[65]

தோழி செவிலிக்கு, கற்பொழுக்கத்தில் களைவைச் சுட்டுவதாகவும்,[66]

தோழி தலைவியை ஆற்றுவிப்பதாகவும்,[67]

தோழி தலைவியின் ஊடலைத் தீர்ப்பதாகவும்,[68]

தோழி தலைவனுக்குக் கறுவதாகவும்,[69]

---

64. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.51, 55, 111.

65. உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), குறிஞ்சிப்பாட்டு, பத்துப்பாட்டு.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.190.

66. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.104.

67. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.39, 40, 131.

68. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா.198.

69. மேற்படி, பா.1-10.
பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.43.
அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.48.

தலைவன் தோழிக்குக் கூறுவதாகவும்,[70]
தலைவன் பாகனுக்குக் கூறுவதாகவும்,[71]
'நிகழ்ந்ததைக் கூறும்' பொருளமைதி காணப்படுகின்றது. இது நடந்ததை மட்டும் கூறுதல், நடந்ததைக் கூறி இதனால் இன்னது நிகழும் என எதிர்காலத்தையும் கூறுதல் என்ற இருதன்மைகளில் விளக்கப்படுகின்றது.

தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்கும் நிலையில் தன் களவொழுக்கத்தை உணர்த்த நடந்ததை மட்டும் கூறும் கலித்தொகைப் பாடல் முதல் வகைக்குச் சான்றாகும்.[72] தோழி தலைவிக்கு நடந்ததைக் கூறி 'இதனால் தலைவன் விரைய வந்து வரைந்து கொள்வான்' எனக் கூறுவது இரண்டாம் வகைக்குச் சான்றாகும்.[73]

நடந்த நிகழ்ச்சியைக் கூறும் இவ்வமைப்பில் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடத்தக்க ஒன்று. இதில் நடந்த நிகழ்ச்சியை விளக்கி நீண்ட காவிய அமைப்புடைய பாடலை உருவாக்குதற்கு 'அறத்தொடு நிலை' கருவியாகக் கையாளப்பட்டுள்ளது.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள 'நிகழ்ந்ததைக் கூறும்' பொருளமைப்பு, பின்னேக்கு உத்திக்கு நிலைக்களனாக உள்ளது.

5.7. சார்த்திக் கூறுதல்

அகப்பாடல்களில் பாத்திரங்கள் தங்கள் எண்ணங்களையும், உணர்வுகளையும் இயற்கைப் பொருட்களின் மீதோ பிற பொருட்களின் மீதோ சார்த்திக்

---

70. பொ.வே.சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா.86.
71. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.42.
72. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா.51.
73. மேற்படி, பா.39.

கறுவதாக அமைவது இத்தன்மையாகும். இது பாத்திரங்களின் உளர்வுநிலையைக் கற்போர் உளர்தற்குப் புலவன் பொருளமைப்பில் கையாண்ட உத்தியாக உள்ளது.

'இளவேனில் தலைவன் வரவை உளர்த்தியமையால் அதற்கு விருந்து வைப்போம்' எனத் தலைவி கறுவதாக அமைந்த பாடல் இதற்குச் சான்றாகும்.[74] தலைவியின் மகிழ்ச்சியுளர்வு இங்கு வெளிப்படுத்தப்பட்டது. சங்கப் பாடல்களில் இப்பொருளமைதி தலைவனின் அன்பை உளர்த்த கிளியின் மேல் சார்த்திக் கறுவதாகவும்,[75] தலைவியின் ஆற்றுமையை வெளிப்படுத்த பறவைகள், விலங்குகள் மேல் சார்த்திக் கறுவதாகவும்,[76] உடன்போக்குச் சென்ற மகளை நினைந்து வருந்தும் தாயின் துன்ப நிலையை உளர்த்த போகழின் மேல் சார்த்திக் கறுவதாகவும்,[77] அமைந்துள்ளது. இவ்வாறு பிற பொருட்களைச் சார்த்திக் கறுதலன்றித் தனது உறுப்புகளையே சார்த்திக் கறும் தன்மை தலைவியின் கற்றில் காணப்படுகின்றது.[78] கண்ணுந் தோளும் இவ்வாறு சார்த்திக் கறப்படும் உறுப்புகளாகும்.

5.8. களவு

காப்பியங்களில் களவுக் காட்சி பின்வருவதை உளர்த்தும் நிமித்தங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவியின்

---

74. மேற்படி, பா. 32.

75. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 281.

76. மேற்படி, பா. 332, 333.

77. மேற்படி, பா. 376.

78. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 241.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 267.

உள்ள நிலையை விளக்கக் கனவுக் காட்சியை விளக்கும் பொருளமைதி காணப்-
படுகின்றது.[79] மனதில் அழுந்திக் கிடக்கும் நினைவுகள் உறக்கத்தில் மேல்நிலைக்கு
வந்து கனவாக அமைகிறது என்ற உளவியல் அடிப்படையில் கனவுக் காட்சிகள் இங்குப்
பயன்படுத்தப்பட்டுள்ளன. தலைவன் கனவில் அரற்றியமை கண்டு அவனது பிரிவைத்
தான் உணர்ந்ததாகத் தலைவி கூறுவதும்,[80] 'தலைவன் அருகில் இருப்பதைப்
போன்ற பொய்க்கனவு மருட்டியதாகத் தலைவி கூறுவதும்'[81] இதற்குச் சான்றுகளாகும்.
பாத்திரங்களின உளவியல் தன்மைக்கொப்பப் படைக்க மேற்கொண்ட முயற்சியாகவும்
இதனைக் கருதலாம்.

சிறுபான்மை நிமித்தமாகவும், உள்ளுறையை உணர்த்தற்குரிய கருவியாகவும்
பயன்படுத்தப்பட்டுள்ளது.[82]

5.9. வேறு சில பொருளமைதிகள்

மேற்கூறியவை தவிர சங்க இலக்கியத்தில் காணப்படும் வேறு சில
பொருளமைதிகள் புதிய இலக்கிய வகைக்கு அடிப்படையாகவும் அமைந்துள்ளன.

---

79. மேற்படி, பா. 39, 141.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 24, 92, 126, 128, 142.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 30, 147
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), ஐங்குறுநூறு, பா. 234.

80. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 24.

81. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), குறுந்தொகை, பா. 30.

82. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), அகநானூறு, பா. 132, 170.
பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), கலித்தொகை, பா. 49.
சு. துரைசாமிப் பிள்ளை (உரையாசிரியர்), புறநானூறு, பா. 198.

'பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் அறைப்புறத்தாழுக இருக்க அவனெடு புலக்கும் தலைவி மகனுக்குக் கறுவதாக அமைந்த பாடலில், தலைவி தன் மகனது அழகைக் கறி 'வருக' என அழைப்பதும்,[83] உன் தந்தைக்குரிய இத்தகைய குணங்களையெல்லாம் ஒத்திரு, இத்தகைய குணங்களில் ஒத்திராதே[84] என ஒல்வொன்றுகக் கறுவதும் 'பிள்ளைத் தமிழ்' எனும் இலக்கிய வகைக்குத் தோற்றுவாயாக உள்ளது.

தலைவன் அறைப்புறமாக இருக்க அவனை வரைவுகடாவும் தோழி தலைவியைப் பார்த்து, 'வானமும் வரை கிழிப்பு அன்ன மையிருள் பரப்பியது மேகம் முழங்குவதும் நீங்குகின்றிலது. வெய்ய கினத்தையுடைய புலியேறு யாவரும் அஞ்சுமாறு முழங்கா நிற்கும். இவ்வோசையகினத்தையும் செவியிற் கொள்ளாது உறங்குகின்றனனையோ, இன்றுதலைவன் வாராதிருத்தலே நலமாகும்'[85] எனும் பொருளமைந்த பாடல் ஆற்றின் ஏதத்திற்கு அஞ்சும் தன்மையைக் குறிப்பாக உணர்த்தி வரைவுகடாவுவதாக உள்ளது. இப்பாடலில் 'இவற்றையெல்லாம் கேளாது இன்னும் துஞ்சுகின்றனையோ' எனக் கறுவதாக அமைந்த பொருளமைப்பு பாலை இலக்கிய வகையின் முதல் நிலையாகத் திகழ்கிறது.

தோழி விறலிக்கு வாயின் மறுப்பதாக அமைந்த ஒரு பாடலில், 'விறலி இங்கு வந்து நிற்றலாயினள். எனவே எழுமினே எழுமின்எங் கொழுநர் காக்கம்'[86] என ஆயத்தாரை விளிப்பது போலக் கறுவது பாடலின் பொருளமைப்பாக உள்ளது. விறலி வேறொரு பரத்தையின் பால் தலைவனைச் செலுத்தற்கு முன் அவனைக் காக்க வேண்டும் என்பது குறிப்பு. ஆயத்தாரை நோக்கி 'எழுமினே எழுமின்' எனக் கறுவதாக அமைந்த பொருளமைப்பு பாலைப் பாடல்களின் ஒரு கூறாக விளங்குவது குறிக்கத்தக்கது.

பொருளமைப்பில் கையாளப்பட்ட மேற்குறித்த உத்திகள் கற்போர்க்குச் சுவை பயக்கும் தன்மையோடு, தனி இலக்கியவகைத் தோற்றத்திற்கான வித்துகளாகவும் உள்ளன.

---

83. பொ.வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), தலித்தொகை, பா.80.
84. மேற்படி, பா.86.
85. அ. நாராயணசாமி ஐயர் (உரையாசிரியர்), நற்றிணை, பா.154.
86. மேற்படி, பா.170.

* * *

இயல் - 6

உத்திகள் உணர்த்துவன

6. உத்திகள் உணர்த்துவன

6.1. சங்க இலக்கிய உத்திகள் அனைத்தையும் பகுத்துக் காணும்-பொழுது அவை பாடுபொருளுக்கேற்ப வேறுபடும் தன்மை தெளிவாகின்றது. பாடுபொருளில் மட்டுமின்றி திணை துறைகளுக்கேற்ப வேறுபடும் தன்மையும் சிறிது காணப்படுகின்றது. இத்தன்மை குறிப்பாகப் பொருளுணர்த்தும் உத்திகளுக்கு மட்டும் உரியதாக உள்ளது. புணர்த்தும் புணர்தல் நிமித்தமும் என்பதற்கேற்பக் குறிஞ்சித் திணையில் தலைவியின் களவொழுக்கம் தொடர்பாக மறைமுகமாகச் செய்தியை உணர்த்தும் தேவை மிகுந்திருப்பதால் உள்ளுறை உவமம் குறிஞ்சித் திணையில் மிகுதியாகப் பயிலப்பட்டுள்ளது.

பாலைத்திணையில் பிரிந்திருக்கும் தலைவன், தலைவியின் உணர்வு நிலைகளைக் காட்ட அன்புறு தகுவனவான காட்சிகள் பயன்படுதலால் இத்திணையில் இறைச்சி மிகுந்துள்ளது.

நிகழ்ந்ததை நினைக்கும் பொருளமைப்பு உத்தி புறப்பாடல்களில் கையறு நிலைப் பாடல்களில் மட்டும் காணப்படுகின்றது. மகிழ்ச்சியான சூழலைக் காட்டிலும் துன்பம் மிகுந்த சூழலிலேயே நிகழ்ந்ததை நினைக்கும் உளவியல் தன்மைக்கேற்ப இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. இப்பொருளுக்கு இவ்வுத்தியைக் கையாள வேண்டும் என்ற கட்டாய நோக்கின்றி, பொருளுணர்வுக்கேற்ப வெளிப்பாட்டு முறைகளையும் அமைக்க வேண்டும் என்று கொண்டிருந்த இலக்கிய நோக்கு இங்குப் புலனாகிறது.

உணர்வு வெளிப்பாட்டை மையமாகக் கொண்ட பாடல்கள், செய்தி வெளிப்பாட்டை மட்டும் நோக்காகக் கொண்ட பாடல்கள் என்பவற்றுக்கேற்பவும் உத்திகள் வேறுபடுகின்றன.

அகப்பாடல்களில் பாத்திரங்கள் தங்களுக்குள் மறைமுகமாகச் செய்திகளை வெளிப்படுத்திக் கொள்வதாக அமையும் பாடல்களில் உள்ளுறை உவமம்

இடம் பெற்றுள்ளது. உளர்வு வெளிப்பாட்டின்பொழுது சொல்நிலை உத்திகளும், தொடர்நிலை உத்திகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. உவமை அமைப்பு இருநிலை-களிலும் பின்பற்றப்படுகின்றது.

இடைச்சொற்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் எட்டுத்தொகைப் பாடல்களில் இடம்பெற்ற அளவிற்குப் பத்துப்பாட்டில் இடம்பெறவில்லை. இதில் கழிவிரக்கம், தேற்றம் முதலிய பொருளுணர்வில் வரும் இடைச்சொற்கள் சிறிதும் கையாளப்படவில்லை. ஒலிக்குறிப்புச் சொற்கள் சிறிதளவு பயன்படுத்தப்பட்டுள்ளன. பாத்திரங்களின் உளர்வுகளையும் தன்னுளர்வுகளையும் வெளிப்படுத்துவதால் எட்டுத்-தொகைப்பாடல்களில் மிகுந்தும், உளர்வு வெளிப்பாட்டைக் காட்டிலும் நிகழ்ச்சி விளக்கத்திற்கு இன்றியமையாமை அளித்துள்ளமையால், பத்துப்பாட்டில் குறைந்தும் உள்ளமையும் இங்கு உரைத்தக்கது.

6.2. சங்க இலக்கியப் புலவர்கள் அடிப்படையில் உத்திகளைப் பகுத்துக் காணும்பொழுது ஒரு புலவனுக்கேயுரிய பண்பு எனக் குறிப்பாகச் சுட்டும் வகையில் பண்புகள் காணப்பெறவில்லை. படைப்புத் தன்மையில் அனைவரது பாடல்களும் ஒருதன்மையாகக் காணப்படுகின்றன. ஒரு சிலரிடத்து ஒருசில உத்திகளின் பயில்வு மிகுதியைத் தவிர பிற வேறுபாட்டைக் காண இயலவில்லை.

சங்கப் புலவர்களில் உளர்வு வெளிப்பாட்டிற்கெனச் சிறுசிறு லினைமுற்றுத் தொடர்களைப் பயன்படுத்துவது உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், ஔவையார், கபிலர், பதுமனார், அண்டர் நெடுங்கல்லினார் ஆகியோர் பாடல்களில் சிறப்பாக உள்ளது.

புறப்பாடல்களிலும் உள்ளுறை அமைப்பைப் பயன்படுத்திக் குறிப்புப் பொருளை உளர்த்தும் குறிப்பெச்ச உத்தி கபிலரிடத்து மிகுந்துள்ளது.

உள்ளுறை உவமங்களும் கபிலர், அம்மூவனார் ஆகிய இருவரது பாடல்களிலும் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது.

வினையுருவகத்தைச் சிறப்பாகக் கையாண்ட தன்மை ஆசிரியர் நல்லந்துவனுக்கு மட்டுமே உரியதாக உள்ளது.

இலக்கியம் படைப்பதற்கெனத் தனிக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு அவ்வடிப்படையில் பாடல்களை யாத்த அக்காலத் தன்மையும் தெளிவாகிறது. ஆயின் இவ்வரையறை படைப்போனின் படைப்பூரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தியதாகவும் கற இயலாது. எனவே தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தாத வகையில் பாடல் சிறப்புற அமைதற்கெனச் சில வரையறைகளை வகுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் தமது படைப்பை அமைத்தனர் எனலாம்.

> பொருளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்த வேண்டும்,
> நுட்பமான முறைகளைக் கையாள வேண்டும்,
> பாடுபொருளுக்கும் வெளிப்பாட்டு முறைக்கும் ஒருமைப்பாடு அமைய வேண்டும்,
> பாடலில் எதனையும் வெற்றுரைத் தொடுத்தல் கூடாது,
> சிறுசிறு தொடரமைப்புகள், இடைச்சொற்கள், ஒலிக்குறிப்புச் சொற்கள், விளிச்சொற்கள், அடைச்சொற்கள், அடைத்தொடர்கள், சொல்மடக்கு, தொடர்மடக்கு, உவமை, உள்ளுறை உவமம், தொகுநிலைக் கிளவி ஆகியவற்றை அடிப்படை உத்திகளாகக் கொள்ள வேண்டும்

என்பன இவர்களது வெளியீட்டுக் கொள்கைகளாய் அறியக் கிடக்கின்றன.

6.3. சங்க இலக்கியங்களில் இயற்கைக் காட்சிகள், பண்பாட்டுச் செய்திகள், வரலாற்றுச் செய்திகள் என்பன உத்திகளை வெளிப்படுத்தற்குரிய கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் சங்க இலக்கியங்களுள் இயற்கையைக் கருவியாகக் கொண்டிருப்பது அக்காலப் புலவர்களின் இயற்கை ஈடுபாட்டையும், இயல்புப் புனைவுப் பண்பையும் உணர்த்துகின்றது. மேலும் இயற்கையைக் கூர்ந்து

நோக்கில் கண்ட அறிவுத் திறன் வாய்ந்தவர்களாகவும் உள்ளனர். அக்கால மன்னர்களின் சிறப்பையும், அவர்களது நாட்டின் சிறப்பையும் விளக்கும் வகையில் வரலாற்றுச் செய்திகள் கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளன.

6.4. சங்க இலக்கியங்களுள் கையாளப்பட்ட உத்திகளுள் இறைச்சி, உள்ளுறை உவமம், தொகுநிலைக் களவி என்பனவற்றைத் தவிர, பிற தொடர்ந்து பின்வரும் இலக்கியங்களில் கையாளப்படுகின்றன. அகப்பொருள் செய்திகளில் தலைவன், தலைவி, தோழி, தினைப்புனங் காக்கும்பொழுது, தலைவன் தலைவியைக் காணுதல் என்ற முறையில் கையாளப்பட்ட சங்க இலக்கிய மரபு பின்வந்த இலக்கியங்களில் மாறுபட்டமையால் இறைச்சி, உள்ளுறை உவமம், தொகுநிலைக் களவி என்ற மூன்றும் பின் வந்த இலக்கியங்களில் பின்பற்றப்படவில்லை. தலைவன், தலைவி, தோழி என்ற ஒரு கரு மட்டும் பின்னர் பக்தி இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் தொடர்ந்து கையாளப்படினும் அவ்விலக்கியங்களின் அடிப்படை நோக்கம் வேறுபடுதலால் அவற்றிலும் இறைச்சி உள்ளுறை உவமம் என்பன பின்பற்றப்படவில்லை.

6.5. எட்டுத்தொகைப் பாடல்கள் தனிப்பாடல்களாய் அமைவன. இவற்றுள் புறப்பாடல்கள் தன்னுணர்வுப் பாடல்களாய் அமைவன. சங்கப்பாடல்களை அடுத்து, பல தனிப்பாடல்கள் தோன்றியுள்ளனவெனினும் அவை சங்கத் தனிப் பாடல்களினின்றும் பெரிதும் வேறுபடுகின்றன. சங்கத் தனிப்பாடல்கள் வீரம், கொடை முதலிய பண்புகளுக்கும், அன்பு, துன்பம் என்ற உணர்வுகளுக்கும் தலையாய இடமளித்துள்ளன. பிற்காலத்தில் தோன்றிய தனிப்பாடல்கள் தனது புலமையை வெளிக்காட்டும் நோக்கத்துடன், சொல்லழகுகளுக்கும், சொல்விளையாட்டுகளுக்கும் இன்றியமையாமை அளித்து சங்கப் பாடல்களினின்றும் முற்றும் வேறுபட்டுவிளங்குகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்று முறையில் மட்டுமின்றி இலக்கியத் தரத்திலும் சங்க இலக்கியங்கள் முதன்மை பெற்றுள்ளன. அவைகள் கையாண்ட உத்திகளும் இத்-தன்மைக்கு ஒரு காரணமாகின்றன.

* * *

****
*   *
* தொகுப்புரை *
*   *
****

தொகுப்புரை

படைப்பாளன் தமது வெளியீட்டில் கையாளும் நுட்பங்கள் உத்திகள் எனப்படுகின்றன.

இவை படைப்பின் பொருளமைப்பிலும், பொருளை விளக்கிச் செல்லும் முறையிலும் இடம்பெறுகின்றன.

இவ்வுத்திகள் காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன.

படைப்பாளனின் தனித்தன்மைக்கேற்பவும், பாடுபொருளுக்கேற்பவும், இலக்கிய வகைக்கேற்பவும் இவ்வேறுபாடுகள் அமைகின்றன.

உத்திகள் வேறுவேறு பெயர்களில் வேறுவேறு முறைகளில் பெருகினும் அவற்றின் அடிப்படை குறிப்பு, வெளிப்படை என்ற இரண்டாகவே உள்ளன.

தமிழில் தொல்காப்பியத்திலேயே உத்தி பற்றிய எண்ணங்களைக் காண முடிகின்றது.

சங்க இலக்கிய உத்திகள் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளன.

தொடரமைப்பை உத்திகளாகப் பயன்படுத்திக் கொண்ட நிலையைக் காட்டிலும், சொல்நிலையில் மிகுதியான உத்திகள் காணப்படுகின்றன.

உணர்வுகளை வெளிப்படுத்த வினைமுற்றுத் தொடர்களும், வினையெச்சத் தொடர்களும் இத்தன்மையில் தலையாய இடத்தைப் பெறுகின்றன.

தவிர சில சிறப்புத் தொடர்களும், மரபுத் தொடர்களும் குறிப்பை உணர்த்த புலவர்களால் படைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

10.21/77

சொல், தொடர் என்ற நிலைகளைக் காட்டிலும் பொருளை விளக்கிச் செல்லும் வண்ணை முறையில் மிகுதியான உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

இவற்றில் உவமை, உருவகம், மிகைவருணை, பின்புலவருணை, உருக்காட்சி வருணை, பொருள்மடக்கு என்பன வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் உத்திகளாகும்.

சங்க இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ள உவமைகள் பின்னர் அணியியலில் கூறப்படும் பல உவமை வகைகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளன.

பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்களில் மிகுதியான உவமைகள் கையாளப்பட்டுள்ளன.

உருவகங்கள் குறைந்த அளவு பயன்பாடுடையனவாயிருப்பினும் அவை 'குறிப்பு உருவகம்', 'தனிநிலை உருவகம்', 'தொடர் உருவகம்', 'சார்நிலை உருவகம்', 'முழுப்பாடல் உருவகம்', 'தினையுருவகம்' எனப் பலவகைகளாக விளங்குகின்றன.

இவற்றுள் தினையுருவகம் சங்க இலக்கியத்திற்குரிய தனிச்சிறப்பாக விளங்குகின்றது.

மிகை வருணையும், மிகைக் கற்பனையும் பரிபாடலில் மட்டும் காணப்படுகின்றது. பிறவற்றில் ஆங்காங்கே உணர்வுகளையும், செய்திகளையும் வெளிப்படுத்தற்குரிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாடற்பொருளுக்கேற்ற சூழலையும், காட்சியமைப்பையும் விளக்கப் பின்புல வருணை கையாளப்பட்டுள்ளது.

உவமை உருவகம் ஏதுமின்றிப் பொருட்களைக் காட்சிப்படுத்த உருக்-காட்சி வருணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சொல் மடக்கு, தொடர் மடக்கு என்பன சங்க இலக்கிய நூல்கள் அனைத்திலும் பயின்று வர பொருள்மடக்கு ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்-தொகை ஆகியவற்றில் மட்டும் கையாளப்பட்டுள்ளது.

உள்ளுறை உவமம், இறைச்சி, தொகுநிலைக் கிளவி, படிமக்காட்சி என்பன சங்க இலக்கிய அகப்பாடல்களுக்கேயுரிய குறிப்பு உத்திகளாக உள்ளன.

இவற்றில் உள்ளுறை உவமமும், தொகுநிலைக் கிளவியும் சங்க அகப்-பாடல்களின் தலையாய் உத்திகளாக விளங்குகின்றன.

உள்ளுறை உவமங்களைக் காட்டிலும், இறைச்சி குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இயற்கைக் காட்சிகளும், வெறியாட்டும், தினைப்புனங் காத்தல் எனும் மரபு நிகழ்ச்சிகளும், மற்றும் தோள் வாடுதல், வளையல் நெகிழ்தல் என்பனவைகளும் படிமக் காட்சிகளாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இனமொழி, குறிப்பெச்சம் என்பன புறப்பாடல்களுக்குரிய குறிப்பு உத்திகளாக விளங்குகின்றன.

புறப்பொருளுக்குரியதென குறிப்பு உத்திகள் மிகுதியும் கையாளப்-படவில்லை.

அகம், புறம் என்ற இரண்டிற்கும் உரியனவாக வருணனைக் குறிப்பு, இகழ்ச்சிக் குறிப்பு, குறிப்பு முரண் என்ற உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர பாடலின் தொடக்கம், முடிவு என்ற நிலையிலும் உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

பாடல்களுக்கு நாடகப்பாங்கை அளித்தற்குரிய உத்தியாக உரையாடல் அமைப்பு விளங்குகிறது. கலித்தொகையில் இவ்வமைப்பு சிறந்து விளங்குகிறது.

மேற்கூறியவற்றைக் காட்டிலும், நிகழ்ச்சிப் பின்னலிலும் பாடலமைப்பிலும் கையாளப்பட்ட உத்திகளுக்குப் பத்துப்பாட்டில் இன்றியமையாமை அளிக்கப்பட்டுள்ளது.

ஒலிக்குறிப்புச் சொற்கள், வினைமுற்றுச் சொற்கள், வினைமுற்றுத் தொடர்கள், அடைத்தொடர்கள், தொடர்மடக்கு, உவமை, உருவகம் என்பன மட்டும் பத்துப்பாட்டுக்குரியதாக இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் ஓர் இடத்தைத் தவிர பத்துப்பாட்டில் உள்ளுறை உவமம் கையாளப்படவில்லை.

தனிப்பாடல்களாக அமைந்த எட்டுத்தொகைப் பாடல்களிலும் வேறுபட்டு நீண்ட காவிய அமைப்புடைய பாடல்களாய் அமைந்திருப்பது இப்பண்பு-களுக்குக் காரணமாகின்றது.

பொதுவாகச் சங்கப் பாடல்களில் யாப்பமைப்பில் எதுகை, மோனை, முரண் என்ற அழகுசேர்க்கும் ஒலிநிலை உத்திகளுக்கு மிகுதியும் கவனம் செலுத்தப்படவில்லை. கலித்தொகை, பரிபாடல் என்ற இரண்டில் மட்டும் இவ்வுத்திகளுக்கு மிகுந்த இடமளிக்கப்பட்டுள்ளது.

கலித்தொகையில் கலியாப்பு முறை பொருள்விளக்கத்திற்கேற்ற உத்தியாகவும் கையாளப்பட்டுள்ளது.

ஒரு பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்தும் வழி மன்னர் புகழை வெளிப்படுத்துவதும், இயற்கைப் பொருட்களையும் நெஞ்சையும் முன்னிலைப் படுத்திக் கூறும் வழி உணர்வுகளை வெளிப்படுத்துவதும், நிகழ்ந்தவைகளையும், நிகழ்கின்றவற்றையும், நிகழப் போவதையும் பாத்திரங்களை நினைந்து பார்க்குமாறு செய்தல் வழி உணர்வை வெளிப்படுத்துவதும், கடந்தவற்றை கூறச் செய்தல் வழி நிகழ்ச்சியை உணர்த்துவதும், இயற்கைப் பொருட்களின் மேல் சார்த்திக் கூறுதல்,

கனவுக் காட்சி முதலியவற்றின் வழி உணர்வை வெளிப்படுத்துவதும், துயில்பவரை எழுப்புவது போல அமைப்பதும் பொருளமைப்பில் கையாளப்பட்ட உத்திகளாக உள்ளன.

மேற்காட்டியவற்றுள் இடைச்சொற்கள், ஒலியழுத்தம், சொல்லெச்சம், என்ற சொல்லுத்திகளும், உவமை, உருவகம், குறிப்பெச்சம், இகழ்ச்சிக் குறிப்பு, இறைச்சி, உள்ளுறை உவமம், இனமொழி, வருணனைக் குறிப்பு, தொகுநிலைக்களனி, என்ற வண்ணன உத்திகளும், ஆற்றுப்படுத்தும் முறை, முன்னிலைப்படுத்தும் முறை, நிகழ்ந்தது நினைத்தல், சார்த்திக் கறும் முறை என்ற பொருளமைப்பு உத்திகளும் தொல்காப்பிய மரபு அடிப்படையில் அமைந்த உத்திகளாகும்.

இவ்வுத்திகளில் கையாண்ட நுட்பங்களும், இவை தவிர்த்த பிற உத்திகளும் சங்க இலக்கியங்களின் தனித்தன்மைகளாக உள்ளன.

இவ்வுத்திகள் பதிக வளர்ச்சிக்கும், கோவை, தூது, பிள்ளைத்தமிழ், பாவை இலக்கியம், ஊசல் இலக்கியம், சிலேடை இலக்கியம் என்ற இலக்கிய வகைகளின் தோற்றத்திற்கும், உருவகக் கவிதைக்கும், படிமக்காட்சி உத்திக்கும் அடிப்படையாய் அமைந்துள்ளன.

உத்திகள் அனைத்தும் பொருள்விளக்க நோக்கிலேயே பயன்படுத்தப் பட்டுள்ளன. அழகுநிலைக்கென உத்திகள் பயன்படுத்தப்படவில்லை.

காலம் கடந்தும் வாழும் சங்கப் பாடல்களின் நிலைபேற்றுக்கு இப்பண்பும் ஒரு காரணமாகின்றது.

சங்கப் புலவர்கள் தங்களுக்கெனக் குறிப்பிட்ட வெளிப்பாட்டுக் கொள்கைகளை வகுத்துக் கொண்டிருந்தமை, உத்திகளைக் கண்டறிதல்வழி தெளிவாகப் புலனாகின்றது.

* * *

பின்னிணைப்புகள்

உத்தி : கலைச்சொற்கள்

அடைச்சொற்களும் தொடர்களும்	(Noun Epithets)
அந்தாதி	
அவையல்மொழி	
ஆற்றுப்படுத்தல்	
இகழ்ச்சிக் குறிப்பு [1]	(irony)
இடம்மாற்று உவமை	
இயற்கைப் படிமக் காட்சிகள்	(Natural Imagery)
இரட்டுற மொழிதல்	(Pun)
இரட்டை உவமை	
இல்பொருள் உவமை	
இறைச்சி	(Objective Correlative)
இனமொழி [2]	
உவமப்போலி	
உவமை	
உருக்காட்சி வருணனை	(Mental Picture)
உருவகம்	(Metaphor)
உள்ளுறை உவமம் [3]	(Implied Simile)
எடுத்துக்காட்டு உவமம்	
எதிர்மறுப்பு உவமை	
எதிர்மறைச் சொல்லுணர்வு [4]	(Antithesis)
ஐய உவமை	
ஒலிக்குறிப்புச் சொற்கள்	(Onomatopoeia)
ஒலி வேறுபாடு	(Stress or accent)
ஒலியழுத்தம்	
குறிப்பு உருவகம்	

குறிப்பு முரண் (Irony)

5

குறிப்பெச்சம்

குறியீட்டுச் சொற்கள் (Symbolic Words)

சார்த்திக் கூறல்

சார்நிலை உருவகம்

சொல் மடக்கு (Word Repetion)

சொல்லெச்சம்

சொற்பொருளுணர்வு மாற்றம்

தடுமாறு உவமை

6

தற்குறிப்பேற்றம்

தற்குறிப்பேற்ற உவமை

தற்குறிப்பேற்ற உள்ளுறை உவமம்

தனிநிலை உருவகம் (Simple Metaphor)

தனிப்படிமக் காட்சிகள் (Private Imagery)

திரிபுருவகம் (Personification)

திரிபு உவமை

தெளிவு உருவகம்

7

தொகுநிலைக் கிளவி

தொடர் உருவகம்

தொடர் மடக்கு (Sentence Repetition)

நிகழ்ச்சிப் பின்னல் (Plot)

நிகழ்ந்தது கூறுதல் (Flash back)

8

நிகழ்ந்தது நினைத்தல்

நிகழ்வது நினைத்தல் (Soliloque (or) Interior Monologue)

நிகழ இருப்பது நினைத்தல்

நிரல்நிறை உவமை

நுட்ப உருவகம் (Complex metaphor)

படிமக் காட்சி (Imagery)

பழிகரப்பு அங்கதம் (Satire)

பின்புல வருணனை

புதிர்ச் சொற்கள்

பொதுநீங்கு உவமை

பொருள் உவமை

பொருள் மடக்கு [9]

பொருள் மயக்கத் தொடர் (Ambiquity)

மங்கல மொழி

மரபுத் தொடர் (Formulae)

மரபுப் படிமக் காட்சிகள் (Traditional Imagery)

மாலை உவமை

மாறில் ஆன்மையிற் சொல்லிய மொழி

மிகை வருணனை [10]

முரண் உவமை

முழு உருவகப் பாடல்

முன்னிலைக் கூற்று (Apostrophe or Pathetic Fallacy)

வருணனைக் குறிப்பு [11]

வேற்றுமை அணி

---

1. இகழ்ச்சிக் குறிப்பு தொல்காப்பியத்தில் குறிப்புமொழி (481) எனப்படும்.
இதில் பழிப்பது போலப் புகழ்தலை வீரசோழியம் நுவலாச்சொல் (172) என்னும்,
முத்துவீரியம் புகழாப் புகழ்ச்சி (1253) என்னும்,
இலக்கண விளக்கம் அவநுதி (அ) ஒழிப்பணி (670) என்னும்

புகழ்வதுபோலப் பழித்தலை வீரசோழியம் தெளிவில் புகழ்ச்சி (172) என்னும் தண்டியலங்காரம், இலக்கண விளக்கம் மாறுபடுபுகழ்நிலை என்னும்.

2. இது பரியாயவணி எனப்படும்.

3. இலக்கண விளக்கம் வீரசோழியத்தில் இது நுட்பம் (660) நுணுக்கம் (153) எனப்படுகிறது.

4. இது விரோதவணி எனப்படும்.

5. இது ஒட்டணி, எடுத்துக்காட்டுவமையணி, நுவலா நுவற்சி எனப்படும்.

6. வீரசோழியத்தில் இது நோக்கு (165) எனப்படுகிறது.

7. இது வீரசோழியத்தில் தடைமொழி (153) எனப்படுகிறது.

8. தொல்காப்பியத்தில் நெஞ்சொடு புணர்த்தல் (194) எனச் சுட்டப்பெறும்.

9. பின்வருநிலையணி எனப்படும்.

10. வீரசோழியத்தில் மிகைமொழி (153) எனப்படும்.

11. நன்னூலில் முன்னக்கிளவி (408) எனவும் தொல்காப்பியத்தில் முன்னத்தினுணருங்கிளவி (459) எனவும் கூறப்படும்.

* * *

அசைச் சொற்கள்

அம்ம

நற். 93-4; குறு. 14-3, 4; 29-5; 45-5; 55-5; 56-4; 77-1; 147-5; 237-4; 287-1; 359-1; 361-1; 375-1; 384-4; 392-1; ஐங். 32-1; 33-1; 34-40(2); 54-6; 67-1; 77-1; 89-1; 111-120(1); 181-5; 221-230(1); 244-1; 248-4; 313-1; 331-1; 332-1; 333-340(1); 387-4; 402-4; 410-5; 415-4; 474-5; பதிற். 26-7; 28-1; 64-2; 83-6;

கலி. 141-14; 142-5;

அகம். 99-10; 101-1; 130-1; 141-1; 11; 148-11; 201-1; 235-1; 241-2; 244-14; 249-1; 276-7; 277-19; 316-17; 325-1; 326-3; 340-5; 346-1; 367-13; 380-13; 388-1; 400-1; 24;

புறம். 18-29; 75-10; 80-6; 140-10; 166-26; 182-1; 194-6; 203-6; 247-7; 318-3;

அல்லே

குறு. 325-3;

அகம். 192-2; 272-15; 330-6; 358-10; 376-11;

புறம். 100-8;

கொல்

நற். 51-1; 53-2; 3; 55-10; 56-6; 63-7; 66-7; 68-7;
72-9; 92-1; 94-7; 104-8; 110-9; 122-7; 132-11;
134-2; 152-9; 161-9; 169-3; 187-7; 189-5;
205-8; 206-8,9,10; 207-6; 214-9; 218-10; 225-6;
228-5; 239-12; 241-1; 259-1; 268-7; 273-1;
274-9; 284-11; 287-10; 288-10; 296-1; 297-5;
302-6; 303-9; 305-10; 306-9; 310-8; 312-9; 313-6;
317-7; 319-11; 320-2; 321-7; 322-3; 324-2;
393-11; 394-9; 397-6,9;

குறு. 5-1; 7-3; 16-1; 24-2; 28-1; 3; 33-2; 46-7; 48-7;
67-1; 69-6; 82-3; 86-3; 89-3; 94-5; 96-4; 110-8;
175-5; 176-5; ~~175-5~~; 180-5; 182-5; 183-4; 190-3;
146-2; 150-5; 154-1; 159-5; 161-5; 172-4; 194-1;
195-1; 195-3; 197-1; 205-6; 215-3; 230-4; 260-4;
266-3; 268-3; 272-1; 275-4; 8; 276-6; 279-4;
281-6; 282-8; 284-5; 285-3; 287-2; 290-2; 302-6;
307-4; 316-8; 325-4; 330-7; 331-5; 337-6; 348-6;
350-3; 356-5; 380-5; 381-3; 387-4; 396-3;

ஐங். 21-4; 22-4; 23-4; 24-3; 5; 26-4; 27-4; 28-4;
29-4; 30-4; 31-2; 42-1; 84-2; 90-1,2; 108-4;
109-3; 114-2; 201-4; 204-1; 207-2; 216-6; 217-4;
218-5; 219-4; 222-3; 225-5; 228-4; 245-4; 247-4;
253-4; 261-3; 262-4; 295-1; 2; 311-4; 329-3;
